T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: XLI NO: 3

FEB. 10th 1983

V2'11,31 N83
N83·41·3
135982

வெளியீடு 28–10–1983] [Issued 28-10-1983

2690

தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES

அலுவல்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை பிப்ரவரி 10, 1983—தொகுதி XLI எண் 3

Thursday, 10th February 1983—Volume XLI No. 3

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department, Fort St. George Madras-600009

விலை ரூ. 3-15 காசுகள்] [Price Rs. 3-15 Paise

(இ) ஷெரீஃப் நியமனத்திற்கு வகை செய்யும் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு, 1983. .. 251—257

(ஈ) பச்சயப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத் த அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1983. 257—282

(உ) மீன்பிடித்தலை முறைப்படுத்தல் சட்ட முன் வடிவு, 1983 .. .. 283—303

(ஊ) வேளாண் விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்— சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1983. .. 304—307

(எ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன் வடிவு , 1983. ..

8 அரசினர் தீர்மானம் :

(அ) விதி 32 (1) ஐத் தளர்த்தல் .. .. 249—250

(ஆ) அலுவல் வரிசையில் மாற்றம் 250

(இ) தமிழ்நாட்டின் வறட்சி நிலை குறித்த வெள்ளையறிக்கை மீதான விவாதம் ..

திரு. செ. இராமலிங்கம் 308—311

திரு. சி. கோபால் 311—314

திரு. என். வரதராஜன் 314—320

திரு. எம். அண்ணாதாசன்

திரு. என். ஏ. பூங்காவனம் 320—324 324—326

திரு. எஸ். பாலகிருஷ்ணன் 326—328

திரு. க. பாரமலை 328—330

திரு. பெ. திருமாறன் 331—332

திரு. கே. ஆர். சின்னராசு

திரு. பா. சின்னராசு 340—345

திரு. பெ. சு. திருவேங்கடம் 345—349 357

திரு. ஜி. மூர்த்தி 350—352

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம் 352—356

திரு. ஏ. சி. சண்முகம் 356—364

திரு. மு. அரங்கநாதன் 360—363

திரு. வெ. அரங்கராசன் 363—365

திரு. செ. குப்புசாமி 365—367

திரு. ஏ. தங்கராசு 368—370

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் 370—373

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் 374—376

திரு. எம். எஸ். மாணிக்கம் 376—378

திரு. ப. சுந்தரம் 378—379

திரு. எஸ். சிவப்பிரகாசம் 380—381

திரு. பி. முகமது இஸ்மாயில் 381—383

திரு. மு. ப. முனுசாமி 383—384

திரு. கே. உச்சி 384—385

திரு. ஏ. சாகுல் ஹமீது 386—387

திரு. சோ. கலிதீர்த்தான் 387—389

திரு. ஏ. பாலுச்சாமி 389—390

திரு. ஜே. எஸ். இராசு 391—393

திரு. எம். ஆறுமுகம் 394—395

திரு. ஆர். தவசி 395—396

Y211.31 N83
-1183-41-3
135982
சென்னை-600 008.
S.No. 141/35(B)

10-2-1983

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1 காங்கிரஸ் (இ) கட்சியினர் வெளிநடப்பு ..	187
2 வினாக்கள்—விடைகள்	
உடுக்குறியிட்ட வினாக்கள்	188—231
3 தகவல் கோரல் :	
(அ) பார்வையாளர்கள் மாடம் ..	231—234
(ஆ) முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்சினை.	232
(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்.	232—234
(ஈ) திருத்தச் சட்ட முன்வடிவு தொடர்பாக முழுத் தகவல்கள் தர கோரிக்கை.	260
4 ஒத்திவைப்பு தீர்மானம் :	
விவசாயிகளிடமிருந்து கடனை வசூலிக்க வருவாய் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை.	234—243
5 கவன ஈர்ப்பு:	
பூங்கா நகர் தொகுதி புதுஜெகந்நாதபுரத்தில் குடிசைகள் பிரிக்கப்பெற்றது.	243—247
6 அறிக்கை அளித்தல் :	
அரசு உறுதிமொழிக் குழு	247
7 அரசினர் சட்ட முன் வடிவுகள் :	
(அ) சட்டமன்ற (தகவின்மை தடுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1983 ..	248
(ஆ) இந்திய முறை மருத்துவர்கள் மாநில பதிவேடு ஏற்பளிப்புச் சட்ட முன் வடிவு 1983.	248

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

கீழ்மேட்டூர் மின் திட்டம்.

*வினா எண். 208—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ் மேட்டூர் மின் திட்டம் செயல்பாடு எந்த அளவில் உள்ளது?

(ஆ) எந்த ஆண்டு மின் உற்பத்தி கிடைக்கும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) கீழ் மேட்டூர் மின் திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு நீர்ப்பாசனமில்லாத காலத்திலிருந்து அதாவது மார்ச் 1982-லிருந்து முழு வேகத்தில் நடைபெற்று வருகிறது.

(ஆ) இத்திட்டத்தின் முதல் பிரிவு மார்ச் 1983-ம் ஆண்டும் மற்றப் பிரிவுகள் முதல் பிரிவு ஆரம்பித்து 3 மாத இடைவெளிகளிலும், கடைசிப் பிரிவு செப்டம்பர் 1985-ம் ஆண்டும் மின் உற்பத்தியைத் துவக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. தி. கா நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எத்தனை கோடி ரூபாய் செலவில் செய்யப்படுகிறது ? எத்தனை மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீடு 111 கோடி 42 லட்சம். ஆகும். 120 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டது 53 கோடி யூனிட்டுகள் இதன் மூலம் கிடைக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காவிரியில் நீர் குறைவாக வருகின்ற காரணத்தால் உடனடியாக இந்த மின் திட்டத்தின் வேலைகளை துரிதப்படுத்தினால் நீர் வருகின்ற காலத்தில் செய்யக்கூடிய அந்த வேலைகளை குறைக்க ஏதுவாக இருக்கும். ஆகவே அரசு பரிசீலித்து உடனடியாக இதை செயல்படுத்த உத்தரவு இடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றுவதை காவிரியில் நீர் இல்லாத நேரத்தில்தான் காரியங்கள் ஆற்றமுடியும். ஆகவே அந்தக் காலத்திலேதான் வேலைகளை விரிவுபடுத்தவேண்டும். ஏற்கனவே மின் வாரியம் வேலைகளை தீவிரமாக செய்து கொண்டு வருகிறது.

1982-83 ஆம் ஆண்டில் கேரளாவிலிருந்து வாங்க தீர்மானிக்கப்பட்டுள்ள மின்சாரம்

*வினா எண். 209—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1982–83-ம் ஆண்டிற்கு கேரளத்திலிருந்து நமது மாநிலத்திற்கு எவ்வளவு யூனிட் மின்சாரம் வாங்க தீர்மானிக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1982–83-ம் ஆண்டிற்கு எவ்வளவு யூனிட் மின்சாரம் கேரளாவிலிருந்து வாங்கப்படும் என்பதை தற்பொழுது தீர்மானிக்க இயலாது.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில் இருந்து வாங்கப்பட்ட மின்சாரத்திற்கு என்ன விலை கொடுக்கப்பட்டது, அது என்ன விலைக்கு விநியோகம் செய்யப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-ஆம் ஆண்டிலிருந்து நாம் வாங்கிய மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 28 பைசா என்றும் 1982-84 ஆம் ஆண்டுகளில் நாம் பெற்று இருக்கிற, பெற இருக்கின்ற மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 35 பைசா என்றும் விலை கொடுத்து வாங்குகிறோம் ஏப்ரல் 1982 முதல் 1983 வரையில் கேரள அரசாங்கம் நமக்கு 345 மில்லியன் யூனிட்டுகள் (34— கோடி யூனிட்டுகள்) கொடுத்து இருக்கிறது.

திரு எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்திலிருந்து நாம் பெறுகின்ற மின்சாரத்தின் விலைக்கும் நாம் அதை இங்கே விநியோகிக்கும் விலைக்கும் வித்தியாசம் இருக்கிறதே, அந்த நஷ்டத்தை நம்முடைய அரசாங்கம் எப்படி ஈடுகட்டுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

திரு. துரைமுருகன்	399—400
திரு. ஆர். வெள்ளைச்சாமி	400—401
திரு. த. வீராசாமி	402—403
திரு. தி. கா. நல்லப்பன்	403
டாக்டர் கே. பி. இராமலிங்கம்	403—405
திரு. எஸ். டி. உகம் சந்த்	405—406
திரு. இரெ. இராசமாணிக்கம்	406—407
திரு. ஆர். கருப்பையா	407—408
மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்	408—417
அறிவிப்புகள் :	
(அ) மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்ட முன் வடிவு, 1983 (ஆ. இ.) ..	282
(ஆ) பேரவை அலுவல்	303—304
பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் ..	417

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1983 பிப்ரவரி 10

தை 28, துந்துபி திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்"

ஒரு செயலைச் செய்வதற்குரிய செயல்முறையாவது, அதனை முன்பே செய்து முடித்துத் தெளிந்தவனிடம் கேட்டறிந்து அவனுடைய அறிவுரைகளை உள்ளத்தில் கொண்டு செயல்படுவது ஆகும்.

1. காங்கிரஸ் (இ) கட்சியினர் வெளிநடப்பு

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் முடிந்த பிறகு எது வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். எதுவாக இருந்தாலும் 10 30 மணிக்கு மேலே வைத்துக் கொள்ளுங்கள் இப்பொழுது நான் அனுமதிக்க முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, நான் கூறுவதை தயவு செய்து ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதுவாக இருந்தாலும் கேள்வி நேரம் முடிந்த பிறகு வைத்துக் கொள்ளுங்கள். இதை ஒரு முன் உதாரணமாக உருவாக்காதீர்கள். நான் இதை அனுமதிக்கவில்லை. நீங்கள் எதை வேண்டுமானாலும் படிக்கலாம். (குறுக்கீடு) அது சபைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் நான் அனுமதித்தால்தான் படிக்க வேண்டும். அனுமதிக்காமல் படித்தால் அது அவைக் குறிப்பில் ஏறாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எப்படி ஈடுகட்டுவது என்பது தெரியாமல் விழித்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டிற்கு கேரளத்திலிருந்து நமது மாநிலத்திற்கு எவ்வளவு மின்சாரம் வாங்கப்பட்டது என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்து இருக்கிறார்கள். சென்ற சில நாட்களுக்கு முன்பு கேரளத்தில் இருக்கின்ற மாண்புமிகு கேரள முதலமைச்சர் கருணாகரன் அவர்கள் பண்டமாற்று—அதாவது சிமெண்ட் பெற்று மின்சாரம் கொடுப்பது என்ற முறையில் மின்சாரம் தமிழகத்திற்கு அளிப்பதாக இல்லை என்று—கூறியிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி படித்தேன். அது குறித்து அமைச்சர் அவர்கள் விவரம் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே' கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து நமக்கு மின்சாரம் தந்தார்கள். பருவ மழை பொய்த்ததன் காரணமாக கேரளாவில் நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டு, அதன் காரணமாக மின்வெட்டு அமலில் இருந்தது. இருப்பினும், அவர்களுடைய உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அவர்களுக்குத் தேவையான சிமெண்டை நம்மிடமிருந்து பெற்று, அதற்குப் பதிலாக மின்சாரம் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு பற்றாக்குறை இருந்தாலும் ஓரளவிற்கு நமக்கு மின்சாரம் தந்தார்கள். தமிழகத்தில் இருந்து சிமெண்ட் பெற்று. மின்சாரம் கொடுக்கவேண்டாம் என்று தற்போது தான் கேரள அரசு முடிவு எடுத்து இருப்பதாகத் தெரிகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கரண்ட் நமக்குக் கொடுத்து, சிமெண்ட் வாங்கும் திட்டத்திலே நாம் சிமென்ட் கொடுக்க முடியாது என்று நம் பக்கத்தில் இருந்து ஏதாவது சொல்லப்பட்டதா? அப்படி இல்லையென்று சொன்னால், ஒப்பந்தம் அந்த முறையில் ஏற்பட்டபிறகு அதை திடீரென்று கைவிடவேண்டும் என்பதற்கான காரணம் வேறு ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதிலே நமக்கு ஒன்றும் காரணம் தெரியவில்லை. முதலில் மின்சாரம் கொடுப்பதாகவும், இங்கே உற்பத்தியாகின்ற சிமெண்ட் அவர்களுக்கு 100 சதவீதம் வேண்டும் என்றும் கேட்டார்கள். நாம் எப்போதும் வழக்கமாகச் சொல்வதைப் போல, உற்பத்தியாகின்ற சிமெண்ட்டில் 30 சதவீதம் தமிழகத்திற்கு என்றும் 70 சதவீதம் கேரளாவிற்குத் தருகிறோம் என்றும் நம்முடைய அரசின் சார்பிலே

சொன்னோம். ஆனால் கேரளாவில் மின் பற்றாக்குறை இருப்பதால் இப்போது அந்த முயற்சி தேவையில்லை என்று கேரள முதல்வர் அறிவித்து இருப்பதாக பத்திரிகைகளில் நானும் பார்த்தேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்திற்கே சிமெண்ட் பற்றாக்குறை இருக்கிறபோது, சிமெண்ட்டுக்குப் பதிலாக வேறு மாற்றுப் பொருள்களைக் கொடுத்து மின்சாரத்தைப் பெறுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நம்மைச் சுற்றியுள்ள கர்நாடகம், கேரளம் ஆகிய இரண்டுமே பற்றாக்குறை மாநிலமாகத்தான் இருக்கின்றன. ஆந்திரம் ஓரளவிற்கு தன்னுடைய சுய தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் அளவிற்கு இருக்கிறது. ஆகவே, அவர்கள் விரும்புகின்ற பொருள்களைக் கொடுத்துத்தான் மின்சாரம் பெறமுடியுமே தவிர, நாம் விருப்பப்படுகிற பொருள்களைக் கொடுத்து நாம் மின்சாரம் பெற முடியாது.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு மின்சாரம் வழங்க 20 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு நீண்டகால ஒப்பந்தம் பேசப்பட்டு அது கையெழுத்திடாமல் விடப்பட்டது என்பதை அரசு ஆராய்ந்ததா ? அது எந்த ஆண்டு விடப்பட்டது என்பதோடு, அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்குமானால் இன்று தமிழகம் ஓரளவுக்கு மின்சார பற்றாக்குறை இல்லாமல் இருந்து இருக்கும் என்பதை அரசு அறியுமா ? அத்தகைய ஒரு ஒப்பந்தத்தை தற்போது ஏற்படுத்திக்கொள்ள அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது மிகவும் சிக்கலான கேள்வி, 1969-ல் யூனிட்டுக்கு 4½ காசு விலை இருந்தது. தற்போது யூனிட்டுக்கு 35 காசு என்று ஆகியிருக்கிறது. என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் மாண்புமிகு கோவிந்தன் நாயர், கேரளத்தில் மின்சாரத் துறை அமைச்சராக இருந்தபோது, இடுக்கி திட்டம் நிறைவேற்றப்பட்ட நேரத்தில் இத்தகைய நீண்டகால ஒப்பந்தம் போட்டுக்கொள்ளலாம் என்று கூறியதாகவும், அப்போது தமிழக அரசு சார்பிலே கலந்து கொண்ட மந்திரிகள் அதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்பதாகவும் நான் நேரில் அவரைச் சந்தித்தபோது கூறினார். அது பற்றிய விவரங்கள் என்னிடத்தில் தற்போது இல்லை.

[1983 பிப்ரவரி 10

(முற்பகல் 9-10).

திரு. தே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கேரள சர்க்காருடன் ஏற்பட்ட ஒப்பந்தம் கைவிடப்பட்டதாக பத்திரிகையில் பார்த்ததாகத் தெரிவித்தார்கள். அப்படி ஒருதலைப் பட்சமாக கைவிடும் ஒப்பந்தம் தான் ஏற்கெனவே போடப்பட்டதா ? 28—1—1983 அன்று இந்த அவையில் இப்படிப்பட்ட ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாக அமைச்சரவர்கள் அறிவிக்கவில்லையே. கேரள சர்க்கார் ஒப்பந்தத்தை கைவிட்டது என்றால் அது ஏன் இந்த அவைக்குத் தெரிவிக்கப்படவில்லை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நாங்கள் இந்த அவையிலே அறிவித்த ஒப்பந்தம் இன்றும் அமலில் இருக்கிறது. கேரளத்தில் இருந்து பெறுகின்ற மின்சாரத்திற்கு என்ன விலை என்பதுபற்றி முடிவு செய்யப்பட்டது. ஆனால் அவர்கள் நம்மிடமிருந்து சிமிண்ட் பெறுவதற்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்ற ஒப்பந்தம் ஏற்படவில்லை. அதுபற்றி முடிவு செய்ய வேண்டியது கேரள அரசு தான். அவர்களிடமிருந்து நமக்கு தகவல் வரவில்லை. ஆனால் கேரள முதலமைச்சர் தேவையில்லை என்று தெரிவித்ததாக செய்திகள் வந்தன.

திரு. பி. எஸ். துரைசாமி : தலைவரவர்களே, தற்போது மின்சாரத் தட்டுப்பாடு இருப்பதால் நம் விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

கொல்லிமலையிலுள்ள ஆகாச நீர்வீழ்ச்சிப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்கும் திட்டம்.

*வினா எண். 210—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லி மலையிலுள்ள ஆகாச நீர்வீழ்ச்சியை சுற்றுலா இடமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : கொல்லிமலைப் பகுதியை, ஆகாச நீர் வீழ்ச்சி உட்பட, மாவட்ட உலாத் தலமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆரம்பத்தில் 3 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

1983 பிப்ரவரி 10]

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, இந்த கொல்லி மலை ஆகாச நீர்வீழ்ச்சிக்கு சுற்றுலாப் பயணிகள் சென்று வர, குளிப்பதற்கு வசதியாக நமது இந்திய நாட்டை வெள்ளைக்காரர்கள் ஆண்டபோது கம்பி பாதை அமைக்கப்பட்டிருந்தது. இப்போது அந்தக் கம்பிப் பாதை பழுதடைந்திருப்பதால் அங்கே உல்லாசப் பயணிகள் செல்லுகின்ற நிலைமை இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொல்லிமலைக்கு வருகை தந்தபோது தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சாலை அமைத்துத் தருவதாகக் கூறினார்கள். அந்தச் சாலை வசதியை ஏற்படுத்தி, உல்லாச பயணிகள் சென்றுவர ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மாவட்ட வளர்ச்சிக் குழுவின் சார்பிலே இந்த கொல்லிமலையை ஒரு சுற்றுலாப் பகுதியாக ஏற்படுத்த மிகப் பெரிய அளவில் பல்வேறு விவரங்கள் அடங்கிய ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் இந்த ஆகாச நீர்வீழ்ச்சிக்கு சென்றுவர பாதை அமைத்து, அங்கே குளிப்பதற்கு போதுமான வசதிகள் ஏற்படுத்தும் திட்டங்களும் அடங்கியிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரை கலந்து, அதற்கான பணிகளை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வெ. அரங்கராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த ஆகாச நீர்வீழ்ச்சிப் பகுதியை அபிவிருத்தி செய்ய 3 இலட்சம் ரூபாய் முதலிலே செலவிட திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். என்னுடைய தொகுதியில் புளியஞ்சோலையிலிருந்து ஆண்டு தோறும் ஆடி 18 தினத்தன்று இந்த கொல்லிமலை ஆகாச நீர்வீழ்ச்சிக்கு ஏராளமான மக்கள் சென்று வருவார்கள். எனவே புளியஞ்சோலையிலிருந்து அந்த ஆகாச நீர்வீழ்ச்சி வரை வசதியாக சென்றுவரவும் பஸ் போக்குவரத்தை ஏற்படுத்தவும் சாலை வசதிக்கு ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த கொல்லிமலைப் பகுதி என்பது திருச்சி மாவட்டம், சேலம் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களையும் இணைக்கின்ற ஒரு சிறந்த பகுதி, அங்கே பல அபிவிருத்திப் பணிகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. அதற்கு சுமார் 28 இலட்சம் ரூபாய் செலவிலே பல திட்டங்கள் அரசுக்குத் தரப்பட்டிருக்கின்றன. மேலும் அங்கே மலைவளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுமார் 194.80 இலட்சம் ரூபாய் செலவில் சில சாலை அபிவிருத்திப் பணிகளும் வேறுசில திட்டங்களும் அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்கள் எல்லாம்

நிறைவேற்றப்படுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தக் கருத்தும் செயல்படுகிற நடைமுறையிலே வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கு ஒரு ஊருக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்? என் தொகுதியில்—பழனி—தமிழ் நாட்டில் மிகப்பெரிய யாத்திரிக தலமாக இருக்கிறது. அதை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கு அரசிடம் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் தலங்கள் என்று அறிவிப்பதற்கு எந்த அடிப்படைத் தகுதிகளை வைத்து அறிவிக்கின்ற திட்டம் எதுவும் அரசிடம் இல்லை, நடைமுறையிலும் இல்லை. மக்களாகவே அதிக அளவில் சென்று அந்த இடத்தைப் பார்க்கிறார்கள் என்றால் அல்லது அதிக அளவில் அந்த இடத்திற்கு போகிறார்கள் என்றால் , அந்த விவரங்கள் அரசுக்கு தெரிந்ததற்குப் பிறகு, அந்த இடத்திலே மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்யவேண்டும் என்ற அடிப்படையிலே தான் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. பழனியைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால், விவரமாக பரிசீலித்து பதில் தரச் செய்யலாம்.

வடாற்காடு மாவட்டம் அமிர்த்தி என்னுமிடத்திலுள்ள மிருகக் காட்சி சாலை.

* வினா எண். 211—திரு. இல. பலராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் அமிர்த்தி என்னும் இடத்தில் மிருகக் காட்சி சாலை இருப்பது உண்மையா ?

(ஆ) இதனை வனத்துறை மூலம் விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ?

(இ) இப்பகுதியை சுற்றுலா பகுதியாக மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஒரு சிறிய மிருகக்காட்சி சாலை அங்கு உள்ளது.

(ஆ) இது பரிசீலனையில் உள்ளது.

(இ) இந்த இடத்தை ஒரு மாவட்ட உலாத்தலமாக மாற்றுவது வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வடாற்காடு மாவட்டத்திலே இருக்கிற அமிர்த்தி காடு ஒரு நல்ல இயற்கை காட்சிகளை பார்க்கிற இடமாகவும் இருப்பதோடு, படத்துறையில் இருப்பவர்கள் எல்லாம் அங்கே வந்து படம் எடுக்கக்கூடிய இடமாகவும் இருப்பதால், அதனை சுற்றுலாத்தலமாக ஆக்கும்போது, பெரிய அளவில் சென்டராக ஆக்கும் வகையில் அதன் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே மிகச் சிறிய அளவிலே ஒரு மிருகக்காட்சி சாலை இருக்கிறது. அங்கே மக்கள் வந்து பார்த்துச் செல்லக்கூடிய வகையில், பறவைகள் போன்ற இனங்களையும் சேர்த்து 181 மிருக இனங்கள் இருக்கின்றன. இந்த 1981-82 ஆம் ஆண்டில் 30 ஆயிரம் ரூபாய் இந்தப் பகுதிக்கென்று ஒதுக்கப்பட்டு, சாலை அமைக்கவேண்டிய பணி அமிர்த்தியிலிருந்து கின்னிக்குளம் வரையில் சாலை செப்பனிடும் பணி தொடங்கப்பட்டு அது தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளது.

அதைத் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஒட்டி, அந்தப் பகுதியை மக்களைக் கவர்கின்ற வகையில், மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே ஆலோசித்து அதனைச் சுற்றுலாத்தலமாக ஆக்க அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமிர்த்தி சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாக இருப்பதால், ஆயிரக்கணக்கான மக்கள் சென்று பார்க்கிற இடமாக மாற இடம் இருப்பதால், அப்படிச் செல்கிற பொது மக்களுக்குத் தங்குவதற்கு அந்த இடத்திலே தங்கும் விடுதிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பொதுமக்கள் போய் தங்குவதற்கு முதலிலே போக்குவரத்து வசதி வேண்டும். போக்குவரத்தை அங்கே உருவாக்குவதற்கு அடிப்படை தேவை சாலை வசதிகள். தேவைப்படுகிற ஒரு குறிப்பிட்ட அளவு லெவலில் இப்போது சாலை வசதி இல்லை. அந்தச் சாலையை போட வேண்டும் என்கிற அந்தத் திட்டம் இப்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. அது முடிவடைந்ததற்குப் பிறகு, எவ்வளவு பேர்கள் அங்கே தங்குவதற்கு வருவார்கள் என்பதை கணக்கிலே கொண்டு, பிறகு அங்கே தங்குவதற்குகான இடங்கள் அமைப்பது குறித்து அரசு ஆலோசிக்கும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அமிர்திக்கு அருகிலே ஏலகிரிமலை என்கிற ஒரு மலை இருக்கிறது. அமிர்த்தியை சுற்றுலாத்தலமாக விஸ்தரிக்கவேண்டும் என்கிற நிலை அரசாங்கத்தின் அய்வியே

[1983 பிப்ரவரி 10

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, நிழல் தருகின்ற மரங்கள் நடப்படுகின்றது என்றால் அவை பெரிய மரங்களாகத்தான் இருக்கும். எனவே அந்த மரங்களின் சருகுகள் அந்த நதியிலே விழுந்து மேலும் துர்நாற்றம் உடைய கூவம் நதியாக ஆக வாய்ப்பு இருக்கின்றது. எனவே அங்கே சிறிய மரங்களை நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நிழல் தரும் மரங்கள் என்று சொல்லுகின்றபோது அவை எந்த அளவிற்கு பெரிய மரங்களாக வளரும் என்பது தெரிவிக்கப்படவில்லை. ஆனால், அப்படிப்பட்ட மரங்களின் சருகுகள் நீரிலே விழுந்து அழுகி துர்நாற்றம் ஏற்படுகின்ற வகையில் அமையாது மரம் நடுகின்ற திட்டமே துர்நாற்றத்தைப் போக்குவதற்காகத்தான் உருவாக்கப்படுகின்றது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் நதியிலே சுற்றுலாத்துறையின் மூலம் படகு விடுகின்ற திட்டம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி மரம் நடுகின்ற திட்டத்தை பற்றி மட்டும்தான்.

புதுக்கோட்டைத் தொகுதியிலுள்ள வெள்ளாள விடுதி, திராபிடுங்கி விவசாயப் பண்ணைகள்.

*வினா எண். 213 — திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான், திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டைத் தொகுதியில் உள்ள வெள்ளாள விடுதி. திராபிடுங்கி ஆகிய இடங்களில் உள்ள விவசாயப் பண்ணைகளை அரசு மூடிவிட உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு பண்ணைக் கழகத்தின் நடவடிக்கைகள் 31-8-1982 முதல் நிறுத்தப்பட்டுவிட்டதால், புதுக்கோட்டை தொகுதியிலுள்ள வெள்ளாள விடுதி பண்ணை எண்ணெய் வித்துக்கள் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. திராபிடுங்கி பண்ணை வருவாய்த்துறைக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது.

1983 பிப்ரவரி 10]

மேட்டூர் வட்டம் கூணாண்டியூரில் கட்டப்பட்டு வரும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

*வினா எண் 214—திரு. செ. செம்மலை: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம் கூணாண்டியூரில் கட்டப்பட்டு வரும் மேல்நிலை தண்ணீர் தொட்டியில் வேலை நிறுத்தப்பட்டதின் காரணம் யாது?

(ஆ) அது எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) அண்ட் (ஆ) சேலம் மாவட்டம் மேச்சேரி ஊராட்சி ஒன்றியம் கூணாண்டியூர் மேல்நிலை நீர்த்தொட்டி வேலை ரூ. 15,000 மதிப்பீட்டில் ஒப்பந்தகாரருக்கு ஒப்படைக்கப்பட்டு முடிக்கப்படாமல் இருந்த நிலுவை வேலை மற்றொரு ஒப்பந்தக்காரரால் எடுத்து முடிக்கப்பட்டு தற்பொழுது குழாய் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.

கோவை மாநகராட்சிக்கான வளர்ச்சித் திட்டம்.

*வினா எண். 215—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகராட்சி, மாநகராட்சியாக மாற்றப்பட்டுள்ளதால் அதற்கான வளர்ச்சித் திட்டம் ஏதாவது போடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) சுமார் ரூ. 44 கோடிக்கு ஒரு வளர்ச்சித் திட்டம் மாநகராட்சியினரால் தயாரிக்கப்பட்டு அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. ரமணி: இந்த வளர்ச்சித் திட்டத்தில் என்னென்ன முக்கியமான திட்டங்கள் அடங்கியுள்ளன என்பதை அரசு அறிவிக்குமா?

இருப்பதால், அமிர்த்தியை விஸ்தரிக்கின்ற பணியிலேயே இந்த ஏலகிரி மலையையும் இணைத்தால், மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக இரண்டும் அமையும், ஆகவே அதைச் செய்ய அரசு ஆலோசிக்குமா என்பதை என் வேண்டுகோளாக அல்ல—இரண்டையும் இணைக்க வேண்டும் என்கிற என் கோரிக்கையை—அரசு ஏற்க முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே அமிர்த்தியை முடித்துவிட்டு, அதற்குப் பிறகு, ஏலகிரியை விஸ்தரிக்க இயலுமா என்பதைப் பரிசீலிக்கலாம்.

கூவம் நதியின் கரை ஓரங்களில் மரங்கள் வளர்க்கும் திட்டம்.

*வினா எண். 212 —திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கூவம் நதியின் கரை ஓரங்களில் மரங்கள் வளர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கூவம் மற்றும் பக்கிங்ஹாம் நதிக்கரையில் நிழல் தரும் மரங்களையும் அழகுதரும் மரங்களையும், ஆக்கிரமிப்பு இல்லாத இடங்களில், வனத்துறையினரால் நடுவதாக முடிவெடுக்கப்பட்டு 1982-83 ஆம் ஆண்டில் கூடுமானவரை அதிக இடங்களில் மரங்கள் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மீதமுள்ள பகுதிகளில் 1983-84 ஆம் ஆண்டில் மரங்கள் நடப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்கள் நடப்பட்டுக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதைத் தீவிரப்படுத்த அரசு முன்வருமா ? அத்தோடு அப்படி நடுகிற மரங்கள் அரசுக்கு வருவாயைத் தருகிற வகையில் பயன் தரும் மரங்களை வைக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரம் நடுகின்ற திட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்படுகின்ற நேரத்திலே அவற்றில் பல பகுதிகள் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தால், பொதுப்பணித் துறை அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கையிலே இறங்க வேண்டும் என்று

கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, எவ்வளவு விரைவிலே ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகிறதோ அதையொட்டி மரம் நடுகின்ற பணியும் தீவிரப்படுத்தப்படும், மேலும் இது நகரத்திற்கு மத்தியிலே அமைகின்ற காரணத்தால் பலன் தரும் மரங்களை வளர்ப்பது என்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. ஆகவே மலர்கள் பூக்கின்ற, அழகு தரும் மரங்களையும் நிழல் தரும் மரங்களையும் நடலாம் என்ற அந்த அடிப்படையிலே அந்த மரம் வளர்க்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூவம் நதிக்கரை ஓரத்தில் என்னென்ன விதமான மரங்களை நட இருக்கிறீர்கள் ? அதற்காக அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நான் முன்னாலே குறிப்பிட்டது போன்று நிழல் தரும் மரங்களையும், மலர் பூக்கின்ற மரங்களையும் நடத் திட்டமிடப்பட்டிருக்கின்றது என்ற விவரம் தான் இருக்கின்றது. ஆகவே அந்த ஜாதி மரங்கள்தான் அங்கே நடப்படும் என்று தெரிகிறது; ஆனால் எப்படிப்பட்ட மரங்கள் என்பதற்கான விவரம் இல்லை. மேலும் அங்கேயுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்ற சூழ்நிலையில் மொத்தம் எவ்வளவு மரங்கள், எவ்வளவு தூரத்திற்கு நடப்படவேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறதே தவிர அதற்கு எவ்வளவு தொகை செலவழித்து நடவேண்டும் என்பதை அடுத்த ஆண்டிலேதான் எடுத்துக் கொள்ள முடியும்.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் நதிக்கரையில் நடப்படுகின்ற மரங்களை வனத்துறை நடுமா? கூவம் நதிக்கரை பொதுப்பணித்துறைக்குச் சொந்தமானதா? அல்லது வனத்துறை பொதுப்பணித்துறையிடமிருந்து அந்த இடத்தைக் கையகப்படுத்தி இருக்கின்றதா? அல்லது வனத்துறைக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலங்கள் அரசின் நிலங்கள் அது பொதுப்பணித்துறையின் நிர்வாகத்திலே இருக்கின்றது. வனத்துறையிடத்திலே மரம் நடுவதற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, அது பொதுப்பணித்துறையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட இடங்கள் தான். வனத்துறை மரம் நடுகின்ற பணியை நிறைவேற்றும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாலே கேட்ட கேள்வி அதற்கு எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பது திட்டங்கள் போடப்படுகின்ற நேரத்தில் சுமார் 6200 வெவ்வேறு ஜாதி மரங்களை 18 கிலோ மீட்டர் நீளத்திற்கு கூவம் நதிக்கரையில் நடுவதற்கு 6.55 இலட்சம் ரூபாய் செலவாகலாம் என்று ஒரு திட்டம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தத் திட்டத்தின் கீழ் நிர்வாகச் செலவிற்காக ரூ. 3,60,00,000-ம் சாலைகள் பாலங்களுக்காக ரூ. 20,85,00,000-ம், கல்விக்காக ரூ. 6,15,00,000-ம் வருவாய் தரும் இனங்களுக்கு ரூ. 8,00,00,000-ம் பொதுச் சுகாதாரத்திற்காக ரூ. 1,43,00,000-ம் வாகனங்களுக்காக ரூ. 15,6,00,000-ம் நீச்சல்குளம் மிருகக்காட்சி சாலை, வேளாண்குளம் அழகுபடுத்த ரூ. 65,00,000-ம் அதிகப்படியான பணியாளர்களை நியமனம் செய்வதற்காக ரூ. 5,70,00,000-ம் ஆக 44 கோடி ரூபாய் செலவழிக்க திட்டமிடப்பட்டது.

திரு. கு. ரமணி : இந்தத் திட்டம் தீட்டப்பட்டதிலிருந்து இந்தத் திட்டத்தின் வேலைகள் ஏதாவது ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கிறதா? நடந்து கொண்டிக்கிறது என்றால் எந்தளவிற்கு அதன் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. காந்திபுரத்தில் அங்குள்ள நகரப் பேருந்து நிலையம் முனிசிபல் மத்திய பேருந்து நிலையத்தின் அடியில் ஒரு பாதாள நடைபாதை உருவாக்குவதற்கான திட்டம் இதில் அடங்குமா? அல்லது அது தனியான திட்டமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நான் ஏற்கெனவே சொன்னேன். இத்திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது என்று, ஆகவே, திட்டம் பரிசீலனையில் இருக்கிற நேரத்தில் எப்படி நடைமுறைப்படுத்தப்படும் என்ற கேள்விதான் எனக்கெல்லாம் எழுகிறது. கோவை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் எங்கெங்கே நெரிசல் அதிகமாக இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளில் ஒவர் ப்ரிட்ஜஸ் என்று சொல்லக் கூடிய மேல் மட்டப் பாலங்கள் அமைக்கிற திட்டத்தை நாங்கள் எடுத்துக் கொள்ள இருக்கிறோம். அப்படிச் செய்வதன் மூலம் மாநகராட்சி அலுவலகத்தின் பக்கமும், காந்திபுரம் டவுன் பஸ் ஸ்டாண்ட் இருக்கிற இடத்திலும் இந்த இரண்டு பாலங்களை உடனடியாக அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கோவைத்தம்பி : கோவை மாநகராட்சியான பிறகு கோவையின் எல்லை விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அதன் அடிப்படையில் ஒதுக்கப்படுகிற பணத்தை அதிகமாக ஒதுக்கி (added area) அந்தப் பகுதிகள் எல்லாம் முன்னேறுவதற்கு நகர்ப்புற வளர்ச்சியை உருவாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா: குறிப்பாக காந்திபுரம் பகுதி மட்டும் மிகவும் வேகமாக வளர்ந்து வருகிறது என்பதால் மற்றப் பகுதிகளும் வேகமாக வளர்வதற்கானதொரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இப்போது மாநகராட்சியினுடைய எல்லைக்குட்பட்டு ஆறு ஊராட்சி மன்றங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளுக்கெல்லாம் இந்த வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்

கிறோம். ஆகவே எந்தெந்தப் பகுதிகள் இன்னும் வளர்ச்சியடையாமல் இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளுக்கெல்லாம் இந்த வளர்ச்சித் திட்டத்தின் மூலம் அவைகள் உடனடியாக மாநகராட்சி அந்தஸ்தைப் பெறுவதற்கும் அடிப்படை தேவைகள் போய்ச் சேருவதற்குமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். ஆறுமுகம் : அமைச்சர் அவர்கள் அறிவிக்கிற நேரத்தில் கோவை மாநகராட்சிக்கு 44 கோடி ரூபாய் செலவில் வளர்ச்சித் திட்டம் போடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்கள். இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படயிருக்கிறது? அந்தத் திட்டத்தை எப்போது முடிப்பதாக உத்தேசமிருக்கிறது? கோவை மாநகரம் மிகவும் நெருக்கடியான வளரக்கூடிய நகரமாக இருப்பதாலும் கொசுத் தொல்லை அதிகமாகயிருப்பதாலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் இத்திட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திட்டம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. பரிசீலனை முடிவடைந்து அதற்காக பணம் ஒதுக்கப்பட்டவுடன், நடவடிக்கை எடுக்கப்படும். கொசுத் தொல்லை அதிகமாகயிருப்பதால் பாதாளச் சாக்கடைத் திட்டம் வேண்டும் என்றார்கள். ஏற்கனவே நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் இருக்கிறது. எந்தெந்தப் பகுதிகளில் இன்னும் போய்ச் சேரவில்லையோ நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்தப் பகுதிகளுக்கெல்லாம் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. கொசுத் தொல்லையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மாநகராட்சி மூலம் எடுக்கப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9.30)

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி வளர்ச்சிப் பணிக்காக 44 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 44 கோடி ரூபாய்க்கான திட்டம் தீட்டப்பட்டு, அதன் வளர்ச்சிக்காக அறிவிக்கின்ற நேரத்தில் மாநகராட்சியின் வருவாயை, அதனுடைய நிதிநிலையைப் பெருக்குவதற்கான வழிவகைகள், முயற்சிகள் கோவை மாநகராட்சியின் மூலமாக தயாரிக்கப்பட்டிருக்கிறதா, மேற்கொள்ளப்பட இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அதுபற்றி அடுத்த கேள்வியிலேயே வருகிறது.

[1983 பிப்ரவரி 10

*வினா எண் 216—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சியின் கடந்த மூன்று ஆண்டுகளின் வருமானம் எவ்வளவு ?

(ஆ) மாநகராட்சியின் வருமானம் உயர்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) கோவை மாநகராட்சியின் கடந்த மூன்று ஆண்டுகளின் வருமானம் கீழே தரப்பட்டுள்ளது.

	1978–79.	1979–80.	1980–81.
	(இலட்சங்களில்.)		
சாதாரணம்	388.96	458.11	513.04
மூலதனம் (அரசு-கடன் வைப்புத் தொகை முன் பணம் உட்பட).	627.30	500.79	578.57
மொத்தம் ..	1,016.26	958.90	1,091.61

(ஆ) மாநகராட்சியின் வருமானத்தை உயர்த்தும்பொருட்டு வீட்டுவரி, தண்ணீர் கட்டணவரி, விளம்பர வரி ஆகிய வரிகளை உயர்த்தவும், கடைகள் கட்டி வாடகைக்கு விடவும், கட்டணக் கழிப்பிடங்கள் கட்டவும், வழி வகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 சதுர மீட்டராக இருந்த கோவை நகர், இன்று மாநகராட்சியாக ஆகிறபோது, 24 சதுர கிலோ மீட்டராக வளர்ந்திருக்கிறது. ஆகவே, அதற்குத் தேவையான வருமானத்தை ஈட்டுவதற்கு புது வரிகளைப் போட்டு, கூடுதல் வருமானத்தை தேடுவதற்கு முயற்சி செய்யப்படுமா ? அதோடு, ஏற்கனவே நீண்ட காலமாக இருக்கின்ற வரிவசூல் அதிகாரிகள், வரி ஏய்ப்பு செய்வதற்குக் காரணமாக இருப்பதால், அவர்களை மாறுதல் செய்வதற்கு, வேறு கார்ப்பரேஷனுக்கு மாற்றுவதற்கு அரசு ஏதேனும் திட்டம் வகுத்திருக்கிறதா ? தேவைப்பட்டால், அதற்கான சட்டத் திருத்தத்தைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1983 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அதனுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கான பல்வேறு திட்டங்களை நான் ஏற்கனவே சொன்னேன். ஆனால், மாநகராட்சியைப் பொறுத்த அளவிலும், நகராட்சியைப் பொறுத்த அளவிலும், நான் ஏற்கனவே இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன் ; இப்போது வேண்டுமானாலும் தெரிவிக்கின்றேன். இந்த அரசைப் பொறுத்த அளவில் புதிய வரிகளைப் போடுவதாக இல்ல. அதே நேரத்தில், வருமானத்தை எப்படி அதிகரிப்பது என்கிற யோசனையை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதையும், அதே நேரத்தில் தமிழகத்திலே இப்போது 3 மாநகராட்சிகள் இருக்கின்றன ; இந்த ஆண்டில் புதியதாக 3 மாநகராட்சிகள் வர இருக்கின்றன. சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய 3 மாநகராட்சிகளுக்கும் பொதுவான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, அதன் மூலமாக ஒரு இடத்திலே பணியாற்றுகின்ற மாநகராட்சி அதிகாரிகள் இன்னொரு மாநகராட்சிக்கு மாற்றப்படுகின்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு இந்தச் சட்டம் கொண்டுவரப்படும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வருவாயைப் பொறுத்தவரை, கோவை மாநகராட்சியின் உட்பட்ட பகுதியின் இணைப்பு ஒன்றுக்கு ரூ. 2 வசூலிக்கப்படுகிறது. அதை உயர்த்துவதற்கு முயற்சி செய்யப்பட்டபோது, சில அரசியல் கட்சிகள், அரசியல் நோக்கத்தோடு இதை எதிர்த்துப் போராட்டம் செய்ததன் காரணமாக, அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. ஆனால், இப்போது ஆட்ஏரியாவில் சிறுவாணி தண்ணீர் கொடுக்கப்படுவதற்கு இணைப்பு ஒன்றுக்கு ரூ. 10 முதல் ரூ. 15 வரை வசூலிக்கப்படுகிறது. 21 கோடி ரூபாய்க்கு எல்.ஐ.சி. கடன் வாங்கி, இந்த சிறுவாணி குடிநீர் திட்டம் போடப்பட்டது. ஆகவே, இணைப்பு ஒன்றுக்கு ரூ. 2 என்பது மிகவும் குறைவு என்று கருதப்படுவதால், இதை மீண்டும் பரிசீலித்து மாநகராட்சியின் வருவாயைப் பெருக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே நல்ல தண்ணீர் கிடைக்கின்றது என்று சொன்னால், கோவை மாநகராட்சியில் தான். இன்றைக்கு கோவை மாநகராட்சிப் பகுதியில் மிகவும் தித்திப்பான, இனிப்பான, சுவையான சிறுவாணி குடிதண்ணீர் அங்கே கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. இன்னொரு உத்திரவாதத்தையும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவை மாநகராட்சி மக்களுக்கு, இந்த மன்றத்தின் மூலமாக. வருகின்ற மே, ஜூன் மாதங்களில், கோடை காலத்தில் தட்டுப்பாடு இல்லாத அளவுக்கு இந்தத் தண்ணீர் வரத்து இருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு கொடுக்கப்பட இருக்கிறது. இப்போது, இணைப்பு ஒன்றுக்கு ரூ. 2 குடிதண்ணீருக்காக வசூலிக்கப்படுவதை, உயர்த்த வேண்டு

மென்று சொல்லி, ரூ. 10 என்கின்ற அளவுக்கு உயர்த்துவதற்கு யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தண்ணீருக்காக ரூ. 15 வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆகவேதான், ரூ. 10 என்ற அளவுக்கு உயர்த்தினால் போதும் என்ற நிலையில் இந்த மாநகராட்சி அதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஏன் என்றால் இப்போது சிறுவாணி அணைக் கட்டுவதற்கு 9 கோடி ரூபாய் திட்டம் போடப்பட்டது. மீண்டும் ரிவைஸ்டு எஸ்டிமேட் என்ற முறையில் அது 11 கோடி ரூபாய்க்கு வந்தது. 11 கோடி ரூபாயிலிருந்து 22 கோடி ரூபாய்க்கு போய் விடக்கூடிய நிலை இருக்கிறது. இப்படி ஏறிக்கொண்டே போகிறது. வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தியாக வேண்டும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுடைய குடும்பங்கள் குடியிருக்கக் கூடிய அந்த நகரத்தில் சிறுவாணித் தண்ணீர் நல்ல தண்ணீராக, ஸ்வீட் தண்ணீராக இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தண்ணீரை பாலாக நினைத்து விடக்கூடாது. அதற்கு கட்டணம் 2 ரூபாய் என்று உயர்த்திய போது அங்கிருக்கிற மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். அதனால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் வரிபோடும் போது அந்த ஏழை எளிய மக்களுக்கு வரியைப் போடாமல் பணக்காரர்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும், தண்ணீரை அதிகமாக உபயோகப்படுத்துகிறவர்களுக்கும், பணம் கொடுக்க சக்தி உள்ளவர்களுக்கும் மீட்டர் வைத்து அதற்கு கட்டணத்தை உயர்த்தி — ஏராளமான தொழிற்சாலைகள் உள்ள சிங்காநல்லூர் முனிசிபாலிட்டியை கோவை மாநகராட்சியோடு இணைத்து அவைகளுக்கு கட்டணத்தை உயர்த்தினால் — கார்ப்பரேஷனுக்கு கோடிக் கணக்கான ரூபாய் கிடைக்கும். எனவே அப்படிச்செய்து ஏழை எளிய மக்களை விட்டுவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் சோஷியலிஸ்ட் தத்துவத்தை அடிப்படையாக வைத்து கட்சியை நடத்துகிற மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி போன்றவர்கள் என்ன எண்ணங்களை வெளியிட்டார்களோ அதே எண்ணத்தை அதையே கொள்கையாக அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் அவர்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால் ஏழை வயிற்றில் அடிக்கக்கூடாது. ஏழை, எளிய, பாட்டாளி பெருமக்களை வாழவைக்கவேண்டும். அவர்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டும் என்பதற்காக நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். மாநகராட்சிப் பகுதிகளில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு வரி கிடையாது. அவர்கள் ஆங்காங்கே பொதுமக்களுக்கு என்று அமைக்கப்பட்டுள்ள குழாய்களில் எடுத்துக்கொள்ளலாம். வீட்டு மனைகளுக்குள்

இணைப்பு கொடுக்கின்றபோது அங்கேதான் வரி போடப்படுகிறது. மற்றபடி பொதுவான குழாய்களில் தண்ணீர் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். மக்களும் அதை பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். வீட்டு மனை இணைப்புகளுக்குத் தான் வரியை நாம் போடுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநகராட்சிகள் இன்று போதுமான வருவாய் இல்லாமல் மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அமைச்சர் அவர்கள் வரி போடுவதாகக் குறிப்பிட்டார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் மத்திய அரசு இப்படிப்பட்ட பெரிய மாநகராட்சிகள் இருக்கக் கூடிய இடங்களுக்கு விசேட நிதி ஒதுக்கீடு செய்யுமா? மாநில அரசு தங்களுடைய மானியத்திலிருந்து நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இதற்கெல்லாம் நமக்கு நிதி கொடுப்பது இல்லை. இது எல்லா லோகல் பாடீஸ் என்ற முறையில் உள்ளாட்சி நிறுவனமாக இருக்கின்ற காரணத்தால் மத்திய அரசு நிதி கொடுப்பது இல்லை. அதே போல் மாநில அரசுக்கு சந்தர்ப்பம் வரும்போது, முக்கியமான நிகழ்ச்சிகள் அந்த மாநகராட்சியில் நடக்கும் போது மானியங்களை நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக இப்போது பாரதியார் யூனிவர்சிட்டி அங்கே திறக்கப்படவிருக்கிறது. அதற்கு 1 கோடி ரூபாயில் பாதி மானியமாகவும் பாதி கடனாகவும் இன்று மாநில அரசு கொடுத்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் பல்வேறு சாலை வேலைகள் இப்போது அந்த மாநகராட்சிப் பகுதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் வரி என்ற அடிப்படையில் கோவை மாநகராட்சியில் ஒரு பகுதியில் 2 ரூபாய் என்றும், அதாவது மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் இருக்கின்ற பகுதிக்கு 2 ரூபாய் என்றும் என்னுடைய தொகுதியினுடைய—பேரூர் தொகுதி மக்களுக்கு 18 ரூபாய் என்றும் வரி போடுவது நியாயம்தானா? கோவை மாநகராட்சியில் 'அன் ஆதரைஸ்டு' லே—அவுட்ஸ் என்ற பெயரில் பல மாடிக் கட்டிடங்கள் ஆங்காங்கே எழும்பி வருவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? புற்று ஈசல் போல் அவைகள் அதிகமாக வந்து மாநகராட்சியினுடைய வரியை ஏய்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற விவரம் அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? சிங்காநல்லூர் பகுதியில் புதிதாக தோன்றியிருக்கின்ற பிரம்மாண்டமான நூற்பாலைகளுக்கு எல்லாம் 50

ரூபாய், 25 ரூபாய், 10 ரூபாய் என்று வரியை விதித்து, அவர்கள் வரியை கொடுக்காமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இது அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா? இவைகளை எல்லாம் பரிசீலித்து தடுத்து நிறுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் வரியைப் பொறுத்த வரையில் ஒரு பகுதிக்கு 2 ரூபாய் என்றும், இன்னொரு பகுதிக்கு 10 ரூபாய் என்றும் விதிக்கும் நிலை இல்லை. எல்லோருக்கும் ஒரே விதத்தில் தான் வரியை விதிக்கவேண்டும் என்பது தான் மாநகராட்சியின் எண்ணம், அரசின் எண்ணம். கோவை நகரத்தைப் பொறுத்த வரையில் ' அன் ஆத்தரைஸ்டு ' லே அவுட்ஸ்—அங்கீகரிக்கப்படாத வீட்டு மனை—சுற்றி சுற்றி வந்துக் கொண்டிருக்கின்றன. அதை நான் பார்த்தேன். அங்கீகாரம் பெற்றது என்று பெயர் பலகையில் போட்டிருக்கிறார்கள். நான் மாநகராட்சியிலுள்ள அதிகாரிகளை அனுப்பி அங்கீகாரம் பெறப் பட்டிருக்கிறதா இல்லையா என்பதை சோதனைச் செய்யச் சொன்னேன். அதன் மூலமாக ஒரு சில இடங்களிலே வேண்டும் என்றே அங்கிகாரம் பெறாத விட்டு மனைகள் கட்டப்பட்டு இருப்பது தெரிய வந்தது. எப்படியாவது லாபம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை தடுப்பதற்கு என்ன என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அதை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. சிங்காநல்லூர் பகுதியிலுள்ள ஆலைகளில் வரி ஏய்ப்பு செய்யப்படுகிறது. அதன் காரணமாக சிங்காநல்லூர் நகராட்சிக்கு சரியான வருமானம் இல்லை. பாழடைந்து கொண்டிருக்கிறது என்ற காரணத்தினால் அதை கோவை மாநகராட்சியோடு சேர்த்து யார், யார் வரி ஏய்ப்பு செய்திருக்கிறார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9.40)

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, வருகிற ஆண்டில் 3 புதிய மாநகராட்சிகள் வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். புதிய மாநகராட்சியாக வருவதற்கு எவ்வளவு வருமானம் இருக்க வேண்டும், எவ்வளவு மக்கள் தொகை இருக்கவேண்டும் என்பதைச் சொல்வதோடு வருகின்ற காலத்திலே ஈரோடு நகரத்தையும் மாநகராட்சியாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்கிறேன்.

ஆலப்பாக்கம் ரயில் நிலையம் அருகே நடைபெறும் உப்பனாறு பாலம் அமைக்கும் பணி.

*வினா எண் 217—திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதி ஆலப்பாக்கம் ரயில்வே ஸ்டேஷன் அருகில் நடைபெறும் உப்பனாறு பாலம் வேலை எப்போது முடிவடையும்?

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இப்பாலம் அமைக்கும் பணி 1984-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) ரூபாய் 67.50 இலட்சம்.

திரு. ஏ. தங்கராசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 67.50 லட்சம் ரூபாயில் பாலம் அமைக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். அந்தப் பாலத்தைக் கட்டினால்தான் 40 கிராமங்களிலே உள்ளவர்களுக்கும் மீனவர்களுக்கும் நல்ல வழி ஏற்படும். அந்தப் பாலத்தின் இருபுறமும் அப்ரோச் ரோடுகள் போடுவதற்கு மதிப்பீட்டில் வகை செய்யப்படவில்லை என்று சொல்கிறார்கள், அந்த ரோடுகளைச் சேர்ப்பதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 67.50 லட்சம், இது 1984-ஆம் ஆண்டிற்குள்ளாக முடிக்கப்பட்டுவிடும். அதற்குள்ளே 2 பகுதிகளில் சாலைகள் அமைக்கும் திட்டமும் உள்ளது.

திரு. ஏ. தங்கராசு : 2 சாலைகளை அமைக்கும் திட்டம் அந்தத் திட்டத்தில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த இருபுற சாலைகளின் வேலைகளையும் துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதனுடைய மதிப்பீடு எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா ? அந்த வேலையை உடனடியாக ஆரம்பிக்க உத்திரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : உடனடியாக உத்திரவிடப்படும். அதனுடைய மதிப்பீடு தற்போது என்னுடைய குறிப்புகளில் இல்லை.

[1983 பிப்ரவரி 10

குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு வழங்கிய மானியத் தொகை.

*வினா எண் 218—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப நலத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு 1980-1981-ம் ஆண்டில் மத்திய அரசு, மாநில அரசுக்கு அளித்த மானியத் தொகை எவ்வளவு ?

(ஆ) நடப்பு நிதி ஆண்டில் மைய அரசு இதற்காக நமது மாநிலத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ரூ. 778.75 லட்சங்கள்.

(ஆ) ரூ. 858.51 லட்சங்கள்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஆண்டுக்காண்டு தொகைகளை அதிகப் படுத்திக் கொண்டுவருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனால் நம்முடைய தமிழக மக்களின் தொகை வளர்ச்சி குறையாதா ? அதன்மூலமாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறதே, ஆகவே இதை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் இப்போது ஐந்து மாநிலங்கள் சென்ற இரண்டு, மூன்று ஆண்டுகளாக நம்மைவிட தீவிரமாக இந்த குடும்பக் கட்டுப்பாட்டை செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். உதாரணமாக மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான் இப்படி பல்வேறு மாநிலங்கள் நம்முடைய மாநிலத்தை விட தீவிரமாக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமல் நடத்திக்கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வியை இங்கு எழுப்பியிருக்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் நிச்சயமாக எண்ணிக்கை குறைக்கமாட்டாது என்றும் 2000 கி.பி. வரையில் இருக்கும்; அதற்கு மேலும் தொடரும்; பாராளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கை குறைக்கப்படாது என்பதை வாக்குறுதியாக, ஸ்டாட்சுட்டரியாக கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாம் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம்.

1983 பிப்ரவரி 10]

திரு. மி. வின்செண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலே குழந்தைகள் உற்பத்தியில் முதல் இடத்தை வகித்த சீனா இன்று பெரிய அளவில் கட்டுப்படுத்தியுள்ளதாக பத்திரிக்கைக் குறிப்புகள் சொல்கின்றன. அது என்ன முறை என்பதை அறிந்து அதை தமிழ்நாட்டிலே அமல் நடத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனா பொறுத்தவரையில் அவர்கள் திட்டவட்டமாக இரண்டு குழந்தைகளுக்கு மேலே வேண்டாம் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஸ்டேச்சுட்டரி ஆர்டர் போட்டிருக்கிறார்கள். அதற்கு மேலாக 'தே வில் நாட் டாலரேட் எனி சிட்டிசன் அடாப்டிங் மோர் தென் டூ சில்ரன்'; அதுமட்டுமல்லாமல் இன்னும் ஓராண்டிற்குள்ளே ஒரு குழந்தை என்கிற அந்த அளவிற்கு கொண்டு வரயிருக்கிறார்கள். எனவே சீனா பொறுத்தவரையில் இன்னும் 4, 5 ஆண்டுகளுக்குள்ளாகவே, இப்போதிருக்கிற 'எக்ஸ்க்கலேஷன் ஆப் பாபுலேஷன்' என்றில்லாமல், குறையக்கூடிய நிலைமை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையை நம்முடைய நாட்டிலே கொண்டு வர முடியாது; ஏனென்றால் 'வீ ஆர் ஆப்பரேட்டிங் த்ரூ தி பிராசஸ் ஆப் பேலட் பாக்ஸ்'; ஆகவே அதைக்கொண்டு வர முடியாது. நாம் வற்புறுத்த முடியாது; ஆணை போடமுடியாது; அவர்களை நம் பக்கத்திலே திருப்பி அவர்களே ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் செய்யமுடியுமே தவிர, வற்புறுத்தி ஆணை மூலமாக உத்தரவைப் போட முடியாது.

திரு. ரா. உமநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனாவிலே இரண்டு குழந்தைகளுக்கு மேலே கட்டாயமாக கூடாது என்று சொல்லி, அதை ஒரு குழந்தையாக கொண்டுவருவதற்கு முயற்சி நடத்தப்படுகிறது என்று சொல்லி, நம் நாடு பேலட் பாக்ஸ் மூலமாக நடப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்போது அங்கே டிக்டேட்டர்ஷிப் என்கிற ஒரு இம்ப்ளிகேஷன் வருகிறது. அதனால் அவர்களால் அமல் நடத்த முடிகிறது, நம்மால் முடியவில்லை என்ற கருத்து வருகிறது. 1981-ல் நானே அங்கு போய் வந்தேன். கட்டாயம் என்பது அங்கே கிடையாது. ஸ்டேச்சூட் அங்கே கிடையாது; ஒரு குழந்தைக்கு மேல் கூடாது என்பதுதான் அவர்களுடைய கோஷம். இதை ஒத்துக்கொள்கிறவர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுத்து, மற்ற சலுகைகளும் அளிக்கப்படுகிறது என்பது தான் எல்லா இடங்களிலும் நான் பார்த்த நிலைமை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த உண்மை தெரியுமா? அல்லது அவர்கள் பேப்பர் கட்டிங்ஸை படித்து விட்டுச் சொல்கிறார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களின் கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன். பேப்பர் கட்டிங்சை படித்திருந்தாலும் கூட

அறிவித்தார்கள். சோவியத் யூனியன் போன்ற நாடுகளில், 9 குழந்தைகள் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு பெற்றால் வீரத் தாய் என்ற பட்டம் கொடுத்தாலும் அங்குள்ள மக்கள் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ள விரும்பாத நிலையை அங்குள்ள அரசு ஏற்படுத்தியிருக்கிறது. சீனாவைப் பற்றி தோழர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே, இந்த இரண்டு நாடுகளையும் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து, அங்கு எப்படி அமுல்படுத்தப் படுகிறது என்பதை அறிந்து வந்து, இங்கு செயல்படுத்த முன் வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே சென்று பார்த்து, இங்கு வருவது என்பது என் கையிலே இல்லை. இருந்தாலும், இந்தக் கருத்தைப் பொறுத்தவரையிலே ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்பு கிறேன். நம்முடைய அறிவு ஜாஸ்தியாக வளரக்கூடிய இந்த நேரத்திலே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், லிட்டரசி ரேட் ஜாஸ்தியாகக்கூடிய நேரத்திலேதான் குழந்தைகளுடைய எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறது. உதாரணத்திற்கு, திருநெல்வேலியில் Literacy rate is very high. அங்கே 60 சதவிகிதம் மக்கள் படித்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, சென்ற 10 ஆண்டுக்காலத்திலே குடும்பநல இலாகா ஜாஸ்தியாக நல்ல முறையிலே வேலை செய்யவில்லையென்றாலுங்கூட, அந்த மாவட்டத்திலே 10 வருடத்திற்கு 11.2 சதவிகிதம்தான் ஜனத்தொகை உயர்வாகியிருக்கிறது. மற்ற மாவட்டங்களிலே மிகக் கடுமையாக நாம் செயல்பட்டாலும் லிட்டரசி ரேட் குறைவாக இல்லை காரணத்தாலே, அங்கே நல்ல வெற்றி கிடைக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு அம்பிகாபதி அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே, நம்முடைய அறிவை வளர்த்துக்கொண்டு, லிட்டரசி ரேட்டை உயர்த்திக்கொண்டு போனால் நல்லமுறையில் இருக்கும். மாண்புமிகு அம்பிகாபதி அவர்களைப் போன்ற விவரம் தெரிந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சாரத்தில் ஈடுபடுவார் களேயானால் நிச்சயமாக வற்புறுத்தல் இல்லாமல் வெற்றி கிடைக்குமென்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''ரஷ்யாவுக்குப் போய்விட்டு வந்த அம்பிகாபதி'' என்று சேர்த்துக் கொள்ளலாம்.

யோகாசன முறைகள் மூலம் நோய்களைக் குணப்படுத்தும் திட்டம்.

* வினா எண். 219—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு யோகாசன முறைகள் மூலம் நோய்களைக் குணப்படுத்தும் திட்டத்தை மருத்துவ மனைகளில் செயல்படுத்த ஆலோசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) பரிசீலனையில் உள்ளது,

(ஆ) யோகமுறை வளர்ச்சி ஆய்ந்து அறிக்கை வழங்கு வதற்காக ஏற்படுத்தப்பட்ட முதற்கட்டக்குழு தனது அறிக்கையில் யோகமுறை மூலம் நோய்களை குணப்படுத்துவது குறித்து ஆய்வு நடத்திடவும் பயிற்சி அளிப்பதற்கான திட்டங்களையும் பரிந்துரை செய்துள்ளது. குறிப்பிட்ட ஆய்வுகளின் முடிவுகளை ஒட்டி, யோகாசன முறைகளின் மூலம் நோய் குணப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த யோகாசன முறைகள் எந்தெந்தவிதமான நோய்களைக் குணப்படுத்தும்? இந்த எந்தெந்த மருத்துவமனைகளில் அமல் படுத்த அரசாங்கம் ஆலோசித்து உள்ளது என்பதை அறிவிப் பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, யோகாசனத்தைப் பொறுத்தவரையிலே, harmonal imbalance என்று சொல்லக்கூடிய Pitutory glands போன்ற Adrinal glands போன்ற முறைகேடுகள் மூலமாக வரக்கூடிய நோய்கள். அதிலே diabetis என்ற நோய், blood pressure என்ற நோய் ஆகிய இப்படிப்பட்ட நோய்களுக்கு யோகாசன முறை மிகவும் பயன் உள்ளதாக இருக்கிறது என்று ஆராய்ச்சி மூலம் தெரிந்துகொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் நாம் சில நிறுவனங்களுக்கு ஒப்புதல் கொடுக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் 'கிருஷ்ணமாச்சாரி இன்ஸ்டிட்யூட் அல்லது 'கிருஷ்ணமாச்சாரி யோகாமந்திர' த்திற்கு ரெக்கக்னைஸ் செய்து, அங்கீகரித்து பர்மிஷன் கொடுத்து 7-12-82-ல் உத்தர விட்டிருக்கிறது. இப்படி யார் யார் நம்மிடத்திலே அந்த அமைப்பை அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்கிறார்களோ அங்கே நிபுணர்களை நாம் அனுப்பி அங்கீகரிக்கக்கூடிய நிலைமை' உடனடியாக அங்கீகரித்து அந்த வாய்ப்பைக் கொடுக்கிறோம். அதன் மூலம் இப்படிப்பட்ட பல்வேறு நோய்கள் நிச்சயமாகக் குணம் அடையும் வாய்ப்பிருக்கிறது. அநாவசியமாக இந்த டிரக்ஸ் அதாவது பாய்சனஸ் மெடிசன் anti-bio ic, harmones போன்ற steroids போன்ற மருந்துகளைச் சாப்பிடாமல் குணம் அடையும் வாய்ப்பிருக்கிறது. வெளி நாடுகளிலிருந்து பிரான்ஸ், ஜெர்மனியிலேயிருந்து இங்கே வந்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த யோகாசன முறைகளை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள விரும்பினால் அதைக் கற்றுத் தருவதற்கு, இந்தப் பயிற்சியைக் கற்றுத் தருவதற்கு அமைச்சரவர்கள் பிரத்தியேகமாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

I give preference and credence to the view of the hon. Member Thiru Umanath ஏனென்றால் நேரடியாக பார்த்திருக்கிறேன் என்று சொல்கிற நேரத்தில் இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஒரு நல்ல சீனியர் சட்டமன்ற உறுப்பினரின் கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை; ஆனால் இங்கே அந்த முறையைக் கொண்டுவரலாமா என்பது ஒரு பிரச்னை. அதற்காக மத்திய அரசாங்கத்திலே ஒரு குழு அமைத்து, என்னை தலைவராக போட்டார்கள்; குழு இதுபற்றி விவாதித்தது: நிறைய இன்சென்டிவ்ஸ் கொடுக்க வேண்டியிருக்கிறது; அது ஓரளவிற்கு தான் இயலும்; சீனாவைப் பொறுத்தவரையில் சில டிஸ்-இன்ஸ்சென்டிவ்ஸ் இருக்கின்றன. இரண்டு குழந்தைகள் என்ற சித்தாந்தத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், வீடுகள் கொடுக்கக்கூடிய அந்த வசதிகள் கூட குறைக்கப்படும். ஆகவே இப்படிப்பட்ட a package of incentives and disincentives, நாம் சீனா கொண்டு வந்த மாதிரியாக இங்கே கொண்டு வர முடியாது. கடுமையாகக் கொண்டு வந்த மாநிலங்கள் கூட பயத்தின் காரணமாக, because of the 1977 election results, நாம் சிறிது மெதுவாக போவோம் என்று ஒட்டுமொத்தமாக கருத்து தெரிவிக்கப்பட்டது; அந்தக் கருத்தினுடைய அடிப்படையிலே நாம் செயலாற்றிக்கொண்டிருக் கிறோம்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவித் தொகை அளிப்பதில் மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசம் இருக்கிறதா? அல்லது ஒரே நிலையில் இருக்கிறதா? தமிழகத்தில் உதவித் தொகையை மேலும் உயர்த்துவதற்கு செயற்குறிப்பு ஏதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகையைப் பொறுத்த வரையிலும் cash compensation to acceptors of Vasectomy ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களுக்கு ரூ. 75-ம் டியூபெக்டமி ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களுக்கு ரூ. 85/- ஆகவும் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், பட்ஜெட்டைப் பொறுத்தவரையிலே, உறுப்பினர் அவர்கள் கேட்டதைவிட விவரங்கள் இன்னும் அதிகம் இருக்கின்றன. Actual amount spent for 1981-82 was Rs.9,02,39,000. The State Government Budget provision for 1980-81 was Rs. 10,48,60,000 ஆகவே, நம்மாலே இயன்ற அளவுக்கு இன்சென்டிவ் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஓரளவுதான் நம்மாலே கொடுக்கமுடியும்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, மத்திய அரசு குடும்பநலத் திட்டத்திற்கு நமக்கு அதிகம் கொடுத்துக் கொண்டு வருகிறது என்ற காரணத்தை வைத்துக்கொண்டு, இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியக்கூடிய அனைத்து ஊழியர் களுக்கும் கோட்டா நிர்ணயித்து, ஒரு மாதத்திற்கு இத்தனை கேஸ் கொண்டுவரவேண்டுமென்று வைத்திருப்பதால் அவர்கள் வேறு வேலைகளைக் கவனிக்க முடியவில்லை. இதனால், பல உள்ளாட்சி வேலைகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே. அந்த முறையை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த விஷயத்தில் தெளிவாக இருக்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொன்ன மாதிரியாக, நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலே, மிக முக்கியமாக, நாடு ஏற்றுக்கொள்ளக்கூடிய இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை இன்னும் தீவிரமாகச் செயல்படுத்தவில்லையென்று குரல் எழுப்ப வேண்டுமே தவிர, இன்னும் கொஞ்சம் குறைக்க வேண்டுமென்று சொல்வது நியாயமாக இருக்காது. ஏனென்றால், "நாஷனல் இன்ட்டரஸ்ட்" முக்கியம். எனவே, எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும் ஒருமித்த கருத்தை நாம் தெரிவிப்பது நாட்டுக்கு நல்லதாக இருக்கும் என்பதுதான் நான் இங்கே தெரிவிப்பது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பநலத் திட்டத்தை அமுல்படுத்தும்போது ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பணியாற்றுகிற மருத்துவர்கள் அதிலே அதிக அக்கறை செலுத்தவில்லை என்ற கருத்து மக்களிடம் நிலவுகிறதே, அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையிலே, இப்பொழுது இருக்கக்கூடிய 456 நிலையங் களிலே, 3 ஆரம்பச் சுகாதார நிலையங்களில், பிரிட்டிஷ் எய்டிலே——உதவியிலே——ஆப்பரேஷன் தியேட்டர்கள், டியூபெக்டமிக்காகப் பொருத்தப்பட்டிருக்கின்றன. அந்த பிரிட்டிஷ் எய்டட் தியேட்டர்களை நாம் பயன்படுத்திக்கொண்டு, அங்கே ஆப்பரேஷன் செய்வதற்கு யாருக்குப் பயிற்சி இருக்கிறதோ, அப்படிப்பட்ட டாக்டர்களே, 31 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இருக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக் கிறோம். அந்த டாக்டர்கள் வாசக்டமி, டியூபெக்டமி ஆப்பரேஷன்களை அங்கே சிறப்பாகச் செய்வார்கள்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலே குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமுல்படுத்துவதிலே இருக்கிற சிரமங்களைப் பற்றி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நானே ஒரு யோகாசன டிரெயின்ட், சர்வாங்க ஆசனம், சிரசாசனம் ஆகியவைகளைத் தினந்தோறும் செய்து கொண்டிருக்கிறேன். இதனால் பிளட் பிரஷர் வராமல் இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அதை அருமையான யோசனையாக நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவரவர்களே, நாம் டி.வி.யிலே பார்க்கிறோம், திரேந்திர பிரமச்சாரி என்பவர் யோகாசன வகுப்புகளை டி.வி.யிலே நடத்திக்கொண்டிருக்கிறார். நாமும் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். திரேந்திர பிரம்மச்சாரியின் யோகாசனத்தில் தமிழ்நாடு அரசாங்கம் ஆகர்ஷிக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன், சப்ஜக்ட் டு கரெக்ஷன், அப்படி அவருடைய யோகாசனப் பயிற்சியை நம்முடைய ஆஸ்பத்திரிகளில் நடத்துவதற்கு திரேந்திர பிரம்மச்சாரி அவர்களை அழைப்பதற்கு ஏதாவது யோசனை உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதற்கான தேவையே இல்லை. நம்முடைய மாநிலத்திலேயே அதைவிடப் பல மடங்கு விவரம் தெரிந்த எக்ஸ்பர்ட்ஸ் இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலேயே, சென்னையிலேயே இருக்கிறார்கள். எனவே, அதைவிட நன்றாகச் சொல்ல முடியும். டி.வி.யில் வாய்ப்பு கொடுத்தால் என்னாலேயேகூடச் சொல்ல முடியும். திரேந்திர பிரம்மச்சாரி நிறைய நேரத்தை வீணாக்குகிறார். அனாவசியமாக தேவையில்லாமல் தன்னுடைய சுய விளம்பரத்திற்காகவே பேசிக்கொண்டிருக்கின்ற காட்சியைப் பார்க்கிறோம். மாணவ மாணவிகளுக்கு மிகவும் குறைவாகவே வாய்ப்பு தரப்படுகிறது. அந்த முறையை மாற்றிநாம் விளம்பரத்திற்காக அல்லாமல் ஒவ்வொரு யோகாசனமும் எப்படி நடைபெற வேண்டுமென்பதைத் தெளிவாகச் செய்து காட்ட முடியும். இப்படிப்பட்ட பதிலைச் சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்டுத் தூண்டி விட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10.00.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய 18 சித்தர்களுடைய பாடல்களில் யோகாசனத்தைப் பற்றி நிறைய குறிப்புகள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் எடுத்து வகைப்படுத்தி, மக்களுக்குத் தெரியும்படியாகவும், மருத்துவ மனைகளில் பயன்படும் விக

செய்தால், அது பொதுமக்களுக்குக் குறிப்பாக, கிராமங்களிலே இருப்பவர்களுக்கு பயன்படும். அத்தகைய நடவடிக்கைகளை அரசு பின்பற்றுமா? யோகாசனத்தைப் பற்றி நல்ல ஆய்வு நடத்துவதற்கு அரசாங்கத்தின் சார்பில் யோகாசன ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் நிறுவ அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கூறிய இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்துதான். மேலும் சித்த மருத்துவத்தைப் பற்றி அவர் நன்கு விவரம் தெரிந்திருக்கக் கூடிய காரணத்தினால் அவருடைய உதவியோடு, இந்த நல்ல கருத்தை முறைப்படுத்தக் கூடிய திட்டத்தை நிச்சயமாக அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் பெயரால் புதிய போக்குவரத்துக் கழகம் துவக்கும் திட்டம்.

*வினா எண் 220—திரு ஆர். சுந்தரமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழகத்தில் இனி புதியதாக துவங்க இருக்கும் ஏதாவது ஒரு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு பெருந்தலைவர் காமராஜரின் பெயர் வைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தேவையேற்படும் பொழுது இக்கருத்தை அரசு பரிசீலித்து தக்க முடிவு எடுக்கும்.

திரு செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து சோழன் போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, திருச்சி, தஞ்சைக்கு தனியாக அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே, திருச்சி மாவட்டத்தில் துவங்கவிருக்கும் போக்குவரத்துக் கழகத்திற்குப் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பெயர் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் மாதம் துவங்குகின்றது என்ற எண்ணம் இன்னும் ஏற்படவில்லை. துரிதமாகத் துவங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துக்கொண்டிருக்கிறோமே தவிர, தேதிகள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்று தனிப் போக்குவரத்துக் கழகமாக அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்ட நேரத்திலேயே நான் இப்படி பெருந்தலைவர் காமராஜர் பெயர் வைக்க வேண்டும் என்று கோரி, ஒரு கோரிக்கையை அனுப்பி இருந்தேன். அதையே வினாவாகக் கூட கொடுத்திருந்தேன். அது குறித்து எந்தவிதமான தகவலும் இல்லை. இப்போது அமைச்சர். அவர்கள் வாய்ப்பு ஏற்படுகிறபோது வைக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். எனவே சோழன் போக்குவரத்துக் கழகம் பிரிக்கப்படுகின்றபோது, திருச்சியிலுள்ள பேருந்துக் கழகத்திற்கு அந்தப் பெயர் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். தேதி இன்னும் முடிவாகவில்லை. எனவே இந்த நேரத்திலே பெயரைச் சொல்வது நல்லதாக இருக்காது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் பல இடங்களிலே அவர் பெயரை வைத்திருக்கிறோம் என்பதை நீங்கள் உணறுகிறபோது, இந்த அரசாங்கம் அவர் பெயரை ஒதுக்க வேண்டும் என்ற எண்ணத்திலே இல்லை. தேவையானபோது முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி ; தலைவர் அவர்களே, ஒரு போக்குவரத்துக் கழகம் பிரிக்கப்பட்டு, இன்னொரு போக்குவரத்துக் கழகமாக உருவாகின்றபோது, அதிலே பணிபுரிபவர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்த சில சலுகைகள் பின்னால் கொடுக்கப்படாமல் இருக்கின்றது என்ற புகார் இருக்கிறது. அது உண்மையா ? தற்போது பல்லவன் போக்குவரத்துக் கழகம் பிரிக்கப்பட்டு, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்று ஆரம்பிக்கப்பட்ட போது இத்தகையகுறைகள் இருக்கின்றன எனவே மாநிலம் முழுவதும் உள்ள போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒரே மாதிரியான விதி முறைகளை வகுத்து, இந்தத் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு இல்லாமல் செய்ய அமைச்சர் என்ன திட்டம் வைத்திருக்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பெயர் வைப்பது சம்பந்தப்பட்ட கேள்வி. பிரிப்பதைப்பற்றிய கேள்வி அல்ல. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட காரணத்தினால் சொல்கிறேன். தொழிலாளர்கள் எந்த வகையிலேயும் பாதிக்கப்படுவதற்கு அல்லது பாதிக்கின்ற அளவுக்கு இந்த அரசு தயாராக இல்லை.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, திருச்சி என்று சொல்லுகிறபோதே நம்முடைய நினைவுக்கு வருவது கரிகால சோழன் பெயர்தான். திருச்சியிலே நிறுவ இருக்கின்ற அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்குத் தமிழ் மன்னன், கரிகால் சோழனுடைய பெயர் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதற்கும் நான் அதே பதிலை திருப்பிச் சொல்லவேண்டியவனாக இருக்கிறேன். தக்க நேரத்தில் தகுந்தபடி ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. [illegible]. முகமது இஸ்மாயில் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நேசமணி போக்குவரத்துக் கழகம் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் அவர்களுடைய பெயரைப் பற்றித்தான் பேசிக்கொண்டு இருக்கிறோம். எனவே, அந்தத் தேதியைப்பற்றி இப்போது சொல்ல முடியாது.

திரு எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போர்க்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கிறபோது மருதுபாண்டியன் போக்குவரத்துக் கழகம் என்று பெயர் வைக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல் சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரிக்கின்றபோது, ராஜராஜ சோழன் போக்குவரத்துக் கழகம் என்று பெயர் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்தசாமி : தலைவர் அவர்களே, 234 சட்டமன்ற உறுப்பினர்களும் ஒவ்வொரு பெயரை ஞாபகப் படுத்தலாம். அவற்றையெல்லாம் நீங்கள் எழுத்து மூலமாகக் கொடுத்தால், அவைகளில் எதை வைப்பது என்று அரசாங்கம் தகுந்த நேரத்தில் முடிவு எடுக்கும்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம்-தர்மபுரி மாவட்டத்திலே இயங்கக்கூடிய அண்ணா போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து, தர்மபுரி மாவட்டத்திற்கு தனியாக ஒரு கழகம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தல்லவர் அவர்களே, தற்போது உத்தேசம் இல்லை. பின்பு யோசிப்போம்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே புதிதாக அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்துக் கழகத்திற்கு ஜீவா போக்குவரத்துக்கழகம் என்று பெயர் வைக்கப்பட்டு உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தலைமை அலுவலகம் ஏதாவது ஒரு இடத்திலேதான் இருக்க முடியுமே. தவிர கிளை அலுவலகம் தேவை என்று நினைத்தால், அந்த இடத்தைப் பார்த்துவிட்டு, தேவை ஏற்படுமானால், சூழ்நிலையைப் பார்த்து சரியாக இருக்குமானால், அரசாங்கம் செய்வதற்கு தயக்கம் காட்டாது என தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழகத்தில் நடப்பாண்டில் எத்தனை பேருந்துகள் புதிதாகவிட அரசு உத்தேசித்து உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதற்கான விளக்கம் என்னிடத்தில் இல்லை. பட்ஜெட் கூட்டம் வரவிருக்கிறது.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் என்ற நிலையை அரசாங்கம் ஏற்று இருந்தும்கூட, செங்கற்பட்டு மாவட்டத்தில் இருந்த பல்லவன் போக்குவரத்து கழகத்தை எடுத்துவிட்டு, அதற்கு, செங்கற்பட்டு மாவட்டத்தையும் வட ஆற்காடு மாவட்டத்தையும் இணைத்து அழகிரி போக்குவரத்துக் கழகம் ஆரம்பித்திருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திற்கு தனியாக ஒரு போக்குவரத்துக் கழகம் இருக்கவேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா? அதற்கான நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அரசின் நோக்கம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக ஒரு போக்குவரத்துக் கழகம் என்ற அடிப்படையில் இயங்கவேண்டும் என்பதாகும். ஆனால் சிறிய மாவட்டமாக இருக்கின்ற தருமபுரி, உதகமண்டலம் போன்ற மாவட்டங்களை பிற மாவட்டங்களோடு இணைத்துத்தான் செயல்படவேண்டியிருக்கிறது. அதே நிலை தான் செங்கல்படடு மாவட்டத்திற்கும் இருக்கிறது. எதிர்காலத்தில் சூழ்நிலை சரியாக இருந்து, தனியாக ஒரு போக்குவரத்துக் கழகம் தேவை என்ற நிலை ஏற்படுமானால் அதை கவனிக்கலாம்.

மாவட்ட போக்குவரத்து கமிட்டிகள்.

*வினா எண் 223—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாவட்ட அளவில் உள்ள மாவட்ட போக்குவரத்து கமிட்டிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட போக்குவரத்து கமிட்டிகளில் உறுப்பினர்களாக இல்லாமலேயே ஆலோசனைகள் கூற அவர்களுக்கு உரிமை உண்டு.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கமிட்டிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தால் பல பிரச்னைகள் தீரக்கூடிய வாய்ப்பு இருக்கும். அலுவலர்கள் மட்டத்தில் மட்டும் அந்தக் கமிட்டிகள் இருப்பதால், அவர்கள் மனம் போனபோக்கில் நடக்கிறார்கள். ஒழுங்காக எந்தெந்த இடங்களுக்கு போக்குவரத்துத் தேவை, மக்கள் தேவை என்ன என்பதற்கேற்றவாறு அவர்கள் ஆலோசனை செய்வது இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தால் அவர்களுக்கு மக்களுடைய தேவை என்ன என்பது தெரியும், எந்தெந்த இடங்களுக்குப் போக்குவரத்து தேவை என்பது தெரியும். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கமிட்டியில் இடம் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியதுபோல், ஒவ்வொரு மாவட்டத்திலும் 5/6 அலுவலர்கள் கொண்ட கமிட்டியாக அது ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் கமிட்டியில் எந்தெந்தப் பகுதிகளில் நன்றாக போக்குவரத்து ஓடுகிறது, எந்தெந்தப் பேருந்துகளில் லாபம் வருகிறது, எந்தெந்தப் பேருந்துகள் புதிதாக போடவேண்டும், அல்லது எந்தெந்தப் பேருந்துகளில் லாபம் வரவில்லை போன்ற பிரச்னைகளை அவர்கள் ஆய்வு செய்கிறார்கள். அதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் இடம் பெறுகிறார். இதற்குக் காரணம், அவரிடம் மக்கள் அளிக்கின்ற மனுக்களை வைத்து இந்தக் குழுவில் விவாதிக்கலாம். அதே போல் போக்குவரத்துக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் இதிலே இடம் பெறுகிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை, ஆலோசனைகளை எழுத்து மூலமாக அந்தக் குழுவிற்கு எழுதி அனுப்பலாம். அதை வைத்துக்கொண்டும் அந்தக் கமிட்டியில் ஆய்வு செய்வார்கள். ஆகவே, எழுத்து மூலமாக எழுதி அனுப்புகின்ற வாய்ப்பு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருப்பதால் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகத் கொடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சியிலே புதிதாக போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று சொன்னார்கள். திருச்சியிலே ஆரம்பிக்கப் பட இருக்கிற போக்குவரத்துக் கழகத்திற்கு ஜீவா போக்கு வரத்துக் கழகம் என்று பெயர் இட்டுவிட்டு, பெரியார் மாவட் டத்திலே இருக்கிற போக்குவரத்துக் கழகத்திற்கு கொங்குநாட்டு போக்குவரத்துக் கழகம் என்று மாற்றி அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இலை போட்ட பின்னால்தான் என்ன என்ன வந்தது, எது எது வரவில்லை என்று நாம் பார்க்க முடியும். எனவே, திருச்சி பிரிக்கப்பட்ட பின்புதான் அதைப்பற்றியெல்லாம் கேள்வி எழும். எனவேஇப்போது வைத்த பெயரை மாற்றுவது என்பது பற்றி எந்தவிதமான பதிலும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

கல்லணையை அழகுபடுத்தும் திட்டம்.

*வினா எண் 221— திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு தொகுதியில் உள்ள கல்லணையை சோழன் போக்குவரத்துக் கழகம் சார்பில் அழகு படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்போது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி

(அ) ஆம்.

(ஆ) சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் நிதி நிலைமையைப் பொறுத்து மேற்படி திட்டம் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கான அலுவலகம் மற்றும் பணிமனை

*வினா எண். 222—திரு. சி. கோபால் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கு தனியாக அலுவலகம், பணிமனை திறக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் எங்கே மேற்படி பணிமனை ஆரம்பிக்க பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகம் 1—12—1982 முதல் வேலூர் அப்துல்லாபுரம் முதியோர் ஓய்வூதியம் பெறும் இல்லத்தில் இயங்கி வருகிறது. இந்தக் கழகத்திற்கு என்று புதிதாக பணிமனைகள் திறக்கப்படவில்லை. ஏற்கனவே இருந்த பல்லவன் போக்குவரத்துக் கழக புறநகர் பணிமனைகளை பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் இயக்குகிறது.

திரு. சி. கோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்திலே நிர்வாகம் சரியான முறையிலே நடைபெற வேண்டுமென்ற நோக்கத்திலேதான் வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு பகுதியிலே ஓடுகின்ற பேருந்துகளையும் செங்கை மாவட்டத்திலே உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே சில பேருந்துகளையும் சேர்த்துநாம் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக்கழகம் என்று பெயர் வைத்திருக்கிறோம். அந்த வகையில் நிர்வாகம் சீராக நடைபெற தனியாக வேலூரில் ஒரு அலுவலகம் அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. கோபால் : தலைவர் அவர்களே, இப்படி தனியாக அமைப்பதன் மூலமாக எத்தனை பேருக்கு புதிதாக வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு வண்டியை புதிதாக இயக்கினால் 7½ பேருக்கு வேலை கிடைக்கும். எனவே எத்தனை புதிய வண்டிகளை இயக்கு கிறோமோ அத்தனை 7½ பேருக்கு வேலை கிடைக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை மாவட்டத்தையும், வட ஆற்காடு மாவட்டத்தையும் சேர்த்து அழகிரி போக்குவரத்துக் கழகம் என்று தனியாக ஆரம் பித்திருக்கிறார்கள். ஆனால் செங்கை மாவட்டத்திற்கு நாங்கள் அண்ணா போக்குவரத்துக்கழகத்தைத் தரவேண்டுமென்று கேட்டு அதை மறுத்திருக்கிறார்கள். எனவே அதை திருப்திபடுத்து வதற்காக காஞ்சிபுரத்தை மையமாக வைத்து அங்கே தனியாக ஒரு அலுவலகத்தை துவக்கினால், செங்கற்பட்டு மாவட்டத்தில் இருப்பவர்களுக்கும், வட ஆற்காடு மாவட்டத்தில் இருப்பவர் களுக்கும் அந்த அலுவலகத்திற்குச் சென்று பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். எனவே அந்த அலுவலகத்தை அங்கே அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்திலே அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தந்த மாவட்டத்தில் உள்ள அந்தக் குழுவிலே இடம்பெறச் செய்யவேண்டும் என்பது என்னுடைய விருப்பம். அது மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எழுத்து மூலமாக எழுதி அனுப்பும் வாய்ப்பு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னாலும், நான் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். என்னுடைய வடாற்காடு மாவட்டத்தில் ஓடுகின்ற பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பாதி பேருந்துகள் தனியார் பஸ் போகின்ற நேரத்தில் பின்னால் போவதால், தனியார் பஸ்கள் அதிகம் பிரயாணிகள் ஏற்றிச் சென்று விடுகின்றன. நம்முடைய அரசுப் பேருந்து காலியாகச் செல்லும் வாய்ப்பு இருக்கிறது. இதற்குக் காரணம் அங்கேயுள்ள அதிகாரிகள் இதனைச் சரியான முறையில் நிர்வகிக்கவில்லை என்பதுதான். ஆகவே அந்தக் கமிட்டியில் சட்டமன்ற உறுப்பினர்களை அங்கம் வகிக்கச் செய்வதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல் ஒருவேளை அந்தக் கமிட்டியில் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றாலும் அவர்கள் போக்குவரத்துக் கழகத்தின் நிர்வாகத்தை நிர்வகிக்க முடியாது. ஆகவே, அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எந்த இடத்தில் பேருந்துகள் விடவேண்டும், எந்த இடத்தில் வண்டிகள் லாபத்தில் ஓடுகின்றன, நஷ்டத்தில் ஓடுகின்றன போன்ற பல்வேறு பிரச்னைகளை ஆராய்ந்து முடிவு எடுப்பதற்குத் தான் இந்தக் கமிட்டிகள் போடப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் 10/15 சட்ட மன்ற உறுப்பினர்கள் இருப்பதால் எல்லோரையும் அதிலே இடம் பெறச் செய்ய முடியாது. அப்படிச்செய்தால் அது முடிவு எடுப்பதற்குச் சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தாது என்பதால்தான் எழுத்து மூலமாக சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதிக்கொடுக்கலாம், அவற்றை அந்தக் கமிட்டியில் விவாதித்து, ஆராய்ந்து பார்த்து, முடிவு எடுத்து, அதற்குப் பின்னால் அவை அவர்கள் அமைச்சருக்கு அனுப்ப வேண்டும், அல்லது அந்தத்துறைச் செயலாளருக்கு அனுப்பவேண்டும் என்று நிலை இருக்கிறது. ஆகவே, முடிவுகள் எடுப்பது மேல்மட்டத்தில் தான் எடுக்கின்ற காரணத்தால், அந்த மட்டத்தில் முடிவு எடுக்காமல் இருப்பதால், சட்டமன்ற உறுப்பினர்கள் கீழே இருந்து, மேலே வரை கருத்துக்களை எடுத்துச்சொல்ல வாய்ப்பு இருப்பதாலே அதிலே இடம் பெறத் தேவையில்லை என்பதை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : தலைவர் அவர்களே, கண்ணியம் நிறைந்த காயிதே மில்லத் அவர்கள் பெயரால் போக்குவரத்துக் கழகம் அமைப்பது பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்தக் கேள்வி மாறி, தற்போது வேறு கேள்விக்கு வந்து விட்டோம். அப்போதே கேட்டு இருந்தால் பதில் சொல்லியிருக்கலாம். இது வேறு கேள்வி.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் போக்குவரத்து நிர்வாகத்தை நடத்த யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் (டி.டி.சி.) நடைபெறுவதைப் போல 3 மாதம் அல்லது 6 மாதத்திற்கு ஒருமுறை சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து மாவட்ட போக்குவரத்துக் குழுக் கூட்டத்தை நடத்த அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலேயே இவை எல்லாம் வந்துவிடுகின்றன. எனவே தனியாக அதைப்போன்று ஒரு கூட்டத்தை நடத்த வேண்டுமா என்பதுபற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, ஒரு மாவட்டத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் கமிட்டியில் போட்டால் குழு மிகப் பெரிதாகப் போய்விடும் என்று சொன்னார்கள். ஏற்கனவே மாநில ரீதியில் ஸ்டேட் அட்வைசரி கமிட்டி என்று ஒன்று இருந்தது; இப்போது இருக்கிறதா என்று தெரியாது. அதிலே கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் எம்.எல்.ஏ.-க்கள் இடம்பெற்றிருந்தார்கள். மாவட்ட அளவில் உள்ள குழுவில் அங்கே இருக்கிற எல்லா எம்.எல்.ஏ.-க்களையும் நீங்கள் போடவேண்டும் என்பது இல்லை. கட்சிக்கு ஒருவரைப் போட்டால் போதும். எழுதிக் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது, எழுதிக்கொடுங்கள் என்று சொன்னால் எந்த சட்டமன்ற உறுப்பினரும் எந்தக் கமிட்டியிலும் இருக்க முடியாது. எவ்வளவு வேண்டுமானாலும் எழுதிக் கொடுக்கலாம். ஆகவே, ஒரு கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் போட்டால் நீங்கள் சொல்லும் யோசனைகளை இன்னும் எஃபக்டிவாக செய்ய வாய்ப்பு இருக்குமல்லவா? அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இந்தக் கமிட்டி போடுவதன் நோக்கமே ஒரு நிர்வாக, இயக்குநர் தன்னிச்சையாக செயல்படும் நிலைமை இருந்தால், தேவை இருந்தாலும் இல்லை என்றாலும், விருப்பு வெறுப்போடு செயல்படும் நிலைமை ஏற்படலாம். அந்த நிலைமை வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் மற்ற அதிகாரிகளையும் சேர்த்து, பரிசீலித்து, அதிகார ரீதியாக அனுப்புகிறோம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு நிறைய இருக்கிறது. போக்குவரத்து அபிவிருத்தி என்று சொல்லும் போது நிர்வாக ரீதியாக அவர்கள் ஆழ்ந்து பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுத்து நடத்த வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்பதால் [illegible]

களை, ஆலோசனைகளை தெரிவிக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். நிர்வாக இயக்குநரிடம் விடலாம் என்றால் ஒரே அதிகாரி செயல்படும்போது தவறு வந்துவிட கூடாது என்பதற்காகத்தான் நாம் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். ஆகவே, இங்கே கருத்துக்களை எழுதிக் கொடுத்து, அவைமீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கும்போது அவர்கள் குழுவிலே இடம் பெறவேண்டியதில்லை என்று கருதுகிறோம்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, எம்.எல்.ஏ-க்கள் அத்தனை பேரும் அல்ல; டிஸ்டிரிக்டில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் இடம் பெறுவதில் என்ன சிக்கல் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல மாநில அளவில் ஒரு அமைப்பு இருக்கிறது. அதிலே சில பிரச்சனைகள் இருக்கின்றன. அதைத் தீர்ப்பதற்குக் கமிட்டி போடும்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம் கொடுப்பது கொஞ்சம் கடினமாகத்தான் இருக்கும்.

திரு. இரா. கருப்பையா ; தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் எப்போது வேண்டுமானாலும் முறையீடு செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த முறையீடு கடைசிவரையில் முறையீடாகத்தான் இருக்கிறது. அதனால் எந்தவிதமான பலனும் இல்லை. ஒரு அதிகாரி சொன்னதை மற்ற அதிகாரி சரி என்று சொல்கிறார். அதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை. இந்த நிலைமையை மாற்றி மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்களைப் போடுவதில் என்ன சங்கடம் இருக்கிறது ? அத்தனை உறுப்பினர்களையும் போட வேண்டாம் ; கட்சிக்கு ஒருவரைப் போடுங்கள். அப்படிப் போடுவதிலே என்ன சிரமம் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இது ஆலோசனைதான். நான் ஏற்கனவே சொன்னமாதிரி இந்த ஆலோசனைகளின் பேரில் அங்கே இருக்கிறவர்கள் எடுப்பது முடிவு அல்ல. நாமே ஆய்வு செய்ய, அரசாங்கத்திற்கு அனுப்புகிறார்கள். அந்த நேரத்தில் நாம் இருக்கின்ற பிரச்சனைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, நியாயமான ஒரு முடிவை எடுப்பதற்காக இந்த அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த அமைப்பும் 10, 15 ஆண்டுகளுக்கு இருக்காது. 2, 3 ஆண்டுகளில் வழித்தடங்கள் எல்லாம் உரிய முறையிலே மாற்றியமைக்கப்பட்டவுடன் இந்த அமைப்பு செயல்படாமல் போய்விடலாம். அந்த நிலைதான் இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் சொல்வதைப்போன்ற 3 பேர்களைப் போட்டோம் என்றால் மற்றவர்கள் எங்களை ஏன்

போடவில்லை என்று கேட்கும் நிலைமை வரக்கூடும். இந்த சங்கடங்கள் எல்லாம் வரும் என்பதால்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்தேன்.

திரு. கு. பா. பழனியப்பன் : தலைவரவர்களே, பல இடங்களில் போக்குவரத்துத் துறைக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் பொருத்தம் இல்லாமல், ஒருங்கிணைப்பு இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் பல இடங்களில் வழித்தடங்கள் போட்டும் பஸ் போகவில்லை. இது அரசுக்குத் தெரியுமா ? இதுபற்றி பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுத்து, எல்லா வழித்தடங்களிலும் பஸ்களை விட அரசுக்கு எண்ணம் இருக்கிறதா ?

(முற்பகல் 10.20.)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதைப் பற்றி வேண்டுமானால் இப்படி யோசிக்கலாம். அங்கேயிருந்து இங்கு வருகிற குறிப்புகளை நாம் ஆலோசனை செய்வதற்காக தலைவர்கள் மட்டத்தில் வேண்டுமானால் கட்சிக்கு ஒருவராகப்போட்டு ஆலோசனைக் கூட்டத்தில் அவைகளைப்பற்றி ஒரு முடிவு எடுக்க இங்கே ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் பதநீர் காய்ச்ச நவீன கருவிகள் வழங்கும் திட்டம்.

*வினா எண். 224—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கருப்பட்டி உற்பத்தி செய்து பதநீர் காய்ச்சும் நவீன கருவிகள் வாங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) வறட்சிக்கு இலக்காகும் பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 24.566 லட்சம் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் பனைப் பொருள் உற்பத்தி தொழில் பேட்டை அமைக்க அரசு அனுமதித்துள்ள திட்டத்தில் நவீன முறை மூலம் பதநீர் காய்ச்சுவதற்கான கருவிகள் வாங்குவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. இக்கருவியை மேற்படி தொழிற் பேட்டையை நிறுவுவதற்கான இடத் தேர்வு செய்யப்பட்டு, இராமநாதபுரம்

(ஆ) ஆம் எனில் விஸ்தரிப்பு அலுவலகங்கள் எங்கு நிறுவப்படும்?

(இ) மதுரையில் உள்ளது போல் 100 கிளை நிலையங்கள் கொண்டதாக திருச்சிராப்பள்ளித் திட்டம் மாற்றப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :

(அ) லால்குடி பகுதியில் ஏற்கனவே தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் செயல்பட்டு வருகிறது. முசிறி மற்றும் துறையூர் பகுதிகளுக்கு விஸ்தரிக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

(ஆ) எழவில்லை.

(இ) 50 கிளை நிலையங்கள் கொண்ட தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் சீராக இயங்குவதால், 100 கிளை நிலையங்களாக மாற்றும் உத்தேசம் இல்லை.

செங்கை மாவட்டத்திலுள்ள கோழிப் பண்ணைகள்

*வினா எண். 158— திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டத்தில் எத்தனை கோழிப்பண்ணைகள் உள்ளன ?

(ஆ) காஞ்சிபுரத்தில் கோழிப்பண்ணை ஒன்று நிறுவும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) செங்கை மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறையின் பொறுப்பில் இரண்டு கோழிப்பண்ணைகளும், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் பொறுப்பில் கோழிப்பண்ணை ஒன்றும் மற்றும் கோழி வளர்ப்பு நிறுவனத்தின் உதவியுடன் சிறப்புக் கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 536 சிறு கோழிப்பண்ணைகள் இயங்கி வருகின்றன.

(ஆ) மற்றும் (இ) தற்சமயம் ஏதும் இல்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரமான காஞ்சிமாநகரில் பலர் இந்தக் கோழிப்பண்ணை ஆரம்பிக்க விரும்புகிறார்கள். அவ்வாறு ஆரம்பிக்க இருக்கின்ற பண்ணைகளுக்கு என்னென்ன வகையில் அரசு உதவி செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே கோழிப்பண்ணையினை தனியார் ஆரம்பிக்க அவர்கள் சிறு விவசாயிகளாக இருந்தால், விவசாயத் தொழிலாளர்களாக இருந்தால் வங்கிகள் மூலமாக 100 கோழிகளுக்கான தொகை 5,865 ரூபாய் கடனாக மற்றும் மானியமாகக் கொடுத்தும், தற்போதைய பண்ணைகளுக்குக் கோழிகள் மாற்றுவதற்காக கடனுடன் விவசாயத் தொழிலாளர்களுக்கு 970 ரூபாய் அரசு மானியமாகவும், சிறு விவசாயிகளுக்கு 727 ரூபாய் மானியமாகவும் கொடுத்து அவர்களை இனறைக்கு கோழி வளர்ப்புத் துறையில் முன்னேறுகின்ற வாய்ப்பை அரசு ஏற்படுத்தி வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இது போன்ற கோழிப்பண்ணைகளை கூட்டுறவுத் துறையில் ஆரம்பித்து நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கள் நல்ல கருத்துக்கள் தான். ஆகவே அவர்களுடைய உணர்வுகளை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்திற்குச் சொந்தமான கோழி உரிப்பகங்கள்

* வினா எண். 159—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) TAPCO விற்குச் சொந்தமாக கோழி (இறைச்சி) உரிக்குமிடங்கள் (Dressing plant) எங்கெங்குள்ளன ?

(ஆ) அவைகள் நல்ல முறையில் இலாபகரமாக நடைபெறுகின்றனவா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்திற்குச் சொந்தமாக, சென்னை அடையாறில் உள்ள மார்க்கெட்டிங் பிரிவில் மட்டும், ஒரு நவீன கோழி உரிப்பகம் உள்ளது.

(ஆ) இது அடையாறில் இயங்கும் விற்பனைப் பிரிவின் ஒரு அங்கமாகும். ஆதலால் இதற்கென்று தனியாக இலாப, நட்டக் கணக்கு கிடையாது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருப்புக்கட்டி, உற்பத்தி செய்து, பதநீர் காய்ச்சும் பணியில் நவீன கருவிகளைப் பயன்படுத்துவதால், பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு பாதிக்கப்படுமா? அது மட்டும் அல்லாமல், அந்தத் தொழிலாளர்களுக்கு இந்தக் கருவியை இயக்குவதற்கு பயிற்சி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனால் வேலை வாய்ப்பு பாதிக்கப்படாது. இதற்கு முன்பு சூரிய வெப்ப ஆற்றலிலிருந்து, பதநீரிலிருந்து கருப்புக்கட்டிக்கான பாகை தயாரித்து வந்தார்கள். இப்போது நவீன கருவிகளின் வாயிலாக, மூடப்பட்ட நீராவி கொப்பரை மூலம் பதநீரிலிருந்து பாகு தயாரிக்கிறார்கள். இதற்கான செலவு ரூ. 6 லட்சம் ஆகிறது. இதன் வாயிலாக தொழிற்பேட்டை எனப்படும் பல்மைரா காம்பிளக்ஸ் போடுகிற இடத்தில் தான் நவீன கருவிகளை அறிமுகப்படுத்தப்படுகிற காரணத்தால் வேலை வாய்ப்பு அதிகமாகிறதே தவிர, வேலை வாய்ப்பு குறைய வாய்ப்பு இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூரில் மரம் ஏறும் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால், அந்த நவீன கருவிகளை அங்கே அறிமுகப்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுர மாவட்டத்தின் கிழக்கில் தான் மாயூரில் பல்மைரா காம்பிளக்ஸ் எனப்படும் தொழிற்பேட்டை இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் இராமநாதபுரம் மாவட்டத்தின் மேற்கில் இருக்கிறது. மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களின் சொந்தத் தொகுதியாக அது இருக்கிற காரணத்தால் அதற்கு பெருமை சேர்க்கும் வகையில், தமிழ்நாடு முழுவதும் வேறு எங்குமே இல்லாத முறையில், பனை சம்பந்தப்பட்ட ஒரு ஆராய்ச்சிப் பண்ணை தொடங்கப்பட்டு, வெகு சிறப்பாக ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னமும் அங்கே பனை மரத்தை நம்பி வாழ்கிற தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் வேலை வாய்ப்பைக் கொடுக்கிற வாயிலாக, ஸ்ரீவில்லிப்புத்தூரில் பல்மைரா காம்பிளெக்ஸ் எனப்படும் தொழிற்பேட்டையினை கட்டுவதற்கான ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவிலே அதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பெறும்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, பதநீர் எடுக்கும் தொழிலாளர்கள் பதநீரை இறக்கி காய்ச்சி அதனை கருப்பட்டி ஆக்குகின்ற அந்த வேலை அவர்களுக்கு மிகவும் கடினமான வேலையாகும். கருப்பட்டியினுடைய விலையும் குறைவானதாகும். விறகு கிடைப்பதும் பற்றாக்குறையாக இருக்கிறது. விறகினுடைய விலையும் அதிகமாக உள்ளது. அவர்கள் காய்ச்சும் கருப்பட்டிக்கு போதுமான விலை கிடைக்கவில்லை. ஆகவே, ஏதாவது ஒரு கிராமத்தை முன் உதாரணமாக எடுத்து கொண்டு, 100 தொழிலாளர்கள் இறக்கும் பதநீரை ஒருங்கிணைத்து ஒரே இடத்தில் கொண்டு வந்து, மின்சாரம் தாராளமாகக் கிடைக்கின்ற நேரத்தில், மின்சாரத்தைப் பயன்படுத்தி கருப்பட்டியை தயார் செய்தால், மிகக் குறைந்த செலவில் அதனை உற்பத்தி செய்ய முடியும். அந்த வகையில் அதனை அமுல் நடத்த அமைச்சர் அவர்கள் முன் வருவாரா? அந்த வகையில் அமுல் நடத்துகிற நேரத்தில், அந்தப் பனை ஏறும் தொழிலாளர்கள் மாநிலத்தில் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அந்த இடங்களில் எல்லாம் இந்தத் திட்டத்தை அறிமுகம் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2, 3 கேள்விகளை இணைத்து ஒரே கேள்வியாக கேட்டிருக்கிறார்கள். பனை ஏறும் தொழிலாளர்களின் சிரமங்களை குறைத்து, அவர்களுடைய வேலையை சுலபமாக்கும் வாயிலாகத்தான் மாவட்டம்தோறும், பல்மைரா காம்பிளக்ஸ் எனப்படும் தொழிற்ப்பேட்டைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதனால் அவர்களுடைய வேலை வாய்ப்பு பாதிக்கக் கூடிய நிலை இல்லை. மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு கிராமத்தை உதாரணமாக எடுத்துக் கொண்டு இதனைச் செயலாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். இது சம்பந்தமாக நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூரில், அந்த இடத்தைச் சுற்றி பனைமரங்கள் அதிகமாக இருப்பதைக்கருதித்தான் அதனை முன் உதாரணமாக கிராமமாக எடுத்துப் பரிசீலனை செய்வதற்கான ஏற்பாடுகளை, அதிகாரிகள் அங்கே செய்து கொண்டிருக்கிறார்கள். அது நடைமுறைப்படுத்தவிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முசிறி, துறையூ , லால்குடி பகுதிகளுக்கு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தை விஸ்தரிக்கும் திட்டம்

*வினா எண். 157—திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி, துறையூர், லாலகுடி பகுதிகளுக்கு தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றே இதுபற்றி தெரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவரே நேற்று பேச முடியவில்லை. திடீர் என்று என்னைக் கேள்வி கேட்பதில் என்ன அர்த்தம். நேற்று அவர் பேச முடிந்ததா ? அவர் இளைஞர். அவராலேயே நேற்று இங்கே முடியவில்லையே. இந்தப் பகுதியைக் கலவரப் பகுதி என்று ஒன்றும் அறிவிக்கப்படவில்லை.

(ஆ) முன் அனுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்சினை

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே கட்டளை மேட்டு வாய்க்கால், தென்கரை வாய்க்கால் இவைகளில் தண்ணீர் வரவில்லை. தண்ணீர் நிறுத்தப்பட்ட காரணத்தால் 2 இலட்சம் ஏக்கர் காய்ந்து போய்விட்டது. அது சம்பந்தமாக ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு ஒத்திவைப்பு தீர்மானமாக கொண்டு வாருங்கள். எதுவுமே கொடுக்காமல் திடீர் என்று கேட்டால் எப்படி? ஒரே நாளில் அவைகள் காய்ந்து இருக்காது. ரொம்பநாள் தண்ணீர் வராமல் போனதால் தான் காய்ந்து இருக்கும். நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானமாக கொண்டு வாருங்கள். எடுத்துக்கொள்ள முயற்சி செய்கிறேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7—2—1983 அன்று நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். கும்பகோணம் சோமேஸ்வரர் ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு மெய்க்காவலர் கொலை செய்யப்பட்டார் என்பது குறித்து.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ராசமாணிக்கம் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். அதை இன்று எடுத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் அது வேண்டாம் என்றால் விட்டுவிடுகிறேன். ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் தான் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பார்வையாளர்கள் மாடம் தொடர்ச்சி

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையாளர் காலரி பற்றி பதில் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் பார்வையாளர் காலரியில் பார்வை

யாளர்களை அனுமதிக்கவில்லை. அதிலே கூட நாங்கள் ஒரு முக்கியமான உரிமைப் பிரச்சினையை எழுப்பலாம் காரணம் அந்த காலரியில் சி.ஐ.டி. அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த உடையில் வராமல்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆபீஸர்கள் காலரியில் ஆபீஸர்கள் தான் இருக்கிறார்கள். சி.ஐ.டி. கள் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. அது என் கவனத்திற்கு வந்தால் கவனிக்கிறேன். அபிசியல் காலரியில் அனுமதிக்கப்பட்டவர்கள்தான் இருக்கிறார்கள். இன்று என்ன சூழ்நிலை ஏற்படும் என்று தெரியவில்லை. அதனால் தான் பார்வையாளர்களை இன்று அனுமதிக்கவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருப்பவர்கள் சி. ஐ. டி. ஆபீஸர்கள்தான், அதற்கு நான் பொறுப்பு ஏற்கிறேன். சி. ஐ. டி. ஆபீஸர்களை அவையில் அனுமதிப்பது அவையின் உரிமையை மீறிய செயலாகும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் விசாரித்து சொல்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்ன பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. அதை உடனடியாக............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்கள் தான் அதை சொல்லிவிட்டாரே. அவர் தமிழில் சொன்னார். அதை நீங்கள் ஆங்கிலத்தில் சொல்லப்போகிறீர்களா ?

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சி.ஐ.டி. கள் அவையில் இருக்கக்கூடாது. இருந்தால் அவர்களை வேளியேற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் விசாரித்து சொல்கிறேன். நீங்கள் கொடுக்கும் உத்திரவுகளை உடனே நிறைவேற்றிவிட முடியாது. நீங்கள் நேற்று முதற் கொண்டு உத்திரவு போட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். நான் நிறைவேற்றும் இடத்திற்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும். நான் விசாரிக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையாளர்கள் காலரியில் சி. ஐ. டி. கண்காணிப்பு எப்படி நியாயம்? இங்கே உறுப்பினர்களுக்கு என்ன பாதுகாப்பு ?

வேலாயுதம் பாளையத்திலிருந்து நொய்யல் வரையுள்ள சாலையைச் செப்பனிடும் திட்டம்.

குறுகிய கால வினா எண் 4— திரு எம். சின்னசாமி திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கரூர் வட்டம், வேலாயுதம்பாளையத்திலிருந்து நொய்யல் வரை உள்ள சாலையை விரிவுபடுத்தி செப்பனிட வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:

(அ) வேலாயுதம்பாளையம், நொய்யல் சாலையை மேம்படுத்துவதற்கான செயற் குறிப்பு அரசுக்கு வந்தது.

(ஆ) இச் செயற் குறிப்பு ஆய்வு செய்யப்பட்டு 1983–84-ம் ஆண்டில் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளவிருக்கிற சாலைப் பணிகளில் இதனையும் சேர்த்துக் கொள்ளுமாறு சர்க்கரை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளார்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை ஏற்கெனவே 15 ஆண்டுகளுக்கு முன்பு பழுது பார்க்கப்பட்டது. அது ஈரோடு, பெரியார். சேலம் போன்ற மாவட்டங்களை இணைக்கின்ற சாலையாகும். அதற்குப் பக்கத்திலே இருக்கின்ற புகளூர் சர்க்கரை ஆலைக்கு கரும்பை வண்டிகள் மூலம் எடுத்துச் செல்லப்படுவது மற்றும் டிராக்டர்கள் செல்வது ஆகியவை அந்தச் சாலை வழியாகத் தான். அப்படிப்பட்ட ஒரு முக்கியமான சாலை இப்போது போக்குவரத்துக்கு லாயக்கு இல்லாமல் இருக்கின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் அது பற்றி நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடம் மனு கொடுத்திருக்கிறேன். எனவே அதனை விரைவில் சீராக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில்தான் 1983–84 ஆம் ஆண்டில் இது சேர்க்கப் பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் எல்லாம் வேலாயுதம் பாளையத்திலிருந்து நொய்யல் வரையுள்ள சாலைகளில் ஆங்காங்கே கரும்புச் சக்கைகளைப் போட்டு போக்கு

வரத்துக்கு இடைஞ்சல் செய்கிற அளவில் இருக்கின்றது. எனவே அவ்வாறு கரும்புச் சக்கை போடப்படுவது அப்புறப்படுத்தப்படுமா அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கேள்வி சாலையைப் பற்றியது.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்தச் சாலைக்கு என்று எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ரூ. 32 இலட்சம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக் குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

(அ) பார்வையாளர்கள் மாடம்.

(முற்பகல் 10.30)

திரு. பா. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் திடீர் என்று பார்வையாளர்கள் காலரியில் பாஸ் ஏற்பாடு செய்யவில்லை. நாங்கள் எல்லாம் நிறைய பேர்களை, மகளிர்களை அழைத்துக் கொண்டு வந்து இருக்கிறோம். அவர்கள் வெளியே காத்துக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல. அங்கே மின்சார பேன்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. மின்சாரம் இல்லாத இந்த நேரத்தில் இப்படி ஆட்கள் இல்லாத அங்கே பேன்கள் ஓடுவது அவசியம் தானா என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேன்கள் ஓடுவதை நிறுத்திவிடலாம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பகுதி கலவரப் பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் விசாரித்துச் சொல்கிறேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் கட்டளை வாய்க்காலிலிருந்து தண்ணீர் வரவில்லை, அதனால் 2 லட்சம் ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஒவ்வொரு கட்சிக்கு ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் என்று எடுத்துக் கொண்டு வருகிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் இல்லாத நாள் இருந்தால் சொல்லுங்கள் அவரவர்கள் அவர்களுடைய பிரச்சினையை முக்கியம் என்று சொல்கிறீர்கள். அவைகளை நான் மறுக்கவில்லை. (குறுக்கீடு) எனக்கு இன்னும் அவ்வளவு அறிவு, ஆற்றல் வரவில்லை. தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். திரு. ராஜமாணிக்கம் அவர்கள் 3 நாட்களாக என்னை வற்புறுத்திக் கொண்டு இருக்கிறார். அதை நான் இன்று எடுத்துக் கொள்ள இருக்கிறேன். நான் எடுக்காமல் இருந்தால் சொல்லுங்கள். நான் எதிர்கட்சிக்கு மதிப்பு கொடுக்காமல் இருந்தால் சொல்லுங்கள். தவறு என்றால் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

4 ஒத்திவைப்புத் தீர்மானம்

விவசாயிகளிடமிருந்து கடனை வசூலிக்க வருவாய் நீதி மன்றம் மூலம் நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், கே. எம். தங்கமணி, இல. பலராமன், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, பொ. உத்திராபதி, செ. இராமலிங்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், என். பழனிவேல், ரா. கிருஷ்ணன், மு. அம்பிகாபதி ஆகியோர் ''தமிழகம் முழுவதும் வறட்சி நிலை இருந்தும் விவசாயிகள் கடனை வசூலிக்க ரெவின்யூ கோர்ட் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுவது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து திரு. இராசமாணிக்கம் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்

*திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழகம் மிகக் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற இந்த நேரத்திலே தஞ்சை மாவட்டத்திலே ஏராளமான குத்தகை விவசாயிகள் வருவாய்க் கோர்ட் மூலமாக நிலத்திலிருந்து வெளியேற்றப் படுகிறார்கள். தமிழகத்திலே விவசாயிகள் தொடர்ந்து 1977-ம் ஆண்டு முதல் பாதிக்கப்பட்ட நிலை இருந்து வருகிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். 1977 ஆம் ஆண்டு முதல் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளிடத்திலே அவர்கள் கொடுக்க வேண்டிய பழைய குத்தகை பாக்கிகளை வசூலிப்பதற்காக ரெவின்யூ கோர்ட் மூலமாக நடவடிக்கைகள் எடுத்து அவசரம் அவசரமாக அவர்கள் நிலத்திலிருந்து இன்றைய தினம் வெளியேற்றப்படுகிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். நேற்றைய தினம் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்திலே ஒரு கணக்கைச் சொன்னார்கள். தமிழகத்திலே குத்தகை சாகுபடி செய்யக்கூடியவர்கள் 5 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்றும் அதிலே சாகுபடி செய்வதற்கு பதிவு செய்வதற்கு மனுச் செய்தவர்களின் எண்ணிக்கை 4,59,170 பேர்கள் என்றும் அதிலே பதிவு செய்யப்பட்டவர்கள் 3,57,848 பேர்கள் என்றும், ஆகவே இன்னும் பதிவு செய்யப்பட வேண்டி டியவர்கள் இருக்கிறார்கள் என்று அறிவித்தார்கள்.

இந்த 5 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இன்றைய தினம் குத்தகை சாகுபடி செய்து கொண்டிருக்கின்ற நேரத்திலே அவர்கள் வறட்சியால், புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நேரத்திலேயெல்லாம் செலுத்தமுடியாத குத்தகை பாக்கிகளை உடனடியாக செலுத்தவேண்டுமென்று ரெவின்யூ கோர்ட் மூலமாக நடவடிக்கை எடுத்துஅவசரம் அவசரமாக வெளியேற்றிக் கொண்டு இருக்கிறார்கள். நாம் விவசாயிகளுக்கு பாதுகாப்புக் கொடுக்கக் கூடியவர்களாக இருக்கக்கூடிய நேரத்திலே அவர்களுடைய உரிமைகளை பறிக்கக்கூடிய நடவடிக்கையில் ஈடுபடுகிறபோது அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது நம்முடைய கடமையாகும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருந்த நேரத்திலே அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுத்து ஒரு ஆண்டு செலுத்த வேண்டிய பாக்கியை செலுத்தி விட்டால் மற்ற பாக்கிகளை செலுத்த வேண்டியதில்லை என்று சட்டம் கொண்டுவந்தோம். அதைப்போன்ற ஒரு சட்டத்தை இந்த ஆட்சி சென்ற ஆண்டு கொண்டுவந்தது. அந்தச் சட்டத்தின்படி கொடுக்கவேண்டிய பாக்கிகளில் நாலில் ஒரு பங்கைக் கட்டிவிட்டு மீதியை மூன்று தவணைகளில் செலுத்தலாம் என்று கொண்டுவந்து இருப்பது விவசாயிகளுக்குப் பாதகமான சிக்கலான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்றும் ஆகவே ஒரு முடிவான முறையில் இவ்வளவு செலுத்த வேண்டும், அதைச் செலுத்திவிட்டால் பழைய பாக்கிகளைச் செலுத்தத் தேவையில்லை என்று சட்டம் கொண்டுவர வேண்டுமென்று நான் தெரிவித்தேன். சென்ற ஆண்டு கொண்டுவந்தீர்கள். இந்த

ஆண்டு கடுமையான வறட்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் உற்பத்திக்கு செலவு செய்ததைக் கூடப் பெறமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த ஆண்டு எப்படி சாகுபடி செய்வது தங்களுடைய குடும்பங்களை எப்படி நடத்துவது என்று கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது பழைய பாக்கிகளைக் கொடுக்க வேண்டுமென்று வருவாய்க் கோர்ட் மூலமாக நடவடிக்கை எடுத்து அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுவது தவறானதாகும், கண்டிக்கத்தக்கதாகும். அரசு உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வருவாய் கோர்ட் மட்டுமல்லாமல் சிவில் நீதிமன்றங்கள் மூலம் நடவடிக்கை எடுத்து அவர்களுடைய சொத்துக்களை ஜப்தி செய்கிறார்கள் என்பது மாநிலம் பூராவும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்ச்சியாகும். அரசு அதில் கவனம் செலுத்த வேண்டும்.

(முற்பகல் 10.40)

இன்றைய தினம் தஞ்சை மாவட்டம் கடுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. வறட்சிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை கூட தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் போதுமானதாக இல்லை ; 17 லட்சம் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். கழிமுக பகுதி நீங்கலாக என்று சொல்லியிருக்கிறார்கள்: கழிமுகப் பகுதியில் தான் குத்தகை விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். அந்த பகுதிக்குத்தான் அதிகமான தொகை ஒதுக்கப்பட வேண்டும். அவர்கள் பாதிக்கப்பட்டதற்கு காரணம் அவர்களுக்கு இந்த அரசு எந்த வசதியும் செய்து கொடுக்காதது தான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் குத்தகை சாகுபடியாளர்களுக்கு எந்தவிதமான சலுகையும் அரசு மூலமாக வழங்கப்படவில்லை. ஆழ்துளை கிணறுகள் அமைக்க அரசாங்கத்தின் மூலமாக உதவி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டு ஆயிரம் பில்ட்டர் பாயின்ட், வடிமுனை குழாய்கள் அமைக்க 1½ கோடி ரூபாய் அனுமதித்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற வெள்ளை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 1½ கோடி ரூபாய் கூட குத்தகை விவசாயிகளுக்கு இல்லை. சொந்தமாக நிலம் வைத்திருப்பவர்களுக்குத் தான் பில்ட்டர்பாயின்ட், வடிமுனை குழாய் அமைப்பதற்கு அரசாங்கத்தின் மூலம் கடன் வழங்கப்படுகிறது. சொந்த நிலம் வைத்திருப்பவர்களுக்குத் தான் சலுகை கிடைக்கிறதே தவிர குத்தகை சாகுபடியாளர்களுக்கு அரசாங்கத்தின் மூலமாக எந்தவிதமான சலுகையும் கிடைக்கவில்லை. தஞ்சை மாவட்டம் பூராவும் உள்ள நிலங்களில் பெரும் பகுதி மடங்களுக்கும், கோவில்களுக்கும் சொந்தமாக உள்ளன. எனவே குத்தகை விவசாயிகள் பில்ட்டர் பாயின்ட் வைத்து சாகுபடி செய்ய முடியாது. ஆகவே அவர்களுக்கு ஆழ்துளை குழாய் போட்டுக் கொள்வதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏன் அவையை ஒத்தி வைக்கவேண்டுமென்று கூறி முடித்து விடுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சலுகை வழங்கவேண்டும். ரெவின்யூ கோர்ட் நடவடிக்கை உடனடியாக நிறுத்தவேண்டும். இந்த ஆண்டு குத்தகை பாக்கிகளை தள்ளுபடி செய்யவேண்டும். அதுமட்டுமல்லாமல் நில வரியை தள்ளுபடி செய்யவேண்டும். கூட்டுறவு கடன் இந்த ஆண்டு விவசாயிகள் வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவுக் கடன்களை வருமானம் இல்லாத விவசாயிகளுக்கு.......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இது முடிந்த பிறகு வறட்சி நிலை குறித்து வெள்ளை அறிக்கை மீது விவாதம் நடைபெற இருக்கிறது. அப்போது அதில் எல்லோரும் பேசலாம். உறுப்பினர் அவர்கள் இந்த அவையை ஏன் ஒத்தி வைக்கவேண்டும் என்று மட்டும் கூறினால் போதுமானதாக இருக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட விவசாயிகளை பாதுகாக்க இந்த ஆண்டு கொடுக்கவேண்டிய குத்தகை பாக்கிகளை தள்ளுபடி செய்ய வேண்டும். அவர்கள் வாங்கியிருக்கும் கூட்டுறவு கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பிரச்னைகள் தொடர்ந்து நீடிக்காமல் இருப்பதற்கு உழுபவர்களுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும். அப்போது இப்படிப்பட்ட பிரச்னைகள் எழாது ; ஆகவே அந்த வகையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். வருவாய் கோர்ட் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி வைக்கவேண்டுமென்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாக பணிவோடு கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தஞ்சை மாவட்டத்திலேயும் இன்னும் சில மாவட்டங்களிலேயும் குத்தகை விவசாயிகளை வெளியேற்ற வேண்டுமென்று மிராசுதார்களும் மடத்துச் சொந்தக்காரர்களும், கோயிலில் இருக்கக்கூடிய அதிகாரிகளும் போட்டிருக்கக்கூடிய வழக்குகள் எனக்கு வந்திருக்கக்கூடிய தகவல்படி 20,000-க்கு மேல் இருக்கிறது. அதே நேரத்தில், 1981 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையிலும், ஆயிரத்துக்கு அதிகமான விவசாயிகளை நிலத்தை விட்டுவெளியேற்றுவதற்கு ரெவின்யூ கோர்ட் அதிகாரிகள், அதிகாரபூர்வமாக உத்தரவுபோட்டு வெளியேற்றுகிறார்கள். குறிப்பாக 2—2—1983-ல் மன்னார்குடியிலே, ரெவின்யூ கோர்ட் அதிகாரி விசாரணையில், ஒரே நாளில், 33 பேர்களை வெளியேற்றியிருக்கிறார்கள். 1973 முதல்,

களுக்காக ரெவின்யூ கோர்ட்டிலே போட்டு வெளியேற்றுகின்ற கடுமையான பிரச்னை நம் முன்னாலே இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு குத்தகை விவசாயிகளை இப்படித் தாக்கும்படியான நிலைமையைப் பற்றி உடனடியாகச் சிந்தித்து அந்த ரெவின்யூ கோர்ட்டுகளைக் கொஞ்ச நாட்களுக்கு மூடி வையுங்கள். பிறகு வறட்சியெல்லாம் தீர்ந்த பிறகு அந்த ரெவின்யூ கோர்ட்டுகள் ஏதாவது செயலாற்றினால் பரவாயில்லை. அதைப்போன்றே சிவில் கோர்ட்டுகள் குத்தகை விவசாயிகள் விஷயத்தில் தலையிடாமல் இருப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் நான் வற்புறுத்த விரும்புகிறேன். குத்தகை விவசாயிகளுக்கு நிலவுடைமை செய்தால்தான் பிரச்னை தீரும். அதற்கான சிந்தனையோடு அரசு சட்டமியற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, கடந்த ஆறு மாத காலத்தில் வெளியேற்றப்பட்ட குத்தகை விவசாயிகள் மீது தொடரப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறவும், அவர்களுக்கு அந்த நிலத்தை மீண்டும் கொடுக்கவும், ஏற்கனவே இருக்கின்ற குத்தகை பாக்கிகளைத் தள்ளுபடி செய்யும் ஒரு அவசரச் சட்டத்தை இயற்றுவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட பிரச்னைகளைப் பற்றியெல்லாம் முழுமையாகப் பேசுவதற்கு இந்த அவையின் இதர பிற அலுவல்களை ஒத்தி வைத்து இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குத்தகைதாரர்களுடைய பிரச்சினைப்பற்றிப் பல்வேறு கட்டங்களில் பல்வேறுபட்ட அரசுகள் அவ்வப்பொழுது இருக்கின்ற நிலைமைக்கேற்றவாறு சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றி குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு அளித்திருக்கின்றன. அதிலே எந்த அரசு அதிகமாகச் செய்தது என்று நான் சொல்லத் தேவையில்லை. காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபொழுதும் கொண்டு வந்தார்கள். திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியிலே இருந்தபொழுதும் கொண்டு வந்தார்கள். நாங்களும் கொண்டு வந்தோம், அப்படிக் கொண்டு வருகிறபொழுது அந்தந்தக் காலக் கட்டத்தில் எந்த அளவிற்குச் சீர்திருத்தி அமைக்க வேண்டுமோ அந்த அளவிற்கு அந்தந்தக் காலக் கட்டத்தில் அந்தந்த அரசுகளும் நிலைமைக்கேற்றவாறு முற்போக்குச் சட்டங்களைக் கொண்டு வந்தன.

இந்தக் குத்தகைதாரர்கள் சட்டத்தைப் பொறுத்த வரையில் எல்லா அரசுகளுமே நல்ல சட்டங்களைத்தான் கொண்டு வந்திருக்கின்றன. ஒரு சட்டம் வருகிறபொழுது அடுத்த சட்டம் அதைவிட முற்போக்கு ; அதற்கடுத்து வருகின்ற சட்டம் அதைவிட முற்போக்கு என்று சொல்லும் நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குத்தகைதாரர்கள் இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்படுகிறபோது குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டியது அரசினுடைய கடமை என்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். பழைய பாக்கிகளையெல்லாம் ஒரே நேரத்தில் கொடுக்க முடியாது என்பதையும், அதே நேரத்தில் பழைய பாக்கிகள் எந்தெந்த மாதங்களில் எப்படிக் கொடுத்திருந்தாலும் அதை வரவிலே வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், அந்த வரவை எடுத்து வைத்துக் கொண்டுதான் கணக்கிட வேண்டுமென்ற சட்டத்தைப் பற்றி மாண்புமிகு உத்திராபதி அவர்கள் பராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்பொழுது நம்முடைய அவை முன்னால் இருக்கின்ற பிரச்னை, இன்றைக்கிருக்கின்ற வறட்சிக்கேற்றவாறு எந்த அளவிற்குக் குத்தகைதாரர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், 75—25 என்பதில் 25 சதவீதத்தைக் கொடுக்க முடியுமா முடியாதா என்பதைத்தான் அவை முன் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

சட்டத்திலே ஒரு விதியிருக்கிறது. விளைச்சல் குறைவாக இருந்தால் எவ்வளவு விளைச்சல் இருக்கிறதோ அந்த விழுக்காட்டிற்குத் தகுந்தபடி கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கேற்றபடி குத்தகையைத் தள்ளுபடி செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆகவே, அதைப்பயன்படுத்திக் கொண்டு, குத்தகைதாரர்கள் வருவாய் நீதிமன்றத்தை அணுகி தங்களுக்குப் பாதுகாப்பு தேடிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இது போதாது என்று கருதினால், தமிழ்நாடு முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றால், அரசு நன்கு ஆராய்ந்து குத்தகைதாரர்களுக்கு என்ன பாதுகாப்பு செய்ய வேண்டுமென்பதை ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியையும் குத்தகைதாரர்களுக்கு கொடுக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய ரெவின்யூ கோர்ட்டுகள் எடுத்து கொண்டு வரக்கூடிய நடவடிக்கைகளின் மூலமாக அரசு பரிசீலனை செய்யும் போது அங்கே வேலைகள் நடந்து வெளியேற்றப்படக்கூடாது அல்லவா? ஆகவே உடனடியாக ரெவின்யூ கோர்ட்டுகள் இப்படி வெளியேற்றக் கூடாது என்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ரெவின்யூ கோர்ட்டுகளை அரசாங்கம் தற்காலிகமாக இந்த வறட்சி காலத்திலாவது மூடி விட வேண்டும் என்று ஒரு கோரிக்கை இங்கே விடப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி அரசு தன்னுடைய நிலையைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1982 ஆம் ஆண்டு வரையிலும், சுமார் 8 ஆண்டுக்காலம் தொடர்ச்சியாக வறட்சி, வெள்ளம், புயல் இருந்து, தமிழகம் பாதிக்கப்பட்டபோதிலும், இந்த ஆண்டு தமிழகம் முழுமையும் நிலவுகிற வறட்சியால் தமிழகம் எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற நிலைமை அனைவருக்கும் தெரியும். இந்த நிலைமையில், இன்றையதினம் குத்தகை விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றுவதனை கண்ட (தஞ்சை மாவட்டம் முழுமையாக) விவசாயிகள் மத்தியில் ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. என்ன காரணம்? விவசாயிகள் எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் 1973 ஆம் ஆண்டு மே முதல் வாரத்தில் ஒரு உத்தரவு போட்டார்கள். அந்த ஆண்டு குத்தகை கட்டினால், அதற்கு முந்தின ஆண்டு குத்தகை தள்ளுபடி செய்யப்படும் என்று. ஆனால் அந்த ஆண்டு கட்ட முடியவில்லை. கடைசி காலமாக வந்துவிட்டது. அதனால், விவசாயிகளில் பெரும்பகுதியினர் நன்மை அடையவில்லை. அந்த வழக்குகளில் இன்றைக்குக் கூட முடியவில்லை. அதே போல், நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவு போட்டார்கள், 5 தவணைகளில் ஓர் ஆண்டு பாக்கியை கொடுத்தால், மீதித் தள்ளுபடி ஆகும் என்று. அதன் மூலம் பெரும்பகுதியினருக்கு நன்மை கிடைத்தது. இல்லையென்று சொல்லவில்லை. 3 ஆண்டுகாலம், ஒவ்வொரு ஆண்டு பாக்கிக்காக, ரெவின்யூ கோர்ட் போட்டிருக்கிற வழக்குகளினால், எந்த, எந்த குத்தகை, எப்படி, எப்படிக் கட்டப்பட வேண்டுமென்று விவசாயிகளுக்கே தெரியவில்லை. இப்படி ஒரு குழப்பமான சூழ்நிலை இருக்கிறது. இந்த ஆண்டு தஞ்சை மாவட்டம் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு முழுமைக்கும் கணக்கை எடுத்துக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டினால் பாக்கி தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்க ஒரு கமிட்டி போட்டு, அதன் சிபாரிசின்படி எஞ்சிய குத்தகைத் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த அளவு பாதிக்கப்பட்டதற்குப் பிறகும் நெல் விலை கட்டுபடியாகக்கூடிய விலையாக இல்லை. ஒவ்வொரு ஆண்டும் சொல்லிவருகிறோம். ஒரு குத்தகை விவசாயி என்று சொல்லும் போது, அவனுடைய நிலத்திற்குக் குத்தகை அளிக்கவேண்டும். விலைவாசி ஏறியிருக்கிற அளவுக்கு உரங்கள் வாங்கவேண்டும். நெல்லுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை இல்லை. இந்த நிலையில் அவன் நெல்லை அளக்க முடியாத காரணத்தால், பாதிக்கப்பட்டிருக்கிறான். இதை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்கு உடனடியாகச் செய்யக்கூடிய, ரெவின்யூ போர்ட்டில் இருக்கக்கூடிய அத்தனை வழக்குகளையும் துரிதமாகத் தடுத்து நிறுத்தி வைக்கவேண்டும். இரண்டாவது, அவசரச் சட்டத்தின் மூலமாக, குத்தகை பாக்கிகளைத் தள்ளுபடி செய்வதற்கு ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும். மூன்றாவது. இதுவரையிலும் நிலத்தை விட்டு வெளியேற்றுவதற்கு உத்தரவு போட்டிருப்பதை அந்த விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்றாமல் தடுக்க. அந்த உத்தரவை ரத்து செய்வதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் விவசாயிகளை வெளியேற்றாமல் இருப்பதற்கும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கஷ்டமான சூழ்நிலைகளை விவாதிப்பதற்கும் இன்றைய பிற அலுவல்களை ஒத்தி வைத்து, விவாதிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, தஞ்சையிலும், தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களிலும் குத்தகை விவசாயிகள், தங்களுடைய குத்தகை பாக்கிக்காக ரெவின்யூ கோர்ட்டினால் வெளியேற்றப்படுவது நிறைய நடந்து கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான வழக்குகள் மன்றங்களிலே இருக்கின்றன. ஆயிரக்கணக்கான குத்தகை விவசாயிகள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். நிலைமை என்னவென்றால், தமிழ்நாட்டிலே கடந்த சில ஆண்டுகளாக வறட்சி நீடிக்கிறது. இந்த ஆண்டு கடுமையான வறட்சி இருக்கிறது. இந்த 10,20 ஆண்டு காலமாக நாம் எடுத்துக் கொண்டால், நிலச்சீர்திருத்தம் என்ற சொல் என்றைக்கு வந்ததோ, அன்றைய தினத்திலிருந்து குத்தகை விவசாயிகள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவே பெரிய போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பல இலட்சம் குத்தகை விவசாயிகளைப் பதியாமல்தான்வைத்திருக்கவேண்டிய நிலைமையிருக்கிறது.

(முற்பகல் 10.50)

அவர்கள் பயந்து அவ்வாறு பதிய முயற்சி செய்தாலும் முடியாத நிலையிலே இருக்கிறது. வாய்மொழி சாட்சியம் அளித்தும் பதியலாம் அல்லது மக்கள் குழுவின் மூலமாக பதியலாம், அல்லது தாசில்தார் மூலமாகவும் பதியலாம் என்று சொல்கிறோம். ஆனால் அதுவே சரியான முறையில் நடைபெறவில்லை. பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட குத்தகை விவசாயிகள் இன்னும் பதியாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. ஏற்கனவே நாம் சட்டம் இயற்றிருக்கின்றபடி 75 – 25 என்ற முறையே குத்தகை விவசாயிகளைப் பொறுத்தவரையில் இன்னும் சரியாக அமுல் நடத்தப்படவில்லை. அதை அமல் நடத்துவதற்கான அமைப்பையே நாம் இனிமேல்தான் உருவாக்க வேண்டியிருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. உற்பத்தி செய்வதற்குப் போதுமான தண்ணீர் வசதியும் இல்லை. சமுதாயக் கிணறு போன்ற கிணறுகள் இருந்தால்தான் குத்தகை விவசாயிகள் தங்களுடைய உற்பத்தியைப் பெருக்க இயலும். இவ்வளவு சிரமங்களுக்கு இடையே இருக்கின்ற குத்தகை விவசாயிகள் அவர்களுடைய பழைய பாக்கி

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்கள் பாதுகாக்கப்படுவதற்கு இந்த அரசு என்றைக்கும் தயங்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இருக்கிற வருவாய் நீதி மன்றத்தில் இருக்கின்ற சட்ட விதிகளின்படி, இன்றைக்கு இருக்கின்ற குத்தகைதாரர்களுக்கு எவ்வளவு விளைச்சல் இருக்கிறதோ அந்த சதவிகிதத்திற்குத் தகுந்தபடி கொடுக்கலாம் என்பது இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி, இன்றைக்கு இருக்கின்ற நிலைமையிலேயே நீதி மன்றங்கள் உடனடியாக வெளியேற்றி இருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இங்கே சொல்லி இருக்கிறார்கள். அதையும் அரசு ஆராய்ந்து என்ன செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்து, மேலும் இது குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழ அழகர்சாமி: தலைவர் அவர்களே; அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். அதற்குத்தான் நான் உங்களைப் பேச அழைத்தேன். ஆனால் நீங்கள் திரு. உத்திராபதி அவர்களைப் பேசவிட்டீர்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அங்கே இருப்பவர்களை வெளியேற்றுகிறார்கள். அதற்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்து............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு அதை நல்ல கவனத்தோடு பரிசீலிக்கும் என்று சொல்லி இருக்கிறது. கவனத்தோடு பரிசீலிப்பார்கள்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(அ) பார்வையாளர்கள் மாடம்—தொடர்ச்சி.

அடுத்து திரு. ரகுமான்கான் அவர்கள், மேலே உட்கார்ந்து இருப்பவர்கள் எல்லாம் சி.ஐ.டி.க்கள் என்று ஒரு குறிப்பைச் சொன்னார்கள். நான் அதை விசாரித்துப் பார்த்த வரையில் அங்கே இருப்பவர்கள் எல்லாம் செக்ஷன் ஆபீசர்கள், நம்முடைய செக்கரடேரியட்டைச் சேர்ந்த பல அலுவலர்கள்

கார்ந்து இருக்கிறார்கள். இங்கே இருக்கின்ற அதிகாரிகளுக்கு உதவுகிற வகையில் உட்கார்ந்திருக்கிறார்கள். அபிசியலாக பாஸ்களை வாங்கித்தான் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் எழுப்பிய பிரச்சினையின் தொடர்பாக, காலரியில் தற்போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

5. கவன ஈர்ப்பு.

பூங்கா நகர் தொகுதி, புது ஜெகநாதபுரத்தில் குடிசைகள் பிரிக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். வி. என். சோமு, துரை முருகன், சு. பாலன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். வி. என். சோமு : தலைவர் அவர்களே, 24—1—83 அன்று சென்னை பூங்காநகர் தொகுதியில் புது ஜெகநாதபுரத்தில் 400 குடிசைகளைப் பிரித்துப் போட்டதால் அப்பகுதி மக்களிடையே நிலவும் கவலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

புது ஜெகந்நாதபுரம் குடிசைப் பகுதி, 'பூங்கா' சட்டமன்ற தொகுதியின் சென்னை பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தின் அருகில் உள்ள குடிசைப் பகுதியாகும். அனல்மின் நிலையத்தின் அத்தியாவசிய அமைப்புகளை கண்காணிக்கும் பொருட்டும், குடிசைப் பகுதிகள் அனல் மின் நிலையத்தின் அருகில் அமைந்துள்ள காரணத்தாலும், அங்குள்ள குடிசைவாசிகளுக்கு மாற்று இடம் அளித்து அனைத்து குடிசைகளையும் அப்புறப்படுத்தும் நோக்கத்தோடு, சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 'கேசவ பிள்ளை பூங்கா' என்ற இடத்தில் ஏற்கெனவே 1976ல் முடிவு எடுத்தபடி குடிசை மாற்று வாரியம், குடியிருப்புகளை கட்டியுள்ளது. மேலும் புது ஜெகந்நாதபுரம், 'குடிசைப் பகுதி' எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியாகும். இதில் ஒரு பகுதி இரயில்வே இலாகாவிற்கும், மற்றொரு பகுதி சென்னை மாநகராட்சிக்கும் சொந்தமானதாகும். இரயில்வே இலாகா, தனக்கு சொந்தமான [illegible] செய்து சென்னை மின்சார வாரியத்திற்கு [illegible] ஏற்கெனவே வேண்டியுள்ளது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1983 பிப்ரவரி 10

மேற்படி கேசவப் பிள்ளை பூங்காவில் தற்போது 1,536 குடியிருப்புகள் சுமார் 132 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. புது ஜெகந்நாதபுரம் குடிசை வாழ் மக்களுக்கு, ஒதுக்கீடு செய்யும் பொருட்டு, 1983 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 17 ஆம் நாளன்று குலுக்கல் முறையில் ஏற்பாடு செய்து, குலுக்கலில் கலந்து கொண்ட குடிசைவாசிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் குடியிருப்பின் விவரமும் அப்போதே தெரிவிக்கப்பட்டது. குலுக்கல் முறையில் ஒதுக்கீடு பெற்றவர்கள் புதிய குடியிருப்பில் குடியேற வேண்டும் என்று, அவர்கள் இந்நாள் வரை வசித்து வந்த குடிசைகளை அவர்களாகவே பிரித்துக் கொள்ளவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதற்கேற்ப 1983 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22 ஆம் நாளன்று ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு புதுக் குடியிருப்புகளில் குடியமர்த்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குடியிருப்பு பெற்றவர்கள் வசித்து வந்த குடிசைகளை பிரிக்காமல் இன்னொருவரிடம் ஒப்படைக்கக்கூடிய முயற்சிகளைத் தடுக்க நடவடிக்கை தொடரப்பட்டது. எனவே குடியேறியவர் தான் வசித்த குடிசைகளைப் பிரிக்கவும் தவறிய இடங்களில் அக்குடிசைகள் அப்புறப்படுத்தும் பணியில் உதவியும் செய்யப்பட்டது. மேற்கண்ட பணி தொடர முயன்றபோது, ஒரு சிலர், மற்றவர்கள் குடிசைகளை பிரிக்காமல் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டதோடு '' மேற்படி குடிசைவாழ் மக்களுக்கு 'பட்டா' பெற்றுத் தருவதாகவும் குடியிருப்பு பெற்றுக் கொள்ள வேண்டாம் '' என்று கூறி வந்தனர்.

இருப்பினும் தாமே விரும்பி குடியேறியவர்களுக்கு தேவைப்பட்ட பாதுகாப்பும் வசதிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டன. 1983 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாளன்று எல்லா குடிசைவாசிளும், குடியேறும் வகையில் பணி முடிக்கப்பட்டது. அப்பகுதியில் இருந்த குடிசைகள் அனைத்தும் அகற்றப்பட்டு, தேவையான உதவிகளும் அளிக்கப்பட்டன.

இதற்கிடையில், இரயில்வே நிலத்தில் வசிக்கும் 150 தாழ்த்தப்பட்டோர் குடும்பங்களின் சார்பாக (கேசவப் பிள்ளை பூங்கா திட்ட குடியிருப்புகளில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும்) உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. தமிழ்நாடு குடிசைப் பகுதி வாரியத்தில் விசாரித்ததில் குடிசை பகுதி வாரியத்தின் வழக்குரைஞர் உயர் நீதி மன்றத்தின் குடிசைகள் பிரிக்காதது பற்றி எந்த உறுதியும் கூறவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. என். வி. என். சோமு : துணைத் தலைவர் அவர்களே, புது ஜெகந்நாதபுரம் என்பது பூங்கா நகர் தொகுதியிலே உள்ள ஒரு பகுதியாகும். தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதி. அந்த இடம் குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான இடம்

1983 பிப்ரவரி 10] [திரு. என். வி. என்.சோமு]

அல்ல. இரயில்வே இலாகாவுக்குச் சொந்தமான இடம். தங்களுக்குச் சொந்தமில்லாத இடத்தில் குடிசை மாற்று வாரியத்தினர் 1983 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22 ஆம் நாளன்று அங்கிருந்த குடிசைகளைப் பிரித்துப் போட்டு, பானை சட்டிகளை உடைத்து, வடித்து வைத்த சோற்றுப் பானைகளை உடைத்து காந்தி, நேரு, பெரியார், அண்ணா போன்ற தலைவர்களின் படங்களை எல்லாம் உடைத்து, டிரான்சிஸ்டர்கள், போன்றவைகளை உடைத்துப் போட்டனர்.

அன்றிரவு 8 மணிக்கு நான் மாண்புமிகு அமைச்சரிடம் தொலை பேசியில் முறையிட்டேன். அடுத்த நாள் 1983 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாள் காலை நானும், சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் டி. ஆர். பாலு அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா தி.மு.க. இந்திரா காங்கிரஸ், கம்யூனிஸ்ட், ஜனதா உள்ளிட்ட சர்வ கட்சித் தலைவர்கள் சார்பாக அமைச்சரிடம் கடிதம் கொடுத்தோம். அமைச்சர் சொன்னார், நடவடிக்கை எடுக்கிறேன் என்று (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : கேள்வியை விளக்கமாகவும் கேட்கலாம், 10 வரியிலும் கேட்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி மாதிரி கேட்க வேண்டும். நீங்கள் சம்பவத்தை நேரேட் பண்ணி, இந்த சிடன்சுகளை எல்லாம் சொல்ல வேண்டாம். அது குறித்து மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியும்.

திரு. என். வி. என். சோமு : துணைத் தலைவர் அவர்களே, இப்படித்தான் கேள்வி கேட்க வேண்டும் என்று ஆளுங் கட்சியினர் எனக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. They need not teach me.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைச் சொல்ல வேண்டாம். கேள்வியாகக் கேட்டு விடுங்கள்.

(முற்பகல் 11-00)

திரு. என். வி. என். சோமு : அமைச்சர் அவர்கள் குடிசைகள் பிரிக்கப்பட மாட்டாது என்று என்னிடமும், சென்னை மாவட்டச் செயலாளரிடமும் கூறி கொடுத்து இருந்தும், குடிசைகளைப் பிரித்துப் போட்ட கொடுமைக்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்கள் சொன்னது எல்லாம் உண்மை. ஒன்றைத் தவிர. குடிசைகள் பிரிக்கப்பட மாட்டாது என்று நான் சொன்னேன் என்று சொன்னார்கள். அது தவறு. என்னோடு அவர்கள், தொலைபேசியில் பேசியது உண்மை. நேராக அவர்களும், மற்றொரு செயலாளரும் (குறுக்கீடு), நேராக வந்து என்னைப் பார்த்து மனு கொடுத்ததும் உண்மை. அதைப்பற்றி அவர்கள் என்னிடம் பேசினார்கள். உடனே குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்களோடு பேசினேன். என்னிடம் கொடுத்த மனுவையும் குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்களுக்கு அனுப்பினேன். என்ன நடந்தது என்பதற்கு வேண்டிய குறிப்புகளை உடனடியாக வாங்கி வைத்திருந்தேன். பேரவைத் தலைவர் அவர்கள் கேட்ட போது கூட என்றைக்கு கால் அட்டென்சன் வந்தாலும் நான் பதில் சொல்கிறேன் என்று சொன்னேன். எனவே நடந்தது இது. அவர்கள் இரண்டு முறை பார்த்தது உண்மை. ஒரு முறை தொலைபேசியிலும், ஒரு முறை நேரடியாகவும் பார்த்தது உண்மை. ஆனால் நிலத்தைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த நிலம், இட் ஈஸ் எ டிக்லேர்ட் ஸ்லம். ஸ்லம் என்று சட்ட பூர்வமாக அறிவிக்கப் பட்ட இடம். இதில் ஒரு பகுதி இரயில்வே இலாகாவிற்கும், மற்றொரு பகுதி சென்னை மாநகராட்சிக்கும் சொநதமான தாகும். இரயில்வே இலாகா தனக்குச் சொந்தமான நிலத்தினைக்காலி செய்து சென்னை மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்குமாறு ஏற்கெனவே வேண்டியுள்ளது. அதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே குடியிருந்தவர்களுக்கு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. கட்டி முடிக்கப்பட்ட உடனே அங்கே குடியிருந்தவர்களை, பக்கா பில்டிங், டெனமென்ட்ஸ் அங்கே கட்டி முடிக்கப்பட்ட வீடுகளுக்கு அவர்களைக் குடியேற்றிய பிறகு, இன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய குடிசைகளில் வேறு ஒருவரை எப்படியாவது குடியமர்த்தி, அதை மேலும் குடிசைப் பகுதியாக ஆக்க வேண்டுமென்று எடுத்த முயற்சிக்குத் தடையாக, நல்ல காரியங்கள் அங்கே செய்யப்பட்டன என்பதுதான் எனக்கு வந்திருக்கிற தகவல். உண்மையும் அதுதான். அதுமட்டுமல்லாமல், அங்கேயே அந்தகுடிசைகளில் குடியிருங்கள், அந்தக் குடிசைகளில் நீங்கள் குடியிருப்பீர்களேயானால், அந்த இடத்தை உங்களுக்குப் பட்டா வாங்கிக் கொடுத்து விடுகிறோம். அந்த இடத்தை உங்களுக்கே சொந்தமாக வாங்கித் தந்து விடுகிறோம் என்று சொல்லி, சிலர் ஆசை காண்பித்த அந்தத் தகவல் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாமல் இருக்க நியாயம் இருக்கிறது. எனவே அப்படி ஒரு சிலர் இருக்கிறார்கள். அல்லவா? பூட்லெக்கர்ஸ் லேண்ட் கிராபர்ஸ் என்றெல்லாம் ஒரு சட்டம் கொண்டு வந்தோமே, ஏன் கொண்டு வந்தோம்? சட்டம் கொண்டு வந்ததற்குக் காரணம் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்பதற்காகத்தான். மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்களுக்குத் தெரிவதற்கு நியாயம் இல்லை. லேண்ட் கிராபர்ஸ்

இருக்கிறார்கள். அவர்கள் அந்த இடத்திலே இருங்கள், உங்களுக்கே நாங்கள் பட்டா வாங்கித் தருகிறோம் என்று சிலர் தூண்டிவிட்டு அந்தத் தகராறை எழுப்பினார்கள். ஆனால் யார் யாருக்கு வீடுகள் கொடுக்கப்பட்டதோ அவர்கள் எல்லாம் நல்ல இடத்திலே அவர்களை அமர்த்திவிட்டு, இப்போது அந்த இடத்தை சுத்தமாக, காலியாக எப்படியிருக்கவேண்டுமோ அப்படி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லேண்ட் கிராபர்ஸ் என்று சொன்னார்கள். நாங்கள் அமைச்சர் அவர்கள் இடத்தில் கொடுத்திருக்கிற அந்த மகஜரில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், இந்திரா காங்கிரசார், திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர்கள், ஜனதா, கம்யூனிஸ்ட் போன்ற எல்லோரும் கையெழுத்துப்போட்டுக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் எல்லாம் லேண்ட் கிராபர்ஸ் அல்ல. ஒன்று. ஆனால், நீதிமன்றத்திலே, ஏற்கெனவே அங்கு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது, வழக்கு தொடரப் பட்டிருக்கிறது. மாண்புமிகு மறைந்த ஜி. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் இங்கே சபாநாயகராக இருக்கும்போதே 35 ஆண்டுக் காலமாக அந்த இடத்திலே குடியிருப்பவர்களை காலி செய்யக் கூடாது. ஏறத்தாழ 30 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே ரெவின்யூ போர்டிலே ஒரு ஸ்டே கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நீதிமன்றத்திலே ஒரு அட்வகேட் கமிஷன் நியமிக்கப் பட்டு—குடிசை மாற்று வாரியம் செய்த கொடுமைகளைப்பற்றி இன்றைக்கு பட்டியல் போட்டு நீதிமன்றத்திலே தாக்கல் செய்திருக்கிறார்கள். குடிசை மாற்று வாரியத்தில் இருப்பவர்கள் தவறே செய்யவில்லை என்று வைத்துக்கொண்டாலும்கூட இப்படிப்பட்ட பொருள் நட்டங்களுக்கும், இப்படிப்பட்ட கொடுமைகளுக்கும் அந்த அரசாங்கம் என்ன பரிகாரம் செய்யப்போகிறது, என்ன நட்ட ஈடு கொடுக்கப்போகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, நல்ல செய்தி. நீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சனை சென்றுவிட்டதால் யார் பக்கம் நீதி இருக்கிறது என்பதை அங்கே பார்த்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

அரசு உறுதிமொழிக் குழு.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது [illegible] சட்டமன்றப் பேரவை அறிக்கையை அவை முன் வைக்கிறேன்.

கொண்டு, ஒரு நாள் அதற்காக ஒதுக்குவதற்குத்தான் இன்றைக்கு 11 மணிக்கு அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தைப் பேரவைத் தலைவர் அவர்கள் கூட்டியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தீர்மானத்தை நி..றவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் ெ ாள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32(1) ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று (10—2—1983) அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 11-10)

(ஆ) அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மற்றொரு மசோதாவின்மீது மேலவையில் பதிலளிப்பதற்காக, அந்த அவை நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருப்பதால் அவர்கள் பெயரில் முதலில் இருக்கிற சட்ட முன்வடிவை இன்றே இறுதியில் எடுத்துக் கொள்ளலாம் என்ற வகையில் நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 30(3) இன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் ',அரசினர் சட்ட முன்வடிவுகள்'' என்ற தலைப்பில் இனம் (1) இல் இருக்கிற "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1983)' என்ற சட்ட முன்வடிவை, இனம்(6) ' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1983)' என்ற சட்ட முன்வடிவுக்குப் பின்னால் எடுத்துக்கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(இ) ஷெரீப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

திரு.அ.ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"ஆளுநர் அவர்களால் 19—12—1982 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற,1982 ஆம் ஆண்டு ஷெரீஃப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 15/1982) இப் பேரவை நிராகரிக்கிறது."

திரு. துரைமுருகன்.—நான் அதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு.சி.பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1983 ஆம் ஆண்டு ஷெரீஃப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு.அ. ரகுமான்கான் அவர்களுடைய தீர்மானமும், மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற இந்த மசோதாவின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாட்டிலே இருக்கிற பல்வேறு அரசியல் கட்சிகள், பல்வேறு சமயங்களின் சார்பிலே இருக்கிற கட்சிகள், மற்றும் அரசியலுக்கு அப்பாற்பட்டிருக்கிற கட்சிகள் எல்லாம் தொடர்ந்து பல ஆண்டு காலமாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி வருகின்றன. அந்தத் தீர்மானம் என்னவென்றால், கட்சி வித்தி

*1983 ஆம் ஆண்டு பிப்ரவரி 2-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சட்டமன்ற (தகவின்மை தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு சட்டமன்றத் (தகவின்மைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்பு சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்புச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று. அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 32(1)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32(1) ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று (10-2-1983) அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்து கொள்வதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. ஆனால், இன்றைக்குத் தனித் தீர்மானம் என்ற முறையில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்ற தீர்மானங்கள் மிகவும் முக்கியமானவை. ஒன்று, திரு. உமாநாத் அவர்களால் மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல் குறித்த தீர்மானம். மற்றொன்று, ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் கொடுத்துள்ள ''சென்னை உயர்நீதி மன்றம் என்பது தமிழ்நாடு உயர் நீதிமன்றம்'' என்று பெயர் மாற்றம் செய்யக்கோரும் தீர்மானமாகும். இந்தத் தீர்மானங்கள் மிகவும் முக்கியமானவை என்பதால் இந்தத் தீர்மானங்கள் விவாதத்திற்கு இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படுவது அவசியமானதாகும். எல்லாவற்றிற்கும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கின்ற நாம் இந்தத் தீர்மானம் குறித்து இன்றைக்கு விவாதிப்பது பொருத்தமுடையதாக இருக்கும். ஆகவே, இதைப் பற்றிய விவாதத்தை இங்கே நடத்தினால் நாட்டுக்கும் நல்லது, தமிழகத்திற்கும் நல்லது ஆகவே, அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு முறைப்படி வியாழக்கிழமை என்பதால் தனியார் அலுவல்கள் தான் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும். ஆனால், நேற்று நிறைவேற்றப்பட வேண்டிய சட்ட முன் வடிவுகள் நிறைவேற்றப்படமுடியாத காரணத்தால், இன்றைக்கு அந்தச் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றினால்தான் அவைகளை சட்டமன்ற மேலவைக்கு அனுப்பி வைக்க முடியும். ஆனால், இந்தத் தனியார் அலுவல்களுக்கான இந்தக் கூட்டத் தொடரிலேயே இன்னொரு நாள் ஒதுக்குவது என்பதற்காகத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இன்றைக்கு 11 மணிக்கு அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். அநேகமாக இந்த மாதம் 14, அல்லது 15 ஆம் தேதி தனியார் தீர்மானங்கள் எடுத்துக் கொள்வதற்கு ஒதுக்கலாம் என்று யோசனை இருக்கிறது. அது பற்றிய ஆலோசனைகளை மேற்

யாசம்இல்லாமல் எந்த மாநாடானாலும் சரி, எந்தப் பொதுக்குழுவானாலும் சரி, அவர்கள் எல்லாம் போடுகின்ற ஒரே ஒரு தீர்மானம் ''இந்த ஷெரீப் பதவியை இரண்டாண்டு ஆக்குங்கள், இந்த ஷெரீப் பதவியை இரண்டாண்டு ஆக்குங்கள்'' என்பதுதான். யாரும் அதைப் பற்றிக் கவனிக்காமல் இருந்தார்கள். நம்முடைய லா மினிஸ்டர் ஒரு நாட்டிலே இப்படிப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றிக்கொண்டே இருக்கிறார்களே, இதைக் கவனிக்க வேண்டாமா என்று யோசித்து, கண்டுபிடித்து, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற வகையிலே இந்த அவையிலே அதை ஒரு மசோதாவாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். இது இப்போது ரொம்ப முக்கியமான ஒன்று, நாட்டுக்குத் தேவையான ஒன்றுதான்.

இந்த ஷெரீப் என்றாலே யார் என்று பலபேருக்குத் தெரியவில்லை. நம்மிலும் பலருக்கு அப்படித்தான். நமக்குத் தெரிந்ததெல்லாம் நம்முடைய ஊராஜா செரீப் தான். சினிமா பார்க்கிறவனுக்கு உமர் ஷெரீப், வடாற்காடு ஜில்லாக்காரனுக்கு எம்.பி.டி. மோட்டார் ஷெரீப். அதைத் தவிர இப்படிப்பட்ட ஒரு பதவி இருக்கிறதா என்று பலருக்குத் தெரியாது. இது என்ன பதவி, அவருக்கு என்ன வேலை என்று யாரையாவது நான்கு பேர்களை டக், டக் என்று கேளுங்கள், சொல்லுகிறார்களா பார்ப்போம். இந்தச் சட்டம் எப்படி வந்தது, இதன் ஆரிஜன் என்ன என்று பார்த்தால் 1800 என்று போட்டிருக்கிறார்கள். ஏயப்பா ! வெள்ளைக்காரன் காலத்தில், விக்டோரியா மகாராணி காலத்திலிருந்து நானும் புரட்டிப் புரட்டிப் பார்த்துவிட்டேன். கண்டுபிடிக்க முடியவில்லை. அவரும் லா படித்தவர்தான், லா மினிஸ்டர்; 1800 என்று சொல்லியிருக்கிறார். நான் இந்த ஏ.ஐ.ஆர். சென்ட்ரல் ஆக்டைப் படித்துப்பார்த்தேன். அதிலே போட்டிருக்கிறார்கள். அதிலே 1860 என்று போட்டிருக்கிறார்கள். இந்த ஜூடிகேச்சர் முத்திரைபோட, கல்கத்தா, பெங்காலுக்கு போகும்போது அதில் இருக்கிற முத்திரை போடுவதற்காக அப்போது இந்தப் பதவியைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

ரிஷி மூலம், நதி மூலம் அறியப்படாததைப் போல இந்த ஷெரீப் மூலமும் நமக்குத் தெரியாத நிலையில் என்ன பதவி, என்ன வேலை, என்ன செய்கிறார் என்று அமைச்சர் சொல்கிறார். எனக்குத் தெரிந்ததெல்லாம் நான் மெட்ராசுக்கு வந்து படித்துக்கொண்டிருந்த காலத்திலிருந்து யாராவது பெரிய மனிதர் ஒருவர் செத்துவிட்டால் அவருக்கு கண்டலன்ஸ் மீட்டிங் கூட்டி, ''போய்விட்டவர் மிகப் பெரிய மனிதர், அவருடைய இழப்பு நாட்டுக்குப் பெரிய இழப்பு'' என்ற தீர்மானத்தைப் போடுவதைத் தவிர வேறு எந்த வேலையும் இருப்பதாகத் தெரியவில்லை. கொடி ஒன்று பறக்கும். அது ஒரு கட்சிக் கொடி என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். பலர். இந்தப் பதவிக்கு என்ன அப்பேர்ப்பட்ட ஒரு அந்தஸ்து !

அவருடைய பதவிக்காலம் ஓராண்டு என்று இருந்ததை இரண்டாண்டு என்று ஆக்கத் தேவையில்லை. நீங்களே வருஷத்திற்கு ஒருவரை ஷெரீப் ஆக்கிவிட்டு, ''நீ ஷெரீப், நீ ஷெரீப், நீ ஷெரீப்'' என்று சொல்லிக் கொண்டிருக்கலாம். இப்போது இரண்டாண்டு என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் ஏற்கெனவே ஒரு தடவை அப்பாயின்ட்மெண்ட் ஆனவர் தொடர்ந்து இரண்டாவது ஆண்டு இருக்க முடியாதா என்றால் இருக்கலாம். அவரையே மறுபடியும் அப்பாயின்ட் பண்ணலாம். அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வருகிறபோது மருதப்பிள்ளை என்பவர் இருந்தார் சென்னை நகர ஷெரீப்பாக—காங்கிரஸ் காலத்திலே. பக்தவத்சலம் அவர்கள் நியமித்திருந்தார்கள். அண்ணா ஆட்சிக்கு வந்தவுடனே பார்த்தார் யாரை ஷெரிப்பாக போடுவது என்று. அவருக்கு ஒரு எண்ணம், அட என்னய்யா இது ஒரு பதவி என்று. சரி போனால் போகிறது, அந்த மருதப்பிள்ளையையே தொடர்ந்து இருக்கச் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். ஏனென்று அவரே சொல்கிறார். ஒன்றுமே கிடையாது ஐயா அந்தப் பதவியிலே என்று. ஆக மருதப் பிள்ளையே இரண்டாம் முறையும் அப்பாயிண்ட் செய்யப் பெற்றார்.

அந்த மாதிரி தற்போது நம்முடைய ஷெரீப் சென்னையிலே யார் ? நம்முடைய மதிப்பிற்குரிய-என்னுடைய நண்பர் சிவந்தி ஆதித்தன் அவர்கள்தான். அவர் நல்லவர்தான். அவரைப்பற்றி நான் எதுவும் தப்பாகக் குறைச் சொல்லவில்லை. அவர்தான் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால்—அவர் நல்லவர், நல்ல பண வசதி இருக்கிறது. யாராவது செத்துப் போனால் ஒரு கூட்டம்போட்டு நல்ல முறையில் நடத்துவார். அதற்கான பணம் செலவழிப்பார் என்றால் அவரையே இரண்டாம் முறையும் ஷெரிப்பாக இருக்கலாம் என்று போடுங்களேன். அதற்கு ஏதாவது சட்டம் உங்களுக்குத் தடையாக இருக்கிறதா ?

அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்ன மாதிரி—ஒருவன் ஒரு பூனையை வளர்த்தானாம். அந்தப் பூனை வெளியே போய் வருவதற்காக கதவிலே ஒரு ஓட்டையைப் போட்டு வைத்தானாம். அந்தப் பூனை ஒரு குட்டியைப் போட்டதாம். அப்படி குட்டி போட்ட உடனேயே பக்கத்திலேயே இன்னொரு சின்னதாக ஒரு ஓட்டையைப் போட்டானாம். எதற்கு என்று கேட்டால் அது பெரிய பூனை போவதற்கு, இது சின்னப் பூனை போவதற்கு என்று சொன்னானாம். அதற்கு மற்றவன் கேட்டானாம் ஏன் ஐயா, அந்தப் பெரிய பூனை போகிற துவாரத்திலேயே, அந்தச் சின்னப் பூனையும் போகாதா என்று கேட்டால், அதற்குப் பிறகு 'ஆமாம் போகுமே' என்று பதில் சொன்னானாம்.

(முற்பகல் 11–20.)

இது ஒரு Ornamental post for certain categories என்பதைத் தவிர மக்களுக்கு இந்த ஸ்தாபனத்தின் வழியாக இந்த செரிஃப் மூலமாக எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லை. ஆகவே மக்களுடைய வாழ்க்கையோடு சம்பந்தப்படாத இந்த ஸ்தாபனத்தை ஒழித்துக் கட்டுவதற்குரிய சட்டத்தைத்தான் இந்த அரசு கொண்டுவந்திருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு இந்தப் பதவியை நீட்டிப்பதற்கு ஒரு சட்டமுன்வடிவும், ஒரு ஆர்டினன்ஸும் தேவையா என்பதைச் சிந்திக்க வேண்டும். எனவே இந்தச்சட்டமுன்வடிவினைக் கடுமையாக எதிர்க்கிறோம். இந்த ஸ்தாபனத்தை ஒழித்துக் கட்ட ஒரு சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த செரிஃப் அவர்களின் பதவிக்காலம் மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு நீட்டிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டு காரண காரிய விளக்கத்தில் பொது நலனைக்குறித்து என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இன்று செரிஃப் பதவியை நீட்டிப்பதில் பொதுநலன் என்ன இருக்கிறது என்பது தெரியவில்லை. மேலும் வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட போது பல்வேறு பெரிய மனிதர்களுக்குப் பதவிகள் கொடுக்க வேண்டும் என்ற வகையிலே அந்த நோக்கத்தோடு சென்னை மாநகரிலே இப்படி ஒரு பதவி உண்டுபண்ணினார்கள். ஆகவே, இந்தப் பதவியை ஒழிக்க ஒரு திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1800 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 நாளிட்ட முத்திரைப் பத்திரத்தின்படி நியமிக்கப்படுகின்ற செரிஃப்அவர்களின்பதவிக்காலம் Letterspatent of 26th December, 1800. பொறுத்தவரையில் ஓர்ஆண்டு காலத்திற்கு மட்டுமே எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகின்றபோது செரிஃப் பற்றி இந்தச் சட்டத்திலே எங்கே இருக்கிறது எனத் தேடித் தேடிப்பார்த்தேன், பலரைக் கேட்டும் பார்த்தேன் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை என்று சொன்னார்கள். அவர் ஒரு வழக்குரைஞர் என்ற காரணத்தால் அவர்கள் இன்னும் சற்று ஆழமாகத்தேடி இருப்பார்களேயானால்எங்கே இருக்கின்றது என்பதைஅவர்கள் புரிந்திருப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் பேசுகிறபோது அவர் பேச்சிலிருந்து Letters patent of 1800

என்பதைப் பொறுத்தவரை சற்றுத் தெளிவாக அவர்கள் படித்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. எல்லாக் கட்சிகளும் தீர்மானம் போட்டு செரீஃப் பதவிக்கு நீட்டிப்பு தரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டதாக ஒரு தகவலை மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சர்காஸ்டிக்காக அப்படிச் சொன்னார்கள் என்று எடுத்துக்கொள்கிறேன். உண்மையிலேயே எந்த ஒரு இயக்கமும் அப்படி ஒரு தீர்மானம் போடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். லெட்டர் ஆப் பேட்டன்ட் ஆஃப் 1800 என்பதைப் பொறுத்தவரை மிகத் தெளிவாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் ஒன்று சொன்னார்கள். இரண்டாவது தரம் அப்பாயின்ட் பண்ணுவதற்குச் சட்டத்திலே இடம் இருக்கின்றபோது ஏன் இவரை நீட்டித்திருக்கக்கூடாது என்று சொன்னார்கள். எந்தச் சட்டம் என்று முதலிலே கேட்டுவிட்டு பிறகு சட்டத்திலே இரண்டாவது தரம் அப்பாயின்ட் பண்ண இடம் இருக்கின்றது என்று சொன்னார்கள். அது தவறு. அதிலே இருக்கின்ற எக்ஸிஸ்டிங் ப்ரவிஷனைப் பொறுத்தவரையில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

"during the space of one whole year to be compued from the20 day of December and until another shall be duly appointed and sr n to the said office." என்று இருக்கின்றது. ஓர் ஆண்டு காலத்திற்குத் தான் ஒருவரை செரிஃப் ஆக நியமிக்க முடியும், அவரை நீட்டித்திருக்க வேண்டுமேயானால்—அடுத்த ஆண்டுக்கு மற்றொருவரை நியமிக்கிற வரையிலே until another is appointed என மிகத் தெளிவாகக் காட்டி எனவே அவரையே இரண்டாவது ஆண்டுக்குச் சட்ட ரீதியாக நியமிக்க முடியாது என்பது மிகத் தெளிவாகச் சட்டத்தில் இருக்கின்றது. எனவேதான் இந்தத் திருத்தம் கொண்டுவரவேண்டிய தேவை ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் செரிஃப் பதவியைப் பொறுத்தவரையில் யாரேனும் தவறிவிட்டால் அந்தக் காரியத்தை மட்டுமே செரீஃப் முன்னின்று நடத்துகிறார் என்று சொன்னார்கள்.

ஆனால் முதற்கண் பேசும்போது அவரே என்ன என்ன பணி செரீப்புக்கு என்று எனக்குத் தெரியவில்லை என்றும் சொன்னார். அதை நான் அவைக்குத் தெளிவு படுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அவருக்கு என்ன என்ன டூட்டிஸ் என்பது லெட்டர் ஆப் பேட்டன்ஸ் 1800-ல் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவருக்கு சட்டப்படியாக தரப்பட்டிருக்கின்ற கடமைகள் அசல் தரப்பிலும், மேல் முறையீடு தரப்பிலும் உயர் நீதி மன்றத்தினுடைய ரிட் மனுக்கள், அழைப்பான்கள், கட்டளைகள், ஆணைகள், பிடி ஆணைகள் ஏனைய ஆணைகளையும் கடனுக்காக இயலாமை பற்றிய நடவடிக்கை

களையும் செயல்படுத்துகிற பொறுப்புத் திட்டமும் அவரிடம் இருக்கிறது. சுப்ரீம் கோர்ட் ஆப் ஜுடிகேச்சர் என்று இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள் இன்றைய தினம் ஹைக்கோர்ட்டாக இருப்பது அன்றைய தினம் சுப்ரீம் கோர்ட்டாக இருந்தது. இன்றைய சுப்ரீம் கோர்ட்டுக்கு அதே அதிகாரம் இருக்கின்ற காரணத்தால் உயர்நீதி மன்றத்தினுடைய அந்தப் பணிகளை எல்லாம் உயர் நீதிமன்றத்தின் சார்பில் செரீப் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. அது மட்டும் அல்லாமல் ஜப்தி செய்யப்பட்டு சொத்துக்களை விற்பனை செய்தல், சொத்துக்களை ஜப்தி செய்து விற்பனை செய்வது தொடர்பாக ஏற்படும் வரவுகளையும், ரொக்க வைப்பீடுகளையும் எதிர் தீர்ப்பு பெற்ற கடனாளிகளையும், பெற்ற கடனை திருப்பி தர இயலாதவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டு ஆகியோருக்கான வாழ்க்கை படிக்காகவும், சாட்சி படிக்காகவும், அஞ்சல் செலவு முதலியவற்றுக்காக செய்யப்படுகின்ற மொத்தப் படிகளை கண்காணிப்பது செரீப்பினுடைய கடமை. செரீப்புக்கு ஒரு தனி அலுவலகம் இருக்கிறது. அவருக்கு கீழ் டெப்யூட்டி செரீப் ஒருவர் இருக்கிறார். அவருக்கும் கீழ் பணியாளர்கள் இருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்தினுடைய இந்த உத்திரவுகள் எல்லாம் செரீப் மூலமாகத்தான் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் அவைக்கு சொல்ல விரும்புகிறேன். சட்டப்படியான முக்கியமான பணிகள் நிறைய அவருக்கு இருக்கின்றன. அதற்கு மேலும் அவர் மூலமாக செய்யப்படுகின்ற சம்பிரதாயப் பணிகள் எல்லாம் அரசின் அவசர ஆணைகளை வாசித்தலும், முக்கிய பிரமுகர்களை வரவேற்று அவர்களை வழி அனுப்பி வைத்தலும், பொது நலன் பற்றிய பொதுக் கூட்டங்களைக் கூட்டுதலும், மனிதாபிமான பணிகளை நிறைவேற்றும் பொருட்டு நன்கொடை திரட்டுதலும், சென்னை மாநகர மக்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய சமூக, கலாச்சார பணிகளில் தன்னைத் தொடர்புபடுத்திக் கொள்ளுதலும் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிற சம்பிரதாய பணிகள் ஆகும். எனவே மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் சொன்னது போல் யாரேனும் தவறி விட்டால் அதற்கு மட்டுமே செல்கின்ற பணி ஒன்றுதான் செரீப்புக்கு என்று கூறுவது முற்றிலும் தவறானது, சரியானதும் அல்ல. சம்பிரதாயமான அந்தப் பணி கூட இந்த லெட்டர் ஆப் பேட்டன்டல் வரையறுக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன். அவர்கள் சொன்னதுபோல் மற்ற பணிகள் சம்பிரதாய பணிகள் சட்டத்தைப் பொறுத்து நிறைய பணிகள் அவருக்கு இருக்கின்றன. அதை நிறைவேற்றுகிற முறையில் அவரும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

Until another shall be duly appointed and sworn to the said office என்று இருக்கின்ற காரணத்தால் இவரை அடுத்த ஆண்டுக்குப் போட முடியாது என்பதற்காகத்தான் சட்டத்திலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து ஒருவரே இரண்டு ஆண்டு காலத்திற்கு இருந்தால் பணிகளைச் செம்மையாக செய்ய முடியும்..

First of all he needs atleast a year to **acquaint himself with the** situations prevailing in Madras City.
என்ற முறையில் 2 ஆண்டு காலம் பயன் உள்ளதாக இருக்கும் என்ற நோக்கோடு இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனவே, அவை இதை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருவரே 2 ஆண்டு காலம் பணியில் இருந்து இருக்கிறார் அண்ணா அவர்கள் காலத்தில். அது எப்படி ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தத் தகவலை அவர் சொல்கிறார் என்று எனக்குத் தெரியாது. நான் சட்டத்தைச் சொல்கிறேன். சட்டத்திலே இருக்கின்ற விதி என்ன என்றால்

Sheriff shall be appointed for only one year. He may be allowed to continue in office until another is appointedr மருதைப் பிள்ளையைப் பொறுத்த வரைக்கும் மற்றும் ஒருவரை நியமிக்கிறவரை அதாவது 6 மாதம் 7 மாதம் வரை அவருடைய பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறதோ என்னமோ தெரியவில்லை. என்னிடம் அது பற்றிய தகவல் இல்லை. சட்டரீதியாக அவரையே அடுத்த ஆண்டு நியமனம் செய்ய முடியாது.

திரு. ரகுமான் கான் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

பேரவை முன்னுள்ள கேள்வி : "1983 ஆம் ஆண்டு செரீப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண்.7/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள், 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, பெருந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு.சி.பொன்னையன்: துணைத்தலைவர் அவர்களே, "1983 ஆம் ஆண்டு ஷெரீப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 7/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்".

(திரு. துரைமுருகன்) [1983 பிப்ரவரி 10

அது மாதிரி, ஒருவரையே இரண்டாம் முறையும் அப்பாயின்ட்மென்ட் செய்ய சட்டத்திலே இடம் இருக்கிறபோது, அந்தச் சட்டத்தையும் வைத்துக் கொண்டு, 2 வருடம் அவர்களுடைய டெர்ம்ஸ் ஆப் பீரியட்டை ஆக்குவதற்காக ஒரு புதிய சட்டம் கொண்டு வருவதாகச் சொல்லுகிறீர்களே, இதனால் உங்களுக்கு என்ன புதியதாக விளையப்போகிறது என்பதுதான் நான் கேட்பது. என்னைக் கேட்டால், இது ஒரு அடிமைச் சின்னமாக இருந்து கொண்டிருக்கிறது. எத்தனையோ அடிமைச் சின்னங்களை ஒழித்திருக்கிறோம். சிம்பல் ஆப் சிலேவரி என்று சொல்லுவார்கள். இதுவும் அது போன்ற ஒரு சட்டம் தான். வெள்ளைக்காரன் காலத்திலே போடப்பட்டது. தூக்கி எறிந்துவிட்டுப் போக வேண்டியதுதானே, ஆனால் போக மாட்டோம். யாரோ வெள்ளைக்காரன் போட்ட சட்டமானாலும் விட மாட்டோம்.

நானும் நம்முடைய துணைத் தலைவர் அவர்களை ஷெரீப் பற்றிய விவரங்களைக் கேட்டுப் பார்த்தேன். அவர்கள் ஒரு புத்தகத்தைப் பற்றிச் சொன்னார்கள், லைப்ரரியிலே இருக்கிறது என்று. அங்கே போய் அந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன். அந்த ஷெரீப்புக்கும் நம்ம ஊர் ஷெரீப்புக்கும் சம்பந்தமே கிடையாது. நானும் யார் யாரையோ கேட்டுப் பார்த்தேன்—ஷெரீப் தெரியுமா, ஷெரீப் தெரியுமா என்று. ராமன் கானகத்திலே சீதா சீதா என்று அலைந்த மாதிரி அலையோ அலை என்று அலைந்து தேடிப் பார்த்தேன், ஒருவருக்கும் தெரியவில்லை. ஆகையினால் தெரியாத ஒன்றைக் கொண்டு வந்து மசோதாவாகக் கொடுத்துவிட்டு, இதற்கு இரண்டாண்டுகாலம் என்று சொல்வது இருக்கிறதே இது தேவையில்லாத ஒன்று.

நாட்டிலே எத்தனையோ சட்டங்கள் எத்தனையோ மாறுதல்கள் செய்யப்படவேண்டியவை எல்லாம் பாக்கியிருக்கின்றன. மெட்ராஸ் மேயர் இருக்கிறாரே, அவர் பதவிக்கு வந்து, அவருக்கு பாராட்டுக் கூட்டம் முடிவதற்குள், அவருடைய பதவிக்காலம் முடிந்து போய்விடுகிறது. மதுரையிலே மேயருடைய பதவிக்காலத்தை 2 வருடமாகச் செய்திருக்கிறார்கள். அதைப்போல மெட்ராசுக்கும் கொண்டு வரலாம். அதற்கு ஒரு தேர்தலைக் கொண்டு வரலாம். மேயரை இரண்டு வருஷம் உட்கார வைக்கலாம். இப்படி ஏதாவது செய்திருக்கிறீர்களா? ஷெரீப் பதவிக்கு 2 வருட காலம் என்று சொல்லி அதற்கு ஒரு மசோதா கொண்டு வருவது தேவையில்லாத ஒன்று. நமக்கு என்ன இங்கே பாஸ் பண்ணுவதற்கு எந்த பில்லுமே இல்லாமலா இருக்கிறோம். ஏதாவது ஒரு பில்லைக் கொண்டு வந்து இங்கே பாஸ் செய்து கொள்ளலாம் என்பதற்கு. இதற்கு ஒரு ஆர்டினன்ஸ் வேறு. ஆர்டினன்ஸ் என்றால் எதற்கு. வேண்டுமானாலும் போடுவது என்று ஆகிவிட்டது. ஆகையினால் இது தேவையற்ற ஒன்று என்பது என்னுடைய கணக்கு. நமது மதிப்பிற்குரிய சட்ட அமைச்சர்

1983 பிப்ரவரி 10] (திரு. துரைமுருகன்)

மாண்புமிகு பொன்னையன் அவர்கள் காலத்திலாவது இந்த அடிமைச் சின்னம் ஒழிக்கப்பட்டது என்கிற பெயர் வருவதற்காகவாவது அதை ஒழித்தே தீரவேண்டும். இந்தப் பதவியே தேவையில்லாத ஒன்று.

அப்படி யாருக்காவது நீங்கள் பதவி கொடுக்க வேண்டும் என்று சொன்னால் வேறு எத்தனையோ பதவிகள் இருக்கின்றன. அவற்றைக் கொடுக்கலாம். ஒரு முறை ஷெரீப்பாக இருப்பவரையே மறுபடியும் அப்பாயின்ட் பண்ண பழைய சட்டத்திலேயே வழி இருக்கிற காரணத்தால், இது தேவையில்லாதது என்பதனால்தான் நண்பர் ரகுமான்கான் அவர்கள் இந்தச் சட்டத்தினை நிராகரிக்கிறேன் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் வற்புறுத்துகிறேன் என்று கூறி விடை பெறுகிறேன்.

திரு. ஜே. ஹேம்ச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே ஆர்டினன்ஸை எது எதற்கெல்லாம் போடுகிறது என்பதற்கு ஒரு தெளிவான எடுத்துக்காட்டாகத்தான் இந்த ஆர்டினன்ஸ் இருக்கிறது. இப்படி ஒரு ஷெரீப்பை நியமிப்பதற்காக ஒரு ஆர்டினன்ஸ் போடப்பட வேண்டுமா என்பது நாம் கூர்மையாக சிந்திக்க வேண்டிய ஒன்று. இந்த ஷெரீப் பதவி என்பது வெள்ளையன் ஏகாதிபத்தியம் இந்த நாட்டிலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்திலே, சில முதலாளிகளின் வர்க்கத்தைக் காப்பாற்றுவதற்காக, அவர்களுக்குப் பதவி கொடுப்பதற்காக, அவர்களுக்குச் சில சலுகைகளை பெற்றுத் தருவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு பதவி.

இப்படி வெள்ளை ஏகாதிபத்தியத்தினால் ஏற்படுத்தப்பட்ட இந்தப் பதவியை விக்டோரியா மகாராணி பெயராலே ஒரு லெட்டர் ஆப் பேடன்ட் என்ற வகையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு பதவியை, இன்று இந்த நாட்டிலே நிலை நாட்ட வேண்டிய தேவை இருக்கிறதா என்பதை நாம் கூர்மையாகப் பார்க்க வேண்டும்.

இந்தச் சட்டத்திலே சொல்லப்படுகிறது. சுப்ரீம் கோர்ட் என்ற ஒரு கோர்ட் இருப்பதாகவும், அந்தக் கோர்ட்டினுடைய சில ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காகத்தான், இப்படி ஷெரீப் என்கிற ஒரு பதவி உருவாக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நன்கு விசாரித்துப் பார்த்ததற்குப் பிறகு, சென்னை மாநகரத்திலே, அல்லது தமிழகத்திலோ ஒரு சுப்ரீம் கோர்ட்டே கிடையாது. ஆகவே சுப்ரீம் கோர்ட்டினுடைய வேலைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு ஷெரீப் என்பது, இல்லாத ஒரு ஸ்தாபனத்திற்கு, அதனுடைய வேலையை நிறைவேற்றுவதற்கு ஒரு பதவியை உருவாக்குவது என்பது விசித்திரமான ஒரு நிலை. இது விசித்திரமான சட்டமாகவும் இருக்கிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஈ) திருத்தச் சட்ட முன்வடிவு தொடர்பாக முழுத் தகவல்கள் தரக் கோரிக்கை.

(முற்பகல் 11.30)

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு விஷயம் பற்றி தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மூலச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவரப் படுகிற போது உறுப்பினர்கள் அதிலே கலந்து கொண்டு சிறப்பாகப் பேச வேண்டும். எங்களுக்கு திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட அந்த பிரிவுக்கு மட்டுந் தான் திருத்தங்களையும் எக்ஜிஸ்டிங் செக்ஷனையும் தருகிறார்களே தவிர என்டையர் போர்ஷன்களையும் தருவதில்லை. நான் நல்ல எண்ணத்தின் அடிப்படையில், சிறப்பாக உறுப்பினர்கள் பணியாற்ற வேண்டுமென்ற முறையிலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செரீப் சம்பந்தப்பட்ட சட்ட முன் வடிவைப் பொறுத்த வரையிலே அவருடைய கடமைகள் என்ன என்ன, வேலைகள் என்ன என்ன என்று மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது கேட்டார்கள், எங்களுக்கு கொடுக்கப்பட்டதிலே அந்தத் தகவல்கள் எல்லாம் கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படிக் கொடுக்கப்பட மாட்டாது. புரகிபிஷன் ஆக்டிற்கு அமெண்ட் மெண்ட் வருகிறது என்றால் அது சம்பந்தப்பட்டதை மட்டும் தான் கொடுப்பார்கள். என்டையர் டிடெய்ல்ஸும் கிடைக் காது. சம்பந்தப்பட்ட ஒரு செக்ஷனைப் பற்றித்தான் விவரம் கொடுக்கப்படும். எதற்கு அமெண்ட்மெண்ட் வருகிறதோ அதைத்தான் கொடுப்பார்கள். மற்றபடி பிரியாம்பிள் போன்றவற்றையெல்லாம் லைப்ரரியிலே போய் உறுப்பினர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(ச) பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1983.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''ஆளுநர் அவர்களால் 19–12–1982-ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1982-ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 16/1982) இப்பேரவை நிராகரிக்கிறது.''

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1982 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை அரசு எடுத்துக்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு **(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்களுடைய தீர்மானமும் மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசுகின்றபோது, பச்சையப்பன் கல்லூரி, பேரறிஞர் அண்ணா அவர்கள் படித்த கல்லூரி, எங்களுடைய பேராசிரியர் பயிற்றுவித்த கல்லூரி, அந்தக் கல்லூரியிலே நானும் படித்திருக்கிறேன், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் படித்த கல்லூரி, பல்வேறு அமைச்சர்கள் படித்த கல்லூரி என்ற பெருமிதம் நமக்கு ஏற்படுகிறது. இந்த நிருவாகத்தை ஏற்று 2 ஆண்டுகள் இரண்டு மாதங்கள் ஆகின்றன. ஆனால் இந்தச் சட்டத்தின் 8-வது பிரிவின்படி 2 ஆண்டுகளுக்கு 2 மாதங்கள் முன்னால் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

அப்போதுதான் இரண்டு ஆண்டுகள் முடிந்தவுடன் புதிய பொறுப்புக் கழகம் பொறுப்பேற்றுக் கொள்ள இயலும் என்று மூலச் சட்டத்தில் கொடுத்திருக்கிறது. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பச்சையப்பன் பொறுப்புக் கழகத்தை அரசாங்கம் ஒரு கமிட்டியின் மூலமாக ஏற்றுக்கொண்டது. இப்போது இரண்டு ஆண்டுகள் ஆகியும் புதிய தேர்தலுக்கான நடவடிக்கை ஏற்பாடுகள் ஏதாவது நடைபெற்றிருக்கிறதா என்றால் எதுவுமே நடைபெறவில்லை. இப்போது மேலும் ஒரு ஆண்டிற்கு இருக்கிற நிர்வாகத்தை நீடிப்பதற்கு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனக்கு ஏற்படுகிற சந்தேகம் எல்லாம் ஒருவேளை அரசாங்க கமிட்டியே நிரந்தரமாகப் பொறுப்புக் கழகத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறதா ? அது ஜனநாயகத்திற்கு ஏற்புடையதுதானா ? ஜனநாயகத்திற்கு விரோதமானதல்லவா

** 1983-ம் ஆண்டு பிப்ரவரி 5-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. என். வி. என். சோமு] [1983 பிப்ரவரி 10

என்று கேட்க ஆசைப்படுகிறேன். நீங்கள் எந்த அமைப்பைக்
கலைத்தாலும் அது பஞ்சாயத்தாக இருந்தாலும் தேர்தல்
கிடையாது ; கூட்டுறவு சங்கமாகச் இருந்தாலும் தேர்தல்
கிடையாது ; பச்சையப்பன் பொறுப்புக் கழகமாக இருந்தாலும்
தேர்தல் கிடையாது ; இப்படி அரசாங்கம் எதிலே தலை
யிட்டாலும் அங்கே எல்லாம் தேர்தல் வைக்காமல் தொடர்ந்து
அரசாங்க கமிட்டியே செயல்படக் கூடிய ஒரு சூழ்நிலை
இருக்கிறது ; இன்றைக்கு மேலும் ஓராண்டு காலத்திற்கு
பச்சையப்பன் பொறுப்புக் கழகத்தினுடைய ஆயுளை
நீட்டிப்பது தேவையற்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். புதிய பொறுப்புக் கழகம், புதிய
அறங்காவலர்கள் பொறுப்பேற்கிற அளவிற்கு வெகு விரை
விலே இந்த பச்சையப்பன் பொறுப்புக் கழகத்தில் 'ஸ்கீம்
சூட்டாக' ஏற்பாடுகள் செய்து அமுலுக்குக் கொண்டு வரு
வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. ஒரு அதிர்ச்சி தரக்கூடிய செய்தியைக்
கேள்விப்பட்டேன். வருகிற ஆண்டு முதல் பி.ஏ. பட்டப்படிப்பை
ஒழிப்பதற்கான ஏற்பாடுகள் அங்கே நடைபெற்று வருவதாக
நான் கேள்விப்படுகிறேன். இது எவ்வளவு கொடுமையான
செயல் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். அதற்கு சொல்லப்படுகிற காரணம்
பி.ஏ. படிக்கிற மாணவர்களால்தான் இன்டிஸிப்ளின்
வருகிறது என்றும், பி.எஸ்ஸி., பி.காம். படிக்கிற மாணவர்
களால் அதிகம் இல்லை என்று காரணம் காட்டப்படுகிறது.
துணைத்தலைவர் அவர்களே, நீங்களும் பி.ஏ. தான், நானும்
பி.ஏ. தான் ; மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பி.ஏ.
தான் ; ஆகவே இந்த ஒரு காரணம் நியாயமான காரணமாக
இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற
ஆண்டே அந்த முயற்சி எடுக்கப்பட்டு கால அவகாசம் குறை
வாக இருந்த காரணத்தால் அந்த மனு பல்கலைக் கழகத்
தாலே, அரசாங்கத்தாலே ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ப
தால் அது கைவிடப்பட்டது ; இப்போது ஆறு மாத காலத்
திற்கு முன்னாலேயே அந்த மனு கொடுக்கப்பட்டு வருகிற
ஆண்டிலிருந்து பி.ஏ. படிப்பை அங்கு எடுப்பதற்கு நட
வடிக்கை எடுக்கப்படுகிறது ; இப்போது ஏறத்தாழ 400,
500 மாணவர்கள் அந்த கல்லூரியிலே பி.ஏ. படிக்கிற
மாணவர்கள் ; அவர்கள் எங்கே செல்வார்கள் என்பதை
மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர
விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, பி.ஏ. படிப்பை ஒழிக்கக்
கூடாது என்பதற்காக ஏ.யூ.டி. அதாவது பல்கலைக் கழகத்
தினுடைய ஆசிரியர்கள் சங்கத்தினுடைய, பச்சையப்பன்
கல்லூரி பொறுப்பு அதற்காக தர்ணா நடத்தியிருக்கிறது;
மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரி ஆசிரியர்கள்
கூட மனு கொடுத்திருக்கிறார்கள். இதை மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

1983 பிப்ரவரி 10] [திரு என். வி. என். சோமு]

பச்சையப்பன் அறநிலையத்தைச் சேர்ந்த கந்தசாமி நாயுடு கல்லூரி 1967-ம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது துவங்கப்பட்டது ; கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோது அந்த கல்லூரி பேரில் கருணைக்கொண்டு அறிஞர் அண்ணா நகரில் வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான ஏழு ஏக்கர் பரப்புள்ள நிலத்தை, நிபந்தனைகளை பிறகு வைத்துக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் அந்தக் கல்லூரிக்குத் தந்தார்கள். 1973-ம் ஆண்டு கலைஞர் அவர்கள் விரைந்து செயல்பட்டார்கள். ஆனால் அரசாங்கம் இப்போது இந்த அறநிலையத்தை எடுத்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஏற்கெனவே போடப்பட்டிருந்த அந்த கொட்டகைகள்தான் இருக்கிறதே தவிர புதிய கட்டடம் கட்டுவதற்கான எந்தவிதமான முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அதுமட்டுமல்ல, இருக்கிற கொட்டகையும் சரியாக இல்லை.

அதேபோல காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆண்கள் கல்லூரி விடுதி நான்கு ஆண்டு காலமாக மூடப்பட்டிருக்கிறது. அரசு ஏற்றுக்கொண்டு இரண்டு ஆண்டு காலமாகியும் அந்த கல்லூரி பயனடையவில்லை. அந்த கட்டிடம் பல்கலைக்கழக கூட்டுறவுச் சங்கத்தால் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டிடம். கடனும் அடையவில்லை ; கட்டடமும் பயனடையவில்லை. அதேபோல காஞ்சிபுரம் பச்சையப்பன் பெண்கள் கல்லூரி. கட்டிடம் கட்ட வரைபடம் வரைந்து இரண்டு ஆண்டுகளாகியும் இன்னும் கட்டடம் வரவில்லை.

சென்னையில் உள்ள செல்லம்மாள் பெண்கள் கல்லூரி. அந்த கல்லூரி முதல்வரை ''எரேட்டிக் ஆக்ஷன்' என்று சொல்வார்களே, அதைப்போல அந்த கல்லூரி முதல்வர் ஏதோ தவறு செய்தார்கள் என்று வேலை நீக்கம் செய்து, அந்த அம்மையார் நீதிமன்றத்திற்குச் சென்று, அந்த அம்மையாரையே நியமிக்க வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவு போட்டு அந்த அம்மையார் பெறுப்பேற்றுக்கொண்டுள்ளார்கள். இதுபோன்ற தவறுகளை எல்லாம் தவிர்க்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.40)

இன்னும் ஒரு வேதனைப்படத்தக்க செய்தி. சென்னையிலே இருக்கக்கூடிய பச்சையப்பன் கல்லூரி பல்லாண்டுகளாக இருக்கக்கூடிய ஒரு கல்லூரி. அந்தக் கல்லூரியின் முதல்வர் பொறுப்புக்கு யாரை முதல்வராக நியமிக்க வேண்டுமென்று 1981 ஆம் ஆண்டு டிசம்பரில் ஒரு விளம்பரம் செய்தார்கள். அந்த விளம்பரத்தின்படி பல விண்ணப்பங்கள், மனுக்கள் வந்திருக்கும் அது பேரதாது என்று அந்த விண்ணப்பங்கள், அந்த இன்டர்வியூ என்ற நேர்முகத் தேர்வுகள் என்ன ஆயிற்று என்று தெரியாத நிலையில், மீண்டும் 1982 ஆம் ஆண்டு ஒரு விளம்பரம் செய்தார்கள். ஆங்கிலத்தில் inconsistency என்று

சொல்வார்களே, ஒரு முரண்பட்ட நிலைமை, நேர்மாறான தன்மை, அது அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரியில் 22 பேராசிரியர்கள், பி.ஜி. புரபொசர்கள் என்று சொல்லக் கூடியவர்கள், டாஸ்க் போர்ஸ் புரபொசர்கள் வேலை செய்கிறார்கள். 30 ஆண்டுக் காலம், 35 ஆண்டுக் காலம் அனுபவப்பட்டவர்கள் இருக்கிறார்கள். பல நல்ல பட்டதாரிகளை ஆண்டுதோறும் உருவாக்கி அனுப்பிய பல பேராசிரியர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தகுதியில்லாதவர்கள் என்று கருதி, இரண்டு முதல்வர்கள் அங்கு இருக்கிறார்கள்; அந்த இரண்டு முதல்வர்களுக்கு கூட தகுதி யில்லையென்று கருதி, விளம்பரம் செய்து வெளியிலேயிருந்து அந்த முதல்வர் பொறுப்புக்கு ஆட்களை வரவழைக்க வேண்டியது அவசியம்தானா என்று கேட்கிறேன். அந்தக் கல்லூரியிலே, 30, 35 ஆண்டு காலம் பணியாற்றிய பேராசியர் களுக்கு வாய்ப்புக் கொடுக்காத நிலையில், அவர்கள் தங்க ளுக்குப் பதவி உயர்வு கொடுக்காமல் வெளியே உள்ள ஆட்களை வரவழைக்கிறார்களே என்று மனம் வெதும்பி அவர்கள் வேறு வேலைக்குச் சென்று விடமாட்டார்களா? அவர்கள் மனம் புண்படாதா? இதையெல்லாம் அரசாங்கக் கமிட்டி ஆராய்ந்து பார்க்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஒரு பெரிய பேராசிரியர்—புரபொசர் டி.ஆர். இராமச்சந்திரன் என்பவர், 1947-லிருந்து 1952 வரை இண்டர் மீடியட் 3 ஆண்டுக் காலமும், ஆனர்ஸ் படிப்பு 2 ஆண்டுக் கால மும் அங்கேயே படித்தவர்; பிறகு 1952-லிருந்து 1982 வரை அங்கேயே பணியாற்றினார். ஆக, 1947-லேயிருந்து 1982 வரை ஏறத்தாழ 35 ஆண்டுக்காலம், அங்கே மாணவராக, பேராசிரியராக பணியாற்றியிருக்கக்கூடிய டி. ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கு பிரின்சிபால் போஸ்ட் தராத காரணத்தால் அவர் மனம் வெதும்பி, இந்தப் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றித்தான் பயன் என்ன என்று இப்பொழுது அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் Director, Institute of Correspondence Course and Continuing Education என்று சொல்லக்கூடிய பதவிக்குச் சென்று விட்டி ருக்கிறார். இப்படி சிறந்த பேராசிரியர்களை, அறநிலையத் திற்குப் பணியாற்றிய பேராசியர்களை, பதவி உயர்வு கொடுத்து பயன்படுத்திக் கொள்ளாமல், விளம்பரம் செய்து வெளியிலிருந்து அழைக்க வேண்டிய அவசியம் என்ன என்று நான் கேட்க விரும்பு கிறேன்.

காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் ஒரு ஆசிரி யர், ஞானவேல் என்ற தமிழ் ஆசிரியர் இருந்தார். அவருக்கும் தலைமை ஆசிரியருக்கும் தகராறு என்ற காரணத்திற்காக, அவரை அங்கேயிருந்து சிதம்பரத்திற்கு மாற்றினார்கள். உடனே அந்த ஆசிரியர் நிர்வாகத்திடம் முறையிட்டு பலன் இல்லாமல் போன காரணத்தால் நேராக நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு வாங்கினார். 6 மாத காலம் ஆகிறது. அந்த ஆசிரியரை இன்னும் வேலை செய்ய அனுமதிக்கவில்லை. கேட்டால் அதற்கு

விளக்கம் சொல்கிறார்கள், Stay order கொடுத்திருக்கிறார்கள், transfer செய்வதற்கு. நாங்கள் transfer செய்யவில்லை. ஆனால், மீண்டும் அவரை நியமிப்பதற்கு எங்களுக்கு உத்தர வில்லை என்று வியாக்யானம் பேசுகிறார்கள். அந்த ஆசிரிய ருடைய மனம் எவ்வளவு பாடுபடும்? அது குறித்து செங்கற்பட்டு ஆசிரியர் சங்கம், பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், அறங்காவலர் களிடம் முறையிட்டு மறியல் நடத்தினார்கள். அது குறித்து இதுவரை எந்த நல்ல நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், புதிய கமிட்டி இன்று செய்திருக்கக்கூடிய நல்ல காரியம் என்னவென்றால், பச்சையப்பன் டிரஸ்ட் போர்ட் ஆபீஸ் என்று சொல்லக்கூடிய அந்த அறங்காவலர் அலுவலகம், பச்சையப்பன் கல்லூரி மாடியிலேயே மிக அழகான இடத்தில் நல்ல முறையில் இருந்தது. ஏதோ, சில கிளர்ச்சிகள், வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன என்ற காரணத்திற்காக உடனே அதை சிந்தாதிரிப்பேட்டையிலேயிருக்கிற கடைத் தெருவுக்குப் பக்கத்திலே, போக்குவரத்து அதிகமுள்ள இடத்திலே மாற்றி, சற்றுக்கூட அழகு இல்லாத, கம்பீரம் இல்லாத ஒரு கடைத் தெருவுக்கு அதை எடுத்துச் சென்றார்கள். காரணம் என்ன? அங்கே கிளர்ச்சி செய்தார்கள், அறங்காவலர்களை நேராக வந்து கேட்கிறார்களே என்ற அந்த காரணத்திற்காக அதை அங்கே கொண்டு சென்றார்கள். என்ன ஆயிற்று? அங்கேயாவது நிலைத்ததா? நிலைக்கவில்லை. அங்கேயிருந்த பச்சையப்பன் கல்லூரியினுடைய முன்னாள் முதல்வர் டாக்டர் எஸ். பி. சண்முக நாதன் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வேறு பதவியில் சென்றவுடன், ஹாரிங்டன் சாலையில் இருந்த அவரு டைய வீட்டிற்குக் கொண்டு சென்றார்கள். சிந்தாதிரிப்பேட் டையில் உள்ள சாமிநாயக்கன் தெருவில் உள்ள இடத்தை அந்தக் கமிட்டியில் இருக்கின்ற அதிகாரி ஒருவரின் மனைவி சம்பந்தப் பட்டிருக்கின்ற கிளப்பிற்கு அதாவது சங்கத்திற்கு வாடகைக்கு விட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

அதேபோன்று பச்சையப்பன் கல்லூரி முதல்வர் இடத்தை மாற்றிக் கொண்டு செல்கிறார். அங்கே மேலே ஒருவன் குடி யிருக்கிறான். அவன் 100 எருமைகளை வைத்துக்கொண்டிருக் கிறான். 150 ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்படுகின்ற ஒரு அறங்காவல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் கீழே பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். மேலே குடியிருப்பவன் 100 எருமை மாடுகளை வைத்துக் கொண்டு எவ்வளவு தொல்லை தர வேண்டுமோ அவ்வளவு தொல்லைகளையும் தந்து கொண்டிருக் கிறான். அந்த நபர் அந்தக் கமிட்டியில் இருப்பவருக்கு வேண்டி யவர் என்று சொல்லப்படுகின்றது. இதையெல்லாம் அமைச்சர வர்கள் விசாரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள

[திரு. என். வி. என். சோமு] [1983 பிப்ரவரி 10

அடுத்து, முறைகேடான வகைகளில் மாற்றல் உத்தரவுகள் போடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரே வாரத்தில் ஒரு ஆசிரியர் மூன்று முறை மாற்றப்பட்டிருக்கிறார். இது தேவை தானா என்று கேட்க விரும்புகிறேன்.

பச்சையப்பன் கல்லூரியைப் பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். பூந்தமல்லி சாலையில் பெரியார் ஈ. வே. ரா. சாலை என்று சொல்லப்படும் பிரதான சாலையில் மிகவும் கம்பீரமாக நிற்கும் கல்லூரி அது. அந்தக் கல்லூரியில் வாயிற் கதவில் ஒரு சிறு கேட்டைப் போட்டு அடைத்து விட்டிருக்கிறார்கள். மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து The Madras Penitentiary என்று போர்டைப் போட்டு, கேலி செய்யும் அளவிற்கு கேட் போட்டு விட்டார்கள். இதையெல்லாம் அமைச்சரவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை சட்டக் கல்லூரி விடுதி ஆறு மாத காலமாக மூடப்பட்டிருக்கின்றது. ஜெகன், தர்மன் என்ற இரண்டு மாணவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். டைரக்டர் ஆப் லீகல் ஸ்டடீஸ் நந்தனத்திற்கு மாற்றிக்கொண்டு போய்விட்டார். மாதத்திற்கு 10,000 ரூபாய் வாடகை கொடுத்து வைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், இதற்கு முன்பு இருந்தவர்கள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் அனந்தநாராயணன் போன்றவர்கள் டைரக்டராக இருந்த பொழுது இங்கேதான் வைத்துக் கொண்டிருந்தார்கள். இதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கும்பகோணம் ஆடவர் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு மாணவர்கள், மூன்றாவது செமஸ்டர் தேர்வுஎழுதி, இன்னும் சில மாணவர்களுக்கு முடிவு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவைகளெல்லாம் கல்வி அமைச்சர் சம்பந்தப்பட்ட விஷயங்கள். கும்பகோணம் பற்றியெல்லாம் இப்பொழுது சொல்ல முடியாது.

• THIRU N. V. N. SOMU: Sir, It is purely a matter concerning Education. That is why I bring it to the notice of the Honble Minister.

சட்டமன்றம் இன்னும் இரண்டு நாட்களில் முடியப் போகிறது. இதையெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தால் ஏதாவது செய்வார்கள் என்ற காரணத்தினால்தான் சொல்கிறேன்.

வெகுவிரைவில் பச்சையப்பன் பொறுப்புக் கழகத்திற்கு தேர்தலை நடத்த வேண்டும், ஒரு ஆண்டுக் காலம் வாய்தா கேட்பதில் இதுவே கடைசி முறை என்று வைத்துக் கொண்டு, மீண்டும் ஒரு ஆண்டு என்று சொல்லாமல், ஜனநாயக முறையில் தேர்தலை நடத்தி புதிய பொறுப்புக் கழகத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு நான் அமர்கிறேன்.

1983 பிப்ரவரி 10]

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களால் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதாவின் மீது இரண்டாவது முறையாக இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு நான் வருத்தப்படுகிறேன். முன்பு ஒருமுறை இந்த மசோதவைத் தாக்கல் செய்த மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள், ஏறக்குறைய 30 கோடி ரூபாய்க்கு சென்னை மாநகரத்திலேயும், தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலேயும் இருக்கின்ற பச்சையப்பன் பொறுப்புக் கழகத்தின் தலைமையின் கீழ் செயல்படும், பல்வேறு கல்லூரிகள், பள்ளிகள், இவைகளையெல்லாம் ஒழுங்குபடுத்த, அங்கே நடைபெறும் பல்வேறு அதிகார துஷ்பிரயோகங்கள், இலஞ்ச லாவண்யங்கள் ஆகிய இவைகளையெல்லாம் ஒழித்துக் கட்டி அந்த நிர்வாகத்தைச் சீரமைப்பதற்காகத்தான் இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லி இரண்டாண்டுகளுக்கு முன்பு இதே மாமன்றத்தில் அறிவித்தார்கள். நான் இன்றைக்கு அமைச்சரவர்களைக் கேட்கிறேன், எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, எந்தக் காரண காரியங்களுக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோமோ அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இரண்டாண்டுக் காலம் முடிந்து, இன்னும் ஓராண்டுக் காலம் தாருங்கள் என்று கோருகின்ற இந்த மாசோதாவின் மீது நான் கூற விரும்புவது, இந்த இரண்டாண்டுக் காலத்தில் அரசின் சார்பில் ஐந்து பேர்களைக் கொண்ட அமைப்பு செயல்பட்டுக் கொண்டிருந்தது. அந்த அதிகாரத்தை அவர்கள் எடுத்த பிறகும் கூட, ஐ. ஏ. எஸ். அதிகாரி ஒருவர் அங்கே நிர்வாகச் சீர்கேட்டைச் செய்துக் கொண்டிருக்கிறார். ஏறக்குறைய 30 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் அந்தப் பொறுப்புக் கழகத்திற்கு இருக்கிறது. குறிப்பாக சென்னை மாநகரத்திலே 30 இலட்சம் ரூபாய்க்கும் பெறுமானம் உள்ள இடங்களை மிகவும் குறைந்த வாடகைக்கு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மாபெரும் தவறுகள் இன்றைக்கு அரசு அதிகாரிகள் தலைமையேற்றிருக்கின்ற நிர்வாகத்தில் நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் கடந்த முறைகூட நான் இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறினேன்.

(முற்பகல் 11-50)

அதுமட்டுமல்ல, இன்றைக்குப் பச்சையப்பன் கல்லூரியில் உள்ள இந்த நிர்வாகச் சீர்கேடுகள் விளைவாக, சென்னை மாநகரத்தில் மாணவர்கள் போராட்டங்களுக்கு உலைகளனாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறதே, இந்த பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து இந்த நிர்வாகத்தினுடைய சீர்கேடுகளை எதிர்த்துதான் போ[illegible]ந்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட போர்க்குரல் இன்னு[illegible]ங்கிவிடவில்லை. மற்றான போராட்

இன்ற மாணவர்களைப் பழி வாங்குகின்ற வகையில், இன்றைக்குத் தமிழகத்தின் புதிய எழுச்சியாக மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து போராடுகின்ற இந்தக் காலச் சூழ்நிலையில் இந்தப் போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து அந்த மாணவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றுவதற்குப் பதிலாக, இன்றைக்கு அதிகாரத்திலே இருக்கக் கூடியவர்கள் அங்கே இருக்கக் கூடிய நல்ல ஆசிரியர்களையும் பேராசிரியர்களையும் பழி வாங்கக் கூடிய ஒரு நிகழ்வினைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதேபோன்று கந்தசாமி நாயுடு கல்லூரி, சென்னை அண்ணா நகரிலே இருக்கக்கூடிய அந்தக் கல்லூரிக்கு யார் அங்கீகாரம் வழங்கினார்கள். எப்படி வழங்கினார்கள் என்ற கேள்வி ஒரு பக்கம் இருந்தாலும், இன்றைக்கு அந்தக் கல்லூரிக்கு ஒரு நிலையான கட்டடம் கிடையாது. அங்கே இருக்கின்ற மாணவர்கள் கேட்பதெல்லாம் எங்களுக்கு ஒரு நிலையான கட்டடம் பயிலுவதற்கான முறையில் அமைத்துத் தாருங்கள் என்று இன்றைக்குப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதைப்பற்றி கடந்த இரண்டு ஆண்டு காலத்திலே பொறுப்பிலே இருக்கின்றவர்கள் சிந்தித்தார்களா என்று கேட்டால், சிந்தனை கூட செய்யவில்லை என்ற பதில்தான் கிடைக்கிறது.

அதேபோன்று செல்லம்மாள் கல்லூரி என்று சொல்லக்கூடிய அந்தக் கல்லூரியினுடைய முதல்வரை எவ்வளவு கேவலமான முறையில், நம்முடைய நாட்டில் ஒத்துக் கொண்ட அடிப்படை உரிமைகளுக்கு அப்பாற்பட்ட முறையில் அவர்களை மாற்றம் செய்வதும், நீதிமன்றத்திற்குக் சென்று ஆணை வாங்கி வருவதுமான ஒரு அலங்கோலமான நிர்வாகம்தான் இன்றைக்கு நடக்கின்றது. இன்றைக்கு எந்தக் காரண காரியத்திற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, அதிகாரிகளை நியமித்தோமோ அந்த அதிகார வர்க்கத்தினுடைய பொறுப்பின்மை இன்றைக்கு அங்கே நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆகவே, தொடர்ந்து இரண்டு ஆண்டுக்காலம், இன்னும் ஓராண்டுக் காலம் என்று நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எப்படி நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களுக்கு வக்காலத்து வாங்குகிறார்களோ அதேபோன்று வாய்தாக்களைத்தான் இந்தப் பொறுப்புக் குழுவிற்கு நம்முடைய அரசுபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை வேதனையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த நிர்வாகச் சீர்கேடுகளைக் களைந்து எந்த நோக்கதிற்காக இந்த பொறுப்புக் குழுவை இந்த அரசு எடுத்துக் கொண்டதோ அது செம்மையாக நடைபெறுவதற்கு அந்த நிர்வாகச் சீர்கேடுகளைத் துடைத்து எரிவதற்கு உடனடியாக இந்தப் பச்சையப்பன் பொறுப்புக் குழுவிற்குத் தேர்தலை நடத்தவேண்

*திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவை துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் பொறுப்புக் குழுவின் நிர்வாகத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ள திருத்தச் சட்டத்தில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசு இந்தப் பொறுப்புக் குழுவை ஏற்ற பிறகு, அந்தப் பொறுப்புக் குழுவினுடைய நிர்வாகம் கடந்த இரண்டு ஆண்டுகளாக சீரோடும் செம்மையோடும் நடந்து வருவதை நம்முடைய நண்பர்கள் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை என்றாலும், அந்த உண்மையை அவர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்படத்தான் போகிறது. அந்தப் பொறுப்புக் குழு நிர்வாகத்தை ஏற்ற பிறகு, அந்த பச்சையப்பன் அறநிலையத்தினுடைய சொத்துக்கள், அந்தச் சொத்துக்களை யார் யாரோ குறைந்த வாடகையில் அனுபவித்து வந்திருந்தனர். இந்தப் பொறுப்புக் குழு பொறுப்பேற்றவுடன் அந்தச் சொத்துக்களின் வருமானங்கள் மறுபரிசீலனை செய்யப்பட்டு, அந்த சொத்துக்களைப் பராமரிப்பதற்கும், அந்தச் சொத்துக்களைக் குறைந்த வாடகையில் அனுபவித்து வந்தவர்களுக்கு வாடகை உயர்த்துவதற்கும், அல்லது நீக்குவதற்கும், இந்தப் பொறுப்புக் கழகம் நடவடிக்கை எடுத்து வந்திருப்பதை நான் மனமாறப் பாராட்டுகிறேன். இந்தப் பொறுப்புக் கழகம் பொறுப்பேற்றவுடன் நிர்வாகத்திலே நல்ல பல மாற்றங்களைச் செய்து, அதனுடைய ஆளுகைக்குட்பட்ட கல்லூரிகளிலே பல வகுப்புகளை அமல்படுத்துகின்ற ஒருநல்ல சூழ்நிலை ஏற்பட்டது.

அதிலும் காஞ்சிபுரத்தில் உள்ள பச்சையப்பன் கல்லூரியைப் பற்றி அருமை நண்பர் மாண்புமிகு சோமு அவர்கள் மிகவும் விளக்கமாகப் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அந்தப் பொறுப்புக் கழகத்திலே பொறுப்பேற்றுக் கொண்டிருந்த போது, பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட, அந்த காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரிக்கு எந்த விதமான வகுப்புகளும் ஆரம்பிக்க அவர்கள் காலத்திலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்பதனை மிகவும் வருத்தத்தோடு அந்தக் கல்லூரியினுடைய மாணவன் என்கின்ற முறையிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தக் கல்லூரி கவனிப்பாரற்று கிடந்து, ஒரு சில நேரங்களில் அந்தக் கல்லூரி மூடப்படவேண்டிய சூழ்நிலை, எனக்குத் தெரிந்து ஏற்பட்டது என்பதையும், பேரறிஞர் அண்ணா அவர்கள் இக் கல்லூரி தொடர்ந்து நடக்க ஆவன செய்தார்கள் என்பதையும், நான் இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தப் பொறுப்புக் கழகம் பொறுப்பேற்ற பிறகுதான் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி—அது மகளிர் கல்லூரியானாலும் சரி, ஆண்கள கல்லூரியானாலும் சரி—அங்கே பி. காம் பட்டப்படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது, பி. எஸ். சி. பட்டப்படிப்பு அறிமுகப் படுத்தப்பட்டது. இன்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் அந்த வகுப்பிலே படிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று ஒரு மாற்றத்தினை நம்முடைய பொறுப்புக் கழகம் செய்திருப்பதை நான் மனமாறப் பாராட்டுகிறேன். அடுத்ததாக, காஞ்சீபுரத்தில் இருந்த பள்ளி, பேரறிஞர் அண்ணா அவர்கள் படித்த பச்சையப்பன் நடுநிலைப்பள்ளி பல ஆண்டுகாலமாக சின்ன காஞ்சீபுரத்திலே அது பணியாற்றிவருகின்றது. அந்த நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக ஆக்கவேண்டுமென்று—பேரறிஞர் அண்ணா அவர்கள் பல காலம் முயன்றும் இன்று வரை அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. எனவே, அருள்கூர்ந்து இந்த நிர்வாகத்தினர் அந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு, நடுநிலைப்பள்ளியை, உயர் நிலைப் பள்ளியாக மாற்றவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று காஞ்சீபுரம் பச்சையப்பன் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட ஆடவர் கல்லூரி, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரு முயற்சி செய்து, நாடகங்கள் நடத்தி, நிதிகளை வசூல் செய்து அந்த கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியில் இன்று இளநிலைப் பட்டப்படிப்புகள் பல அறிமுகப் படுத்தியிருந்தாலும், அந்தக் கல்லூரியிலே முதுநிலை பட்டப் படிப்புக்களை அறிமுகப்படுத்த, பல முறை அந்த நிர்வாக அறங்காவலர்களை சந்தித்து வேண்டிக் கொண்டுள்ளேன். அவர்களும் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறியிருந்தாலும், இன்று வரை அதற்கான முயற்சிகளை அவர்கள் செய்ததாகத் தெரியவில்லை. எனவே, அதற்கான ஏற்பாடுகளையும் அந்த அறங்காவலர் குழு செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காஞ்சீபுரத்திலே உள்ள அந்த பச்சையப்பன் கல்லூரி விடுதிக் கட்டிடம் கேட்பாரற்று இருக்கிறது. அந்த விடுதியை நடத்தவேண்டுமென்று நான் பலமுறை அறங்காவலர் குழுவுக்கு கடிதம் மூலம் தொடர்பு கொண்டபோது அவர்கள் இந்த ஆண்டே 1981-82 ஆம் ஆண்டு அந்த விடுதியை திறக்கப் படும் என்று கூறினார்கள். ஆனால் இன்றுவரை அந்த விடுதி மூடப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் தான் இருக்கிறது. இதனால் அங்கே படிக்கின்ற மாணவர்கள் பெறவேண்டிய பல்வேறு அரசு ஸ்காலர்சிப்புகளை பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்து அந்த விடுதியினை இந்த ஆண்டு திறப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் அந்தப் பகுதியிலே உள்ள பல மாணவர்கள் நல்ல கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பினை அவர்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பட்ட அந்த உயர் நிலைப் பள்ளி இப்போது நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. அதனுடைய தலைமை ஆசிரியரும், நம்முடைய அறங்காவலர்

தலைவரும், அதனுடைய வளர்ச்சியிலே மிகுந்த அக்கறை கொண்டு செயலாற்றிக்கொண்டு வருகிறார்கள். இங்கே நம்முடைய நண்பர் மாண்புமிகு சோமு அவர்கள் ஏதோ பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி கல்லூரி தலைமை ஆசிரியருக்கும் மற்ற ஒரு ஆசிரியருக்கும் தகராறு இருக்கின்ற காரணத்தால் அவர் மாற்றப்பட்டதாக இங்கே தெரிவித்தார்கள். நான் அறிந்த வரையில் மாற்றப்பட்ட அந்த ஆசிரியரும், தலைமை ஆசிரியரும் உறவினர்கள்தான். மாற்றப்பட்டதாகக் கூறப்படுகின்ற அந்த ஆசிரியர் வேறு இடத்திற்கு செல்ல மறுத்ததன் காரணமாக, நிர்வாகத்திலே உள்ள அவர் தலைமை ஆசிரியர் என்ற முறையில், அவருக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதே ஒழிய வேறு எந்தக் தகராறும் இருப்பதாக நான் அறிந்தவரையில் இல்லை. எனவே, நான் அந்த நிர்வாகத்தினரை மனமாறப் பாராட்டி வருகின்ற காலகட்டத்திலே பச்சையப்பன் அறக் கட்டளையினுடைய சொத்துக்கள் பாதுகாக்கப்பட அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளை கொஞ்சம் மெதுவாகச் செய்கிறார்கள். அறங்காவலர்கள் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்தி அந்தச் சொத்துக்களை யார் யார் அனுபவித்து வருகிறார்கள், யார் யார் தவறாக பயன்படுத்துகிறார்கள் என்பதை உணர்ந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, இந்த அறங்காவலர் குழு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு இந்தச் சட்டத்தினை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் பொறுப்புக் கழகத்தின் நிர்வாகத்தை நீட்டிக் கொடுப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இதற்கு காரணமாகச் சொல்லப்படுவது என்ன வென்றால், நிர்வாகத்தைச் சீரமைத்து உள்ளது இந்தப் பொறுப்புக் கழகம் என்பதாகும். அப்படி என்றால் ஒன்றை நான் தெளிவாக சொல்லவிரும்புவது என்னவென்றால், அடிப்படை யாக இந்தப் பிரச்சனைகளுக்குத் தேவையான சட்டத்தைக் கொண்டு வராமல், ஒரு ஆண்டுக் காலம் அந்தப் பதவியை நீடிப்ப தால் மட்டும், அந்தப் பிரச்னைகளுக்கு ஒரு முடிவு ஏற்படுமா? தமிழகத்திலே இன்று பல்வேறு இடங்களில் பல போராட் டங்கள் கல்லூரியிலே நடந்துகொண்டிருக்கின்றன. ஆசிரியர் களுடைய போராட்டம், நான்-டீச்சிங் ஸ்டாப் போராட்டம் மாணவர்களுடைய போராட்டம், இப்படிப்பட்ட போராட் டங்கள் இன்று நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நேரத்திலே நான் ஒன்றை பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். காலாகாலத்திலே எந்தெந்த நடவடிக்கைகளை தாமத மில்லாமல் எடுக்கவேண்டுமோ அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டும். சென்ற வருடம் ஆளுநர் உரையிலே சொல்லப்பட்ட ஒரு பிரச்னை, அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தினுடைய நிர்வாகத்தைச் சீரமைப் பதற்கு சட்டம் கொண்டுவரப்படும் என்று, ஆனால் இன்று வரையில் இந்த அரசு அதற்கான சட்டத்தைக் கொண்டுவர வில்லை, என்பதை மிக வருத்தத்தோடு தெரிவி

கிறேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே உள்ள ஆசிரியர்களுடைய பிரச்னையையும் ஊழியர்களுடைய பிரச்னைகளையும், மாணவர்களுடைய பிரச்னைகளையும் தீர்க்கப்படாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் கவலையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(நண்பகல் 12.00)

மேலும், அந்த இடத்திலே பி.ஏ. பட்டப்படிப்பு படிக்க வசதி இல்லாத அளவிற்கு அந்தப் பட்டப்படிப்புகள் அங்கே இருந்து மாற்றப்பட்டன. அதனால் அந்த மாணவர்கள் என்னென்ன சிரமங்களுக்கு ஆளானார்கள் என்பதை அரசு அறியும்.

பச்சையப்பன் கல்லூரியில் அப்படிப்பட்ட நிலை ஏற்படக் கூடாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது சம்பந்தமாக அரசு தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு பொறுப்புள்ள பதவியை வைத்து இருக்கிறார்கள். 'டைரக்டர் ஆப் காலேஜியேட் எஜுகேஷன்'. ஆனால் அந்தப் பதவி சென்ற 6 மாதகாலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றது. யார் அதிலே நியமனம் செய்யப்பட வேண்டு என்பதிலே உள்ள பிரச்னை காரணமாக இன்று அந்தப் பதவி பூர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் கவலையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால், இன்று மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில், கல்லூரிகளில் போராட்டம் நடந்து கொண்டு இருக்கிறது. இதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு அந்த அதிகாரிக்கு இருக்கிறது. அந்தப் போஸ்ட் இன்னும் பில்-அப் செய்யப்படாமல் அரசு வைத்து இருப்பதால் இந்தப் பிரச்னையை அரசு எந்த வகையில் அணுகுகிறது என்பதையும் என்னைப்போன்றவர்கள் கவலையோடு பார்க்கவேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் நான் ஒரு சில போராட்டங்கள், பிரச்னைகள் ஆகியவற்றை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரத்திலே மீனாட்சி கல்லூரியில் இன்று போரட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவு சம்பந்தப்பட்ட விவரங்களை மட்டும் பேசவேண்டும். மற்ற விவரங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி இதை ஒரு பொதுவிவாதமாக ஆக்கத் தேவையில்லை.

தாகவும், அந்தடிரஸ்டின் தலைவர் கார் தீயிடப்பட்டதாகவும், அதன் காரணமாக அந்த டிரஸ்டில் இருக்கக்கூடிய மெம்பர்கள், பிரின்சிபால் போன்றவர்களையெல்லாம் சேர்த்து போலீஸ் கைது செய்ததாகவும் பத்திரிகைகளில் படித்தேன். இதே போன்ற ஒரு நிலைமை சிவகாசி ஐய்யண்ணநாடார் கல்லூரியிலும் பல நாட்களாகப் போராட்டம் நடந்துகொண்டு இருக்கிறது. திருவாரூர் கல்லூரி இப்படிப்பட்ட சம்பவத்தால் தான் மூடிக் கிடக்கிறது. இதையெல்லாம் நாங்கள் கவலையோடு பார்த்துக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, இதையெல்லாம்சீரமைக்கக் கூடிய முறையில், அவைகள் எல்லாம் தீர்க்கப்படக்கூடிய முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தனியார் கல்லூரிகளில் எத்தகைய முறைகேடுகள் நடக்கின்றன என்பதை என்னால் திட்டவட்டமாகக் கூறமுடியும். நாகர்கோயிலில் உள்ள பயோனியர் கல்லூரியில் எப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்து, அதை அரசு எடுத்து, இரண்டாண்டு காலம் நிர்வாகத்தை நடத்திவிட்டு, பிறகு மீண்டும் அந்தத் தனியாரிடமே அந்த நிர்வாகத்தை ஒப்படைக்கும் நிலைமை ஏற்பட்டது. அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தான் இந்த நிலைமையேற்பட்டது. ஆகவே, இந்தத் தனியார் கல்லூரிகளை சரியானமுறையில் கண்காணிக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, காலகாலத்தில் ஆங்காங்கு ஏற்பட்டு இருக்கும் பிரச்னைகளைச் சமாளிக்க, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளைச் சமாளிக்க இப்படி பல்வேறு கல்லூரிகளில் ஏற்பட்டு இருக்கும் பிரச்னைகளைத் தீர்வுகாணும் வகையில், அடிப்படையான மாற்றங்களைச் செய்யக்கூடிய முறையில் அரசாங்கம் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும். அதற்கான முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் பொறுப்புக் குழு திருத்தச் சட்டத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கல்லூரியில் நான் படித்தவன் என்ற முறையில் அந்தக் கல்லூரி நிர்வாகம் சிறந்த முறையில் இயங்கவேண்டும் என்ற அடிப்படையில் என்னுடைய கருத்துக்களை நான் இங்கே தெரிவிக்க வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதிமன்றத்தின் அனுமதியோடு ஒரு டிரஸ்ட்டை ஏற்படுத்தியது. அதன் மூலம் மிகப்பெரிய கல்லூரிகளை ஏற்படுத்தி, நல்ல முறையில் கல்வி கற்பித்து, அதன் மூலம் உயர்ந்த பட்டங்களை பலர் பெறுவதற்கான முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இன்றைக்கு அந்த அறக்கட்டளையில் ஏற்பட்ட குறைபாட்டைப் போக்க, அதை நல்ல முறையில் சீர்திருத்தி அமைக்க இன்றையதினம் உள்ள அரசாங்கம், புரட்சித் தலைவர் அரசாங்கம், அந்தப் பொறுப்புக் கழகம் சிறந்த முறையில் மாணவர்களுக்கு நல்ல முறையில் கல்வியை கற்பிப்பதற்காக, அந்தச் சொத்துக்கள் சேதம் ஆகாமல் பாதுகாப்பதற்காக, கடந்த இரண்டு ஆண்டுகாலமாக அந்த டிரஸ்ட் நிர்வாகத்தை ஏற்று நடத்திக்கொண்டு வருகிறது.

அதேநேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த பச்சையப்பன் கல்லூரியிலே படித்தவர்தான் இந்திய நாட்டின் முதல் தலைமை நீதிபதியாக இருந்த பதஞ்சபி சாஸ்திரி அவர்கள். இந்தக் கல்லூரி இல்லை என்றால் நான் படித்து பட்டம் பெற்று, இந்தப் பதவிக்கு வந்திருக்க முடியாது என்று தன்னுடைய சுயசரிதையில் கூறியிருக்கிறார்கள்.

அப்படி இந்த சமுதாயத்தின் வளர்ச்சிக்காக, இந்தச் சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும், இந்தச் சொத்துக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அரசு நிர்வாகப் பொறுப்பை ஏற்றது. இங்கே முஸ்ஸீம்களுக்கு தனி கல்வி நிறுவனம் இருக்கிறது; கிறித்தவர்களுக்கு தனி கல்வி நிறுவனம் இருக்கிறது; அதைப்போன்று பச்சையப்பன் கல்வி நிறுவனம் இந்து சமயத்தைச் சேர்ந்த மாணவர்கள், அதுவும் வறுமையில் வாடுகின்ற மக்களுக்கு பயன்பட வேண்டுமென்று அமைக்கப்பட்ட ஒரு நிறுவனம். அந்த நிறுவனத்தில் இருக்கின்ற குறைபாடுகளைப் போக்கி, நல்ல முறையில் செயல்பட வைத்து, அந்த நிறுவனம் நல்லமுறையில் செயல்பட வேண்டும். ஏழை எளிய மக்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு எல்லாம் இன்னும் அதிகமான கல்வி அறிவை அதிக செலவு இல்லாமல், பிற தனியார் நிறுவனங்கள் எல்லாம் கல்வி கட்டணங்களை உயர்த்தியபோதும் பச்சையப்பன் அறக்கட்டளை குறைந்த கட்டணத்தைப் பெற்று ஏழை எளிய மாணவர்களுக்கு கல்லூரி படிப்பு வசதியை செய்து கொடுத்தது.

இன்னும் சொல்லப்போனால் நான் அந்தக் கல்லூரியிலே படித்த காலத்தில் ஆஸ்டல் கட்டணம் ஓராண்டு கழித்து கட்டக்கூடிய நிலைமை கூட இருந்தது. மற்ற கல்வி நிறுவனங்களில் இந்த நிலைமை இல்லை. இப்படி ஏழை எளிய மாணவர்கள், பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் கல்வி கற்று, சிறந்த முறையில் முன்னேறுவதற்கு வாய்ப்பாக இருந்தது இந்த பச்சையப்பன் கல்லூரி. இந்த நிலைமை [illegible] எல்லாம் கருதிப்பார்த்து, இந்தக் கல்லூரி நிர்வாகத்தை [illegible] விரைவிலே எந்த நோக்கத்திற்காக இந்த நிறுவனம்

தொடங்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக அந்தப் பொறுப்புக் குழுவிடம் ஒப்படைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்க அதிகாரிகளால் சிலநேரங்களில் அந்த நோக்கம் நிறைவேறாமல் போய்விடக் கூடும். எல்லா அதிகாரிகளும் ஒரேமாதிரியாக இருக்கமாட்டார்கள். எனவே, இந்து சமய மாணவர்களின் படிப்பு வசதிக்காக, சமுதாயத்தின் ஏழை எளிய மக்கள், பிற்பட்ட மக்கள் கல்வி கற்று முன்னேற்றமடைய அரசு ஏற்றிருக்கிற நிர்வாகத்தை மீண்டும் அந்த பொறுப்புக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் பொறுப்புக் கழகத்தினுடைய பொறுப்பில் உள்ள சொத்துக்கள், அறக்கட்டளை நிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்தை 22—12—1980-லிருந்து ஏற்றிருக்கிற அரசு நிர்வாகக் குழுவுக்கு இன்னும் ஓராண்டு காலம் நீட்டிப்புத் தரவேண்டுமென்ற முறையிலே கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த சட்ட முன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்கள் பேசும்போது நிர்வாகத்தில் இருக்கிற குறைபாடுகள் என்று சிலவற்றைச் சுட்டிக்காட்டினார்கள்.

தேர்தல் ஏன் இன்னும் அங்கே நடத்தவில்லை என்ற வினாவைக் கூட எழுப்பினார்கள். பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் படித்த கல்லூரி, பேராசிரியர் அவர்கள் பயிற்றுவித்த கல்லூரி, அந்தக் கல்லூரியிலே ஜனநாயக முறையிலே தேர்தலை விரைவிலே நடத்த வேண்டாமா என்ற வினாவை எழுப்பினார்கள். எந்த நோக்கத்தோடு அரசினுடைய நிர்வாகக் குழு இந்த அறக்கட்டளையினுடைய பொறுப்பை மேற்கொண்டது என்பதை அவை அறியும். ஏற்கனவே எந்த அளவுக்கு குறைபாடு இருந்தது, அன்றைக்கு இந்த பொறுப்பை நிர்வாகக் குழுவுக்கு ஏன் விட்டார்கள், இந்த பச்சையப்பன் அறக்கட்டளையைப் பொறுத்த வரையில் அதன் பொறுப்பை எடுப்பதற்கு முன்னால் எந்த அளவுக்கு சீரழிந்த நிலையிலே நிர்வாகம் இருந்தது என்பதைக் கூட ஏற்கனவே இந்த அவையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

குறிப்பாக இந்த அறக்கட்டளையைச் சேர்ந்த பல்வேறு கல்வி நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருந்தகைகளுக்கு மாதாமாதம் ஊதியம் தரக்கூட வருமானம் இல்லாத அளவுக்கு நிர்வாகத்தில் முறை கேடுகளும், கோளாறுகளும் இருந்த காரணத்தால் ஆசிரியர்களுக்கு பல மாதங்களாக சம்பளம் இல்லாத ஒரு நிலைமைகூட ஏற்பட்டு ஆசிரியர்கள் மத்தியில் போராட்டம்; மாணவர்கள் மத்தியிலேயும் போராட்டம் என்ற நிலைமைகள் ஏற்பட்ட பிறகு தான், நட்ட நிலையிலே, இழப்பிலே ஓடிக் கொண்டிருக்கிற வருமானம் இல்லாத அந்த நிர்வாகத்தைச் செம்மை படுத்தி சீர்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான்

[திரு. சி. பொன்னையன்] [1983 பிப்ரவரி 10

(பிற்பகல் 12.10).

அப்படி இந்த நிர்வாக குழு அமைக்கப்பட்ட பிறகு, ஒரு ஆண்டுக்காலத்தில் எத்தனையோ சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதை நான் சுட்டிக்காட்டுவதற்கு காரணம் 1980 ஆம் ஆண்டு, இந்த அரசு பொறுப்பேற்ற போது, ஆசிரியர்களுக்கு சம்பளம் கூட கொடுக்க முடியாத நிலையில், அவர்களுக்கு சம்பளம் கொடுக்க வங்கிகளில் கடன் வாங்கித் தான் கொடுக்க முடியும் என்கிற நிலைமையில் வருமானமே இல்லாத நிலை, இழப்பு நிலை, நட்டநிலை, பல லட்சத்திற்கு மேல் கடன் தரவேண்டிய அளவுக்கு—கிட்டதட்ட 40 லட்சத்திற்கு மேல் கூட கடனாக தரவேண்டிய அளவுக்கு, கடன் நிலைமையில் இருந்தது அந்த அறக்கட்டளை.

இந்த நிர்வாக குழு பொறுப்புக்கு வந்த பிறகு, இரண்டாண்டு காலத்தில் பல்வேறு செம்மையான நடவடிக்கைகளை மேற்கொண்ட காரணத்தால், நிர்வாகத்தை சீர்திருத்தி நடைமுறைக்கு கொண்டு வந்த காரணத்தால், ஏற்கனவே இருந்த முறைகேடுகளை நீக்க நடவடிக்கைகளை எடுத்து சீரமைப்பு செய்த காரணத்தால், கிட்டதட்ட 48 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் அளவுக்கு வருமானத்தை ஈட்டி, பல கடன்களை அவர்கள் அடைத்திருக்கிறார்கள்.

உதாரணமாக கடனாக இருந்த பணம் மட்டும் கிட்டதட்ட 7 லட்சத்து 73 ஆயிரம் ரூபாயும், மேற்கொண்டு அடிஷனல் இன்வெஸ்ட்மெண்ட் என்ற முறையில் 2 லட்சம் ரூபாயும், லேபரட்டரிகளை எல்லாம்—சோதனை கூடங்களையெல்லாம் நல்ல தரமான நிலைமைக்கு கொண்டு வருவதற்காக 1 லட்சத்து 85 ஆயிரம் ரூபாயும், பல இடங்களில் கட்டிடப்பணிகளை மேற்கொள்வதற்காக 7 லட்சத்து 7 ஆயிரம் ரூபாயும், அது மட்டும் அல்லாமல், தமிழ்நாடு ஹவுசிங் போர்டுக்கு—வீட்டு வசதி வாரியத்திற்கு கந்தசாமி நாயுடு கல்லூரி கட்ட வேண்டிய பணத்திற்கு, பல ஆண்டு காலமாக கட்டாமல் இருந்த காரணத்தால், அங்கு ஏற்பட்டிருந்த அந்த வேதனை மிக்க நிலைமையை மாற்றுவதற்கு முன்னோடியாக 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், ஆக மொத்தம் 19 லட்சத்து 23 ஆயிரம் ரூபாயை ஈட்டி, இந்தக் கடனையெல்லாம் அடைத்திருக்கிறார்கள் அல்லது முதலீடு செய்திருக்கிறார்கள்.

அது மட்டும் அல்லாமல், Endowment arrears due to the University. பல்கலைக் கழகத்திற்கு தரவேண்டிய என்டோன்மெண்ட் அரியர்ஸ் என்று சொல்லக்கூடிய அந்தப் பாக்கியை கூட 13 லட்சத்து 53 ஆயிரம் ரூபாயைக் கட்டி தீர்த்திருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல், மல்டி ஸ்டோரிட் பில்டிங் என்ற பல மாடிக் கட்டிடங்களை கட்டியதற்காக தரவேண்டிய பாக்கி 11 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் என்று இருக்கிறது. அதையும்

1983 பிப்ரவரி 10] [திரு. சி. பொன்னையன்]

தீர்த்திருக்கிறார்கள். கையிருப்பாக தற்போது 4 லட்சம் ரூபாயை வைத்திருக்கிறார்கள். ஆக மொத்தம் 2 ஆண்டுக்காலத்தில் 48 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் வருமானத்தை ஈட்டியிருக்கிறார்கள்.

இதைச் சுட்டிக்காட்டுகிறபோது, 2 ஆண்டு காலத்திற்கு முன்னால் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கக்கூட கையிலே காசில்லாத நிலைமையிலே இருந்த அந்த அறக் கட்டளை, பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு போதுமான ஊதியம் வழங்குகிற நல்ல நிலைமைக்கு வந்தது மட்டும் அல்லாமல், பாக்கியிருந்த கடன்களையெல்லாம் அடைப்பதற்காக கிட்டதட்ட 48 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் அளவுக்கு ஈட்டி, கடன்களை அடைத்தல், முதலீடு செய்தல், கட்டிடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு ஆக்கப் பணிகளை, ஆக்கப்பட்டதிலிருந்து இரு ஆண்டுக்காலத்தில் அந்த நிர்வாகம் எந்த அளவுக்கு செம்மையாக செயல்பட்டு வந்திருக்கிறது என்பதை அவை அறியும் என்பதற்காக எடுத்துக்காட்டினேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சோமு அவர்களும், அப்பாதுரை அவர்களும் பேசுகிறபோது (குறுக்கீடு) வாடகை சில இடங்களில் குறைவாக விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது மிகவும் தவறானது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன். இந்த அறக் கட்டளையினுடைய பொறுப்பை 80 ஆம் ஆண்டு இந்த அரசு எடுப்பதற்குப் முன்னாலே; ஆண்டுக்கு 6 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் வாடகை வருமானம் என்ற நிலை தற்போது மாற்றப்பட்டது. நீதிமன்றங்களில் பல தடை ஆணைகளை அவ்வப்போது பெற்ற போதிலும் கூட by way of negotiated settle ment என்ற முறையிலே முடிந்த அளவுக்கு முயற்சிகளை மேற்கொண்டு 6 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய், வாடகை வருமானம் 80 ஆம் ஆண்டில் என்று இருந்த நிலை மாற்றப்பட்டு, 10 லட்சம் ரூபாய் என்ற அளவுக்கு நடப்பு ஆண்டுக்கு அது உயர்ந்து வந்திருக்கிறது. குறிப்பாக சாதாரணமாக 800 ரூபாய், 400 ரூபாய், 500 ரூபாய் என்று இருந்த வாடகை எல்லாம் 3 மடங்கு 4 மடங்காக உயர்த்தப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் வெங்கடசுப்பிரமணியம் அவர்கள் சொன்னது போல பல சொத்துக்கள் மிக முக்கியமான இடங்களில் இருக்கின்றன. அதிகப்படியான வாடகையை பெறவேண்டிய நிலைமையில் இருக்கின்றன. அந்த இடங்களில் எல்லாம் தக்க நடவடிக்கைகளை எடுத்து, அதிகப்படியான வாடகையை பெற்றோமேயானால், இந்த 10 லட்சம் என்பதைக் கூட இன்னும் பல மடங்காக வாடகை வருமானம் உயரக்கூடிய நல்ல வாய்ப்பிருக்கிறது.

சென்னை மாநகரத்திலே முக்கியமான இடங்களிலே இருக்கிற பல கட்டிடங்கள் பலர் கையிலே சிக்கியிருக்கிற காரணத்தால், இதற்கு முன்னாலே இருந்து நிர்வாகத்தை நடாத்தியவர்

பினர் திரு. என். வி. என். சோமு அவர்கள் பேசும்போது சிந்தாதிரிப் பேட்டையில் ஒரு இடத்தை நிர்வாகக் குழு மாற்றிவிட்டது, அதை உறுப்பினர் ஒருவருடைய மனைவிக்கு கிளப் நடத்துவதற்கு தந்து விட்டது என்று சொன்னார்கள். அது தவறான கருத்து. இடத்தை நிர்வாகக் குழு மாற்றிவிட்டது என்பது உண்மை. ஆனால் அந்த இடத்தைப் பொறுத்தவரைக்கும் மைய அரசுக்கு Women's voluntary service which is an All-India Social Organisation. என்ற முறையில் இருக்கின்ற அகில இந்திய அளவில் இருக்கின்ற ஒரு உமன்ஸ் வாலன்டிரி அசோசியேசனுக்கு அது வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. அதனுடைய டைரக்டராக இருப்பவர் உறுப்பினருடைய மனைவி என்று சொன்னார்கள். அது தவறு. The Director of such voluntary organisation is the PrimeMinister of our country and the Assistant Director is the Madam Governor of this State என்பதை நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(பிற்பகல் 12.20)

பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகத்தை 1980-ம் ஆண்டு அரசு எடுத்தது. நிர்வாகக் குழுவினை நியமித்த பிறகு பல ஆண்டுக் காலமாக அங்கே நடைமுறையில் இருந்து வந்த முறை கேடுகளை களைந்து ஊதியம் கூட ஆசிரியப் பெருந்தகைகளுக்கு அளிக்க முடியாத நட்ட நிலையில் வருமானம் இன்றி கடனை வாங்கிக் கொண்டு அந்த அமைப்பு இருந்தது. இன்று ஆசிரியர் களுக்கு ஊதியத்தைத்தரக்கூடிய நல்ல நிலையைப் பெற்று கிட்டத் தட்ட 48 இலட்ச ரூபாய் வருமானத்தை ஈட்டி வாங்கிய கடனை அடைத்து செம்மையான நிலைக்கு வந்திருக்கிறது. இன்னும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வாடகை வருமானத்தை தனியார் பலர் அந்த அறக்கட்டளை சொத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நல்ல வாடகையை நியாயமான வாடகையைப்பெற்று இந்த அறக்கட்டளையை நல்ல நிலைக்குக் கொண்டுவர உதவும் முகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை அவை ஏற்குமாறு வேண்டி அமர்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வருடத்திற்கு மறுபடியும் அரசு நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை சபை ஏற்றுக்கொள்கிறது. சரி. அதை சரி செய்து நல்லநிர்வாகத்தை ஏற்படுத்தி மறுபடியும் கொண்டுபோய் முன்பு இருந்தவர்களிடம் கொடுப்பது நல்லதா? அதாவது நாம் சரி செய்து கொடுத்த பிறகு அவர்கள் மறுபடியும் அதை பாழ்படுத்த அனுமதிக்க வேண்டுமா? மறுபடியும் பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது சிந்தனை இருக்கிறதா என்பதைப் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியவர் திரு.சங்கரய்யா அவர்கள் கூறிய கருத்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்று தான். குறைபாடுகள்—முறைகேடுகள் பல நடைபெறுகின்றபோது அரசாங்கம் நிர்வாகப் பொறுப்பை ஏற்று, தவறுகளைக் களைந்து சீர்படுத்தி மீண்டும் அவர்களிடமே ஒப்படைப் போமானால் அது எதிர்பார்த்த நன்மையை விட தீமையை ஏற்படுத்தி விடும் என்பதை அரசு உணருகிறது. ஆனாலும் கூட அது ஒரு டிரஸ்டு என்ற நிலையில் இருக்கிற காரணத்தால் எந்த முறையில் மக்கள் நலன் கருதி அது செயல் படுகிறது என்பதை ஆராய்ந்து தக்க நடவடிக்கை அரசு எடுக்கும்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைக் குறிப்பட்டார்கள். பச்சையப்பன் கல்லூரியிலிருந்து பி.ஏ., பி.எஸ்.ஸி., பட்டப் படிப்புகள் வேறு இடத்திற்கு மாற்றப்படுகிறது என்று. அதே அறநிலையத்தைச் சார்ந்த கந்தசாமி நாயுடு கல்லூரியை முழுமையாகக்கட்டி அந்த பி.ஏ., பி.எஸ் ஸி., பி.காம். போன்ற இளநிலை பட்ட மேற் படிப்புகளை மேற்கொள்ளலாம். பச்சையப்பன் கல்லூரியை நம்பியிருக்கக் கூடிய மாணவர்களுக்கு ஏற்படக் கூடிய அந்த நிலமையைப் போக்க அரசாங்கம் தற்போது கமிட்டி அமைக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளையை நம்பி இருக்கின்ற மாணவர்கள் என்று நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. காரணம் எந்த எந்தக்கல்லூரியில் இடம் பெற வாய்ப்பு இருக்கிறதோ மாணவர்கள் அங்கே போகிறார்கள். பச்சையப்ப கல்லூரியைப் பொறுத்தவரையில் போஸ்டு கிராஜ்வேட் சென்டராக மாற்றக் கூடிய ஒரு எண்ணம் அதுவும் ''அப்ளைடு சயின்ஸ்'' போன்ற படிப்புகளைக்கொண்டுவர வேண்டும் என்ற நோக்கம் இருக்கின்ற காரணத்தால் அது செயற்குறிப்பில் இருக் கிறது என்று சொன்னேன். கந்தசாமி நாயுடு கல்லூரியை பொறுத்த வரைக்கும் பி.ஏ., பி.எஸ் ஸி., கொண்டுவரவேண்டும் என்பது கூட ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று அல்ல. நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் பி.ஏ., பி.எஸ்ஸி., போன்ற இளநிலை பட்டப் படிப்புகளைப் பொறுத்த வரைக்கும் எதிர்கால தமிழ் சமுதாயத் திற்கு அது உகந்ததாக இராது என்ற கருத்து என்னைப் பொறுத்தவரைக்கும் இருக்கிறது. காரணம் அது எந்தப் படிப்பாக இருந்தாலும் எதிர்காலத்தில் ''அப்ளைடு சைன்டிபிக் அப்ரோச் சாக'' இருக்க வேண்டும் என்று கல்வித்துறை தற்போது தீவிரமாக ஆய்ந்து வருகிறது. அந்த அடிப்படையில் இந்தக் கல்வியை நாம் கல்லூரியில் பட்டப்படிப்பாகக் கொண்டு வந்தால் எதிர்

கள் நியாயமாக பிடித்து அனுபவித்து வந்த இரால் மீன், ஏனைய மீன் வகைகள் கிடைக்காமல் போவதோடு கலங்களைக் கொண்டு மீன்பிடிப் பணியில் ஈடுபடுவதால் தங்களுடைய விலையுயர்ந்த வலைகள் அடிக்கடி சேதப்படுகின்றன என்பதே பரம்பரை மீனவர்கள் கூறுகின்ற கருத்தாகும். மீன்பிடி விசைப் படகுகள் தடையின்றி செலுத்தப்படுவதால் தங்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுவதோடு நிதியிழப்பும் ஏற்படுமோ என்ற அச்சத்தை பரம்பரை மீனவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மீன்பிடி கலங்களைக் கொண்டு மீன்பிடிக்கும் மீனவர்களுக்கும் பரம்பரை மீனவர்களுக்கும் இடையே தகராறுகள் ஏற்படுவதைத் தவிர்க்கவும் தமிழ்நாடு கடற்கரை ஓரப் பகுதிகள் முழுவதிலும் அல்லது குறிப்பிட்ட பகுதி நெடுகிலும் கடலில் மீன்பிடி கலங்களைக் கொண்டு மீன்பிடிப்பதை முறைப்படுத்த கடலில் மீன்பிடித்தலை முறைப்படுத்தல் இந்திய அரசின் 1979-வது ஆண்டின் மாதிரி கடலில் மீன்பிடித்தலை முறைப்படுத்துதல் சட்ட முன்வடிவு அடிப்படையில் தனிச்சட்டம்ஒன்றை இயற்ற இந்த அரசு தீர்மானித்தது. அது மட்டும் அல்லாமல் அரசியலமைப்பு 39-வது பிரிவின் (பி) மற்றும் (சி) ஆகிய கூறுகள் பின்வருமாறு வகைசெய்கின்றன. அரசு குறிப்பாக சமூகத்தின் பொருள்வள ஆதாரங்களின் உடைமையையும் கட்டுப்பாட்டையும் பொதுமக்களின் நன்மைக்கு மிகச் சிறந்த அளவுக்கு துணையாக நிற்கின்ற வகையில் பகிர்வு செய்வதையும் பொருளியல் அமைப்பின் செயல்பாடுகள் பொது மக்களுக்குக் குந்தகம் உண்டாக்கும் வகையில் செல்வமும் உற்பத்தி வழிவகைகளும் ஓர் இடத்தில் குவிக்கின்ற விளைவை ஏற்படுத்தாத நிலையையும் எய்துதலை நோக்கி தன் கொள்கைகளை நெறிப்படுத்துதல் வேண்டும். மீன்களைப் பாதுகாக்கவும், கடலில் அறிவியல்

(பிற்பகல் 12.30)

அடிப்படையில் மீன்பிடிப்பை முறைப்படுத்தவும் மேற் சொன்ன 39-வது பிரிவு (பி) மற்றும் (சி) கூறுகளில் விதிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு செயல்வடிவம் கொடுக்கிற வகையிலே அரசு தனி சட்டம் ஒன்றை இயற்றுவது என்று முடிவு எடுத்தது. அந்த நிலையைத் தெளிவுபடுத்துவதற்காக சட்ட முன்வடிவில் 2-ம் பிரிவில் திட்டவட்டமாக கீழே குறிப்பிட்ட விளம்புகை, 'ஸ்பெசிபிக் டெக்லரேஷன்' ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. இந்த சட்டம் அரசியல் அமைப்பில் 39-வது உறுப்பின் (பி) மற்றும் (சி) கூறுகளில் விதிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளை எய்துவதற்கான அரசின் கொள்கைகளை செயல்படுத்துவதற்காக என்று இயங்குகையில் விளம்பப்படுகிறது என்று தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறாததால் மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க ஆளுநர் அவர்கள் 1983-ம் ஆண்டு கடலில் மீன் பிடித்தலை முறைப்படுத்தல் என்ற அவசர சட்டத்தை அதிகாரமுறையில் வெளியிட்டார்கள். இந்த அவசரச்சட்டம் 6—1—1983 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. மேற்சொன்ன அவசர சட்டத்திற்கு

பதிலாக சட்டம் இயற்றி இந்த சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டது. இயற்றப்பட்டிருக்கிற சட்டமானது அவசர சட்டத்திலே உள்ள விதிகளை ஒத்திருக்கும். இதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த சட்டம் கொண்டு வருவதினுடைய நோக்கம் 'To avoid clashs between mechanished boat operators and catamaan people.' நாட்டுப் படகுகாரர்களுக்கும், விசைப் 'படகுகாரர்களுக்கும் இடையில் ஏற்படுகிற தகராறை, சர்ச்சைகளை விலக்குவதற்காக, வராமல் செய்வதற்காக என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல 'To settle disputes between, them, அவர்களுக்கு இடையில் இருக்கிற டிஸ்பியூட்சை செட்டில் பண்ணுவதற்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். ஆனால் எந்த குறிக்கோளுக்காக இந்த சட்டம் கொண்டுவரப்பட்டதோ அந்த குறிக்கோள் இந்த சட்டத்தால் நிறைவேற்றப்படுமா என்றால் அதில் தான் ஐயப்பாடு இருக்கிறது. இன்னொன்று இந்த சட்டம் எந்த காலக்கட்டத்தில் வரவேண்டியது, இவ்வளவு காலம் கடந்து வந்திருப்பதற்கு காரணம் என்ன என்பதையும் நாம் பார்க்காமல் இருக்க முடியாது. அ. தி. மு. க. ஆட்சி 1977-லிருந்து 1983 வரையில் இடையில், 2, 3 திங்கள் இல்லாமல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆனால் அந்த காலக்கட்டத்திலே தமிழ் நாட்டிலுள்ள கன்னியாகுமரியிலிருந்து பழவேற்காடு வரையில் உள்ள பகுதிகளில் பல்வேறு சர்ச்சைகள் நடந்திருக்கின்றன. கட்டுமரம் வைத்து மீன் தொழில் செய்கிற தொழிலாளர்களுக்கும், விசைப்படகுகாரர்களுக்கும் இடையில் பல்வேறு சர்ச்சைகள் தொடர்ந்து இருந்திருக்கின்றன. ஆனால் அப்போதெல்லாம் நம்முடைய சர்க்கார் இதிலே கவனம் செலுத்தாமல் இருந்தது உண்மையிலேயே வருந்தத்தக்க ஒன்றுஎன்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் இதைக் கொண்டு வருகிறபோது இதைக்கூட முறையாக கொண்டு வந்திருக்கிறார்களா என்றால் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிற விதிகளைப் பார்க்கிறபோது 'To protect traditional fishermen, ' வாழையடி வாழையாக மீன் பிடித்து வருகிற மீனவர்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதிலே எந்தவிதமான பாதுகாப்பு தரப்பட்டிருக்கிறது என்று பார்க்கிறபோது,

'Provided further that the passing of such fishing vessel through any specified area shall not in any manner cause any damage to any fishing nets or rackles belonging to any person who engages in fishing in the specified area by using any traditional fishing craft such as cataman, country craft,ro canoe.'
என்ற ஒரு விதி சொல்கிறது.

[திரு. சி. பொன்னையன்] [1983 பிப்ரவரி 10

காலத்தில் மாணவர்களுக்கு படித்து முடித்தவுடன் வேலை கிடைக்கும் அல்லது சுய வேலையில் ஈடுபடலாம் என்ற வாய்ப்பு இருக்கும். அந்த முறையில் கல்வி முறையை மாற்ற வேண்டும் என்ற நோக்கோடு செயல்படுகிற அந்த அடிப்படையில் அரசு கண்டிப்பாகச் செயல்படும்.

திரு. அ. ரகுமான்கான்: அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத நால் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: : பேரவைமுன் னுள்ள கேள்வி : '' 1983-ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவுக்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: '' 1983-ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1983) நிறைவேற்றப் பெறவேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

9. அறிவிப்புகள்

(அ) மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்ட முன்வடிவு, 1983 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்.

1983 பிப்ரவரி 10]

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(உ) மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்ட முன் வடிவு 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப் படுத்தல் சட்ட முன்வடிவு**(சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 10/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ''.

இந்த மன்றம் இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்பட வேண்டுமென்ற வேணவா நீண்ட பெருங்காலமாகவே தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் குறிப்பாக ஏழை எளிய மீனவர்களைப் பொறுத்தவரையில் இருந்து வந்தது. இப்போது இருக்கின்ற சட்டங்களின் அடிப்படையில் அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பதற்கான வழிவகைகள் இல்லாததன் காரண மாக இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவரப்படவேண்டும் என்ற முடிவை மாநில அரசு மேற்கொண்டது. இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று எண்ணுகிற நிலையில் மத்தியஅரசு தாங்களாகவே இதற்காக ஒரு சட்டம் இயற்றுகிறோம் அதை மாதிரி சட்டமாக வைத்து மாநில அரசு தங்களுடைய சட்டங்களை செம்மைப்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லி யதற்கு இணங்க மத்திய அரசு மாதிரிச் சட்டத்தை அடிப்படை யாக வைத்து இந்த மாநிலத்தின் தேவையின் அடிப்படையில் இந்தச் சட்ட முன்வடிவு உருவாக்கப்பெற்று மன்றத்தினுடைய அனுமதியைப் பெறுவதற்காக ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது.

இந்த மாநிலத்தில் மீன்பிடி கலங்களைக் கொண்டு மீன்பிடிப் பவர்களுக்கும் மீன்பிடிக்கும் தொழிலிலே பரம்பரையாக ஈடுபட்டு வருகிறவர்களுக்கும் மீன்பிடிக்கும் பகுதி குறித்து அடிக்கடி தகராறு கள் ஏற்படுகின்றன. தமிழ்நாடு கடற்கரை ஓர மாவட்டங்களில் தீவிரமாக மீன்பிடிக்கும் குறிப்பிட்ட பகுதிகளில் குறிப்பாக இரால் மீன் பிடிக்கும் காலங்களில் இந்தத் தகராறுகள் பெரு மளவில் ஏற்படுகின்றன. திறன்மிக்க மீன்பிடி படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதால் ஏற்படும் போட்டியின் காரணமாக கடற்கரைப் பகுதிகளில் இது நாள்வரையில் பரம்பரை மீனவர்

**1983 ஆம் ஆண்டு பிப்ரவரி 7 ஆம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்-தலைமை.)

அதாவது, இந்தக் கேனோ, கட்டுமரம் போன்றவைகளில் தொழில் செய்யும் போது, விசைப்படகு செல்லுமேயானால், அங்கேயிருக்கிற வலைகளுக்குச் சேதம் ஏற்படுத்தக் கூடாது என்று இருக்கிறது. நாவலர் கூடச் சொன்னார், விலையுயர்ந்த வலைகள் எல்லாம் நாசமாகின்றன, பரம்பரை மீனவர்கள் வைத்த கோரிக்கைகள், குறைபாடுகளை வைத்துத் தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது, அந்த இடத்திலே வழியிலே போனால் டாமேஜஸ் வரக்கூடாது என்று. யாருக்கு டாமேஜஸ் வரக்கூடாது? கட்டுமர மீன்பிடி தொழிலாளர்களுக்கு டாமேஜஸ் வரக்கூடாது. ஆனால், டாமேஜ் ஏற்பட்டால் என்ன விவகாரம்? என்ன செய்வீர்கள்? ஏதாவது சொல்லியிருக்கிறீர்களா? அந்தக் கட்டுமரத் தொழிலாளர்களுக்கு அப்படி டாமேஜ் ஏற்படுமானால், அவர்களுக்கு எந்த, எந்தத் துறையிலே நஷ்டஈடோ அல்லது வேறு உதவிகளோ, சர்க்கார் தரப்பிலிருந்தோ, அல்லது யார் அந்தப் பாதகத்தை உண்டாக்கினார்களோ, அவர்களிடமிருந்தோ, வசூலித்துத் தரப்படும் என்றோ ஏதாவது விதி சேர்க்கப்பட்டிருக்கிறதா? உண்மையாக கட்டுமர மீனவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் இந்தச் சர்க்காருக்கு இருக்குமேயானால், அப்படி ஒரு விதியைச் சட்டத்திலே சேர்த்திருக்கலாம் அல்லவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று, சேதம் விளைவிக்கக்கூடாது என்று நாம் போட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அப்படிச் சேதம் விளைவிப்பார்களேயானால், அவர்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது, எந்த வகையிலே செய்வது என்பவை ரூல்ஸ் அன்ட் ரெகுலேஷன்சிலேதான் வரும். இந்தச் சட்டத்தினுடைய அடிப்படையிலே விதிமுறைகள் வகுக்கப்படும். விதிமுறைகளை வகுக்கும்பொழுது, இன்ன, இன்ன குற்றத்தைச் செய்கிறவர்களுக்கு, இன்ன, இன்ன தண்டனை, இன்ன, இன்ன வகையிலே அபராதம் என்று வரும். ஆகவே, சட்டத்திலே முழு விவரங்களும் வராது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று அத்தகைய கருத்துக்கள் விதிமுறைகளிலே சேர்த்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : ஆனால், ஒன்று, இந்த விசைப் படகுக் காரர்களுக்கு மட்டும் இவ்வளவு பைன் என்றும், இவ்வளவு மீன் இருந்தால், 5,000, ல்லது 1,000 என்று சொல்லியிருக்கிறீர்கள். அவர்களுக்குக் கொடுக்கிற தண்டனையையும் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் நஷ்டஈடு பற்றி மட்டும் சொல்லவில்லை. செய்வீர்களோ, இல்லையோ என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேதான் கேட்கிறேன். விளக்கத்திற்கு நன்றி. ஆனால் [illegible] செய்யவேண்டும்.

இந்தச் சட்டத்தை எப்பொழுதோ கொண்டு வந்திருக்கவேண்டும். ஏனென்றால், நம்முடைய தமிழக கடற்கரைகளில் அப்படிப்பட்ட ரணகளம் நடைபெற்றிருக்கிறது. சென்னையிலேகூட கட்டுமர மீனவர்களுக்கும் விசைப் படகுக்காரர்களுக்கும் 1978-ல் பெரிய போர்க்களமே நடைபெற்றது. அதிலேகூட, கட்டுமர மீனவன்—நான் ஏற்கனவே கூட வேறு ஒரு பிரச்னையில் பேசும் போது சொல்லியிருக்கிறேன்—அம்பலவாணன் என்ற மீனவன், இந்த ஆட்சியினுடைய துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியிருக்கிறான். ஆனால், அந்த நேரத்திலே எல்லாம் இந்தச் சர்க்காருக்கு இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற [illegible] எண்ணம் வரவில்லை, என்ன காரணமோ தெரியவில்லை. ஆனால், இப்பொழுது வருகிறது. ஆகவேதான் கட்டுமரத் தொழிலாளர்கள் சந்தேகப்படுகிறார்கள். 5 ஆண்டுக் காலமாக நாங்கள் கோரிக்கை வைத்து, இந்தச் சாதாரண சட்டத்தைக் கொண்டுவர 5 ஆண்டுகாலமா என்று கேட்கிறார்கள். ஆனால் நாவலர் அவர்கள் சொல்லக்கூடும். நாங்கள் எப்படிப்பட்ட கால கட்டத்தில் கொண்டு வருகிறோம் தெரியுமா? எங்கள் கட்சியைச் சேர்ந்த வட்டச் செயலாளரே, விசைப் படகு வெள்ளோட்டம் பார்க்கிறார், இராயபுரம் தொகுதியிலே. அதைக் கூட அமைச்சர் திரு. பொன்னையன் போன்றவர்கள் நடத்தி வைக்கிறார்கள். அப்படிப் பட்ட காலகட்டத்திலே அவர்களுக்குப் பாதகமாக இந்தச் சட்டம் கொண்டு வருகிறோம் என்று சொல்லக்கூடும். என்றாலும் இந்தச் சட்டம் இவ்வளவு காலம் கடந்து வருவது நல்லதல்ல. ஆனால் மற்றவர்கள் என்ன பேசுகிறார்கள் என்றால், இந்தச் சட்டம் எதற்காக இவ்வளவு காலம் கடந்து அதுவும் ஆர்டினன்சாக வருகிறது, சட்டமாகக் கூட அல்ல, பை எலக்ஷன் அறிவிப்பு [illegible] பின்னே, வருகிறது. அங்கே, 15,000-லிருந்து 20,000-வரை கட்டுமரங்கள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதற்காக [illegible] என்று, கட்டுமர மீனவர்கள் பேசுகிறார்கள், நான் பேசவில்லை [illegible] அவர்கள் பேசுவது நியாயமாகக்கூட படுகிறது. [illegible] மார்ச் 1-ஆம் தேதிக்குப் பிறகு நடைமுறைப்படுத்[illegible]களானால் நான் மெத்த வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அமல்படுத்துவார்களோ, இல்லையோ, சந்தேகம்தான். ஏனென்றால், ஏற்கனவே ஒரு சட்டத்தை நீங்கள் [illegible] வந்திருக்கிறீர்கள். Madres City P lice Act, Tamil Nadu District Police a d Tamil Nadu Madras District Police Ac. [illegible] அசெம்பளியில் பாஸ் பண்ணினது 13-5-1981-ல். ஆனால், [illegible] சட்டத்தை நடைமுறைப்படுத்துகிறார்களா இப்போது? [illegible] நடைமுறைப்படுத்தியிருந்தால், எவ்வளவு பேர்கள் கைதாகியிருப்பார்கள் உங்கள் கட்சிக்காரர்களே. ரெம்பப் பேர்கள் [illegible] யிருப்பார்களே. போஸ்டரைச் சுவற்றிலேயே ஒட்டக் [illegible] எழுதக்கூடாது. ஆனால் நீங்கள் போடும் போஸ்டர்கள் [illegible] பெரிய பெரிய போஸ்டர்கள். 1981-ஆம் ஆண்டிலே அப்படிப்பட்ட சட்டத்தை இயற்றிவிட்டு [illegible] இன்னும் [illegible] நடத்தவில்லை.

இணைந்து கொண்டு ஏகபோக கம்பெனிகளாக இருக்கக்கூடிய
சீமென்ஸ் கம்பெனி, கப்பலிலே மீன் பிடிக்கின்ற கம்பெனியை
எதிர்த்துப் போராடக்கூடிய ஒரு சூழ்நிலை நாட்டிலே
ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு கட்டுமர மீனவர்களை எடுத்துக்
கொண்டால் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
மீனவ நண்பனாக நடித்திருக்கிறார்கள். படகோட்டி என்ற
படத்திலே நடித்திருக்கிறார்கள். அந்தக் கதைகளிலே எல்லாம்
பல்வேறு கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள். இன்றைக்கு
ஆட்சியிலே அமர்ந்திருக்கக்கூடியவர்கள் இந்தச் சட்டத்தைக்
கொண்டு வருவது இந்த மக்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும்
கூட இந்தச் சட்டத்தினுடைய காரண காரியங்கள் நிறைவேற்றப்
படவேண்டுமென்று சொன்னால் இன்றைக்கு குறிப்பாக
கட்டுமர மீனவர்களுடைய வாழ்க்கை மிகவும் துன்பகர
மான ஒரு சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஏன்
என்றால், இந்த விசைப் படகுகளின் மூலம் மீன் பிடிப்பதன் மூலம்
இப்போது நம்முடைய தமிழகத்தினுடைய கடற்கரையில்
இருக்கக்கூடிய கட்டுமர மீனவர்கள் மீன் பிடிக்கக்கூடிய அந்த
சிறிய மீன்களுடைய கரு அழிக்கப்படுகிற ஒரு உண்மை
இன்றைக்கு நாட்டிலே சொல்லப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்
லாமல் இந்த கப்பல் மூலம் மீன் பிடிப்பதன் மூலம் நம்முடைய
கடலிலே இருக்ககூடிய வளமான மீன்கள் கூட வேறு கடல்
களுக்குச் சென்றுவிடுகிறது என்ற ஒரு கருத்துக்கூட இன்றைக்கு
எடுத்துச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில்
ஒரு பக்கம் தொழில் அழிக்கப்படுகிறது. இன்னொரு பக்கத்தில்
இவர்கள் அந்தக் கட்டுமரத்தின் மூலம் பழைய முறையில் இன்
றைக்கு மீன் பிடிக்க செல்ல முடியாத சூழ்நிலையில் விசைப்
படகுகளில் போட்டி போட்டுக்கொண்டு வருகிறார்கள். குறிப்
பாக என்னுடைய நெல்லை மாவட்டத்தில் 2, 3 இடங்களில்
தொடர்ந்து துப்பாக்கிச்சூடுகளும், கலவரங்களும் ஏற்பட்டிருக்
கிறது என்று சொன்னால்—அது ஒருபுறம் நாட்டுப்படகு மீனவர்
களுக்கும், விசைப்படகு மீனவர்களுக்கும் என்று சொன்னாலும்
கூட—அண்டை நாடுகளைச் சேர்ந்தவர்கள்கூட மீனவர்களை
சுடுகின்ற காட்சியினை, அவர்களைக் கொல்லுகின்ற காட்சி
யினை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட
பாதுகாப்புகூட இன்றைக்கு தமிழக மீனவர்களுக்கு கிடையாது.
இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய ஏறந்தாழ ஆயிரம்
கிலோ மீட்டருக்கு மிகப் பெரிய கடற்கரையில் இந்த மீன்
பிடிப்புத் தொழில் இருக்கிறது. இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்
கூடிய இந்தக்கட்டுமர மீனவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக
பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்று நாம் கேட்கிறபோது அவர்
கள் செய்கின்ற தொழிலுக்கு ஒரு உத்தரவாதத்தை ஏற்படுத்த
வேண்டும். குறிப்பாக இன்றைக்கு இந்த கட்டுமர மீனவர்கள்
விசைப் படகுகள் மூலமாக இரால் போன்ற அந்நியச் செலா
வணியை ஈட்டித்தருகின்ற அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும்
அவைகளையெல்லாம் வாங்கி மிகப் பெரிய லாபத்தை
சம்பாதித்துக்கொண்டு இருப்பவர்கள் இந்த நாட்டிலே உள்ள
பெரும் பணக்காரர்கள்தான். அந்தத் தொழிலைக்கூட அரசாங்கம்
ஏற்று நடத்தவேண்டுமென்று, இந்த மன்றத்தில் கோரிக்கைகள்

எழுப்பப்பட்டிருக்கின்றன. அதேபோல், கட்டுமர மீனவர்கள் பிடிக்கக்கூடிய சிறிய மீன்கள் இன்றைக்கு கருவாடாக மாற்றப்பட்டு அவைகளில்கூட கொள்ளை அடிக்கின்ற கட்டமாக இன்றைக்கு பெரும் பணக்காரர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை மாற்றி இன்றைக்கு இந்த கட்டுமரத் தொழிலாளர்கள் வருடத்தில் 5 மாதங்கள் செய்கின்ற அந்தத் தொழில் நேரம் போக மீதியிருக்கக்கூடிய காலத்தில் இந்த கருவாடு போன்ற பதப்படுத்தப்பட்ட அந்தப் பொருள்களை, மீன்களை அவர்கள் விற்பனை செய்வதற்கு, நிரந்தரமாக ஒரு சந்தையினைக் கொண்டுவருவதற்கான ஏற்பாட்டையும் இந்த அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கத்திலே கூட மீனளத் துறையின் மூலமாக மீன்பிடி தொழிலாளர்களிடையே ஏற்படும் தகராறுகளை—கட்டுமர மீன்பிடி தொழிலாளர்களுக்கும், விசைப்படகு மீன்பிடி தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்படும் தகராறுகளை—தீர்ப்பதற்காக பல்வேறு அமைப்புகள் இருக்கின்றன. ஆனால் அவைகள் கூட ஒழுங்கான முறையில், நியாயமான முறையில் செயல்படாமல், வசதி படைத்த மீன்பிடி தொழிலாளர்களுக்குச் சாதகமாக அல்லது அதன் சொந்தக்காரர்களின் ஆதிக்கத்திற்குச் சார்பாக செயல்பட்டு வருகின்றன. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

காலை 5 மணிக்கு விசைப்படகு புறப்பட்டு, 9 மணிக்கு கரை வந்து சேர வேண்டும் என்று கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டம் வரவேற்கத்தக்கதாகும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆனால் அவைகள் கடலில் எப்படிச் செயல்படும் என்பதற்கு வழிவகைகள் எதுவும் சொல்லப்பட வில்லை. கட்டுமர மீனவர்களின் நலனைப் பாதுகாக்கவும், அந்தத் தொழிலாளர்களிடையே ஏற்படும் தகராறுகளைத் தவிர்க்கவும், இந்தச் சட்டம் சரியான முறையில் நிறைவேற்றப்படவும், ஒரு தனி காவல்துறை அமைத்தால் நன்றாக இருக்கும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போலவே கட்டுமர மீனவர்கள் கடலில் சென்று பல்வேறு காரணங்களால் கரை திரும்புவது இல்லை. அவர்கள் கடலிலேயே இயற்கையின் சீற்றத்தின் காரணமாக, புயல் காரணமாக இறந்து விடுகிறார்கள். ''கரைமேல் பிறக்க வைத்தான்'' தண்ணீரில் மிதக்க விட்டான்' என்று முதலமைச்சர் அவர்கள் கூட 'படகோட்டி' என்ற படத்தில் பாடியிருக்கிறார்கள். அப்படி தண்ணீரில் மிதக்கக்கூடிய அந்த மக்களுக்கு அரசு ஊழியர்கள் பணிக் காலத்தில் இறந்து விட்டால், அவர்களுக்கு 10,000 ரூபாய் அளிப்பதுபோல், இந்தக் கட்டுமர மீனவர்கள் குடும்பத்தாருக்கும் 10,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்கிற வகையில் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறால் மீன்கள் கிடைக்காத நிலையில் பெரிய மீன்கள் பிடிப்பதற்கான பிரத்தியேக பெருவலைகள்—ஆழ்கடலில் சென்று பிடிக்கத்தக்க அளவில் உள்ள வலைகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இந்த வலைகளை அவர்களுக்குக் கிடைக்கும்படி வழி செய்தால் ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து வலைகளை வாங்கி மீனவர்களுக்குக் கொடுத்தால் வசதியாக இருக்கும். மேலும் இந்த மீனவர்களுக்குத் தற்போது கிடைக்கும் வருமானம் மிகவும் குறைவு. அவர்களுக்கு வேலைவாய்ப்பும் 5 மாதங்களுக்குத்தான் இருக்கின்றது. எனவே அவர்கள் ஆழ்கடலில் சென்று மீன் பிடிப்பதற்கும், அவர்களுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கும் வழி செய்யவேண்டும். தற்போதுள்ள உணவு நிலையின் காரணமாக, அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இந்த மீன் உணவு தாராளமாகக் கிடைக்கின்ற அளவுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தால் உசிதமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு மீனவத் தொழிலாளர்கள் பயன்படுத்துகின்ற இன்னொரு வலை, அந்த வலையைப் பின்னுவதற்கு அவர்களுக்கு நூல் மானிய விலையில் முன்பு வழங்கி வந்தார்கள். இப்போது அவ்வாறு வழங்குவதில்லை. எனவே வசதி இல்லாத மீனவர்களுக்கு இந்த வலையைப் பின்னுகின்ற நூலை மானிய விலையில் கொடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த மீனவர்கள் கடலிலே செல்லுகின்றபோது அவர்களுக்கு ஆபத்து வருகின்ற நேரத்திலே, கடலில் உள்ள நீண்ட தூரம் போகின்ற நேரங்களில், பல்வேறு சங்கடங்கள் ஏற்படுகின்றன. கடல் கொந்தளிப்பின் காரணமாக காணாமல் போய்விடும் நிலை இருக்கின்றது. அப்படி அவர்கள் இறந்து போனால் 5,000 ரூபாய் கொடுக்கும் நிலை தற்போது இருக்கிறது. அதை 10,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது கட்டுமரங்கள், தோணிகள் வள்ளங்கள் ஆகியவற்றின் விலை மிகவும் பயங்கரமாக உயர்ந்துகொண்டிருக்கிறது. மீனவர்கள் அதை வாங்கும் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட கட்டுமரம் தோணிகள் வள்ளங்கள் வாங்குவதற்கு அரசு மானியம் வழங்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

மேலும், நம்முடைய அரசு ஒரு ஹெலிகாப்டர் வாங்கி இருக்கின்றது. முன்பெல்லாம் மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது காணாமல் போனால் கண்டுபிடிக்க இயலாமல் இருந்தது. இப்போது இந்த ஹெலிகாப்டர் வந்த காரணத்தினால் இந்த மீனவர்களைக் கண்டு பிடிப்பதற்கு இதை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த சட்ட திருத்தத்தை கொண்டுவருகின்ற இந்த நேரத்தில் இந்தத் தொழிலிலே ஈடுபடுகின்ற கட்டுமரத் தொழிலாளர்கள் தாங்கள் பிடித்த மீன்களை ஒரு பகுதியினர் சைக்கிள்களிலே ஏற்றிக் கொண்டு 20 மைல்கள், 30 மைல்கள் ஓட்டிச் சென்று விற்கும் நிலைஇருக்கின்றது. அந்தச் சமயங்களிலே அவர்கள் விபத்துக்குள்ளாகும் நிலை ஏற்பட்டு, சில சமயங்களில் இறந்து போகும் நிலையும் இருக்கின்றது. எனவே இந்தமாதிரி இறந்து போகின்றவர்களுக்கும் அரசு 5,00 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு கட்டுமரத் தொழிலாளர்களுக்காகக் கொண்டு வந்திருக்கின்ற இந்த சட்டத் திருத்தத்தை வரவேற்று, என்னுடைய கருத்தை முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.50)

*திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற தமிழகத்திலே இருக்கக்கூடிய கட்டுமர மீனவர்களைக் காப்பாற்றுவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்த மசோதாவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். இப்படிப்பட்ட சட்டங்கள் ஏன் கொண்டுவரப்படவேண்டும், எந்தக் காலச் சூழ்நிலையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று எண்ணிப் பார்க்கிறபோது இன்றைக்கு உலகத்திலே கடல் வளத்தை பயன்படுத்துகின்ற நாடுகள் முன்னேறியிருக்கின்ற நாடுகள் ஒரு பக்கம் இருந்தாலும். இன்றைக்கு கடல் வளத்திற்கு உலகத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய விஞ்ஞானத்தின் மூலம் மிகப் பெரிய அழிவு ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்து மகாக் கடலிலே இருக்கக்கூடிய மீன் வளம்தான் உலகத்திலே மிகச் சிறந்த மீன் வளம் என்று மட்டுமல்லாமல், ஆரோக்கியமான மீன் வளமாக இருக்கிறது என்று அறிஞர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த அளவிற்கு இருக்கின்ற காலச் சூழ்நிலைகளில் இன்றைக்கு உலகத்திலே இருக்கக்கூடிய ஏகபோக கம்பெனி, குறிப்பாக சீமென்ஸ் கம்பெனி என்று சொல்லக்கூடிய கம்பெனி இந்துமாக் கடலிலே மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்று இன்றைக்கு கப்பல் மூலமாக மீன் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போன்று ஏகபோக கம்பெனியாக இருக்கக்கூடிய டாடா கூட பிர்லா கூட கப்பல் மூலமாகக் கடலிலே மீன் பிடிக்கின்ற தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தொன்றுதொட்டகாலமாக கடலிலேயிருந்து மீன் பிடித்து வாழ்வதையே தொழிலாகக் கொண்டிருக்கிற மீனவர்கள், மரக்கலங்களைக் கட்டி மீன் பிடித்த காலம் போய் இன்றைக்கு விசைப் படகுகளை இயக்குகின்ற இந்த விஞ்ஞான உலகத்திலே அடிப்படையிலே இருக்கின்ற கட்டுமரத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கல் ஒரு பக்கம் இருந்தாலும் இன்றைக்கு இவர்கள் இருவரு

[திரு. மு. ப்பாதுரை] [1983 பிப்ரவரி 10

இன்றைக்கு விசைப்படகுகள் பல நடிக, நடிகைகளுக்குச் சொந்தமாக இருக்கிறது. எப்படி, ரிக்ஷா ஓட்டுநருக்குச் சொந்தமாக இல்லையோ நிலம் எப்படி உழுபவனுக்குச் சொந்தமாக இல்லையோ அதைப் போலவே இந்த விசைப்படகுகளும் ஓட்டுபவர்களுக்குச் சொந்தமில்லாமல், நடிக நடிகைகளுக்குச் சொந்தமாக இருக்கின்றன. இது அரசுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க, மீனவர்களுக்குக் கட்டுமரம் வாங்க, நாட்டுப் படகுகள் வாங்க அரசாங்கம் மானியம் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கும் 1983ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப்படுத்துதல் சட்ட முன்வடிவு மீது நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். பல ஆண்டுக் காலமாக ஏழை மீனவர்கள் இந்த அரசுக்குக் கொடுத்து வந்த கோரிக்கை இன்றைய தினம் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்பதை நினைக்கிறபோது, பரம்பரை பரம்பரையாக அந்த மீன் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்ற ஏழை தொழிலாளர்கள் சார்பாக மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசுக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் விசைப்படகு தொழிலாளர்களுக்கு தொழில் பாதுகாப்பும், அதே தருணத்தில் பரம்பரையாக நாட்டுப்படகு, கட்டுமரம், தோணி போன்ற உபகரணங்களை வைத்துக்கொண்டு தொழில் செய்கின்ற ஏழை மீனவர்களுக்கு இது ஒரு கலங்கரை விளக்கமாக விளங்குகிறது என்பதை நான் கூறிக் கொள்கிறேன்.

விசைப்படகுத் தொழிலாளர்களுக்கும், நாட்டுப்படகு தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்படும் தகராறுகள், அடிக்கடி ஏற்படும் எல்லை பிரச்னை மற்றும் ஒருவர் பிடிக்கும் இடத்தில் இன்னொருவர் வந்து தொந்தரவு கொடுக்கும் நிலை ஏற்பட்டு, அதனால் மற்றவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலைமைகள் இருந்து வருகின்றன. பல ஆண்டுக்காலமாக நாட்டில் உள்ள நிலைமை என்னவென்றால், நாட்டுப் பஞ்சாயத்துக்காரர்கள் எந்தெந்த இடத்தில் யார் யார் மீன்பிடிக்க வேண்டும் என்று சொல்கிறார்களோ அந்தந்த இடங்களில்தான் மீன் பிடிக்காலாம். அத்தகைய செல்வாக்கு படைத்த ஒரு சிலர் தங்களுடைய நிலையை உயர்த்திக் கொள்ள இந்தமாதிரியான முறைகளில் செய்து வந்தது நமக்குத் தெரியும். அந்த பாரம்பரியமிக்க நிலையை மாற்றியமைக்க, அதைத் தூக்கி எறிய இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இரவு நேரங்களில் நம்முடைய பகுதிகளில் எல்லாம் இலங்கை விசைப்படகுகள் வந்து மீன் பிடிப்பதால் கடத்தல் போன்ற தொழில்கள் மிக அதிகமாக நடந்து வந்தது.

1983 பிப்ரவரி 10] [திரு. வ. சத்தி மூர்த்தி]

(பிற்பகல் 1.00).

இந்தச் சட்டத்தின் மூலம் காலை 5 மணிக்குப் பிற்பாடுதான் ஒரு விசைப்படகு மீன்பிடிக்கச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால் நடுநிசியில் இனிமேல் கடத்தல் தொழில் நடத்தமுடியாது. அப்படி நடக்குமானால் அது மீனளத்துறையின் ஆய்வாளர்கள் மூலம்தான் நடக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைய தினம் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்தில் புதிதாக ஒவ்வொரு விசைப்படகுகாரர்களும் தங்களுடைய படகுகளை ஒரு குறிப்பிட்ட காலத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருக்கிறது. அதன் காரணமாக பல ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அரசின் கடன் உதவி பெற்று அல்லது இந்த மீனளத்துறை கழகத்தின் மூலம் கடன் உதவி பெற்று, அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் பல பல ஊர்களுக்கு அந்தப் படகுகளைக் கொண்டு சென்றவர்கள் எல்லாம் படகுகளை பதிவு செய்து கொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதால், அவர்கள் எப்படியும் இங்கே வந்து பதிவு செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக இந்தக் கழகத்திற்கு வராமல் இருந்த பல கோடி ரூபாய் திரும்ப வரக்கூடிய ஒரு சூழ்நிலை, ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதால் நான் இதை வரவேற்கிறேன்.

அது மட்டுமல்ல, இந்தச் சட்டத்தின் எல்லா அம்சங்களும் வரவேற்கக்கூடியவையாக இருக்கின்ற நிலையில் ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்த கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பிட்ட நேரத்தில் மீன்பிடிக்கச் செல்வதற்கு இருதரப்பினருக்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் நாட்டுப் படகுக்காரர்கள் கரையோரமாக மீன்பிடிக்க வலை போட்டிருப்பார்கள்; விசைப்படகுகாரர்கள் அந்த வழியாகச் செல்லும்போது அந்த விலை உயர்ந்த வலைகள் வெட்டி சேதப்படுத்தப்படுமானால், அதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு, நாட்டுப்படகுக்காரர்கள் இழப்பை ஈடு செய்ய இந்தச் சட்டத்தில் ஏதாவது ஒரு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டுப்படகுத் தொழிலாளர்களும் விசைப்படகுத் தொழிலாளர்களும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் தொழில் செய்ய வேண்டும் என்று இந்த சட்ட முன்வடிவில் கூறப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் அரசு நினைத்தால் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஒப்ப இதைத் தளர்த்தவும் ஏற்பாடு செய்யலாம் என்ற அம்சம் வரவேற்கத்தக்கது. ஏனென்றால் இராமேஸ்வரம் போன்ற தீவுகளில் ஒரே தொழிலாளி நாட்டுப்படகும் வைத்து தொழில் நடத்துகிறான், விசைப்படகு வைத்தும் நடத்து கிறான், இரண்டு தொழிலும் ஒருவன் செய்கிறான். அது

மட்டுமல்ல, இராமேஸ்வரம் தீவில் நாட்டுப்படகுக்காரர்களுக்கும் கும் விசைப்படகுக்காரர்களுக்கும் எந்த நேரத்திலும் தாவா வந்த தில்லை. அவர்கள் ஒத்துப்போக தயாராக இருக்கிறார்கள். ப்படிப்பட்ட இடங்களில் அவர்களுக்கு சட்டத்திலிருந்து விதி விலக்குக் கொடுக்க இதிலே ஒரு 'சப் செக்ஷன்' வந்திருப்பதை வரவேற்று, இந்தச் சட்டம் மிக அவசியமானது தகுந்த நேரத் தில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டி, இந்தச் சட்டத்தை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இன்று இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப்படுத்தும் சட்டத்திற்கு ஆதரவு தருகின்ற முறையில் இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை எடுத்து வைததற்காக என்னுடைய நன்றியை முதற்கண் தெரி வித்துக்கொள்கிறேன்.

நம்முடைய கடல் பகுதியிலே கட்டுமரக்காரர்களும் மீன் பிடிக்கிறார்கள் ; விசைப்படகுக்காரர்களும் மீன் பிடிக்கிறார்கள். அவர்கள் சில குறிப்பிட்ட இடங்களிலே, குறிப்பிட்ட நேரங் களிலே மீன்பிடிக்க வேண்டுமென்ற நிலைமைகள் எல்லாம் இருந் தாலும் தமிழகத்தின் கடற்கரையோரமாக உள்ள பல்வேறு பகுதி களில் ஆங்காங்கே அவ்வப்போது சண்டை சச்சரவுகள், மாச் சரியங்கள் ஏற்பட்டு, அதன் காரணமாக பொருள் இழப்பு ஏற் பட்டிருப்பது மட்டுமல்லாமல் உயிரிழப்பும் ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு சட் டம் மிக மிக அவசியம் என்று உணர்ந்து, இந்த அரசு மேற் கொண்ட நடவடிக்கையின் பயனாக இப்போது இந்தச் சட்டம் இந்த அவையிலே வந்திருக்கிறது ; இப்படிப்பட்ட ஒரு பாது காப்பு நடவடிக்கை தேவை என்பதை நான் பல்வேறு விவாதங் களின்போது சுட்டிக் காட்டியிருக்கிறேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏற்கெனவே இப்படிப்பட்ட தகராறுகள் ஏற்படும்போதெல் லாம் அந்தந்த மாவட்டத்தினுடைய கடற்கரை பகுதியிலே கட்டுமர மீனவர்களுக்கும் விசைப்படகு மீனவர்களுக்கும் தகராறு ஏற்படும்போதெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரும் காவல் துறையைச் சேர்ந்தவர்களும் மீனளத் துறையைச் சேர்ந்தவர் களும் அவர்களை சமாதானம் செய்வதும், அந்த அடிப்படை யிலே இரு சாராரும் சமரசப்படுவதும், சமரச உடன்படிக்கை ஏற்படுவதும் வழக்கமாக இருந்தது.

ஆனால் அப்படிப்பட்ட உடன்படிக்கைகளை மீறுகிறபோது எந்த அடிப்படையிலே அவைகளை மீறுகிறவர்களுக்கு தண்டனை கொடுப்பதோ அல்லது தடுத்து நிறுத்துவதோ என்பதற்கு என்ன வழி வகை என்கிற முறையைப் பார்கிற போது, இதற்கு சட்டம் என்ற ஒன்று இல்லாத காரணத் தாலேயே, அந்த உடன்படிக்கைகளின் அடிப்படையிலே வழக்கு மன்றங்களுக்குச் செல்லவோ, வழக்காடவோ வழி வகைகள் இல்லாதன் காரணமாகத்தான், இந்த நிலைகள் எல்லாம் இருக்கின்றன என்பது தெரியவந்தது.

ஆகவே அப்படிப்பட்ட உடன்படிக்கைகளை நாணயமாக, நேர்மையாக மதிப்பு அளித்து நடக்கின்ற இடங்களைத் தவிர அல்லது வேண்டும் என்றே மீறவேண்டும் என்று எண்ணுகிற இடங்களில் சச்சரவுகள் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டுதான் இருந்தன. ஆகவே அந்த வகையிலே தான் அவைகளை முறைப்படுத்துவதற்கு சட்டம் என்ற ஒன்று வந்து, வழக்கு மன்றங்கள் மூலமாக தண்டனை அளிக்கின்ற, விதிகள் சேர்க்கப்பட்டால்தான் இதிலே தன் னிச்சைப்படி எதையும் செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும், கலாம் விளைவிப்பவர்களுக்கும் ஒரு அச்சம் ஏற்படும் என்கிற காரணத்தாலே ஒரு சட்டத்தைக் கொண்டு வர நாம் முயன்றோம்.

இந்தச் சட்டத்தை நாம் உருவாக்கி மத்திய அரசி னுடைய அனுமதிக்காக அனுப்பிய காலத்தில், மத்திய அரசு நாங்களே அகில இந்தியாவிற்கும் பொருந்தக் கூடிய வகையில் ஒரு மாற்றுச் சட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அந்தச் சட்டத்தை நாங்கள் அனுப்பி வைக்கிறோம், அதற்குப் பிறகு மாநிலங்கள் தங்களுடைய சட்டத்தை உருவாக்கலாம் என்று சொன்னதன் பேரில், மத்திய அரசு, அந்த மாதிரி சட்டத்தை அனுப்பிவைத்து, அதற்குப் பிறகு சில பல மாற்றங்களோடு, இந்த தமிழகத்தைப் பொறுத்தவரையி லும் ஒரு சட்டத்தை நாம் உருவாக்கி, மத்திய அரசினுடைய அனுமதி பெறுவதற்கு அனுப்பி, மறுபடியும் மத்திய அரசி னுடைய அனுமதி பெற்றதற்குப் பிறகு, இங்கே சட்டமாகக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் இந்தச் சட்டத்தை ஆதரித்தாலும், இப்போது ஏன் கொண்டு வந்தீர்கள், இவ்வளவு நாள் ஏன் கொண்டு வர வில்லை என்ற வினாவை எழுப்பி, அதற்கு அவரே ஒரு காரணமும் கற்பித்தார்கள். திருச்செந்தூர் தேர்தல் வந்திருப்பதன் காரணமாக, இவ்வளவு விரைவிலே கொண்டு வருகிறீர்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். திருச் செந்தூரைப் பொறுத்தவரையில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கவலையே கிடையாது.

செல்வத்தைப் பெருக்கவும் வெளிநாட்டுச் செலாவாணியை ஈட்டவும் வேண்டும் என்றால் இன்னும் அதிகமான கூறுபாடுகள் வேண்டும். இப்போது ஆழ் கடலிலே போய் மீன்களை அரிப்பதற்குரிய வசதி வாய்ப்புக்கள் இல்லாததன் காரணத்தால் தைவான் நாட்டுக் கப்பல்கள் நம்முடைய கடற்கரைப் பகுதியிலே வந்து மீன்களை அரித்துக்கொண்டு சென்று விடுகிறார்கள். ஆகவே நமக்கு பெரிய கப்பல்கள் வேண்டும் என்பதை நாம் வற்புறுத்துகிறோம். இப்போது கூட நாம் 2 ட்ராலர்கள் வைத்துக்கொண்டிருக்கிறோம். அதனை விசாகப்பட்டினத்திலே ஓட்டுகிறோம். 15 நாட்களுக்கு ஒரு தடவை போய்விட்டு வருகின்றபோது செலவு எல்லாம் போக ஒரு இலட்சமோ இரண்டு லட்சமோ அல்லது இரண்டரை லட்சமோ நமக்கு லாபம் சம்பாதித்துத் தரக்கூடிய அளவிற்கு தான் இருக்கின்றது. அது ஆழ் கடலுக்குச் சென்று விட்டு வருகின்றது. தைவான் நாட்டுக் கப்பல்களை நாம் பிடித்தபோது அந்தக் கப்பலிலே இருந்த மீன்களை எல்லாம் ஏலத்திலே விட்டபோது பல இலட்சக்கணக்கான ரூபாய்க்கு ஏலம் போகின்ற நிலைமை இருந்தது. ஆகவே ஆழ் கடலிலே உள்ள மீனை வேறு எந்த நாட்டாரும் அரிக்காமல் நாமே அரிக்கவேண்டும் என்று சொன்னால் பெரும் கப்பல்களும், ட்ராலர்களும் வளரவேண்டும். விசைப்படகும் வளரவேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தெரிவித்த கருத்திற்கிணங்க கட்டுமரக்காரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்றவகையிலே கடலிலே 3 மைல் அளவிற்குத் தான் அவர்கள் சென்று மீன்களை அரித்துவருவதற்குரிய வாய்ப்பும் வசதியும் ஏற்பட முடியும் என்ற காரணத்தால்....

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, 3 மைல் தூரம் என்று சொல்கிறார்கள். கடலிலே எப்படி அதை பிக்ஸ் பண்ணப் போகிறீர்கள். அதற்கு என்ன வழிமுறைகளை வைத்திருக்கிறீர்கள்? அதுபற்றிய நடைமுறை என்ன?.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சம் திங் இஸ் பெட்டர் தேன் நத்திங் என்று சொல்வார்களே அதுபோன்று நம்முடைய நிலைமையினைப் பார்க்கவேண்டும். மேலைநாடுகளிலே அதற்கான தன்மைகளிலே குறிப்பிடப்படுகின்ற அளவுக்கு நிலைமைகள் இருக்கும். அமெரிக்காவிலே இருந்து இங்கிலாந்து வரையில் கேபிள் கூட செய்து முடித்துவிட்டார்கள். ஆகவே அதுபோன்ற தன்மைகள் இங்கேயும் இருந்தால் நாமும் கடலிலே உரிய அடையாளங்களைக் காட்ட முடியும். ஆனால் அதற்கெல்லாம் ரொம்ப நாட்கள் ஆகும். அதுவரை நாமெல்லாம் இருப்போமா இல்லையோ என்பது தெரியாது. எனவே அப்படிப்பட்ட கருவிகள் எல்லாம் வருகின்ற காலத்திலே வேண்டுமானால் எல்லைகள் போட முடியும். ஆனால் இப்போது கூடுமானவரையில் தவறு செய்கின்றபோது அதனைத்

135982

தடுக்கின்ற வகையிலே சட்டம் வந்து இருக்கும். தவறு செய்பவர்களைத் தண்டிக்க இந்தச் சட்டத்திலே உள்ள குறிப்புகள் பயன்படும் என்று நாம் வைத்திருக்கிறோம். ஆகவே கட்டுமரக்காரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதால் விசை படகுக்காரர்கள் இரவிலே போகக்கூடாது, காலை 5 மணியிலிருந்து இரவு 9 மணி வரை வேண்டுமானால் போகலாம் என்று வைத்திருக்கிறோம். அப்படிச் சொன்னதற்குக் காரணம் இரவிலே கட்டுமரக்காரர்கள் சென்று இறால் போன்ற மீன்களை அதிகம் அரித்து அதன்மூலம் கட்டுமரக்காரர்கள் பலனடைய வேண்டும் என்பதற்காகத்தான் அவ்வாறு வைத்திருக்கிறோம். இப்போது அந்தப் பிரச்சினையில்தான் விசைப்படகுக்காரர்கள் ரிட்டு போட்டிருக்கிறார்கள். இரவிலேதான் அதிகமான மீன்கள் கிடைக்கும், எனவே விசைப்படகுக்காரர்கள் போகக்கூடாது என்று சொல்வது தவறு என்று அவர்கள் மறுத்திருக்கிறார்கள். நீதிமன்றத்திலே ஒரு வழக்கு வந்தது.. நீதிபதி மோகன் அவர்கள் இடைக்கால ஏற்பாடாக, கன்னியாகுமரி, திருநெல்வேலி போன்ற பகுதிகள் பற்றித் தீர்ப்பளிக்கின்றபோது விசைப் படகுக்காரர்கள் இரவிலே 10 மணிக்குள்ளாகத் திரும்ப வேண்டும், காலை 5 மணிக்குமேல்தான் போகவேண்டும் என்று ஒரு தீர்ப்பினை வழங்கி இருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின் அடிப்படையில்தான் இந்த சட்டத்திலே நாம் அந்த விதிகளைக் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறோம். இந்த பிரிவுக்காகத்தான் ரிட்டுக்குப் போய் இருக்கிறார்கள். அந்த ஒரு பிரிவு இருக்கவேண்டும்.

ஆக அப்படி இருந்தால்தான் கட்டுமரக்காரர்கள் மீன் வலைகள் மற்றவைகள் அறுந்து விடுகிற காரணத்தால் ஏராளமான நட்டஈட்டை தாங்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். சில சமயங்களில் மார்ச்சரியம் காரணமாக தகராறு ஏற்பட்டு இரண்டு பேருக்கும் சேதம் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிறது. சட்டம் என்று இருந்தால் கூடுமானவரை அதைத் தடுத்து நிறுத்தலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது போல் சில பல எதிர்பாராத விளைவுகள் ஏற்படுமானால் அவைகளை பின்னாலே நாம் ஆராய்ந்து அதற்கு ஏற்றபடி நாம் சட்டத்தை திருத்தவோ அல்லது சில பல விதிகளை சேர்க்கவேண்டிய கட்டங்களைக்கூட எதிர்காலத்தில் வரக்கூடும். அந்த வகையில்தான் இந்தச் சட்டம் முறைப்படுத்துகின்ற வகையிலே இருக்கிறது. புதுக்கோட்டைப் பகுதியில் ஒரு வழக்கு வந்து நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பில் நாட்களாக பிரித்து வைத்துவிட்டார்கள். ஒரு குறிப்பிட்ட திங்கட்கிழமை, புதன் கிழமை, வெள்ளிக் கிழமை ஆகிய நாட்களில் தான் போக வேண்டும் மற்ற நாட்களில் கட்டுமரக்காரர்கள் போக வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். அதிலும், சங்கடங்கள் வருகிறது. தினமும் கட்டுமரக்காரர்கள் போக வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஏற்கெனவே, கட்டுமரக்காரர்கள் போனாலும் கூட ஒரு குறிப்பிட்ட நாளில் யாரும் போகக்கூடாது

அதனுடைய விளைவு என்ன என்பதிலே நாங்கள் உறுதியாகவும் இருக்கிறோம், நம்பிக்கையாகவும் இருக்கிறோம். ஆகவே, இந்த ஒரு சட்டத்தை நம்பித்தான் நாங்கள் போட்டிப்போடுகிற நிலைமையிலே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. 1980லே நடைபெற்ற பொது தேர்தலிலே கூட, மக்களுடைய அன்பையும், அரவணைப்பையும், ஆதரவையும் நன்மதிப்பையும் பெறமுடியும் என்ற முறையிலேதான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நம்பிக்கை வைத்திருந்தது. 4 இடங்களுக்கு மேல் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இடம் கிடைக்காது என்று சொன்ன நிலையிலேயும் கூட, மக்களுடைய அன்பைப் பெறுவதிலே வெற்றி பெற்றுத்தான் இருக்கிறோம்.

அதற்குப் பிறகு நடந்த பெரிய குளம் தேர்தலிலே, இப்படிப்பட்ட சட்டத்தை நம்பி நாங்கள் நிற்கவில்லை. அதே மாதிரி திருப்பத்தூரிலும் இப்படிப்பட்ட சட்டங்களை நம்பித்தான் நாங்கள் ஆதரிக்கிறவர்கள் வெற்றி பெறுவார்கள் என்கிற நிலையில் இல்லை. இன்னமும் நான் சொல்ல விரும்புகிறேன், திருச்செந்தூர் தேர்தலினுடைய முடிவு இந்த அரசாங்கத்தினுடைய நிலையை எந்த அளவுக்கும் பாதிக்கக் கூடிய ஒரு முடிவாக அமையாது. அதன் விளைவு எப்படி இருந்தாலும் கூட, இந்த அரசாங்கத்தினுடைய அமைப்பை யா ஆட்சியையோ மாற்றி அமைக்கக்கூடிய நிலைமையில் இல்லை. ஆகவே, திருச்செந்தூரிலே இருக்கிற மக்களுடைய அன்பும் ஆதரவும் அரவணைப்பும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நிரந்தரமாக இருக்கிறது, உறுதியாக இருக்கிறது என்கிற நிலமையிலேதான் இருக்கிறோம். அப்படியே வைத்துக் கொண்டாலும் கூட 1 லட்சத்து சில்லரை வாக்களர் பெருமக்கள் அடங்கிய திருச்செந்தூர் தொகுதியில் ஒரு 10 ஆயிரம் சில்லரை எண்ணிக்கையில்தான் பரதவர்கள் இருக்கிறார்களே தவிர .... (குறுக்கீடு).

திரு. ப. பொன்னுரங்கம் : கட்டுமர மீனவர்களே கிட்டத்தட்ட 20 ஆயிரம் இருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்வேறு கணக்குகள் இருக்கின்றன. 10,000, 20,000 என்று. 20 ஆயிரம் என்றே வைத்துக் கொள்ளுங்கள். அந்த லட்சத்து சில்லரை வாக்காளர்கள் இருக்கும் பகுதியில் 20 ஆயிரம் வாக்களார்களுக்காக ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் எண்ணிக் கொண்டு வரவில்லை. ஆகவே, அப்போது மத்திய அரசு அனுமதித்திருக்குமேயானால், 80 ஆம் ஆண்டிலேயே இந்தச் சட்டம் வந்திருக்கும். அவர்களுடைய மாடலைப் பெற்று, அதைப் பார்த்து நாமும் அனுப்பி, அவர்கள் திருத்தம் சொல்லி, மறுபடியும்

நாம் அனுப்பி, அவர்கள் அனுமதித்தற்குப் பிறகு கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாத்தான் காலதாமதம் எற்பட்டது என்பதற்காக சொல்கிறேனே தவிர வேறு அல்ல.

(பிற்பகல் 1.10)

இந்த அரசு மக்களுடைய நலம் கருதி செய்கிற எந்த ஒரு சட்டத்திற்கும், மக்களுடைய அன்பும் ஆதரவும் கிடைத்துக் கொண்டேதான் இருக்கும். இனியும் கிடைத்துக் கொண்டுதான் இருக்கும். அந்த அடிப்படையில் இதற்கும் ஆதரவு கொடுத்தால், அது இயற்கையின்பாற்பட்டதே தவிர, மாறுபட்ட ஒன்று அல்ல. ஆனால் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். உடன்படிக்கைகளை மீறுவதை மாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டம் என்கிற வகையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபல தன்மைகளை எல்லாம் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். அந்த வகையிலே இந்தச் சட்டம் 3 மைல்களுக்குள்ளாக கட்டுமரக்காரர்கள் தங்களுடைய மீனை பிடிப்பதற்கு ஒரு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதுதான்.

ஆகவே விசைப் படகுக்காரர்களையோ, அல்லது ட்ராலர் ஓட்டுகின்றவர்களையோ, அல்லது பெருங்கப்பல்கள் உருவாக்கின்றவர்களையோ தடை செய்துவிட்டு அவர்களை எல்லாம் அழித்து ஒழித்துவிட்டு கட்டுமரக்காரர்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற கொள்கை இந்திய அரசுக்கும் இல்லை, மாநில அரசுக்கும் இல்லை. இன்றைக்குத் தமிழகத்தில் 33 ஆயிரம் சில்லறை கட்டுமரக்காரர்கள் இருக்கிறார்கள். 8 ஆயிரத்திற்கு மேற்பட்ட வள்ளம் ஓட்டுகின்றவர்கள் இருக்கிறார்கள். 3 ஆயிரத்துச் சில்லரை பேர் விசைப் படகுக்காரர்களாக இருக்கிறார்கள். நாளுக்கு நாள் விசைப் படகு உடையவர்களின் எண்ணிக்கை வளரும். இது இன்னும் வளரவேண்டும் என்றும் கட்டுமரத்தினை வைத்துக் கொண்டிருப்பவர்கள் என்றேனும் ஒரு காலத்தில் விசைப்படகுகளை ஓட்டுகின்ற அளவுக்கு வசதியும் வாய்ப்பும் தகுதியும் பெறுகின்ற சூழ்நிலை ஏற்படவேண்டும் என்பதுதான் நம்முடைய குறிப்பிட்ட நோக்கமாக இருக்கிறது. சாதாரணமாக நூல் ஆலை வந்ததற்குப் பிறகு கைத்தறியாளர்கள் பணிகள் கெட்டுவிடும் என்பதால் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று சொல்கிறோம். இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 30 இலட்சம் பேர் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய வாழ்க்கையினைப் பாதுகாக்கவேண்டிய நிலைமையில் நாம் சட்டங்கள் இயற்றவேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆனால் நாட்டில் மீன் வளம் அதிகமாகவேண்டும் என்ற நிலைமையில் நம்முடைய இரண்டு கடலிலே அதாவது வங்காள விரிகுடா கடலிலேயும், இந்துமகாசமுத்திரத்திலேயும், பக்கத்திலே அரபுக் கடலிலும் மீன்களை அரித்து அந்த

என்று சொன்னால், 3 மைல், 4 மைல் தூரம் இவர்கள் போகக்
கூடும். அதற்கு அப்பால் இருக்கின்ற மீன்களை அரிக்க முடியாத
ஒரு வாய்ப்பு ஏற்படுத்தாமல் நாம் சில நாட்களில் தடை செய்
தால் அதன் காரணமாக நாட்டுக்கும் நஷ்டம், பொது செல்வத்
துக்கும் நஷ்டம். ஆகவே, சட்டத்தின் மூலமாக தகராறைத்
தீர்க்க வேண்டும், அவர்களுக்கு ஏற்படுகின்ற உடன்படிக்கை
அடிப்படையில் தீர்க்க வேண்டும். ஆகவே, இது எல்லாவற்றை
யும் கவனித்து ஒரு முகமாக எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்
டியதாக இன்றைக்கு அமைய வேண்டும் என்பதற்காக இந்த
பல்வேறு தீர்ப்புகள், பல்வேறு உடன்படிக்கைகள், பல்வேறு கடற்
கரை பகுதியில் ஏற்பட்டிருக்கக்கூடிய முடிவுகள் ஆகியவற்றை
வைத்து ஓரளவு இந்தச் சட்டத்தை உருவாக்கி வந்து இருக்கி
றோம். இந்தச் சட்டத்தில் சில பல இடர்பாடுகளை மாண்புமிகு
உறுப்பினர்கள் சிலர் எடுத்துச் சொன்னார்கள். அப்படி இருக்கு
மானால் அதை மறுபடியும் ஆராய்ந்து அது தவிர்க்கவேண்டிய
அவசியம் ஏற்படுமானாலும்கூட திருத்தம் கொண்டுவந்து செயல்
படுத்தலாம். இதன் முக்கியமான நோக்கம் பாதுகாப்பு அளிக்கப்
படவேண்டியவர்கள் கட்டுமர மீனவர்கள். அவர்களுக்கு எந்த
எந்த வகையில் பாதுகாப்பு அளிக்க முடியுமோ அந்த வகையில்
பாதுகாப்பு அளிப்பது. பாதுகாப்பு அளித்து இந்த மீன் பிடித்
தலை ஒழுங்குபடுத்துகிறது தவிர, விசைப்படகுகாரர்களை
ஒழிக்கவேண்டும் என்பதோ அவர்களுக்கு வாய்ப்பு வசதி அளித்து
அதற்கான வாய்ப்பு வசதி பயன்படுத்தவேண்டுமே தவிர கட்டு
மர மீனவர்கள் பிடிப்பதற்காக இருக்கும் இடத்தை பயன்படுத்தி
அதன் மூலமாக சுலபமாக சம்பாதிப்பதற்கு அவர்களுக்கு இடம்
கொடுக்கக்கூடாது என்பதுதான் இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்
கம். இதை பொதுவாக எல்லா உறுப்பினர்களும் ஆதரித்து,
இந்தச் சட்டம் தேவை என்று உணர்த்துகின்ற அத்தனை பேருக்
கும் நன்றி தெரிவித்துக்கொண்டு இந்தச்சட்டத்தை நிறைவேற்று
வோம்.

ஒரு கிளாஸ் நாம் சொல்லியிருக்கிறோம். நீங்கள் என்ன செய்
யப்போகிறீர்கள்என்று கேட்டதற்கு, நாங்கள் சட்டத்தைஇயற்று
கிறோம். இந்தத் தீர்ப்பு வரும் வரையில் இந்த ஒரு பகுதியை
நாம் நிறுத்தி வைக்கிறோம். தீர்ப்பு வந்த பிறகு தீர்ப்புக்கு
ஏற்றபடி தீர்ப்பு நமக்குச் சாதகமாக வந்தால் சட்ட விதியை
நாம் நடைமுறைப்படுத்தலாம். தீர்ப்பு வேறு விதமாக வரு
மானால் அப்பீலுக்கு போக வேண்டிய அவசியம் வந்தால் அப்பீ
லுக்குப் போகலாம். இல்லாவிட்டால் அதைத் திருத்த வேண்டிய
அவசியம் வந்தால் அதை திருத்திக்கொள்ளலாம். இந்தத் தீர்ப்
பிலே நீதிபதி அவர்கள் சட்டம் இயற்றுவதற்கு தடை செய்ய
வில்லை. மற்ற பிரிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தடை
செய்யவில்லை. அந்த நோக்கத்திலுடைய அடிப்படையில்தான்
இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை ஆதரித்த அத்தனைப்
பேருக்கும் மீண்டும் நன்றி தெரிவித்து இதை சட்டமாக ஆக்கித்
தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள
கேள்வி: "1983 ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப்படுத்
தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு
எண். 10/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்
றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்
துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 27 வரை அட்டவணை ஆகியவை பேரவை
யின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :
"1983 ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்ட
முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண்.
19/1983) நிறைவேற்றப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்
வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 1.20)

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறி
விப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுவில் எடுத்த முடிவு
களுக்கு இணங்க, பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு,
திருத்தியமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

11–2–1983 (வெள்ளிக்கிழமை)	அரசினர் சட்டமுன் வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.
	(மாலை பேரவைக்கூட்டம் இல்லை).
12–2–1983 (சனிக்கிழமை)	அரசினர் சட்ட முன் வடிவுகள்—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.

தக்கது என்பதை நான் இந்த அரசுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் தமிழகத்திலே இருக்கின்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விவசாயிகளுக்கு உதவிடுகிற முறையில் அவர்கள் உற்பத்தி செய்கிற விளைப் பொருட்களை அங்காடிகளுக்குக் கொண்டு சென்று நியாயமாக விற்க வேண்டும். விவசாயிகளுக்கு ஒரு பாதுகாப்பாக விளங்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் ஏற்படுத்திய நேரத்தில் அரசாங்கம் ஏற்படுத்தியது. சென்ற முறை கூட சொன்னேன். விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடமாகஇல்லாமல்இன்றையதினம் ஒழுங்கற்ற கூடங்களாக, மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் விளங்குகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களைவிட நன்றாக அறிந்திருப்பார்கள் என்பதிலே திடமான நம்பிக்கை இருக்கிறது. விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். பல்வேறு விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் தங்களுடைய பொருள்களை எடுத்துச்சென்றால் நியாயமான எடை கிடைப்பதில்லை. சென்ற முறை இதைச் சொன்னதற்கு பிறகு பத்திரிகையிலே படித்தேன். அதிலே பணிபுரிகின்ற தொழிலாளர்கள் எனக்கு ஒரு கடிதம் கூட எழுதினார்கள். நீங்கள் பேரவையில் இப்படி பேசியிருக்கிறீர்கள் நாங்கள் இலஞ்சம் பெறுவதாக குறிப்பிட்டிருக்கிறீர்கள். நாங்கள் குறைந்த கூலியைத்தான் பெறுகிறோம். விலைவாசி உயர்ந்து இருக்கிற இந்த நேரத்தில் எங்களுடைய வாழ்க்கைத் தரத்தை எப்படி நடத்துவது என்கிற தோரணையிலே எனக்கு கடிதம் எழுதியிருந்தார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு அதிகக் கூலி நிர்ணயிப்பதை நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. விலைவாசிகள் உயர்ந்திருக்கிற இந்தக் கால கட்டத்தில் அவர்களுடைய கூலியை அரசாங்கம் அதிகமாக்கலாம். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை ; அதிகமாக்குவதை வரவேற்க்கிறோம். அவர்களை கவனிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆனால், விவசாயிகளுடைய பிரச்னைகள் பல்வேறு கூடங்களில் வேதனைத் தரத்தக்க சூழ்நிலையில் இருக்கின்றன. பல்வேறு இடங்களில் நியாயமான எடை கிடைக்க வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக பணம் தர வேண்டும். அப்படி பணம் தராத விவசாயிகளுடைய பொருள்களை எடை போடுவதில்லை. அங்கே இருக்கிற அலுவலர்கள் அந்த பொருள்களை விற்பதில் அக்கறை காட்டுவதில்லை. எந்த வியாபாரி இந்த விவகாரங்களை ஒழுங்காக செய்கிறானோ அந்த வியாபாரி இலாபம் அடைகிற ஒரு சூழ்நிலை ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் இருக்கிறது. அதைப் போக்க வேண்டுமென்றால் நீங்கள் புதிய சட்டத்தை விரைவாக கொண்டு வர வேண்டும். அல்லது ஏற்கெனவே இருந்த முறையில் தேர்தலை நடத்தப் போகிறீர்களா ? இதிலே மாற்றம் இருக்குமேயானால் அதை விரைவாகக் கொண்டு வரலாம். அமைச்சர் அவர்களுக்கு வேளாண்மைத்துறை இலாக்காவில் அதிகமான வேலை இருப்பதற்கு நியாயம் இல்லை. அவர்கள் இதிலே கவனம் செலுத்துவார்களானால் விவசாயிகளுடைய அல்லல்கள் நீக்கப்படும்.

விளை பொருள் அங்காடி இயக்குநர் அலுவலகத்தை திருச்சிக்கு மாற்றினீர்கள். இதனால், பெரிய இலாபம் ஒன்றும் அரசாங்கத்திற்கு இல்லை. இதனால், தொல்லைதான் ஏற்பட்டு உள்ளது. எங்களுக்கு கிடைக்கிற செய்தி—அமைச்சர் அவர்கள் சென்னையில் இருக்கிறார் ; செயலாளர் அவர்கள் சென்னையில் இருக்கிறார் ; இந்த இயக்குநர் அலுவலகம் மட்டும் திருச்சியில் வைத்திருக்கிறீர்கள். அவர் அமைச்சரைப் பார்க்க வேண்டும், செயலாளரைப் பார்க்க வேண்டும் என்றால் பல நேரங்களில் திருச்சியிலேயிருந்து சென்னைக்கு ரெயிலிலே வருவது, திரும்பவும் சென்னையிலிருந்து திருச்சிக்குப் போவது என்று இருக்கிறார் ; ரெயிலில் போகிறபோதுதான் இயக்குநர் கோப்புகளையே பார்க்கிறார் என்று அங்கே பணிபுரிகின்றவர்கள் சொல்கிறார்கள். இந்த நிலைமை தேவைதானா என்பதை அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டும். அப்படி தொல்லைத் தருகிற விவகாரமாக இருக்குமானால் அந்த அலுவலகத்தை சென்னைக்கு மாற்றலாம். அதிலே பிரச்சினை இருககப்போவதில்லை. அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனிக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தனி அதிகாரிகள் பல ஒழுங்குமுறை விற்பனைக கூடங்களில், தர்மபுரி, வட ஆற்காடு மாவட்டங்களில், 5, 6, ஆண்டுகளாக ஒரே அதிகாரிதான் இருக்கிறார். அவர்களை எல்லாம் மாற்ற வேண்டும். தனி அதிகாரிக்கும் அங்கே இருக்கிற செயலாளருக்கும் ஒருமித்த கருத்து இருப்பதில்லை. தனி அதிகாரி என்ன சொல்வது நாம் என்ன கேட்பது என்று நடந்து கொள்கிறார்கள். அவர்களிடத்தில் சுமூகமான உறவு இருப்பதில்லை. செயலாளர், தனி அதிகாரி சொல்வதை நிறைவேற்றுவதில்லை. இப்படிப்பட்ட நேரங்களில் பணிபுரிகின்ற அலுவலர்களுடைய பல்வேறு பிரச்னைகள் வருகின்றன. சில அலுவலர்கள் பதவி உயர்வு பெறவேண்டும். சில அலுவலர்களுடைய சம்பளம் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவுகளின் மீதான விவாதம் தொடர்ந்து மீண்டும் நாளை நடைபெறும்.

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

அலுவல் வரிசையில் மாற்றம்—தொடர்ச்சி.

மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தற்போது முடிவு பெறாமல் இருக்கும் சட்ட முன் வடிவுகள் நாளை காலை எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்—வறட்சி குறித்து வெள்ளை அறிக்கையின் மீதான விவாதம் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

14–2–1983 (திங்கட்கிழமை) .. அரசினர் சட்ட முன் வடிவு கள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

(தேவையிருப்பின் பேரவை மாலையிலும் கூடும்).

15–2–1983 (செவ்வாய்க்கிழமை) தனியார் அலுவல்கள்.

பேரவை வழக்கம் போல் காலை 9 மணிக்குக்கூடும்.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுப்படி, பேரவைக் கூட்டம் 15–2–1983 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்துகொண்ட கட்சித் தலைவர்கள் தெரிவித்த ஒருமித்த கருத்துக்கிணங்கவும் என்னுடைய கருத்துக்கிணங்கவும் மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை இந்தக் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள வேண்டுமென்று விரும்பி அழைக்கின்றேன்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி

(ஊ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சடடமுன்வடிவு, 1983.

(எ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சட்டமுன்வடிவு சம்பந்தப்பட்ட அவசரச் சட்டத்தை இப்பேரவை நிராகரிக்கிறது என்ற தீர்மானத்தைக் கொடுத்திருந்த திரு. அ. ரகுமான்கான் அவர்கள் இருக்கையில் இல்லை, ஆகவே, அது எடுத்துக்கொள்ளப் பெறவில்லை.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு*! (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தச் சட்ட முன்வடிவையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

*1983—ம் ஆண்டு பிப்ரவரி 8—ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்
காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு* சட்டமன்றப் பேரவை சட்ட
முன்வடிவு எண். 12/1983) சம்பந்தப்பட்ட அவசரச் சட்டத்தை
இப்பேரவை நிராகரிக்கிறது என்ற தீர்மானத்தைக் கொடுத்
திருந்த திரு. ரகுமான்கான் அவர்கள் இருக்கையில் இல்லை.
ஆகவே, அது எடுத்துக்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 12/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு சட்ட முன்வடிவுகளும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தமிழ்
நாடு 1983-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள்
திருத்தச் சட்டத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்
பிலே சில கருத்துக்களை கூற நான் விழைகிறேன். நம்முடைய
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் சென்ற
முறை இதே போன்று தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை
நீட்டிக்கிற சட்டத்தைக் கொண்டுவந்தபோது இந்த அவையிலே
ஒரு உறுதியை அளித்தார்கள். நான் இன்னொரு முறை தனி
அதிகாரிகள் பதவிக்காலத்தை நீட்டிக்கும் சட்டத்தை இந்த அவை
யில் கொண்டுவர மாட்டேன், அதற்குள்ளாகவே புதிய சட்டம்
வர இருக்கிறது அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறை
வேற்றி தேர்தல்களை நடத்துவேன் என்று அறிவித்தார்கள்.
நாங்களும் அதை நம்பினோம். ஆனால், இதற்கு முன்னாலே
பல்வேறு காலக் கட்டங்களிலே இப்படிப்பட்ட சட்டத்தை நிறை
வேற்றி இருக்கிறார்கள். இன்றைக்கு ஆளுநரை வைத்து அவ
சரச் சட்டத்தை நிறைவேற்றி விட்டு இந்த அவையின் அனுமதிக்
காக வைத்திருக்கிறார்கள். ஆனால், இந்தச் சட்டத்தைக்
கொண்டுவருவதால் அரசாங்கத்திற்கு என்ன தயக்கம் இருக்கிறது
என்பதை எங்களைப் போன்றவர்களால் புரிந்துகொள்ள முடிய
வில்லை. இந்தக்குறிப்பிலே இந்தத் திருத்தத்தைக் கொண்டு
வருவதற்குக் காரணம் என்ன சொல்கிறார்கள் என்றால் சிறிது
அவகாசம் தேவை. ஆகவே, சிறிது காலம் நீட்டிக்கிறோம் என்று
வழக்கம் போல சொல்லி இருக்கிறார்கள். இது மிகவும் வருந்தத்

*1983 ஆம் ஆண்டு பிப்ரவரி 8 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

8. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலை குறித்த வெள்ளையறிக்கை மீதான விவாதம்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" பேரவையில் 9-2-1983 ஆம் தேதியன்று வைக்கப்பெற்ற 'தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலை' குறித்த வெள்ளை அறிக்கையை ** விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் ".

*திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற வறட்சி நிலை பற்றிய வெள்ளை அறிக்கை மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை கூற விரும்பு கிறேன்.

இந்த அறிக்கையில் ஏதோ வறட்சிக்கு பருவமழை மட்டும் தான் காரணம் என்று கூறியிருக்கிறார்கள். என்னால் அதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. 1977-ம் ஆண்டு அடாத மழை பெய்தபோது நல்லவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம் தேவை யான அளவிற்கு மழை பெய்கிறது என்று சொன்னீர்கள். இப்பொழுது இயற்கை கூட ஒத்துக்கொண்டிருக்கிறது நீங்கள் நல்லவர்கள் அல்ல என்பதை. அதனால்தான் இன்றையதினம் வரலாறு காணாத வறட்சி தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. முக்கியமாக தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிற வறட்சி வருவாய்த் துறை அமைச்சர் அறியாததல்ல. இந்த நேரத்தில் நான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கோவைத்தம்பி: பாயின்ட் ஆப் ஆர்டர். நல்லவர் கள் அல்ல இந்த ஆட்சியில் இருப்பது என்ற காரணத்தால் வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் யோக்கியமானவர்கள் ஒருவருமே இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்களா என்பதுதான் என்னுடைய சந்தேகம்.

**418–432....ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு செ. இராமலிங்கம்: 1977-ம் ஆண்டில் நீங்கள் குறிப்
பிட்டதையொட்டித்தான் நான் இதைச் சொன்னேன். தற்போது
வறட்சி நிவாரணப் பணியாக தஞ்சை மாவட்டத்தில் 17
இலட்சம் ரூபாய்க்கு ஏரி, கண்மாய்கள் தூர் வார ஒதுக்கியிருப்ப
தாக கூறியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் கூட டெல்டா
ஏரியா, நான்-டெல்டா ஏரியா என்று பாகுபாடு காண்பித்
திருப்பது சரியல்ல. அங்கே டெல்டா ஏரியாக்களும் பாதிக்கப்
பட்டிருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும்.
எனவே அப்படிப்பட்டதொரு பாகுபாடு இல்லாமல் — டெல்டா
ஏரியாக்களிலும் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு வாய்க்கால்கள் மேலும்
பாசனவசதி பெறவேண்டியிருக்கிறது. ஆகவே நான்-டெல்டா
ஏரியாக்களுக்கு ஒதுக்கியிருப்பதைப்போல் டெல்டா ஏரியாக்
களுக்கும் நீர்ப்பாசன வசதிகள் செய்வதற்கு தொகை ஒதுக்கித்
தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தி
லுள்ள விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற பாதிப்பிற்கு உள்ள
படியே இந்த அரசு நிவாரணமாக எதையாவது செய்ய விரும்பி
னால் இன்றைக்கு ரெவின்யூ கோர்ட்கள் மூலம் வெளியேற்றப்
படுகிற குத்தகை சாகுபடிதாரர்களுக்கு உடனடியாக மீண்டும்
அந்த நிலங்களை வழங்கி இந்த ரெவின்யூ கோர்ட்டுகளை கலைக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள' வறட்சி காரணமாக விவசாயி
கள் தாங்கள் வைத்திருந்த விதைநெல்கூட இல்லாத நிலையில்
இருக்கிறார்கள். எனவே, இந்தக் கடுமையான வறட்சி காரண
மாக கூட்டுறவுக் கடன்கள், கிஸ்தி, நிலவரி, தண்ணீர் வரி,
லோக்கல் சர்சார்ஜ், லோக்கல் செஸ் போன்றவற்றை தள்ளுபடி
செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
தாளடி, சம்பா சாகுபடியில் சரியான முறையில் விளைச்சல்
இல்லாத காரணத்தால் அதற்காக இந்த ஆண்டு வழங்கப்பட்ட
கூட்டுறவுக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று
இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கக்கூடிய
வறட்சியைச் சமாளிக்கும் வகையில் ஆயிரம் பில்டர் பாயின்ட்
ட்யூப் வெல்ஸ் இறக்கி இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.
இதில் சரிபாதி தற்போது இயங்கவில்லை என்ற தகவல் எனக்கு
வந்திருக்கிறது. என் தொகுதியில் கூட கடைமடைப் பகுதியில்
மன்னியாறு, பழவாறு, திருவிடைமருதூர் தாலுகாவில் இருக்
கின்றன. அந்தக் கடைமடைப் பகுதிகளில் இந்த ஆயிரம்
குழாய்க் கிணறுகள் அமைக்க அறிவிக்கப்பட்ட நேரத்தில் நான்
கூட வருவாய்த்துறை நிர்வாக ஆணையாளரிடம் திருவிட
மருதூர் வட்டத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று
கேட்டேன். ஆனால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. மறுபடியும்
இரண்டாம் பாகமாக நாலாயிரம் குழாய்க் கிணறுகள் இறக்கு
வதற்கு எடுத்துக் கொள்ளும்போது எடுத்துக்கொள்கிறேன்
என்று எடுத்திருக்கிறார்கள். அப்படி எடுத்திருக்கிற
நேரத்தில் சில விதிமுறைகளை சொல்லியிருக்கிறார்கள்.

எண்பது அடி ஆழத்திற்கு மேல் அந்தக் கூழாய்க் கிணறுகளை
இறக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். சிலயிடங்களில்
எண்பது அடி, நூறு அடியில் நீர் கிடைக்கிற காரணத்தி
னால் அந்த விதியைத் தளர்த்தி நூறு அடி வரை அந்தக்
குழாய்க் கிணறுகளை இறக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

ஏற்கனவே குழாய்க் கிணறுகளை யாராவது இறக்கி வைத்
திருந்தால், அவர்களுக்கும் ஆயில் என்ஜின் மோட்டார் வாங்க
கடன் வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறேன். என்.ஆர்.டி.பி. மூலமாக மானிய உதவித்
தொகை வழங்குகின்ற நேரத்தில், சிறு விவசாயிகள், பெரு
விவசாயிகள் என்ற பாகுபாடு செய்யாமல், இந்தச் சலுகையை
எல்லோருக்கும், அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தைப்
பொறுத்த வரையில் அது தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கு
வதால் அந்த தஞ்சை மாவட்டத்திலுள்ள சிறுவிவசாயிகள், பெரு
விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல், எல்லோருக்கும் இந்த
மானியத் தொகை வழங்கப்பட வேண்டுமென்று நான் இந்த
நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இத்திட்டம் உரிய நேரத்தில் அறிவிக்கப்பட்டிருந்தால்,
சம்பா, தாளடிப் பயிர்களையெல்லாம் காப்பாற்றி இருக்க
முடியும். ஜூலை மாதம் முதல், இந்த டெர்ன் சிஸ்டம், முறை
வைத்துத் தண்ணீர் கொடுக்கின்ற இந்த சிஸ்டத்தை அமுல்
படுத்தினோம். அப்போதே போதுமான அளவில் மேட்டூர்
தேக்கத்தில் தண்ணீர் இல்லை என்று தெரிந்திருந்தும், நில வள
வங்கியின் மூலமாக கடன் கொடுத்து, குழாய்க் கிணறுகளை
இறக்குகின்ற பணியில் ஈடுபடாத காரணத்தினால், சம்பா,
தாளடிப் பயிர்களை நாம் காப்பாற்ற முடியவில்லை. அதற்
கும் இந்த அரசுதான் பொறுப்பு என்று நான் குற்றம்சாட்ட
விரும்புகிறேன். அதே நேரத்தில், இன்றையதினம் குடிநீர்
பஞ்சம் பெரிய அளவில் தஞ்சை மாவட்டத்தை பாதித்திருக்
கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், 23
இடங்களில் கம்யூனிடி போர் வெல்கள் இருக்கின்றன. அந்த
போர் வெல்கள் எல்லாம் சரியான அளவிலே மோட்டார்
பொறுத்தபடாத காரணத்தினால், சரியான சக்தியுள்ள மோட்
டார்களைப் பொறுத்தாத காரணத்தினால், இன்றைய தினம்
குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்தக்
குறையை நீக்க உடனடியாக இப்படிப்பட்ட கம்யூனிடி போர்
வெல்களுக்கெல்லாம் எலக்ட்ரிக் மோட்டார் வைத்து, நீர்ப்பாசன
வசதிக்கான ஏற்பாட்டை செய்துதர வேண்டுமென்று இந்த
நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கிடக்கிறது. அப்பேர்ப்பட்ட மோட்டார்களை யெல்லாம்
ரீவைண்டிங் செய்து, உடனடியாக மேல்நிலை நீர்த்தேக்கத்
தொட்டிகளில் தண்ணீர் ஏற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.
என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், திருவிடை
மருதூர், திருப்பனந்தாள், ஆடுதுறை, திருப்புவனம், வேப்பத்
தூர் பேரூராட்சிகள் இருக்கின்றன. இந்த பேரூராட்சிகளில்
நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டியிருக்கிறார்கள். ஆனால்,
அவற்றிற்குப் பைப் லைன்கள் போடாத காரணத்தால், பொது
மக்களுக்கு தண்ணீரை தேக்கிவைத்து, தண்ணீரை விநியோகிக்க
முடியவில்லை. ஆகவே, அந்த பைப் லைன்களை உடனடியாகப்
போட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.
வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், தஞ்சை
மாவட்டந்திலே ஆயில் என்ஜின் எலக்ட்ரிக் மோட்டார் மூலமாக
ஓரளவு சாகுபடி செய்த விவசாயிகளுக்கு, போதிய அளவில்
விலை கிடைக்காத வகையில், இன்றையதினம் நெல் கொள்
முதல் முறையை அமுல்படுத்தியிருக்கிறார்கள். அதைத் தளர்த்
தினால், மிக அதிகச் செலவில் விவசாயம் செய்திருக்கக்கூடிய
விவசாயிகளுக்கு ஓரளவாவது நல்ல விலை கிடைக்கும் என்பதை
இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்
பெற்றது.)

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
அவர்களால் இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற
வறட்சி அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு,
என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்த
தற்கு நான் முதலிலே நன்றி கலந்த வணக்கத்தை காணிக்கை
யாக்குகின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், மேதகு ஆளுநர் அவர்
கள் உரையிலேயே தெள்ளத் தெளிவாக தமிழகத்தின் வறட்சி
யைப் பற்றி, அதன் கொடுமையைப் பற்றி சித்தரித்துக் காட்டப்
பட்டிருக்கிறது என்று இந்த மாமன்றத்தின் முன்னால் சொல்
வதில் பெருமை அடைகிறேன். தமிழகத்தின் முதல்வர், இதய
தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுத்தவரையில்,
கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழகத்திலே வறட்சி ஏற்பட்டு
இருந்தும்கூட, சரித்திரத்திலேயே, வரலாற்றிலேயே இல்லாத
அளவுக்கு, இந்தியாவில் எந்த மாநிலத்திலும், எப்போதும்
வறட்சி ஏற்பட்ட போதிலும்கூட, ஆங்காங்கே சமாளிக்க முடியாத
நிலமை இருந்தாலும்கூட, கடந்த இரண்டு ஆண்டுகளிலே ஏழை
எளிய விவசாய மக்கள் வறட்சி நிலைமையை உணர்ந்து, எடுக்க
வேண்டிய பணிகளை, ஆற்ற வேண்டிய கடமையை தமிழக
[illegible] ற்றியிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே யாரும்

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்திலே உள்ள பெரிய ஏரியான காவேரிப்பாக்கம் ஏரியை நம்பி பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இன்று அந்த மாபெரும் ஏரி வறண்டு கிடப்பதாலே அங்கேயுள்ள விவசாயப் பெருமக்கள் பெரும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அந்த ஏரியை நம்பியிருக்கின்ற ஏறக்குறைய ஒரு இலட்சம் விவசாயப் பெருமக்கள் இன்றைய தினம் வேலையின்மையின் காரணமாக அந்தப் பகுதியை விட்டு எங்கேயாவது சென்று பிழைக்கின்ற நிலைமையிருப்பதால் காவேரிப்பாக்கம் ஏரியைத் தூர் எடுத்து இந்த ஆண்டே அங்கே நல்ல நிலைமைகளை உருவாக்கித் தந்து ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த வறட்சி என்பது மிகவும் கடுமையாகத் தமிழ் நாட்டிலே இருக்கிறது. நமது வருவாய்த் துறை அமைச்சரவர்கள் நமக்கு கொடுத்திருக்கின்ற அறிக்கையிலே இருப்பதைவிடவும் அதிகமான வறட்சி இருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், இந்த அறிக்கையைத் தயாரிக்கின்ற அதிகாரிகளே பலநெடுங்காலமாக அவர்களுக்கு இருக்கின்ற பழக்கத்தின் காரணமாக எப்படி இந்த அறிக்கையைத் தயாரிப்பார்கள் என்பது நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். ஏதோ அரசு மறைக்க முயற்சிக்கிறது என்ற உணர்வில் நான் சொல்லவில்லை. அந்த அதிகாரிகளுடைய பழக்கத்தின் காரணமாக அவ்வாறு அறிக்கை தயாரித்துத்தான் அவர்கள் பழக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே உண்மையில் இருக்கின்ற வறட்சி நிலவரம் இந்த அறிக்கையிலே இருப்பதைவிடக் கூடுதலாகவும், துன்பமும் துயரமும தமிழகத்திலே இருக்கின்ற கிராமங்களிலேயும், நகரங்களிலேயும் இருக்கின்றன.

எடுத்த எடுப்பிலேயே வறட்சி அறிக்கையின் மூலமாக நாம் வற்புறுத்த வேண்டியது, இன்றைக்குக் கடுமையான அளவிற்குத் துன்பமும் துயரமும் இருக்கின்ற நிலையில் உள்ள தமிழ் நாட்டு மக்கள் இன்றைக்கு உணவுத் தட்டுப்பாட்டின் காரணமாக மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் இந்த வெள்ளை அறிக்கையின் மூலம் வற்புறுத்த வேண்டியதெல்லாம் அதைத் தீர்மானமாகவே வற்புறுத்த வேண்டும். மத்திய அரசு போதுமான உணவையோ அல்லது கோதுமையையோ அல்லது சிறு தானியங்களையோ தமிழகத்திற்கு உடனடியாகக் கொடுத்து உதவ வேண்டும். வருகின்ற பத்து மாதங்களுக்கு நமக்கு புதிய அறுவடை என்பது இல்லை. ஆகவே, இருப்பதை வைத்துக் கொண்டு சமாளிப்பது என்பது மிகப் பெரிய சிரமமான காரியமாகும். எனவே, மத்திய அரசு நமக்குக் கொடுத்து உதவுவதற்கு வற்புறுத்த வேண்டுமென்ற கருத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்,

இன்றைக்குத் தமிழ் நாட்டு மக்களுடைய கஷ்ட நஷ்டங்களையும், வறட்சி நிலைமையையும், துன்ப துயரங்களையும், ஏறியுள்ள விலைவாசியின் காரணமாக அவர்கள் அனுபவிக்கின்ற பட்டினி, பசி நிலைமையையும் கவனத்திற் கொண்டு நான் மத்திய அரசாங்கத்தை எச்சரிக்க விரும்புகிறேன். மத்திய அரசு பல பாவங்களைச் சுமந்து கொண்டிருக்கிறது. அது, தமிழ் நாட்டில் பட்டினிச் சாவு என்ற பாவத்தையும் சுமக்கக் கூடாது என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, இன்றைக்குள்ள கடுமையான நிலைமையில் 34 கோடி ரூபாய் செலவழிக்க ஒதுக்கியிருக்கிறோம் என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் சொல்ல விரும்புகிறேன். இன்று ஆணையிடப்பட்டிருக்கிறது, ஆங்காங்கு துறைகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதோடுதான் இது நிற்கும்; இதில் ஒரு பகுதிதான் செலவழிக்கப்பட்டிருக்கும். பெருப் பகுதி மக்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் கிராமப் புறங்களை விட்டு வெளியேறுகின்ற காட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. உணவுப் பொருட்களின் விலை உயர்ந்திருக்கிறது. போதுமான அளவிற்கு நியாய விலைக் கடைகளில் செய்யப்படும் விநியோகத்தைத் தன்னிறைவோடு செய்ய முடியாது என்ற சிரமமான நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இன்று இந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்பதுதான் இந்த விவாதத்தினுடைய முக்கியமான நோக்கமாகும்.

(மாலை 4.20.)

நாம் 190 கோடி ரூபாய்கள் கேட்டிருக்கிறோம். அது ஒதுக்குகிறவரையிலே காத்திராமல் நடவடிக்கையை எடுக்க வேண்டும். நாங்கள் இந்த விவாதத்தை நடத்த வேண்டும் என்று சொன்னதே வறட்சியைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல. அரசு இதிலே என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை நாங்கள் தொகுதியிலே சென்று சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன், மத்திய அரசை வற்புறுத்திக் கேட்க வேண்டும். மாநிலத்திலே நிலைமை சரியில்லை என்று சொன்னாலும் சிரமமாக இருக்கிறது என்றாலும், இதற்குப் பெரும் பகுதியை ஒதுக்கி உடனடியாக வேலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதலாவதாக உணவைப் பற்றிப் பேச விரும்புகிறேன், உணவில் இன்றைய தினம் விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கிறது, குவிண்டால் 180, 200 ரூபாய் என்று கொள் முதல் செய்து கொண்டிருக்கிறார்கள், அவர்களே கையிலே இருப்பை ஏற்படுத்திக் கொண்டால் நாளை அதிகமாக விலைக்கு [illegible]

என்ற பேராசையுடன் செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் அனுமதிக்கிறது என்று பார்க்காமல், வறட்சி நிலையைக்கருத்திற் கொண்டு குவிண்டால் ரூ. 150 என்ற அளவிலே கொடுத்து மாநில அரசே கையிருப்பை கூடுதலாக்க வேண்டும். மத்திய அரசில் இருந்து பெறக் கூடியது நம்முடைய கொள் முதல் வரக் கூடியதைக் கொண்டு கிராமப் புறங்களிலே, வறுமையிலே சிக்கி இருக்கக் கூடிய மக்களுக்கு இந்த உணவை விநியோகம் செய்யலாம்.

அரிசியை விட, கோதுமையைவிட, நமக்கு சிறு தானியம் கிடைக்குமானால் நல்லது. நவதானியம் கிடைத்தாலும் நல்லது. கிராமங்களில் நியாய விலை கடைகளில்கூட இல்லை. சந்தைகளிலே அந்தத் தானியங்களை விற்க ஏற்பாடு செய்வோமானால் விவசாயத் தொழிலாளிகள், ஏழை தாழ்த்தப் பட்ட மக்கள் அவைகளை வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். அவைகள் நல்ல விற்பனை ஆகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப் பட்ட ஒரு உணவுக் கொள்கையை கடை பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

அடுத்து, குடி நீர்ப் பிரச்சினை. மிகவும் முக்கியமான பிரச்சினை. இன்றைக்குக் கடுமையான வறட்சி தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. சென்னை, திண்டுக்கல், நாகர்கோவில், வடார்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் நகரம் இன்னும் கன்னியாகுமரி போன்ற செழிப்பான மாவட்டங்களில்கூட கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. பக்கத்து கிராமங்களிலே இருந்து மக்கள் இரண்டு மைல்கள் நடந்துசென்று தண்ணீர் எடுத்து வரவேண்டி இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் களியக்காவிளை பகுதியிலே உள்ள கிராம மக்கள் 3 மைல் 4 மைல் சென்று தண்ணீர் எடுத்துக் கொண்டு வருகிற சூழ்நிலை இருக்கிறது. நாம் கூச்சப்படத் தேவையில்லை. வெட்கப்பட தேவையில்லை, ஒரு குடம் தண்ணீர் 50 காசுக்கு விற்கும் படியான நிலைமை இருக்கின்றது.

இங்கே லாரிகள் மூலமாக தண்ணீர் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். இந்திய அரசை வற்புறுத்தி, ராணுவத்திலே இருக்கும்படியான லாரிகள், டிராக்டர்கள், டாங்குகள் இன்னும் இருக்கக் கூடிய வாகனங்களை எடுத்து, போர்க்கால நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லுகிறோம். அந்த அடிப்படையிலே இவற்றை எல்லாம் மத்திய சர்க்காரிடத்திலே வற்புறுத்தி வாங்கவேண்டும். பல்வேறு கிராமங்களுக்கு, பேரூராட்சிகளுக்கு, குறிப்பாக சென்னை நகரத்திற்கு மிகப் பெரிய அளவுக்கு லாரிகள் மூலமாக தண்ணீர் சப்ளை செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்ப

இப்படி இருக்கக் கூடிய நேரத்தில் ஆழ்குழாய்ப் பம்புகள் பல இடங்களிலே போடப்படாமல் இருக்கிறது. ஆனால் ஒரு யூனியனுக்கு ஒரு பிட்டர்தான் இருக்கிறார். இந்தக் கஷ்டமான நேரத்தில், கடுமையாக இருக்கக்கூடிய இந்த நேரத்தில், இவர் எல்லா இடத்திற்கும் போய், இந்தத் தண்ணீர் விநியோகத்தை சீரமைக்க, இந்த பம்புகளிலே ஏற்பட்டிருக்கக்கூடிய பழுதுகளை ஒருவரால் நீக்க இயலாது. இந்த விசேஷமான காலத்தைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு இப்படிப்பட்ட பம்புகள் முறையாக வேலை செய்ய, இந்த குடிநீர் முறையாக கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். பல இடங்களிலே தோண்டினால் கூட, தண்ணீர் கிடைக்கவில்லை (மணி அடிக்கப்பெற்றது).

துணைத் தலைவர் அவர்களே, நான் ஒருவன்தான் பேசப் போகிறேன். 5 நிமிடங்களிலே ஒன்றுமே பேச முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 27 பேர்கள் பேசவேண்டி இருக்கிறது. தயவு செய்து முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கட்சிக்கும் நேரம் ஒதுக்கியிருக்கிறீர்கள். கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பாக அவர் ஒருவர்தான் பேசுகிறார். வேறு யாரும் பேசப்போவதில்லை. விவரமாக அவரே பேசி முடித்து விடுவார்.

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவர் அவர்களே, அடுத்து வேலை வாய்ப்பு. பல லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. நாம் என்னதான் பேசினாலும் நம் நாட்டிலே கடைசியிலே ஏழ்மையிலே இருக்கக் கூடிய அந்த விவசாயத் தொழிலாளர்கள் கழுத்தைத்தான் இந்த வறட்சி அறுக்கும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அவர்கள் குடிபெயர்ந்து போகக்கூடிய ஒரு ஆபத்து இருக்கிறது. வடார்க்காடு மாவட்டத்தில் இருந்து ஆந்திரா நோக்கியும் அல்லது இந்தப் பக்கத்தில் உள்ள கர்நாடகத்தை நோக்கியும் போகக் கூடிய ஆபத்து இருக்கிறது. தமிழகத்திலே இப்படி குடிபெயர்ப்புக்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆகவே வேலை வாய்ப்புகள் இன்றைக்கு முழுமையாகக் கொடுக்கப்பட வேண்டும். அதிலும் ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய தொகை சிறு தொகை. கிட்டத்தட்ட 34 கோடி ரூபாயிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கொடுத்து செலவு செய்யக்கூடிய தொகை 11 கோடி ரூபாய்தான். இந்த 11 கோடி ரூபாயில் வேலைவாய்ப்புக்கு என்று இருப்பதை நான் கூடப் பார்த்தேன் 3 கோடி ரூபாய்தான் வருகின்றது. ஆகவே வேலைவாய்ப்பு என்பது இன்றைக்கு மிக முக்கியமானது.

[திரு. சி. கோபால்] [1983 பிப்ரவரி 10

(மாலை 4–20).

மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அதே போன்று இந்த
ஆண்டும் இரண்டு பருவக் காற்றுகளும் பொய்த்துவிட்டதன்
காரணமாக கடுமையான வறட்சி தமிழகம் முழுவதும் ஏற்பட்
டிருக்கிறது. இந்த நிலைமையினை எடுத்துச் சொல்ல வேண்டிய
தருகுத் தக்க நேரத்திலே, நம்முடைய இதய தெய்வம்
எடுத்துச்சொன்னபோதும்கூட, தமிழகத்தினுடைய நிலைமையைத்
தமிழக மக்களுடைய நிலைமையை எடுத்துச் சொன்னபொழுதும்
கூட, மத்திய அரசு கடந்த 1982-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தி
லேயிருந்து நமக்கு, ஏழை மக்களைக் காப்பாற்றுவதற்காகக்
கொடுக்க வேண்டிய அரிசியினை ஓரளவுகூட கொடுக்கவில்லை
யென்ற நிலைமையினை நினைக்கின்றபொழுது இந்த மாமன்றத்
திலே இருக்கின்ற அத்தனை பேரும அந்த நிலைமையினை
கண்டிக்க வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம் என்பதை
இந்த நேரத்திலே நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டி
ருக்கின்றேன். தமிழக மக்களுடைய உணர்வுகளை வெளிப்
படுத்துகின்ற வகையிலே எங்களுடைய இதய தெய்வம், தமிழகத்
தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர், நேற்று ஒருநாள்
உண்ணா விரதம் இருந்ததை, இந்த நேரத்திலே, தமிழகத்திலே
யிருக்கின்ற ஏழை, எளிய மக்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள்;
நாங்கள் பெருமைப்படுகிற வகையிலே, இந்த மாமன்றத்திலே
இருக்கிறோம் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வதிலே
பெருமை அடைகிறேன்.

இந்திய நாட்டினைப் பொறுத்தவரை, மத்திய அரசின்
சார்பிலே டாக்டர் பான்சே தலைமையிலே ஒரு வல்லுநர் குழு
அமைத்தார்கள். உணவு உற்பத்தியைப் பற்றி ஒரு அறிக்கையைச்
சமர்ப்பிக்க ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழு:
பாரதத்தினுடைய மொத்த உணவு உற்பத்தி, ஆண்டு ஒன்றுக்கு
133 மில்லியன் மெட்ரிக் டன் என்று ஒரு குறிப்பினைக் கொடுத்
திருக்கின்றது. ஆண்டுதோறும் 133 மில்லியன் மெட்ரிக் டன்
உற்பத்தி செய்தாலுங்கூட, அறுவடைக்குப் பின் ஏற்படுகின்ற
மொத்த தானிய இழப்பு 9.33 சதவீதம் என்பதை டாக்டர்
பான்சே அவர்கள் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்
கள். அதனால், பாரதத்திலே, உற்பத்தியாகின்ற 133 மில்லியன்
மெட்ரிக் டன்னிலே, ஏறக்குறைய 12.4 மில்லியன் மெட்ரிக் டன்
உணவு தானியங்கள் மத்திய அரசின் சார்பிலே ஆண்டு தோறும்
இழப்பாகிக் கொண்டிருக்கிறது. இந்த இழப்புகள் எந்த, எந்த
வகையிலே ஏற்படுகின்றது என்று சொல்கின்ற நேரத்திலே, குறிப்
பாக, சேமிப்பு நிலைமையிலே 6.58 சதவீதம், எலிகளாலே
2.5 சதவீதம்; புழு பூச்சிகளாலே 2.55 சதவீதம், பறவை
களாலே 0.85 சதவீதம்; ஈரப்பதம் செய்கின்றபொழுது, 0.68
சதவீதம் இழப்பு ஏற்படுகின்றது. அது மட்டுமல்ல, இந்த
நிலைமைகளைப் பார்க்கின்றபொழுது, இந்தியாவிலே உற்பத்தி
செய்கின்ற தானியத்திலே கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய்
மதிப்புள்ள தானியங்கள் ஆண்டுதோறும் இழப்புக்குள்ளாகியது
என்பதை இந்த நேரத்திலே மத்திய அரசுக்காக வக்காலத்து
வாங்குகின்றவர்களுக்கு, மத்திய அரசின் போக்கினாலே

1983 பிப்ரவரி 10] [திரு. சி. கோபால்]

புறக்கணிக்கப்பட்ட போதிலும்கூட, தமிழக மக்களைப் பற்றி
சிந்திக்காதவர்களுக்காக இந்தக் கருத்தினை எடுத்துவைக்க நான்
கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு மத்திய அரசு சேமித்து வைக்கின்ற
சூழ்நிலையிலே, செயற்கை முறையினாலே நல்ல முறையிலே
பாதுகாக்கவேண்டிய ஒரு தன்மையிருந்தும் பாதுகாக்கத் தவறிய
தன் விளைவாக, இன்று இந்தியாவிலே ஏறக்குறைய ஆயிரம்
கோடி ரூபாய்க்கு உணவு உற்பத்தியிலே இழப்பு ஏற்படுகின்றது.
பாதிப்பு ஏற்படுகின்றது. அதையெல்லாம் பொருட்படுத்தாமல்
இன்று தமிழகம் உரிமையைக் கேட்கின்றபொழுது, பருவமழை
பெய்யத் தவறிவிட்ட நிலைமையை உணர்த்திய பொழுது,
காலம் கடந்தும்கூட, கொடுக்கவேண்டுமென்ற நிலைமை வராத
இந்த நேரத்திலே, இந்தக் கருத்தினை எடுத்துச் சொல்வதன்
மூலம், இழப்புகள் எந்த எந்த வகையிலே இருந்தாலுங்கூட,
உரிமைகள் கேட்கின்ற நேரத்திலே, கொடுப்பதற்கு மத்திய
அரசு மறுக்கிறது; மாற்றாந்தாய் மனப்பான்மையைக் காட்டு
கிறது என்பதைத்தான் இது தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது
என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

எனக்கு முன்னாலே இங்கே பேசுகின்றபொழுது, மாண்புமிகு
திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள்
இங்கே நல்லவர்கள் ஆளவில்லை என்பதனால்தான் வறட்சி ஏற்
பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களை நான் பணி
வன்போடு கேட்டுக்கொள்கிறேன், 1974-லே கலைஞர்
கருணாநிதி அவர்கள் இங்கே ஆண்டபொழுது வறட்சி ஏற்பட்
டதே, அவர் நல்லவர் இல்லையா என்று நான் கேட்க விரும்பு
கிறேன். அப்பொழுது அவரை நல்லவர் இல்லை என்று நீங்கள்
சொல்லுகின்றீர்களா என்பதை மட்டும் நான் கேட்க விரும்பு
கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் காவேரிப்
பாக்கம் ஏரி என்பது வடார்க்காடு மாவட்டத்திலேயே ஒரு மிகப்
பெரிய ஏரியாகும். இன்று வடார்க்காடு மாவட்டத்திலே கடுமை
யான வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. வடார்க்காடு மாவட்டத்
திலேயுள்ள அத்தனை ஏரிகளிலும், குளங்களிலும், நீர்நிலைகளிலும்
தண்ணீர் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. குடிக்கக்கூடத்
தண்ணீர் கிடைக்குமா என்ற நிலைமை வடார்க்காடு மாவட்டத்
திலே இருக்கிறது. வடார்க்காடு மாவட்டம் பெரிய ஏரிகளில்
ஒன்றாகிய காவேரிப்பாக்கம் ஏரியை நம்பித்தான் இருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, 1977-ஆம் ஆண்டு மழை பெய்தபொழுது
ஆளுங்கட்சிக்காரர்கள் சொன்னதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த விவாதம்
இப்பொழுது வேண்டாம்; எல்லோரும் நல்லவர்கள்தான், எல்
லோரும் யோக்கியர்கள்தான்.

என்ற தலைப்பில் சொல்கிறபோது, திருச்சி மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்று வானொலி அலறுகிறது. ஆனால் மறுநாள் திருச்சி மாவட்டக் கலெக்டர் அவர்கள் மண் எண்ணெய் கிடைக்கிறது என்று அவர்கள் அறிவித்து விடுகிறார். ஆகவே இப்படி அறிக்கை விடுவதாலே பிரச்னைகளை தீர்ந்துவிடாது. மின் விளக்கு அவர்களுக்கு தற்போது இல்லை என்றாலும், இருக்கிற விளக்குகளுக்கு மண்ணெண்ணெய் கிடைக்க நாம் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே மண் எண்ணெய்கூட கிராமத்திலே சரியாக கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது.

அடுத்து, வறட்சி காரணமாக இன்று எடுத்துக்கொண்ட அந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக இன்று மத்திய அரசுக்கு 190 கோடி ரூபாய் வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். இதிலே ஏதாவது ஒரு பகுதி கிடைத்தால் அதை வைத்து சமாளித்துக் கொள்ளலாம் என்று சொன்னால்கூட 1981–82 ஆகிய 2 ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சிகளினுடைய வீழ்ச்சியால் நமக்கு மிகப் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே வறட்சி காலத்திலே ஏதோ தொகையை ஒதுக்கி, அதன் மூலம் சமாளித்து விடலாம் என்று எண்ணாமல், நகர்ப்புறங்களுக்கும், கிராமப்புறங்களுக்கும் அதிகமாக தொகையினை ஒதுக்குவதற்கு நாம் முயற்சி செய்து, அதற்காக மத்திய அரசோடு நாம் வாதாடி போராடி நிதியைப் பெறவேண்டும். உணவுத் தானியங்களைப் பெற வேண்டும். அப்படிப்பட்ட அந்த 2 காரியங்களை நம்முடைய ஆளுகின்ற கட்சி, அனைத்துக் கட்சிகளுடைய கூட்டோடு, அவர்களுடைய உதவியோடு, ஒத்துழைப்போடு இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4.30)

இதிலே கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு, தமிழக மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை, பட்டினிச் சாவை எதிர்நோக்கி இருக்கும் தமிழக மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆகியவை தமிழக அரசுக்கு இருப்பதால், இனிமேல் மெத்தனமாக இருக்கக்கூடாது; அரசியல் கொள்கையில் ஊசலாட்டம் இருக்கக்கூடாது; சரியான ஒரு உணவுக் கொள்கையை இந்த அரசு ஏற்று, செயல்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தி என் உரையை முடித்து, அமைகிறேன்.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இங்கே வறட்சி நிலை அறிக்கையின் மீது நான் சார்ந்து இருக்கின்ற திருச்சி மாவட்டத்தின் சார்பிலும், என்னுடைய திருவரம்பூர் தொகுதியின் சார்பிலும் கோர தாண்டவம் ஆடுகின்ற வறட்சி நிலை பற்றி என்னுடைய கருத்தை இங்கே எடுத்துச் சொல்ல வாய்ப்பு நல்கிய உங்களுக்கு என் நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்

இன்றைய தினம் இந்த வெள்ளை அறிக்கையின் மீது விவாதம் நடத்துகின்ற சூழ்நிலையைத் தமிழ்நாடு பெற்றமைக்கு நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன். அதே நேரத்தில் தமிழக மக்கள் மீது இந்த அரசு எந்த அளவிற்கு அக்கரை காட்டியிருக்கிறது என்பதைத் கூறுகிய கால நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்த அரசு வெளிப்படுத்தியிருக்கிறது. மாவட்டங்கள் தோறும் இருக்கும் அதிகாரிகளை அழைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு கலந்து பேசி, உடனுக்குடன் நிவாரணங்களை வழங்குவதற்குகாக அரசு விரைவான நடவடிக்கைகலளை ஆங்காங்கு மேற்கொண்டு இருக்கிறது. அதோடு அந்தந்தப் பகுதியில் எந்தெந்த முறையில் நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திட்டங்களைக் கொடுத்து இருக்கிறார்களோ அந்தத் திட்டங்களை எடுத்துக்கொண்டு, அதற்கான வகையில் நிதி ஒதுக்கீடு செய்து, அதனைப் பற்றியும் இந்த வெள்ளை அறிக்கையிலே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகப் கோடிட்டுக் காண்பித்து இருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விழைவது எல்லாம் மாநிலம் தழுவிய இந்த வறட்சி நிலை கடந்த இரண்டு ஆண்டுகாலமாக துவங்கப்பட்டு, இன்றைக்கு மிக உயர்ந்த அளவிலே வறட்சி நிலை இந்த மாநிலத்திலே ஏற்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்த நிலையில் தமிழகத்தின் முதலமைச்சர், இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் கிராம மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்து, செயலாக்கி, ஆங்காங்குள்ள மக்களின் குறைகளை ஓரளவிற்கு நிவர்த்தி செய்து இருக்கிறார்கள். எந்தக் காலக்கட்டத்திலும் இது போன்ற கோர வறட்சி நிலவாத காரணத்தால், வரும் காலத்திலும் இத்தகைய துன்பத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்கிற வகையில் மிகப்பெரிய தொலைநோக்கு எண்ணத்துடன் தான் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த வெள்ளை அறிக்கையில் கூறியிருக்கின்ற கருத்துக்களின்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இத்தனை லட்சம் ரூபாய் என்று ஒதுக்கி, அந்த நிதியின் மூலம் குடிநீர் வசதி அளித்தல், குழாய்க்கிணறுகள் தோண்டுதல், ஆங்காங்கு இருக்கின்ற சிறிய ஏரிகளையும், பெரிய ஏரிகளையும் ஆழப்படுத்துதல் என்கிற வகையில் பல திட்டங்களைத் தீட்டி, அதன் மூலம் கிராமங்களில் வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்கு இத்தகைய வறட்சிநிலை துயர் துடைப்புப் பணிகள் மூலம் வேலைவாய்ப்பு தருகின்ற வகையில் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் நான் சார்ந்து இருக்கின்ற திருச்சி மாவட்டத்திற்கு 102 லட்ச ரூபாய் ஒதுக்கி இருப்பதற்காக நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் திருச்சி மாவட்ட விவசாயிகளின் சார்பில் நன்றியையும் வணக்கத்தையும்

அப்படி வேலை செய்கிறபோது கால்வாய் மராமத்து அங்கே இருக்கும்படியான வடிமுனைக் குழாய் அமைப்பது போன்ற பிற பயனுள்ள வேலைகளாக இருக்க வேண்டும். வெறும் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டு, காசை தட்டிக்கொண்டு போகக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. பல்வேறு வேலைகள் இதுமாதிரி செய்யப்பட்டு அதுவும் கணக்கில் எழுதப்பட்டு விடும். ஆகவே பயனுள்ள வேலைகளைச் செய்ய வேண்டும். கிராமங்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய வேலைவாய்ப்புகளை கொடுத்து, அந்த வேலை வாய்ப்புகளின் மூலமாக அவர்களுக்கு தினசரி கூலி பெற்று, அதன்மூலமாக அவர்கள் உணவுத் தானியத்தைப் பெற்றுக்கொண்டு அந்த கிராமங்களிலே நிரந்தரமாக வாழ்வதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அப்படி வேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொடுப்பதுதான் இந்தத் திட்டம். ஆகவே இதிலே தீவிரமான கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் வற்புறுத்துவது என்னவென்றால், இந்த நில வரி, தண்ணீர் வரி, உள் செஸ் வரி, இப்படி உள்ளூர் வரி போன்ற இவைகளை எல்லாம் முழுவதுமாக ரத்து செய்ய வேண்டும். இந்தக் காலம் மிகக் கடுமையாக இருப்பதாலே அவர்களால் இந்தத் தொகையை செலுத்த முடியாது. கணக்குகளை வைத்து தான் புள்ளிவிவரங்களை வைத்துதான் இவைகளை வஜா செய்ய வேண்டும் என்று சொன்னால், என்ன புள்ளி விவரங்கள் வரும் என்று நமக்குத் தெரியும். அமைச்சர் அவர்கள் இங்கே அறிக் க வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே பார்த்தால் தமிழ்நாட்டிலே பாதிக்கப்படாத மாவட்டங்களே இல்லை என்று தெரிகிறது. பெரும்பாலான மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவைகளை கவனத்தில்கொண்டு முழு வரி வஜா செய்ய வேண்டுமென்ற முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கூட்டுறவுக் கடன்கள் அல்லது பல்வேறு கடன்கள் இன்று அவர்கள் மேல் சுமத்தப்பட்டுள்ளது. அவைகளை தள்ளுபடி செய்ய வேண்டும். அல்லது ஒத்தி வைக்க வேண்டும். இன்றைக்கு வந்திருக்கக்கூடிய பல்வேறு கடிதங்களைப் பார்த்தால் மின்சார பாக்கிக்காக மின் துண்டிப்பு என்ற தகவல் வருகிறது. அவைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். இந்த 1 பிளஸ் 1 என்று வாங்குவது ஒரு பக்கம் இருந்தாலும் கூட அவைகளை நிறுத்திவிட்டு இப்போ ஏதாவது ஒன்றை மட்டும் வாங்கிக் கொண்டு மற்றவைகளைப் பின்னாலே வாங்கிக் கொள்ளலாம் என்ற முறையில் முடிவு செய்ய வேண்டும். ஆகவே இந்த மின்சாரத்தை துண்டிப்பது என்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதை தான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, காலையிலேகூட ஒத்தி
வைப்புத் தீர்மானத்தின் மீது பேசப்பட்டது. குத்தகை விவ
சாயிகள் இன்றைக்கு விவசாயம் செய்யமுடியாத அளவுக்கு
நிலைமைகள் இருக்கின்றன. அவர்களால் பழைய பாக்கியைச்
செலுத்த முடியாத நிலைமை இருக்கும்போது, ஏற்கனவே
அவர்கள் இரண்டுவிதமான கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள்,
மத்தளத்திற்கு இரண்டு பக்கம் அடி என்பதுபோல், அவர்
களும் இரண்டு பக்கம் அடிவாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.
குத்தகையையும் அவர்கள் கொடுக்க வேண்டும். ஆனால்
அதேநேரத்தில் விளைச்சல் இல்லை என்றாலும் அந்த
நஷ்டத்தையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே
இந்த குத்தகை விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்று
வது, ரெவின்யூ, கோர்ட் மூலமாக முயற்சி செய்வது, சிவில்
கோர்ட் மூலமாக நடவடிக்கை எடுத்து வெளியேற்றுவது போன்ற
வைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதற்கு
உடனடியாக சட்டம் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க வேண்
டும். நம்முடைய சட்டமன்றக் கூட்டத்தொடர் இன்னும் 2,
3 நாட்களிலே முடிந்து விடக்கூடிய நிலைமை இருந்தாலும்கூட,
உடனடியாக அவசரச் சட்டம் கொண்டு வந்தாவது இதை தடுத்து
நிறுத்த வேண்டும். இதற்கு அமைச்சர் அவர்கள் தன்னுடைய
பதிலை அளிக்கும்போது, என்ன உறுதியான நடவடிக்கை
இதற்கு எடுத்திருக்கிறார்கள் என்பது பற்றி அவர்கள் விளக்க
வேண்டும் இன்றைக்கு 10 லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகள்
குத்தகை கொடுக்க முடியாத நிலைமையால் இன்றைக்கு
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து கால்நடைகளுக்கு தீவனம் கொடுக்க வேண்டும்
என்பது பற்றி. கால்நடைகளுக்கு குறைந்த விலையில் தீவ
னம் கிடைக்கக்கூடிய அளவில் நாம் நடவடிக்கைகள் மேற்
கொள்ள வேண்டும். மக்கள் குழுக்கள் மூலமாக இன்றைக்கு
நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்துக் கட்சியைச்
சேர்ந்தவர்களையும் இதில் இணைத்து ஒரு கட்சியைச்
சேர்ந்தவர் சட்டசபையில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டா
லும் சரி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கட்சிக் காரர்
களையும் சேர்த்து, குழுக்களை மாவட்ட அளவில், தாலூகா
அளவிலே, தல அளவிலே இந்தக் குழுக்களை அமைக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் குழுக்களின் மூல
மாக அவர்கள் 15 நாட்களுக்கு ஒரு முறை கண்காணிப்
பதற்கும், விவாதிப்பதற்கும் திறம்பட வேலைகளைச் செய்
வதற்கும் நாம் வழிவகை செய்ய வேண்டும். அதிலே ஏற்
படும் தவறுகளைத் தடுக்க முடியும் என்று நான் தெரி
வித்துக்கொள்கிறேன.

அடுத்து நான் வற்புறுத்துவது, இன்றைக்கு நம்முடைய கிரா
மப்பகுதியிலே மண்ணெண்ணெய் கூட கிடைக்காத நிலையின்
விவசாயிகள் திண்டாடுகிறார்கள். நேற்றுக்கு முதல் நாள்
இரவு அகில இந்திய ரேடியோவிலே மாவட்டச் செய்தி [illegible]

என்பதை எடுத்துச்சொல்லி, நமது அரசு இதுகாறும் செய்திருக்கிற சேவையை எண்ணி திருச்சி மாவட்ட மக்கள் குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் நன்றியோடு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வறட்சி கடுமையாக இருப்பதால் நமது அரசு இன்னும் அதிக நிதி ஒதுக்கித் தந்து, வறட்சியைப் போக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உறையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(மாலை 4.40)

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறட்சியை ஒட்டி வைத்துள்ள இந்த வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் கடந்த 3 ஆண்டுகளாக தொடர்ந்து மழை ஒவ்வொரு ஆண்டும், ஆண்டுக்கு ஆண்டு தவறிக் கொண்டு வந்திருக்கிறது என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இந்த ஆண்டு அது முழுவதுமாக பொய்த்து விட்டது என்று சொன்னாலும் அது மிகையாகாது என்று கருதுகிறேன். ஏனெனில், தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் வறட்சி ஏற்பட்டு உள்ளது என்பதை அரசே அவர்களுடைய அறிக்கையில் ஒப்புக் கொண்டிருக்கிறது. எல்லா மாட்டங்களிலும் எந்த அளவுக்கு இந்த வறட்சியின் நிலைமை கூடுதலாக இருக்கிறது. நீர்ப்பாசனம், குடிநீர் மற்றும் எல்லாவித வகையிலும் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரங்களை அவர்களே புள்ளி விவரத்தோடு கொடுத்திருக்கிறார்கள்.

குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 45 லட்சம் மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியில் 2,972 ஏரிகள் இருக்கின்றன. மொத்தம் உள்ள இந்த 2,972 ஏரிகளில், ஓரளவு நீர்ப்பிடிப்பு உள்ள ஏரிகள் என்று மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்பட்டதில், ஒரு மாத காலத்திற்குத்தான் தண்ணீர் கிடைக்கும் அதுவும் 17 ஏரிகளில் மட்டும்தான் இருப்பதாகச் சொன்னார்கள். 15 தினங்களுக்கு முன்பு தான் அதையும் சொன்னார்கள். அதுவும் குறைந்திருப்பதாக இப்போதிருக்கிற அறிக்கையிலே வந்திருக்கிறது.

இந்த நெருக்கடி நிலை கட்டத்தில் கிராமப்புறங்களில் வாழ்கிற மக்கள், கிராமப்புறங்களில் உள்ள சாதாரண ஏழை, எளிய விவசாயிகள் 4 லட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்த அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறார்கள். சராசரி 50 சதவீதம் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

ஆனால் இந்த நிலைமையை தவிர்ப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை இருக்கிறதே, அது மிகமிக குறைவான தொகை. 1 கோடியே 40 லட்சம் ரூபாய் இதற்காக வேண்டி ஒதுக்கியிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்த வேலைகள் நடப்பதற்காக, மற்றும் சில வசதி வாய்ப்புகளுக்காக என்று குடிதண்ணீருக்காக 30 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டுச் செல்ல வேண்டும் என்று ஒரு லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

இப்படி லாரியிலிருந்து தண்ணீரைக் கொண்டுச் செல்வது என்கிற பிரச்னை இருக்கிறதே, அதை எங்கேயிருந்து, எப்படி எந்தக் கிராமங்களுக்கு கொடுப்பது என்று தெரியவில்லை. ஏனென்றால் ஓரளவு தண்ணீர் இருக்கிற கிராமங்களில் குடிக்கிற தண்ணீர் குறைந்த அளவுதான் இருக்கிறது. அந்த தண்ணீரை எடுத்து இன்னொரு கிராமத்திற்கு கொடுப்பது என்பது எப்படி சரியாகும்? நிலத்தடி தண்ணீரை எடுப்பதற்கு ஆங்காங்கே துளைகளைப்போட்டு குழாய்போடுகிறோம். கிணறுகளோ வற்றி போய்விட்டது. இதற்கு ஒரு லட்சம் ரூபாய் தான் ஒதுக்கீடு என்று சொன்னால் போதுமா? ஒரு லாரிக்கு எவ்வளவு லோடு வரும், அதை எங்கிருந்தெல்லாம் எடுப்பது என்பதை எல்லாம் கணக்குப்போட்டு பார்க்க வேண்டும். ஆகவே, தண்ணீருக்காக ஒதுக்கியிருக்கின்ற தொகை மிகக் குறைவான தொகை.

ஏறத்தாழ 45 லட்சம் மக்கள் வாழ்கின்ற ஒரு பெரிய மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம். அதற்கு இவ்வளவு குறைவான அளவில் நிவாரணப் பணிகளுக்காக பணம் ஒதுக்கினால் அது போதாது என்று சொல்லிக்கொண்டு, இன்னொரு முக்கியமான விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிவாரண வேலைகள் நடைபெறுவதை கண்காணிக்க பொதுமக்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். ஏற்கெனவே மக்கள் குழு என்ற ஒன்று இருக்கிறது. அதில் எல்லாக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட பிரச்னைகள் இல்லாமல், இந்த வேலைகள் நன்கு சீராக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க, அனைத்துக் கட்சிகளையும் அடங்கிய கமிட்டியை போடவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இதில் இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்தப் பணிகளை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், பாரபட்சமாக அவர்களுக்கு வருமானம் வரக்கூடிய வேலைகளாக பார்த்து முதலிலே செய்கிறார்கள். உதாரணமாக எங்கள் மாவட்டத்திலே 2972 ஏரிகளிலே தூர் எடுக்கிற பணி முதலிலே நடக்க வேண்டும் என்று சொன்னால், சில இடங்களில் கால்வாய்கள், கண்மாய்கள், குளம், குட்டைகள்

என்று இருக்கும் இடங்களில் ஆக்கிரமிப்பு இருக்கும். தண்ணீர் பிடிப்பு உள்ள இடங்கள் அனைத்தும் சில பகுதிகளில் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. அவர்களையெல்லாம் எந்தவித தயவு தாட்சண்யமும் காட்டாமல், இந்த நிவாரணப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த இடங்களிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். அத்தகைய நிலையான கடுமையான நடவடிக்கைகளை அரசு அதிகாரிகள் எடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் இருந்தால், இன்னும் சில ஆண்டுகளில் எங்கள் மாவட்டத்தில் தண்ணீரே இருக்காது. இதிலே முக்கியமாக நான் சொல்ல விரும்புவது, தற்போது இருக்கிற நிலைமை அப்படியே நீடிக்கப்பட்டு வருமேயானால் என்ன நிலைமை உண்டாகும் என்று சொல்வதற்கே அச்சமாக இருக்கிறது. என்னுடைய பாட்டி காலத்திலே 10 அடி தண்ணீர் இருந்திருக்கும் என்னுடைய அப்பா காலத்தில் 30 அடி, என்னுடைய மகன் காலத்தில் 60 அடி, பேரன் காலத்தில் நிலைமை என்ன ஆகும் என்பதே தெரியாமல் போகின்ற வகையிலே நிலைமை போய்க்கொண்டிருந்தால், இன்னும் 25 ஆண்டுகாலத்திலே தமிழ்நாடு நிரந்தர வறட்சி ஏற்பட்டு பாலைவனமாக மாறும் என்பதை மட்டும் சொல்லிக்கொண்டு அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறக்கூடாது என்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீர் பிடிப்பு நிலங்களைப் பாதுகாக்கவேண்டும், அதற்கு வேண்டிய அனைத்து வேலைகளையும் செய்யவேண்டும். இன்றைக்கு தேசிய நீரோட்டம் என்று சொல்கிறார்கள். தேசிய ஒருமைப்பாடு என்று கொண்டாடுகிறோம். ஆனால் பக்கத்தில் உள்ள மாநிலத்திலே இருந்து நமக்கு மின்சாரம் கிடையாது. இன்னொரு மாநிலத்திலே இருந்து நீர் கிடையாது. மற்றொரு மாநிலநிலத்திலே இருந்து அரிசி கிடையாது. இப்படிப்பட்ட மூன்று மாநிலங்களுக்கிடையே நம்முடைய மாநிலம் இருக்கின்றது. எனவே இப்படிப்பட்ட நிலைமையில் நாம் எல்லாம் ஒன்று சேர்ந்து மத்தியஅரசோடு போராடுகின்ற வகையிலே அரசியல் ரீதியாக இருக்கின்ற அனைத்துபேரும் சேர்ந்து ஒரு கமிட்டியாக ஏற்படுத்தி ஒன்று சேர்ந்து எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். அப்படி ஒரு கமிட்டியை ஏற்படுத்த மத்திய அரசோடு போராட மாநில அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறட்சி நிலைமை பற்றிய இந்த அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்த உங்களுக்கு முதற் கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் வரலாற்றிலேயே முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது கடுமையான வறட்சி நிலவுகிறது என்றாலும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அந்தக் கொடுமை தணியத்தக்க அளவுக்கு வேண்டிய நடவடிக்கைகளை மிக விரைவாகச் செய்து வருவது நல்ல இதயம் படைத்த அனைவராலும் பாராட்டப்படுகின்றது. இன்றைக்கு என்னுடைய பகுதியான பெரியார் மாவட்டத்திலே காளிங்கராயன் கால்வாய்ப் பாசனம் மற்றும் கீழ்பவானிப் பாசனம் போன்ற இடங்களிலே இந்த ஆண்டு எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு வறட்சி நிலைமை நிலவுகின்றது. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கொடுமுடி ஒன்றியத்திலே அய்யம்பாளையம் ஊராட்சி எழுநூற்றுமங்களம் ஊராட்சி, அஞ்சூர் ஊராட்சி ஆகிய ஊராட்சிகள் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று மொடக்குறிச்சி ஒன்றியத்திலே அட்டவணை அனுமன்பள்ளி ஊராட்சி, அஞ்சுராம்பாளையம், பழைய பாளையம், ஊஞ்சம்பாளையம், வெள்ளிவலசு ஆகிய ஊர்கள் வறட்சியின் கடுமையில் சிக்கி உள்ளன. ஆகவே உடனடியாக குடிநீர் வசதிக்கு அங்கே ஏற்பாடு செய்து ஆழ்குழாய் கிணறுகளை அமைத்து அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு குடி தண்ணீர் வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே வாழ்கின்ற மக்களுக்குக் குறிப்பாக வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்கும் வேளாண்மைக் கூலித் தொழிலாளர்களுக்கும் மாற்றுத் தொழில்களை உருவாக்கித் தரத் திட்டமிட்டுச் செயலாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காளிங்கராயன் கால்வாய்ப் பாசனப்பகுதியிலே தற்போது சுமார் 12 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர் அறுவடை நிலையில் இருக்கின்றது. ஆனால் தற்போது அந்தக் கால்வாயிலே தண்ணீர் இல்லாத காரணத்தால் அந்தப் பயிர்களை முழுமையாக அறுவடை செய்ய முடியுமா என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இன்னும் 15 நாட்களுக்கு அந்தக் கால்வாயில் தண்ணீர் விட்டால் அங்கே முழு அறுவடையினைச் செய்ய முடியும். தற்போது அங்கே நல்ல விளைச்சல் இருக்கின்ற சூழ்நிலையில் இன்னும் 15 நாட்களுக்கு அந்தக் கால்வாயிலே தண்ணீர் விட்டால் மிக நல்ல விளைச்சல் வரத்தக்க வாய்ப்பு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து குந்தா மற்றும் பில்லூர் போன்ற மின்சார உற்பத்திக்காகக் கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களில் உள்ள தண்ணீரைக் கீழ்பவானி அணைக் கட்டிற்குத் திறந்துவிட்டு அங்கிருந்து காளிங்கராயன் கால்வாயின் மூலமாக அந்தத் தண்ணீரைக் குறைந்தது 15 நாட்களுக்கு விட்டால் அங்கே நல்ல அறுவடை வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

[திரு. எம் அண்ணாத சன்] [1983 பிப்ரவரி 1௦

திருச்சி மாவட்டம், காவிரி ஆற்றையும், அமராவதி ஆற்றையும் பாசன வசதிக்காக நம்பியிருக்கும் மாவட்டமாகும். அமராவதி ஆற்றுப் பாசனம் மூலம் கரூர் பகுதியில் ஒரு பகுதிக்கு பாசன வசதி அளித்தபோதிலும், காவிரி ஆறு திருச்சிக்கு மேற்கே சுமார் 50—60 மைலுக்கு அப்பால், கிழக்கே இருக்கும் தஞ்சை மாவட்டத்தின் கடைசி பகுதி வரைக்கும் பாய்கிறது.

காவேரியில் இந்த ஆண்டில் ஏற்பட்டிருக்கிற நிலைமை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் ஆட்சியை எதிர்க்கின்ற சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தால் ஆளும் கட்சியினரை குறைகூறுகிறார்கள். ''நீங்கள் பொறுப்பு, நீங்கள் பொறுப்பு'' என்று, உள்ளபடியே நீங்கள் உண்மையை ஒத்துக்கொண்டாலும் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றபோது எதிர்க்கட்சி என்ற காரணத்தால், எதிர்க்கின்ற சூழ்நிலையால் எதிர்த்தே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் உணர்கிறேன்.

காவேரி வறண்ட வரலாறு இதுவரையில் கிடையாது. ஆனால் இன்றைக்கு நிலைமை மாறுபட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்திலே ஓரளவுக்கு செழிப்பான மேற்குப் பகுதியில் வாழுகின்ற மக்கள் இன்றைக்கு வெகுமோசமாகப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அங்கே வாழைப் பயிர் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. திருச்சிக்கு மேற்கே இருக்கிற டெல்டா ஆயக்கட்டுப் பகுதி இன்றைக்கு ஒருமுறை தண்ணீர் விட்டால் போதும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. வடக்கே பெரம்பலூரிலிருந்து ஜெயங்கொண்டாம் வரை ஆற்றுப்பாசனம் இல்லாத காரணத்தால் அந்தப் பகுதி கடுமையான வறட்சியில் சிக்கி இருக்கிறது. அந்தப் பகுதி எந்த நிலையில் இருக்கும் என்று நான் சொல்லாவிட்டாலும் அரசு தரப்பிலே இருக்கிற அதிகாரிகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, எனது தொகுதியான திருவரும்பூர் தொகுதியில் மேற்குக் கட்டளை வாய் கால் என்ற வாய்க் கால் இருக்கிறது, வடக்கே லால்குடி தொகுதியில் புள்ளம்பாடி வாய்க்கால் இருக்கிறது இடையிலே உய்யகொண்டான் வாய்க் கால் ஓடுகிறது. இன்றைக்கு இந்த மூன்று பிரதான வாய்க்கால் களும் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கின்றன. இந்தக் கால்வாய்களுக்கு தண்ணீர் இல்லாத காரணத்தால் தண்ணீர் நிறுத்தப்பட்டது என்ற விவரத்தை ஏற்கனவே அறிக்கை மூலம் தெரிவித்து, நிறுத்தியது அந்த மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

வறட்சி என்ற சூழ்நிலை ஆரம்பித்திருந்த காலத்தில், இடையிலே திடீரென்று பருவமழை ஒருசில நேரத்தில் பெய்த காரணத்தால் விவசாயிகள் அங்கே குளங்களில் ...ட்டு இருக்கிறேன்.

1983 பிப்ரவரி 10] [திரு. எம். அண்ணாதாசன்]

நிரப்பி வைத்திருந்த தண்ணீரைக்கொண்டு விவசாயம் செய்தார்கள். விவசாயம் செய்து, வளர்ந்து வந்து, அறுவடைக்கு நெருங்கி வந்த நேரத்தில் தண்ணீர் இல்லாத நிலையில் வானத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் விவசாயிகள். இந்த நேரத்தில் நாங்கள் இந்த அரசின் மூலம் அவர்களுக்கு அனுதாபத்தை தெரிவிக்க முடியுமே தவிர எங்களால் வேறு என்ன செய்ய முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இருந்தபோதிலும் அவர்களுக்கு உயிர் கொடுத்தே தீருவோம் என்ற அடிப்படையில் இந்த அரசு கடந்த பத்து தினங்களுக்கு முன்னாலே ஒருமுறை தண்ணீர் கொடுத்து பாதுகாத்திருக்கிறது. தொடர்ந்து பாதுகாப்பு தருவதற்கு மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்கு உறுதி அளித்திருக்கிறார்கள் என்பதை நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் திருச்சி மாவட்டம் மிகக் கொடுமையான வறட்சிக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இது இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றாகத் தெரியும். எல்லோரும் திருச்சி மாவட்டத்தைப்பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள் தான். இன்றைக்கு தமிழ்நாட்டை ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால் திருச்சி மாவட்டம் தமிழ்நாட்டின் இதயம் என்று சொல்லக்கூடியநிலையில் இருக்கிறது. எங்கிருந்து வந்தாலும் திருச்சிக்கு வந்துதான் செல்லவேண்டும்; எங்கே போவதாக இருந்தாலும் திருச்சிக்கு வந்துதான் போக வேண்டும் என்பதை எல்லோரும் உணர்வார்கள். இதயம் போன்ற அந்த மாவட்டத்தில் இன்றைக்கு தண்ணீர் பஞ்சம் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, திருச்சி மாவட்டத்திற்கும், எனது தொகுதியான திருவரும்பூர் தொகுதிக்கும் இந்த வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிற தொகையை தயவுசெய்து இன்னும் அதிகப்படுத்தித் தரவேண்டும், விரிவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு 190 கோடி ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக கேட்டிருக்கிறது மத்திய அரசிடம். அந்த நிதியை அவர்கள் எப்போது தருவார்கள் என்று நாம் ஏங்கி நிற்பதைவிட தயவுசெய்து இங்கே இருக்கிற எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் நீங்கள் இங்கே தட்டிய மேசையை அவர்கள் அங்கே தட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் பிரதம அமைச்சருக்கு கேட்கும் என்பதால் இதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க எங்கள் மாவட்டத்தில் 560-க்கு மேற்பட்ட ஆழ்குழாய் கிணறுகளை அமைத்தார்கள். இன்னும் அதிகமாக ஆழ்குழாய் கிணறுகளை அங்கே அமைக்க வேண்டும். ஏனென்றால் திருச்சி மாவட்டத்தில் குடிநீர் பஞ்சம் மிகக் கடுமையாக எப்போதும் இல்லாத அளவுக்கு இருக்கிறது

[திரு. ச. பாலகிருஷ்ணன்] [1983 பிப்ரவரி 10

அடுத்து பரம்பிக்குளம், ஆளியாறு பாசனப் பகுதிகளிலே குறிப்
பாக காங்கயம் பகுதியிலே இந்த ஆண்டு தண்ணீர் சரியாக
இல்லாததால் அந்தப் பகுதியிலே வறட்சி மிகவும் கடுமையாக
இருக்கின்றது. எனவே, அந்தப் பகுதியிலே குறைந்தது ஒரு மாத
காலத்திற்காவது கால்வாயிலே தண்ணீர் விட்டு அந்தப் பகுதி
யிலே உள்ள குடிதண்ணீர் பஞ்சத்தைப் போக்க ஏற்பாடு
செய்யவேண்டும்.

(மாலை 4.50).

அதேபோல் கீழ்பவானி பாசன கால்வாயிலே இரண்டாம்
போகம் பாய்வதற்கு ஒரு 15 நாட்களுக்கு தண்ணீர் விட்டு மாவட்
டத்தில் இருக்கின்ற ஏரி, குளங்களை நிரப்பி குடிதண்ணீர் பிரச்
சனையை போக்க வேண்டும். இவ்வாறு ஏற்பாடு செய்தால்
அந்த அந்த பகுதியில் இருக்கிற மக்கள் குடிதண்ணீர் வசதி
பெறுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. எனவே அணைகளில்
இருக்கிற தண்ணீரை 2 ஆம் போகத்திற்கு கீழ்பவானி கால்வாயில்
தண்ணீர் விட்டு இந்த மாவட்டத்தில் இருக்கிற ஏரி, குளங்களை
நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு
இந்த அறிக்கையின் மீது எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு
நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த அவை முன் வைக்கப்பெற்றிருக்கிற வறட்சி
மீதான அறிக்கை மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண்
என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

வட கிழக்கு, தென்மேற்கு பருவ மழை பொய்த்ததன்
காரணமாக குறிப்பாக 1982 ஆம் ஆண்டு சராசரியான அளவைக்
காட்டிலும்மிகக் குறைந்தஅளவு மழைபொழிந்து தமிழகம் எங்கும்
கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. மிகவும் பாதிப்புக்குள்
ளான மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டம் ஒன்று, என்று
சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். இராமநாதபுரம்
மாவட்டம்மிகவும்பாதிக்கப்பட்டிருக்கிறது.குறிப்பாக என்னுடைய
மானாமதுரை தொகுதியில் பல கிராமங்களில் விவசாயம் துவங்கப்
பட்டது, அப்படி கிராமங்களில் துவங்கப்பட்ட அந்த விவசாயம்
தண்ணீர் இல்லாத காரணத்தால் சாவியாகி விட்டது. பல கிரா
மங்களில் விவசாயமே செய்யவில்லை. ஆகையால் ஒரு பக்கம்
கையிலிருந்த விதை, பணத்தை எல்லாம் செலவு செய்துவிட்டு
இன்றைக்கு விவசாயிகள் பெரிய நஷ்டத்துக்கு உள்ளாகி இருக்
கிறார்கள். மழை இல்லை என்றால் விவசாயம் இல்லை. விவ
சாயம் இல்லை என்றால் வேலை இல்லை. இன்றைக்கு வேலை
யில்லா திண்டாட்டம் மிகவும் கொடுமையான நிலையில் இருக்
கிறது.

1983 பிப்ரவரி 10] [திரு. க. பாரமலை]

வறட்சி நிவாரண வேலைகளை உடனடியாக துவக்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய மாவட்
டத்தில் கண்மாய்கள் அதிகமாக இருக்கின்றன. இந்த கண்மாய்
களில் பல ஆண்டுகளாக தூர் எடுக்காததால் தண்ணீர் கொள்ள
ளவு மிகவும் குறைவாக இருக்கிறது. அதனால் அதிகமாக
தண்ணீரை தேக்கி வைக்க முடியவில்லை. ஒரு தடவை தேக்கி
வைத்தால் அது முழு விவசாயத்திற்கு போதவில்லை. மறுபடியும்
தண்ணீர் தேக்கினால் தான் விவசாயத்திதை பூர்த்தி செய்யக்
கூடிய நிலையில் இருக்கிறது. ஆகையால் அந்த கண்மாய்களை
ஆழப்படுத்தி,கரையை பலப்படுத்தி ஒரே தடவையாக தண்ணீரை
தேக்கி வைத்து முழு விவசாயத்திற்கும் பயன்படும் வகையில்
செய்யவேண்டும். மழை இல்லாத காரணத்தால் இன்றைக்கு
எங்கள் மாவட்டம் பெரிதும் பாதித்து இருக்கிறது.

அதேபோல் 1975, 1979 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்
ளம் காரணமாக பல கண்மாய்கள் சீர்குலைந்துபோய்விட்டது.
கண்மாய்களிலிருந்து வரும் கால்வாய்களும் சீர்குலைந்துபோய்
விட்டன. இவைகளை எல்லாம் சீர்திருத்தவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

திருப்புவனம், பெரவலூர், பழையனூர், குறிகுலம், திருப்ப
சேத்தி, மாங்காடு, கானூர், குவனவேலி, கீழநெல்குடி போன்ற
பெரிய கண்மாய்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட வறட்சிக்
காலங்களில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் அவை
களை எல்லாம் இந்த நிவாரண வேலையில் எடுத்துக்கொண்டு
செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சி பகுதி
களிலே முனைப்பாக செயல்படுகிற விதத்தில் குறிப்பாக இந்த
கிராமங்களில் பால் மாடுகள் வழங்குவதற்கு வரைமுறைகள் இருக்
கின்றன. அதிலே நிதி வசதியை அதிகப்படுத்தி எல்லோருக்கும்
மாடுகள் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

கம்யூனிட்டி வெல்ஸ்கீம் என்ற ஒரு திட்டம் மிகவும் பயன்
உள்ளதாக இருக்கிறது. இது மத்திய அரசின் உதவியுடன் நடத்
தப்படுகிற திட்டம். மார்ச் 31-க்கு பிறகு நீட்டிக்க கூடாது
என்று சில ஒன்றியங்களிலே விட்டு இருக்கிறார்கள். அந்த
ஒன்றியங்களில் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிற காரணத்தால்
வறட்சி நேரத்திலே அவைகளை நிறுத்தக்கூடாது என்று நாங்கள்
வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் போட்டு அரசுக்கு
அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசு அதற்கு நிதி கொடுக்கா
விட்டாலும் மாநில அரசு தன்னுடைய நிதியை ஒதுக்கி அந்த
திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

குறிப்பாக இந்த வறட்சி என்ற தகவல் வந்தவுடன் அரசு
முனைப்பாக நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறது என்பதை
பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது கிராமங்களிலே
விளைச்சலும் இல்லை. விலைவாசியும் ஏறிக்கொண்டு இரு

கிறது. இந்த நிலையில் நியாய விலைக் கடைகளை அமைத்து இதிலே பொது ஏற்பாட்டின் மூலமாக உணவு தானியங்களை கிராம மக்களுக்கு தங்கு தடையின்றி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு தானியங்களின் பற்றாக்குறை இருப்பதால், அதை போக்க மத்திய அரசை கோரி பெறுவதற்கு சகல கட்சியின் ஒத்துழைப்பையும் பெற்று ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல கிராமங்களிலே இன்றைக்குக் குடிநீர் இல்லாமல் பற்றாக் குறை கடுமையாக இருக்கிறது. குறிப்பாக இடையாத்தூர் போன்ற பல கிராமங்களிலே 3 மைல் தூரம் நடந்துபோய் தண்ணீர் தூக்கிக்கொண்டு வரவேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த நேரத்திலே மழை பெய்தது. மழை பெய்ததால் தேங்கி யிருக்கின்ற தண்ணிரை எடுத்து 3 மைல் நடந்துபோக வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலே லாரிகளிலே தண்ணீரை எடுத்துவந்து மக்களுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மத்திய அரசிடம் 190 கோடி ரூபாய் தோராய மாக மதிப்பிட்டு கேட்டிருக்கிறோம். நிச்சயமாக அதுபோதாது. வறட்சி நிவாரண வேலைகள் நிரந்தர நிவாரண வேலைகளாக இருக்கவேண்டுமென்றால் அதிகமான தொகை தேவைப்படும். அதைப் பெறுவதற்கு மாநில அரசு முயற்சி செய்யவேண்டும்.

வரிவஜாவைப் பொறுத்தவரையில்—மகாராட்டிர மாநிலத் திலே ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு அனாவாரியைப் பொறுத்த வரையில் எவ்வளவு என்று அவர்கள் அங்கே உள்ள விவசாயி களைக் கேட்டுக்கொண்டு, விவசாயிகள் அடங்கிய குழுவைக் கேட் டுக்கொண்டு நிர்ணயிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது — அதைப் போன்று இங்கேயும் குழுவை அமைத்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளுக்குத் தீவனப் பற்றாக்குறை அதிகமாக இருக் கிறது என்பது மட்டுமல்ல, அந்த இனத்தைக் காப்பாற்றவேண்டு மென்றால் வெளிமாநிலங்களிலிருந்தாவது இறக்குமதி செய்து தீவனங்களை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் இணைப்பு, பணத்தைக் கட்டியும்கூட கொடுக்க மறுக் கின்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் ஒரு பகுதியைச் செலுத் தினால் கூட மின் இணைப்புக் கொடுக்கவேண்டுமென்ற நிலை மையை ஏற்படுத்தவேண்டும்.

இப்படி முனைப்பாக சில நடவடிக்கைகளை எடுப்பதன் மூல மாக வறட்சி நிலையைப் போக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

இறது.

திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வறட்சி நிலைகுறித்த அறிக்கையின்மீது பேச வாய்ப் பளித்தமைக்காக நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

எனதுபுதுக்கோட்டை மாவட்டத்திலே இரண்டாண்டுக்காலமாக
மழைபொய்த்துவிட்ட காரணத்தினால் கடுமையான வறட்சி
ஏற்பட்டுபுதுக்கோட்டை மாவட்ட மக்கள் எல்லோரும்இந்தஆண்டு
மட்டுமல்ல, சென்ற ஆண்டும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்
கிறார்கள், எங்கே பார்த்தாலும் குளத்திலேயும் கிணற்றிலேயும்
தண்ணீர் இல்லாத அளவுக்கு வறண்டு கிடக்கின்றன. புதுக்
கோட்டை மாவட்டத்திலே 677 கிராமங்களிலே 5,540 பொதுப்
பணிக் குளங்கள் இருக்கின்றன. எந்த ஏரியிலும் தண்ணீர்
இல்லை. புதுக்கோட்டை மாவட்டத்திலே கவநாடு கண்மாய்
என்பது தமிழகத்திலேயே மிகப் பெரிய கண்மாய் ஆகும். அங்கே
இரண்டாண்டு காலமாக தண்ணீர் வரவில்லை. நிரம்பவில்லை.
ஆகவே புதுக்கோட்டை மாவட்டத்திலே கடுமையான வறட்சி
இருக்கிறது. கரம்பக்குடி, ஆலங்குடி, கீரமங்கலம் வட்டாரங்கள்
குடிநீர் இல்லாமல் அங்கே உள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.
அறந்தாங்கித் தொகுதி, ஆவுடையார் கோவில், மணல்மேல்
குடி ஆகிய இடங்கள் கடுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்டு
குடிநீர்கூட இல்லாத நிலை இருக்கிறது. மக்கள் சாகுபடி செய்ய
முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். திருமயம் தொகுதியும்
கடுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. கொளத்தூர்
குன்னாண்டார் கோயில், விராலிமலை ஒன்றியங்களில் கடுமை
யான வறட்சி நிலவுகிறது. புரட்சித் தலைவர் அவர்கள் தமி
ழகத்திலே புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 93 லட்ச ரூபாய்
ஒதுக்கி உதவி செய்து வறட்சி வேலைகள் நடந்துகொண்டிருக்
கின்றன. இருந்தாலும் அந்தப் பணம் போதாது, மத்திய அரசின்
நிதியோடு சேர்த்து அதிகமான நிதியை ஒதுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்பு பேசிய கம்யூனிஸ்ட் கட்சித்
தோழர் திரு. வரதராஜன் பேசும்போது வறட்சிப் பணிகளைப்
செய்யும்போது அரசியல் கண்ணோட்டம் இல்லாமல் அரசு செய்ய
வேண்டுமென்று சொன்னார்கள். புரட்சித் தலைவர் அவர்கள்
வறட்சி வேலைகளாக இருந்தாலும், உணவுக்கு வேலைத்திட்ட
மாக இருந்தாலும், சத்துணவுத் திட்ட வேலையாக இருந்தாலும்
எந்தத் திட்டமாக இருந்தாலும் அரசியல் [illegible] இல்லாமல்
பொதுமக்களைப் பார்த்து அவர்களுக்கு நிரந்[illegible] பங்கீடுசெய்வார்
களே ஒழிய அரசியல் கண்ணோட்டம் இப்போது மட்டுமல்ல,
எப்போதும் பார்க்கவில்லை என்பதை எதிர்க்கட்சிகளுக்கு நான்
தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில் புரட்சித்தலைவர் அவர்
கள் வறட்சிக்காக அவர்போட்டுள்ள திட்டங்கள் அத்தனையை[illegible]
சிறப்பாக செயல்படுத்த அவர் முனைப்போடு இருக்கிறார்
என்பதை நேற்று அவர்கள் உண்ணாவிரதம் இருந்ததிலேயே
நன்கு அறிவீர்கள். புரட்சித் தலைவர் அவர்கள் வறட்சியைப்
போக்குவதற்கு போட்டிருக்கிற திட்டங்களை திறமையாக
செயல்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்[illegible]

(திரு. பெ. திருமாறன்) [1983 பிப்ரவரி 10

(மாலை 5.00)

புதுக்கோட்டை மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்ட
மும், மிகவும் வறட்சியான மாவட்டங்களாகும், என்று புரட்த்
தலைவர் கூறினார்கள். காவிரி-கட்டளை கால்வாய் திட்டத்தை
அமல் படுத்தி புதுக்கோட்டைக்கு கொண்டுவருவதற்கு திட்டம்
தீட்டினார்கள். அந்தத் திட்டத்தை துரிதப்படுத்தினால்
மழைக்காலங்களில் தேவைக்கு மேலே வருகிற உபரி தண்ணீரை
புதுக்கோட்டைக்கு கொண்டு வரலாம. ஆகவே, இந்தத்
திட்டத்தைதுரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையில் குடிநீர் பஞ்சம் அதிகமாக இருக்கிறது.
ஆறுகளை தேக்கி சிறு சிறு அணைகளை கட்டினால் தண்ணீர்
வீணாக கடலில் போய் விழுவதைத் தடுக்கலாம். இந்த அரசு
வந்த பின்னால்தான் புதுக்கோட்டை மாவட்டத்தில் அரிமளம்,
ஆலங்குடி போன்ற இடங்களில் 10, 12 சிறு சிறு அணைகளை
கட்டினார்கள். இன்னும் இது போன்று அணைகளை கட்டினால்
உபரித் தண்ணீரை ஏரிகளில் சேமித்து விவசாயத்திற்கு பயன்
படுத்தலாம். சிறு சிறு அணைகள் கட்டுவதற்கு பல திட்டங்கள்
இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றித் தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மன்னர் ஆட்சியில் இருந்த பகுதி. புரட்சித்
தலைவர் ஆட்சி வந்த பின்தான் பல திட்டங்களை செயல்படுத்தி
அந்த மாவட்டத்தை முன்னேறச் செய்திருக்கிறார்கள். அமைச்
சர்கள் அனைவரும் புதுக்கோட்டைக்கு வந்து வறட்சியை நேரில்
பார்வையிட்டு சென்றிருக்கிறார்கள். ஆகவே, அதிக நிதி ஒதுக்கீடு
செய்து புதுக்கோட்டை மாவட்டத்தின் வறட்சியை போக்கு
வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு முடித்துக்
கொள்கிறேன்.

*திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சட்ட மன்றத்தில்
வைத்திருக்கிற வெள்ளை அறிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு
கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
இன்றைக்கு தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலை குறித்து
அரசு எடுத்திருக்கிற நடவடிக்கையில் தர்மபுரி மாவட்டத்திற்கு
என்று ஒதுக்கியிருக்கிற தொகை வேறு சில மாவட்டங்களை விட
மிகவும் குறைவாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்று நான் சொன்
னால் அரசு தரப்பிலே வருத்தப்படமாட்டார்கள் என்று
நினைக்கிறேன். காரணம் தர்மபுரி மாவட்டம் மிகவும் வறட்சி
யான மாவட்டம். சென்ற ஆண்டு தென்மேற்கு பருவ மழை,
வடகிழக்கு பருவ மழை இரண்டும் தவறி, இயற்கை மழை
பொய்த்ததன் காரணமாக மக்கள் குடிதண்ணீருக்கே மிகவும்
அவதிப் படுகிறார்கள், என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க
கடமைப்பட்டிருக்கிறேன்.

1983 பிப்ரவரி 10] (திரு. க. இரா. சின்னராசு)

ஆண்டிற்கு சராசரியாக எங்கள் மாவட்டத்தில் பெய்கிற
மழை அளவு 843·6 மி.மி. என்று இங்கே அரசு கொடுத்திருக்கி
றது. சென்ற ஆண்டு பெய்த மழையினுடைய அளவு 537 மி.மி.
என்றும் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் கொடுத்திருக்கிற
அறிக்கையில் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலும், சின்னார் நீர்
தேக்கத்திலும் சுமாராக தண்ணீர் வந்ததாகக் குறிப்பிட்டு இருக்
கிறார்கள்.

நான் அரசுக்கு எடுத்துச் சொல்ல விரும்புவதெல்லாம், அங்கே
கொஞ்சம் தண்ணீர் வந்தாலும் அது முதல் கிராப்புக்குத் தான்
பயன்பட்டது. அதனால் எந்தவிதமான விவசாயமும் செய்ய
முடியவில்லை. காலந்தாழ்ந்து மழை பெய்த காரணத்தினால்,
விவசாயம் செய்ய முடியவில்லை. இரண்டாவது கிராப் செய்வ
தற்கு கொஞ்சம் தண்ணீர் விட்டார்கள். இன்றைக்கு அந்தப்
பயிர்கள் எல்லாம் பாதியிலே வாடிக்கொண்டு, வளரவும் முடியா
மல், அவர்கள் அந்தக் கிராப்பை எடுக்கவும் முடியாமல் மிகுந்த
நஷ்டத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப்பகுதியையும்
வறட்சிப் பகுதியாக சேர்த்து அறிவிக்க வேண்டுமேன்று
கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே நீர்த்தேக்கம் இருக்கிற காரணத்தினால், வறட்சி
நிலைமை இல்லை என்று அதிகாரிகள் குறிப்பு தந்திருந்தாலும்
கூட, அதை மாற்றி அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதியாக அறி
விக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

40 இலட்சம் ரூபாய், குடிதண்ணீர் கிணறுகள் ஆழப்படுத்தவும்
விவசாய கிணறுகள் அமைப்பதற்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
மேலும், 20 இலட்சம் ரூபாய் மாவட்டத்திலே உள்ள மக்களுக்கு
வேலைவாய்ப்பை கொடுக்கின்ற வகையிலே ஒதுக்கியிருப்பதாகவும்
சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்
கையிலே, அங்கே இருக்கிற விவசாய கூலியாட்கள் பாதிக்கப்
பட்டிருக்கின்ற கிராமத்தினுடைய எண்ணிக்கை 192 என்று
கொடுக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டிருக்கிற மொத்த
மக்களின் எண்ணிக்கை 2·3 இலட்சம் என்று சொல்லப்பட்டிருக்
கிறது. இது மிகவும் குறைவான கணக்காகும்.

தர்மபுரி மாவட்டத்திலே ஏதோ ஒரு பகுதியிலே தொழிற்
சாலைகள் இருந்தாலும்கூட, மற்ற எல்லாப் பகுதிகளும் விவ
சாயத்தை நம்பியே இருக்கின்ற பகுதிகளாகும். எனவே, இங்கே
கொடுக்கப்பட்டிருக்கின்ற கணக்கு சரியானதல்ல என்று சொல்லிக்
கொள்கிறேன். இன்னும் அதிகமான தொகையை இந்த அரசு
ஒதுக்கித் தந்து, தர்மபுரி மாவட்டத்திலே இருந்து, மற்ற மாவட்
டங்களுக்கு வேலை தேடி செல்கிற நிலைமையை மாற்ற, நிரந்தர
மான பணிகளைச் செய்து, ஏரிகளிலும், கால்வாய்களிலும் தூர்
எடுத்து, அதன் மூலமாக அங்கிருக்கக்கூடிய மக்களுக்கு வேலை
வாய்ப்பைத் தரும் திட்டங்களைத் தீட்டவேண்டும்

(திரு. க. இரா. சின்னராசு) [1983 பிப்ரவரி 10

ஏரிகளுக்கு வெள்ள நேரங்களில் கால்வாய்கள் மூலமாக
தண்ணீர் செல்கிறது. அப்படி ஆற்றுத் தண்ணீர் செல்கின்ற கால்
வாய்களில் தூர் எடுப்பதற்குத் திட்டம் தீட்டி நல்லமுறையிலே
செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு
முன்னால் பேசிய ஒரு உறுப்பினர், ஏரிகள் எல்லாம் மிகவும்
ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள்.
வட ஆற்காடு மாவட்டத்திலே, தர்மபுரி மாவட்டத்திலும், எந்த
ஏரிகளை எடுத்துக்கொண்டாலும், அங்கே அதற்குப் பக்கத்திலே
இருக்கின்றவர்கள், பெரிய நிலச்சுவான்தார்கள் 100 ஏக்கர்கள்,
50 ஏக்கர்கள் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள்
ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். இதன் காரணமாக, ஏரிகளில்
கொள்ளவு மிகக் குறைவான அளவாக ஆகிவிட்ட நிலைமை இருக்
கிறது. ஆக்கிரமிப்பு நிலங்களை எல்லாம், அரசு உடனடியாக
மீட்க, நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆக்கிரமிப்பாளர்கள் மீது
விசேஷமான நடவடிக்கைகளை கண்டிப்பாக எடுக்கவேண்டும்.
இப்படியே போய்க் கொண்டிருக்குமானால், அங்கே ஏரி, குளங்
களையெல்லாம் எல்லோரும் நிலமாக மாற்றி, ஏரிக் கரையைக்
கூட எடுத்து விட்டு, நிலமாக செய்துவிடுவார்கள் போன்ற ஒரு
நிலைமை இருக்கிறது. இந்தச் சூழ்நிலை தமிழ்நாட்டிலே எல்
லாப் பகுதிகளிலும் இருக்குமென்று நான் கருதுகிறேன். அதை
மாற்றுவதற்கு அரசு துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆற்றுப் பகுதிகளிலே கிணறுகளைப் போட்டு, பம்பு செட்டு
போட்டு, ஆற்றுத் தண்ணீரை எடுத்துக் கொள்கிறார்கள். அத
னால், ஆற்றின் நீரோட்டம் மிகவும் பாதிக்கப்படுகின்றது. என்
னுடைய தொகுதியிலே மார்க்கண்டன் ஆற்றிலே, 75 பம்பு செட்
களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு, அதன் மூலம் தண்
ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் ஆற்றின்
நீரோட்டம் மிகவும் பாதிக்கப்படுகிறது.

கால்நடைகளுக்குக் கூட தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை
இருக்கிறது. மின்சார இணைப்பைத் துண்டிக்க வேண்டுமென்று
அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனாலும், மின்சார பம்பு
செட்டுக்களை வைத்திருக்கின்ற சொந்தக்காரர்கள் வழக்கு மன்
றத்திற்குச் சென்று ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அந்த பம்பு
செட்டுக்களை அங்கேயிருந்து அகற்ற வேண்டும். இதுபோன்ற
பல நல்ல காரியங்களை நீங்கள் செய்தாக வேண்டும்.

தர்மபுரி மாவட்டத்திலே 8 வட்டாரங்கள் இருக்கின்றன.
அரூர், ஊத்தங்கரை, தர்மபுரி, பெண்ணாகரம், பாலக்கோல்,
கிருஷ்ணகிரி, தேன்கனிக்கோட்டை, ஓசூர் ஆகிய இந்த 8 வட்
டாரங்களும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மாவட்டம் முழு
வதும் வறட்சிப் பகுதியென்று அறிவிக்க வேண்டும். சில பகுதி
களை வறட்சிப் பகுதியில்லை என்று அரசாங்கத்திற்கு அதிகாரி
கள் அறிக்கை கொடுத்திருக்கின்ற காரணத்தினால், இந்த 8
வட்டாரங்களையும் வறட்சி வட்டாரங்களாக அறிவித்து, நல்ல
பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்பு
கிறேன்.

(மாலை 5-10.)

என்னுடைய தொகுதியிலே படேதுல்லா ஏரி இருக்கிறது.
அந்த ஏரிக்கு வருகின்ற கால்வாய் மிகவும் தூர் நிறைந்த
கால்வாயாக ஆகிவிட்ட காரணத்தால் இந்த வறட்சிக்காக ஒதுக்கப்
பட்ட பணத்திலே அந்த ஏரிக்கு வருகின்ற கால்வாயை எல்லாம்
தூர் எடுத்து, ஏரிக்கு நல்ல முறையிலே தண்ணீர் வருகின்ற
வகையிலே சீரமைக்க வேண்டும். ஏரி, குளங்களை எல்லாம்
தூர் எடுத்து, கரைகளைப் பலப்படுத்த வேண்டுமென்று நான்
கேட்டுக்கொண்டு, இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிற ரூ. 40 இலட்சம்
போதாது; இன்னும் ரூ. 40 இலட்சம் ஒதுக்கித் தந்து தர்மபுரி
மாவட்டத்தை இந்த வறட்சி நிலைமையிலேயிருந்து மாற்றிட
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரியில் இது வரைக்கும் 644 ஆழ் துளை கிணறுகள்
போடப்பட்டிருக்கின்றன. அவை மிகவும் குறைவாக இருக்கின்
றன. மிகப் பெரிய கிராமங்களுக்கெல்லாம் ஆழ் குழாய்
கிணறுகளைப் போட முடியாமல் இருக்கிறது. ஆகவே, 1—6
என்ற கேட்டகரியை மாற்றி, எல்லா கிராமங்களுக்கும் ஆழ்
குழாய் கிணறுகளைப் போடுவதற்கு ஏற்பாடு செய்ய, இன்னும்
300 குழாய்க் கிணறுகளை அமைக்க அரசு ஆவன செய்யவேண்டு
மென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, முடித்துக்கொள்
கிறேன், வணக்கம்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வறட்சி
சம்பந்தமாக ஒரு அறிக்கையை நம்முடைய விவாதத்திற்காக
இங்கே வைத்திருக்கிறார்கள். இன்று முதலாவதாக நான்
சொல்லிக்கொள்வது இந்த அறிக்கையானது அக்டோபர் மாதம்
தயார் செய்த அறிக்கை என்று நான் நினைக்கிறேன். ஏனென்
றால், இப்பொழுதுள்ள வறட்சியினுடைய கொடுமையை,
அது மக்களை எவ்வளவு பாதித்திருக்கிறது என்று சொல்லக்
கூடிய அந்த உண்மையை காட்டவில்லையென்று நான் நினைக்கின்
றேன். ஏனென்றால், தஞ்சை மாவட்டத்திலே கூட குறுவை
நேரத்திலேயிருந்த அந்த நிலை அறவே நீங்கி, தாளடியும்,
சம்பாவும், 3 இலட்சம், 4 இலட்சம் ஏக்கர்களிலே சாகுபடி
செய்யாமல் இருக்கிற நிலைமையை இந்த அறிக்கையிலே சொல்ல
வில்லை. இது மாதிரி பல மாவட்டங்களிலே இருக்கிறது. இது
வரை காணாத ஒரு வறட்சி தமிழகத்திலே இன்றைக்கு ஏற்
பட்டிருக்கிறது என்று ஒட்டு மொத்தமாகச் சொல்லியிருந்தாலும்
கூட என்ன, என்ன செய்யப் போகிறோம் என்று சொல்லக்
கூடிய நிவாரண நடவடிக்கைகளைப் பார்த்தால், யானைப்
பசிக்கு சோளப் பொறி என்று கிராமத்திலே ஒரு பழமொழி
சொல்வார்கள். அதே மாதிரியாக, ஒரு மாவட்டத்தில் 3
இலட்சம், 4 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் வேலை
யில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 100 இலட்சத்தை
ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஒரு ஆளுக்கு
ரூ. 30 ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால், என்ன வேலை, எத்தனை
நாளைக்கு கொடுப்பீர்கள். அவர்கள் என்ன வேலை செய்து
நீங்கள் என்ன கூலியைக் கொடுக்கப் போகிறீர்கள் என்று தெளி
வாக இந்த அறிக்கையிலே இல்லை.

(திரு. சோ. அழகர்சாமி) [1983 பிப்ரவரி 10

இன்னொன்றும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற இந்த வறட்சியான நிலையில், பல மாவட்டங்களில், ஆங்காங்குள்ள மக்கள் பிழைப்புக்கு எந்தவிதமான வழியுமில்லாமல், ஊரை விட்டு எங்கே போவது என்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் நீங்கள் பார்க்கலாம் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் சிலர் தலையிலே கூடையோடு, தலையிலே மண்வெட்டியோடு, ஆண்களும், பெண்களும் என்ன வேலை செய்வது என்று தெரியாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் காட்சியை இன்று நகரத்திலே பார்க்கலாம். ஆகவே தான் இன்றைக்கு இந்த வறட்சி சம்பந்தப்பட்டு காலா காலத்திலே, அக்கரையோடு நீங்கள் சரியான காரியங்களைச் செய்யவில்லையென்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

கடந்த செப்டம்பர் மாதம் இது சம்பந்தமாக இங்கு ஒரு மணி நேரம் விவாதம் நடத்தப்பட்டது. அப்பொழுது எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் சொன்னார்கள், வறட்சியினுடைய கொடுமை எப்படியிருக்கிறது? வறட்சி எப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் சொல்லி, உடனடியாக அரசாங்கம் நிவாரண நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதுவரை நிவாரண நடவடிக்கை எடுக்காததோடு மட்டுமல்ல, மத்திய அரசுக்கே இப்பொழுதுதான் ரூ. 190 கோடி வேண்டுமென்று அறிக்கையும் போயிருக்கிறது. ஆகவே தான் நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்த அறிக்கை போய் அந்தக் குழு இங்கே வந்து, நிவாரண நடவடிக்கைக்குப் பணம் ஒதுக்கி, அதுவரை இந்த ஆட்கள் எங்கே இருப்பார்கள் ? சிவலோகம் போய் விடுவார்களா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் யோசனை செய்து பார்க்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஆனால், மத்திய சர்க்கார்தான் எவன் எப்படி போனால் என்ன, என்று அதுபாட்டுக்கு இருக்கிறது. எதைச் சொன்னாலும் அவர்களுடைய காதில் உரைக்க மாட்டேன் என்கிறது. மாநில சர்க்கார் எவ்வளவுதான் சத்தம் போட்டு கேட்டாலும் கூட, செவிடன் காதிலே ஊதிய சங்குமாதிரிதான் இருக்கிறது. நமக்கு இங்கே உள்ள கடமை என்ன ? நமக்கு இங்குள்ள கடமையைச் செய்யவில்லை ; காலா காலத்திலே கேட்கவில்லையென்றால், எப்படி அந்த உதவியைப் பெறுவது என்பதிலே, காலா காலத்திலே அக்கறை இல்லாதவர்கள் என்பதைக் காட்டுகிறது ; அது மட்டுமல்ல, உடனடியாக இந்த மாநிலத்திலே ஏற்பட்டிருக்கிற வறட்சியைப் போக்குவதற்கும் குறிப்பாக, இந்த ஏழை, எளிய மக்கள் எந்த வேலையும் இல்லாமல், எங்கே செல்வது, எப்படி பிழைப்பது, எப்படி வாழ்க்கையை நடத்துவது என்று தெரியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலையில், அந்த மக்களுக்கு என்ன நிவாரணம் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நடவடிக்கை எடுக்கத் தவறி இருக்கிறோம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1983 பிப்ரவரி 10] (திரு. சோ. அழகர்சாமி)

அடுத்தபடியாக, தமிழகத்திலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற வறட்சியானது இங்கே அங்கே என்று இல்லாமல் தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. காவேரி நதி பாய்கின்ற தஞ்சை மாவட்டத்திலேயும் கடும் வறட்சி, பரம்பிக்குளம் அணை பகுதியிலேயும் தண்ணீர் இல்லாமல் ஆயிரம் ஏக்கர் தீய்ந்து விட்டது என்று சொல்லப்படும் நிலை, மானாவாரி பகுதியான அத்தனை வட்டாரங்களிலும் எங்கு எடுத்துக் கொண்டாலும் எல்லாவிதமான மகசூலும் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பாதிப்பைப் போக்குவதற்காக உடனடியாக நாம் என்ன செய்ய வேண்டுமென்ற அக்கறையோடு சில ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையையே காலந்தாழ்த்தித்தான் வைத்திருக்கிறோம். எனவே, உடனடியாக என்னென்ன செய்ய வேண்டுமென்பதற்காகச் சில ஆலோசனைகளைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

முதலில் குடி தண்ணீர் வசதி இல்லாத இடங்களில் குடி தண்ணீருக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சென்ற ஆண்டாவது குடிநீர் வடிகால் வாரியத்திலேயிருந்து குழாய்க் கிணறு எல்லாம் போட்டார்கள். ஆனால் நெருக்கடி ஏற்பட்டிருக்கின்ற இந்த ஆண்டில் குடி தண்ணீர் இல்லாமல் ஊரை விட்டு ஊர் மக்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் குடிதண்ணீர் கிடைப்பதற்காகத் துரிதமான நடவடிக்கைகளை எடுப்பதாக இல்லை. ஆங்காங்கு போர் போடுகிறார்கள், அதற்குக் குழாய்கள் பொருந்துவதில் காலதாமதமாகிறது. அவற்றிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாமல் போர் என்பது போராகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. தண்ணீர் வருகின்ற நிலைமை இல்லை. எனவே, எல்லாக் கிராமங்களிலும், எல்லா இடங்களிலும் குடிதண்ணீர் கிடைக்கின்ற அளவிற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இங்கே போர் போடுகின்ற மெஷின்கள் இல்லையென்று சொன்னாலுங் கூட வெளியிலே இருந்தாவது வரவழைத்துத் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயம் இல்லாத காரணத்தினால் விவசாயத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான வேலையும் கிடைக்கவில்லை. கிராமப் புறங்களில் இருக்கின்ற அவர்களுக்கு வேலை இல்லை. அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டும். அப்படிப் பணத்தை ஒதுக்குவதோடு மட்டுமல்லாமல், உருப்படியான வேலைகள் நடைபெறும் வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், கடந்த காலங்களில் பஞ்ச நிவாரண வேலைகள் என்றெல்லாம் செய்தபொழுது அந்த வேலைகளின் காரணமாக காண்ட்ராக்டர்களுக்கு இலாபமாக இருந்தது. ஏதோ சில அதிகாரிகளுக்கு இலாபம் இருந்ததே தவிர அந்த வேலைகள் ஒழுங்காக நடந்து, அதன் காரணமாகப் பிரயோஜனமான அளவில் தண்ணீர் தேங்கி நிற்பதுமாதிரி கண்மாய்களை ஆழப்படுத்தினோம் [illegible]

சீரமைத்தோம் என்பது மாதிரி இல்லை. எனவே, இனிமேல்
அப்படிப்பட்ட வேலைகளைச் செய்யும்போது ஆங்காங்குள்ள
சட்டமன்ற உறுப்பினர்களைக்கொண்ட அல்லது சர்வக் கட்சியைச்
சேர்ந்தவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டு, என்ன
வேலையைச் செய்வது என்று ஆராய்ந்து செய்ய வேண்டும்.
ஒரு வேலையை எடுத்துக் கொண்டால், ஏதாவது புதிய கண்
மாய் வெட்டுவது, குட்டை குளங்களை வெட்டுவது, கால்வாய்
அமைப்பது, இருக்கின்ற கண்மாய்களை ஆழப்படுத்துவது போன்ற
காரியங்களை செய்வதற்குத் திட்டமிட வேண்டும். அப்படியில்
லாமல் ஏதோ மண் வெட்டுவது, காண்ட்ராக்டர்களுக்கு
வேலை கொடுப்பது, கூலிக்காரர்களுக்குக் கொஞ்சம் பணம்
கொடுப்பது என்பது மாதிரி செய்தால் உருப்படியான வேலை
யொன்றும் நடக்காது. கடந்த காலங்களில் எனக்கு ஏற்பட்ட
அனுபவங்களின் அடிப்படையில் சொல்கிறேன், பணத்தை ஒதுக்கு
கின்றபொழுது சீரான, உருப்படியாக வேலைகளைச் செய்யாத
தால் பேர்பாதிப் பணம் விரயமாகும் நிலைமைதான் எற்பட்டது.
எனவே, இனிமேலாவது அதிகமான பணத்தை ஒதுக்குவதோடு
கூட அப்படி ஒதுக்கப்பட்ட பணம் சீராகச் செலவழிக்கப்படுவதற்கு
ஆங்காங்கு கட்டாயம் சர்வக்கட்சியினரையும் கொண்ட
கமிட்டியை அமைத்து, என்னென்ன வேலைகளை எடுக்க வேண்டும்
என்று முடிவு செய்து, வேலை சீராக நடைபெறுகிறதா என்பதைக்
கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பஞ்சம் மிகவும் கடுமையாக இருக்கிறது. அரிசி
ஒரு கிலோ ஐந்து ருபாய்க்கும் மேல் விற்கிறது. மற்றபடி ராகி, கம்பு,
சோளம் ஆகிய தானியங்கள் கூடவிலை உயர்ந்துவிட்டது. கிராமங்
களில் உள்ள மக்களுக்கு இவைகளெல்லாம் சீராகநியாய விலையில்
விநியோகிக்கப்பட வேண்டும். அதற்காக நியாய விலைக் கடை
களின் மூலமாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேண்டிய எல்லா
பொருட்களையும், அதாவது அரிசியோ பருப்போ மண்ணெண்
ணெயோ எதுவாக இருந்தாலும் இப்படிப்பட்ட அத்தியாவசிய
மான பொருட்களைச் சீராக விநியோகிப்பதற்கான நடவடிக்கை
களை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை
யென்றால் மக்கள் பட்டினி கிடந்து மடிந்து விடுகின்ற மிகப்
பெரிய அபாயம் ஏற்படக்கூடிய நிலைமையிருக்கிறது என்று எச்
சரிக்கையோடு சொல்ல விரும்புகிறேன். இது மாண்புமிகு அமைச்
சரவர்களுக்கும் தெரியும்.

நிலவரி, தண்ணீர்த் தீர்வை, சர்சார்ஜ் ஆகிய இவைகளை
வஜா செய்ய வேண்டியது பற்றி ஆலோசனை இருக்கிறது என்று
சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி யோசனையோடு நின்றுவிடா
மல், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொன்ன அறிக்கையின் அடிப்
படையில் எல்லாவிதமான வரிகளும் ரத்து செய்யப்படுகின்றன,
வஜா செய்யப்படுகிறது என்று அறிவிக்க வேண்டும். நிவாரண
நடவடிக்கையாக விவசாயிகள் கொடுக்க வேண்டிய கடன்களை

வைத்து விட்டு, பிறகு அடுத்த ஆண்டில் அதற்கான வட்டி, அப
ராத வட்டி என்றெல்லாம் சேர்த்துக் கட்டச் சொல்கிறார்கள்.
அப்படியில்லாமல், அந்தக் கடன்களைத் தள்ளி வைக்கின்ற நேரத்
தில் ஏழாவது ஆண்டுத் தவணையை எட்டாவது ஆண்டு கட்ட
வேண்டுமென்று ஏற்பாடு செய்து அப்பொழுது வட்டி ஏதும்
இல்லாமல் தவணையை மட்டும் கட்டுகின்ற நிலைமையை ஏற்
படுத்த வேண்டும். வட்டியையும், முதலையும் சேர்த்துக் கட்ட
வேண்டுமென்ற நிலைமை இருக்கக்கூடாது என்பதைப் பணிவன்
போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் வறட்சியின்
காரணமாகத்தான் கடன்களைத் தள்ளி வைக்கிறோம். அப்படித்
தள்ளி வைக்கும்பொழுது வட்டியை அறவே ரத்து செய்து விட்டு
கடன் தொகையை மட்டும் கடைசித் தவணையில், ஏழாண்டுத்
தவணை என்றால் எட்டாவது ஆண்டுத் தவணையில் கட்ட
வேண்டுமென்று செய்யுமாறு அமைச்சரவர்களுக்குப் பணிவன்
போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இவ்வளவு மோசமான
நிலைமை ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பதற்கு ஒன்றைச்
சொல்ல விரும்புகிறேன். அது என்னவென்றால் தமிழ்நாட்டிலே
ஜமீன் காலத்திலேயும், இனாம் காலத்திலேயும் வடார்க்காடு
மாவட்டம், தென்னார்க்காடு மாவட்டம், நெல்லை மாவட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் போன்ற எல்லா மாவட்டங்களிலே
யும் பலயிடங்களில் பாசனம் குளங்கள் அந்தக் காலத்திலே இருந்
தன. அந்தக் குளங்களெல்லாம் மேடாகிவிட்டன.

(மாலை 5-20.)

அதை ஆழப்படுத்தி சரிப்படுத்தி இருந்தால், மழைக் காலத்
திலே வருகின்ற தண்ணீரைத் தேக்கி வைத்திருந்தால், கிணறு
களிலே தண்ணீர் மட்டம் உயர்ந்து இருந்திருக்கும். பழைய நீர்
நிலைகளிலே தண்ணீர் வற்றிவிட்டது. அவைகள் மேடாகி விட்
டன. சென்னை போன்ற நகரங்களில் ஏரி, குளம் பூராவும்
வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு வீடுகளாகிவிட்டன. கிராமப்
புறங்களில் மேடாகிவிட்ட இந்தக் குளங்கள், ஏரிகள் போன்ற
வற்றை செப்பனிட்டு, தண்ணீரைத் தேக்கி வைக்க வழிவகை
செய்யவேண்டும். புதிய குளங்களை எங்கெங்கே அமைக்க
வேண்டும் என்று திட்டமிட வேண்டும். காரணம் வறட்சி வந்து
கொண்டே இருக்கிறது. எனவே இவைகளைச் சரி செய்ய வேண்
டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இதற்காக கடந்த காலங்
களிலே நிறைய பணம் செலவழிக்கப்பட்டது. சென்ற ஆண்டு
கூட இதற்காக 60 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. அப்படி
யும் கூட புதிய குளங்கள் புதிய குட்டைகளை அமைக்க நட
வடிக்கை எடுக்கவில்லை. இன்றைக்குப் பாசனத்திற்கான குளங்
கள், குட்டைகள், ஏரிகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன.
இப்போதாவது இந்த வறட்சி நிவாரணப் பணியில் உருப்படியான
வேலைகளுக்கு அவைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஏற்பட்டுள்ள வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களைக் காப்பாற்ற இனியாகிலும் துரிதமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மிகப் பெரிய பட்டினிச் சாவு ஏற்படக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே விவசாயத் தொழிலாளர்களுக்கு மத்திய சர்க்காருடைய உதவி வரும் வரை காத்திராமல் அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டத்தை ஆரம்பித்துவிட்டு, பிறகு மத்திய சர்க்காரிடம் இருந்து பணத்தைப் பெறுவதற்கு வற்புறுத்த வேண்டும். மக்கள் குழுக்களைப் போட்டு, அதன் மூலமாக வேலைகள் சரியான முறையில் நடைபெறுகிறதா என்று கண்காணித்து கிராமப் புறங்களில் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சரியான முறையிலே உணவு தானியங்களை விநியோகிக்கவும், அவர்களுடைய கடன் பூராவையும் வசூல் செய்வதை நிறுத்தி வைக்க வேண்டும். வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். எந்தவிதமான வரியையும் அவர்கள் மீது போடுவதற்கு யோசனை செய்வதற்குப் பதிலாக அவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அந்த முறையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்குத் தமிழகம் பூராவும், அது காவிரி பாயும் இடமாக இருந்தாலும், தாமிரபரணி பாயும் இடமாக இருந்தாலும், அனைத்து இடங்களும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. எனவே பாகுபாடு இல்லாமல் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படுகிற நிதியைச் சீராகச் செலவழிக்க வேண்டும். அந்தந்தப் பகுதியிலே உள்ள சில செல்வாக்கு படைத்தவர்கள் தங்கள் பகுதியிலே அதிகமாக செலவழிக்கின்ற நிலைமையைத் தடுக்க வேண்டும். ஒதுக்கப்படுகின்ற பணத்தை காண்ட்ராக்ட்டுகாரர்கள் கொள்ளை அடிக்கும் முறையைப் போக்கி அந்தந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு வேலை கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆடுவோமே பள்ளு பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாரதி கனவு கண்டு அடைந்த சுதந்திரத்திற்குப் பின்னால், இந்த நாட்டிலே 3-ல் ஒரு பாகம் இந்தியப் புண்ணிய பூமி பஞ்சத்தால் அழிவதும், 40 மிலியன் ஹெக்டர் நிலங்கள் வெள்ளத்தால் அழிந்து அங்கே புலம்பலும் கேட்கின்ற இந்தச் செய்தியைத் தான் சுதந்திர மண்ணில் தொடர்ந்து நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நிலை மாற, இங்கே இந்தியாவில் ஒரு சிறு பகுதிதான் தமிழ்நாடு. இங்கே இருக்கின்ற 5 கோடி மக்களின் துயரம், 65 கோடி மக்களுடைய ஒரு பகுதியினுடைய துயரம்தான். தேசியக் கண்ணோட்டம் நம் நாட்டில் கடந்த 35 ஆண்டுகளாக நல்லதொரு எழுச்சியைப் பெற்றிருந்து, நம்மை ஆண்டவர்கள் நல்ல வழியினைக் காட்டி இருப்பார்களானால் நிச்சயமாக இன்று நம் இந்த வறட்சியைப் பார்த்து இவ்வளவு தூரம் அச்சுறுகிற நிலை

இன்று ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தெற்கே இருக்கின்ற நீரகத்தில் இருக்கின்ற முக்கிய நதிகளை இணைத்து, இங்கு நிரந்தரமாக வறட்சியைப் போக்குகின்ற திட்டத்தைக் கோடிட்டுக் காட்டி இருக்கின்ற நமது மத்திய அரசு, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி இவைகளை இணைப்பதன் மூலம் இந்தப் பகுதியிலே இருக்கின்ற வறட்சியை நிரந்தரமாகப் போக்க முடியும் என்று கோடிட்டுக் காட்டியிருக்கின்ற மத்திய அரசு, தன்னுடைய பிரதான 20 அம்சத் திட்டத்தில் பிரதமர் அவர்களுடைய திட்டத்தில் கோடிட்டுக் காட்டி, உணவு உற்பத்தியைப் பெருக்குவதும் புன்செய் நிலங்களும், நீர்ப்பாசனம் அற்ற நிலங்களும் நஞ்சை நிலங்களாக நீர்ப்பாசனம் பெருகிற நிலங்களாக ஆக்குவதும் ஒரு பெரும் திட்டம். உணவு உற்பத்தித் திட்டம் என்று கோடிட்டு இருந்தும் இப்பகுதிக்கு தமிழகத்திற்கு அந்த நீரைப் பார்ப்பது அரிது என்ற நிலை ஏற்பட்டு இருப்பது வேதனைக்குரிய விஷயம். இன்று கேரளாவில் மேற்கு நோக்கி பாயும் நதிகளில் கேரள அரசாங்கம் ஒப்புக்கொண்டு இருக்கின்ற புள்ளிவிவரத்தைப் பார்த்தால், அதனுடைய உச்சத் தேவை 2.88 மிலியன் ஹெக்டர் மீட்டர் என்று உள்ளது. அந்த ஒப்புக்கொள்ளப்பட்ட 2.88 ஹெக்டர் மீட்டரில் குறைந்த பட்சம் ஒரே ஒரு மில்லியன் ஹெக்டர் மீட்டர் நமக்குத் திருப்பி விடப்பட்டால் கூட, இங்கே இருக்கின்ற 1.5 மில்லியன் ஹெக்டர் ஏக்கர்கள் பாசன வசதி பெறும் என்று மத்திய அரசினுடைய குழுவினுடைய அறிக்கை நமக்குத் தெரிவிக்கிறது.

ஆக குறைந்தபட்சம் அந்த 2.88-ல், ஒரு மில்லியன் எம். எச். எம். தண்ணீரைத் திருப்பி விடுவதற்கான திட்டத்தை இதுநாள் வரை பெற்றுத் தருவதற்கு எதுவும் செய்யவில்லை. கேரளாவிலே அப்போது கம்யூனிஸ்ட் ஆட்சி இருந்தது. காங்கிரஸ் ஆட்சியும் இருந்தது. திரும்பவும் காங்கிரஸ் ஆட்சி வந்திருக்கிறது. யாரிடமும் நாம் தேசியத்தைப் பார்க்கவில்லை. தேசிய உடமை என்ற உணர்வையும் பார்க்கவில்லை. தமிழகத்தில் மக்களுக்குத் தண்ணீர் கொடுக்கிற அந்த உணர்வு மத்திய அரசுக்கு இல்லை என்ற நேரத்தில் மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்கிற முயற்சியைக் குறைவானது என்று கருதினாலும்கூட, அருகிலே உபரி நீரைப்பெற்று இருக்கிற மாநிலங்களுக்காவது அந்த உணர்வு கூட, அந்த நீரைப்பகிர்ந்து கொள்கிற எண்ணம் இல்லை என்னும்போது பாரதத்தை நினைத்து நம் மக்கள் அழவேண்டியிருக்கிறது. அந்த நிலையில் இன்று மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத் திருப்பிவிடுவதன் காரணமாக நமது நாட்டிலே நிரந்தரமாக ஏற்படுகிற வறட்சியைப் போக்கமுடியும் என்ற கருத்தினை இன்றாவது நமது நாட்டில் உள்ள தலைவர்கள் உணர வேண்டும். ஆக நிரந்தர வறட்சித் தமிழகத்திற்குப் புதிதல்ல. நடந்த ஆண்டும் வறட்சி. 3 ஆண்டுகளுக்கு முன்னாலே

இந்த நேரத்தில் நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். போர் வெல் போட்டு குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. 10–15 கிணறுகள் தோண்டினால்தான் ஏதேனும் ஒரு பகுதியில் நீர் கசிவு தெரியும். ஆகவே, போர்வெல் போடுவது சக்சஸ் ஆகாத இடங்களில் கிணறுகள் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுதான் நிச்சயமான அளவில் நிவாரணம் தரும் என்பதையும் கூறிக் கொள்கிறேன். ஆகவே அதற்கு அதிக நிதி ஆதாரம் தேவை. அதை ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கேயிருக்கும் மற்றொரு பிரச்சினையையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருப்பதால் அந்தப் பிரச்சினைக்கு அவர் தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோவை தாலுக்கா 4 தாலுக்கா வேலைகளைச் செய்து வருகிறது. அந்த அளவிற்கு வேலைப்பளு அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தால்தான் இந்த வறட்சி நிலைமை குறித்து சரியான ஒரு நிலைமையை அரசு பெற முடியாமல் போய் இருக்கிறது. ஆகவே, அந்தப் பெரிய தாலுக்காவை பிரிக்க வேண்டிய அவசியம் தற்போது இருக்கிறது. உடனடியாக அதைச் செய்ய இயலவில்லையென்றாலும், அந்தப் பகுதியில் இந்த வறட்சி நிவாரண வேலைகளைச் செய்வதற்காக தனித் தாசில்தார்கள் ஆங்காங்கு நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் ஆதித் திராவிட மக்கள் அதிகம் வாழும் பகுதிகளான யானைப்பட்டி, வால்பாறை, குந்தா போன்ற இடங்களை வெஸ்டேர்ன் காட் அபிவிருத்தித் திட்டத்தின் கீழும், ஹில் ஏரியா டெவலெப்மென்ட் திட்டத்தின் கீழும் எடுத்துக் கொண்டு அபிவிருத்தி செய்ய வேண்டும். அங்கே மிகவும் துரதிருஷ்டவசமான நிலையில் மக்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய மத்திய அரசிடமிருந்து நிதி பெற்று, நீலகிரியில் செய்வதைப் போல், அந்தப் பகுதியிலும் திட்டங்களை நிறைவேற்ற முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுப் பணித்துறை மூலமாக கோவை தாலுக்காவில் உள்ள சிறிய குட்டைகள், சிறிய குளங்கள் ஆகியவை இதுவரையில் ஆழப்படுத்தப்படவில்லை. அவற்றைப் புதுப்பிக்கவும் இதுவரையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதற்கான திட்டங்களைத் தீட்டவில்லை. ஆகவே, அந்தக் கோவை மாவட்டத்தில் உள்ள சிறிய குளங்கள், சிறிய குட்டைகள் ஆகியவற்றைத் தூர் எடுக்க, வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே, செக்-டாம்கள் ஆங்காங்கு கட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இத்தகைய நடவடிக்கைகளை மேற் கொள்வதன் மூலம் நிரந்தரமான

நிவாரணங்களைப் பெற முடியும் என்று தெரிவித்து, அதற்கான
வகையில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று சொல்லி,
கோவை மாவட்டத்தில் நிரந்தரமாக குடிநீர்ப் பிரச்சினையைப்
போக்க நெல்லித்துறை திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித்
தரவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லி, வாய்ப்பளித்த
தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இன்றைய தினம் நடைபெறுகின்ற இந்த வறட்சி
பற்றிய வெள்ளை அறிக்கை மீது திராவிட முன்னேற்றக்கழகத்
தின் சார்பில் நான் சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை
அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கின்ற வெள்ளை அறிக்கை
யிலே தமிழகத்திலே உள்ள எல்லா மாவட்டங்களும் வறட்சியால்
பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.
குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்தில் அடங்கியுள்ள 13 தாலுக்
காக்களும் மிகக் கடுமையான முறையில் வறட்சியால் பாதிக்கப்
பட்டு இருக்கிறது என்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.
இதே மாமன்றத்திலே 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்
10 ஆம் நாளன்று தென் மேற்குப் பருவ மழையும், வட கிழக்குப்
பருவ மழையும் தவறிய காரணத்தால் நாட்டின் நிலைமை குறித்து
நடைபெற்ற விவாதத்தில் என்னைப் போன்றவர்கள் அன்றைய
தினமே அரசாங்கத்திற்குச் சொன்னோம். வடாற்காடு மாவட்
டத்தில் உள்ள விவசாயிகள் மழை இல்லாத காரணத்தால்,
கிணறுகளில் தண்ணீர் இல்லை என்று சொல்லி விவசாயம் செய்ய
முடியாமல் இருக்கிறார்கள். அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு
இருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே,
கிணறுகளை ஆழப்படுத்தும் வேலை, கை பம்புகள் அமைக்கும்
பணி, ஏற்கெனவே அமைத்த பம்புகளை பழுது பார்த்தல்
போன்ற பல்வேறு பணிகளை உடனடியாக அரசாங்கம் மேற்
கொள்ள வேண்டும் என்று 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்
10 ஆம் நாளன்று நடைபெற்ற விவாதத்தில் சொன்னோம்.
இன்றைக்கு 5 மாதம் கழித்து, சரியாக அதே தேதியில்—
10–2–1983 அன்று—அதே நிலைமை குறித்து விவாதிக்கின்ற
நேரத்தில் எண்ணிப் பார்க்கிறபோது, அந்தக் காலக் கட்டத்தில்
எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்
பட்டு, அந்த வறட்சி நிலைமையைச் சமாளிக்கும் வகையில்
நடவடிக்கைகள் மேற்கொண்டதாக நிச்சயமாகத் தெரியவில்லை
என்பதை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.
கிணறுகளை ஆழப்படுத்தவும், துளைக் கிணறுகள் தோண்டுவதற்
கும், செலவாகும் நிதியைக் கணக்கிடாமல், மதிப்பீடுகள் தயாரிக்
கப்பட்டதால், ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை மிகவும்

வறட்சி. இந்த மழை பெய்துவிட்டால் அடுத்த ஆண்டு
இந்த வறட்சி நீடிக்காது என்று சொல்வதற்கு இல்லை.
ஆகவே இந்த நிரந்தரத் திட்டங்களிலே நாம் எண்ணத்தைச்
செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதன்
மூலம வெள்ளக்கட்டுப்பாடு செய்தும், வெள்ளத்தால் வீணாகும்
நீரைச் சேமிப்பதும் அதை உரிய காலத்திலே பயன்படுத்து
வதும் இந்தத் தேசிய திட்டத்தை, இந்தத் தேசத்தை ஆள்பவர்
கள் தாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கையாக நமக்கு
தந்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கு
வறட்சி ஏற்பட்டபோது, 6 மில்லியன் உணவு தானியத்தை,
அரிசியை ஸ்டாக் வைத்துக்கொண்டிருக்கிற மத்திய அரசிடம்
நாம் நியாயமாகப் பெறவேண்டிய, வினியோகத்திற்காக
பெறவேண்டிய அரிசியைத் தான் நமது புரட்சித் தலைவர்
முதல்வர் அவர்கள் ஒருநாள் உண்ணவிரதம் இருந்து எடுத்துக்
காட்டியதற்குப்பின்புதான் பேச்சுவார்த்தைக்கே அழைப்பதென்ற
நிலையிருக்கும் என்றால் இதுதான் பாரதபுண்ணிய பூமியினுடைய
எதிர்கால நிலையா என்பதை அச்ச உணர்வோடு நாம்
பார்க்கவேண்டிவர்களாக இருக்கிறோம். இன்று புரட்சித்
தலைவர் அவர்கள் உட்கார்ந்தால்தான் அச்சப்படக்கூடிய
அளவிற்கு நாட்டினுடைய அமைப்பு இருக்கிறது. அவருடைய
புகழும், அவருடைய அந்த மக்கள் பெருமையும், அவர் மீது
மக்கள் வைத்திருக்கிற பாசமும், ஒரு சமயம் மத்திய
அரசை அச்சுறுத்தி இருக்கக்கூடும். ஆனால் சாதாரணமாக
ஒரு முதல் அமைச்சராக இருந்த அவருக்கே இந்த நிலை
ஏற்பட்டிருந்தால் அதை எப்படித் தீர்வுக்குக் கொண்டுவர
முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே
நம் அரசியல் அமைப்பில் ஒரு மாற்றம் வேண்டும். மத்திய
அரசாங்கத்தைப் பார்த்து வாழ்கிற ஒரு மாநிலமாக
இல்லாமல் மத்திய அரசிடமிருந்து நிதி பெற்றாலொழிய
அரிசியும் மற்றவைகளையும் பெறவேண்டிய நிலை இருந்தால்,
தொடர்ந்து இந்தியாவினுடைய ஒருமைப்பாடும் பாதிக்கும்
என்பதை இன்று தலைவர்கள் பலர் உணர்ந்திருப்பதுபோல்
எதிர்காலத்தில் என்றும் ஒத்துழைப்போடும் ஒருமைப்
பாட்டோடும் இந்தியா இருப்பதற்கு, இங்கே பேரறிஞர்
அண்ணா அவர்கள் வலியுறுத்திய நிதிக் கமிஷன்
மறு ஆய்வுக்குக் கொண்டு வந்து மாநிலங்களுக்கு இடை
யேயும், மத்திய அரசாங்கத்துக்கு இடையேயும் நிதி ஆதாரங்
களைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய அந்தத் திட்டத்தை மறு
பரிசிலனைக்கு உட்படுத்தவேண்டும். ஆகவே இப்படி பல
பிரச்னைகளுக்குத் தீர்வு காண்கிற பல வழிகளை எண்ணுகிற
இந்த நேரத்திலே நமது மாநிலத்திற்கு ஏற்பட்டிருக்கிற
இந்த வறட்சிக்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும்,
காவிரியில் இருந்து குறைந்த அளவு தண்ணீர் கொடுத்து
இருந்தால், மின் பற்றாக்குறையையும், தஞ்சையில் அழிந்து
போயிருக்கும் அந்தப் பயிரையும் நாம் காப்பாற்றி இருக்க
முடியும். ஆக இந்த நிரந்தரத் தீர்வுகளுக்கு முன்னால்
இப்போதாவது குறைந்த அளவு காவிரியில் ஓரளவு

நீரைப் பெறுவதற்கான முயற்சியில் மத்திய அரசின் உதவியோடு
நமது மாநில அரசு புரட்சித் தலைவர் தலைமையில்
மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
ஆக அவர்கள் எவ்வளவு தூரம் நம்மை சோதித்தாலும்
நம்மை எவ்வளவு தூரம் தாழ்வுபடுத்தி இந்த நாட்டில்
இருக்கிற மக்களை வறட்சிக்கு உள்ளாக்கி சத்துணவு
பெறுகின்ற குழந்தைகளுக்கு ஒரு ஏக்கத்தை ஏற்படுத்துகிற
அளவுக்கு இந்தத் திட்டம் நீங்காதா, என்று எண்ணி ஏங்கிக்
கொண்டு இருப்பவர்களுக்கு நாம் சவாலாக ஏற்றுக்கொண்
டிருக்கிற நேரத்தில் அந்தச் சவாலை சமாளிக்கிற புரட்சித்
தலைவர் பக்கம், அவர் எழுப்புகிற குரலின் பக்கம், அவர்கள்
எடுக்கிற திட்டங்களின் பக்கம் அனைத்துக் கட்சிகளும்
ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்று நான் என்னுடைய
வேண்டுகோளை இந்த நேரத்தில் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.
ஆக இந்த நிலையில் இன்று ஒத்துழைப்புக்கு உத்தரவாதம்
அளிக்காமல் மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினையை
சவாலாக ஏற்றுக்கொண்டு சமாளிக்கிற முதல்வர் அவர்களுக்கு
பக்கபலமாக இல்லாமல், யார் எந்த நிலையை எடுத்தாலும்,
அதை மக்கள் விரோத நிலையாக மக்கள் இடையே மதிப்பற்
றவர்களாக, ஒரு நிலையாக, அது அமைத்து விடும் என்பதை
நான் மாற்றுக்கட்சித் தலைவர்களுக்கும் அல்லது அதிலே
இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எடுத்துச்
சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். அடுத்து கோவை
மாவட்டத்தைப் பொறுத்த அளவில் சென்ற ஆண்டு
வறட்சி மாவட்டமாக அது எடுத்துக்கொள்ளப்பட இல்லை.
என்ன துரதிருஷ்டமோ தெரியவில்லை, கோவையில் இந்த
ஆண்டு முழுவதும் வறட்சி இருக்கிறது.

(மாலை 5–30).

கோவை மாவட்டத்தில் அவினாசி, பல்லடம் போன்ற பகுதிகள்
என்றைக்கும் வறட்சியாக இருக்கும் பகுதிகள். ஆகவே, சென்ற
ஆண்டைப் போல் இல்லாமல், இந்த ஆண்டு வறட்சி என்று
குறிப்பிடப்பட்டு இருப்பதால், அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்
டும். இப்போது கோவை மாவட்டத்திற்கு 31 இலட்சம் ஒதுக்கப்
பட்டு இருக்கிறது. இந்த 31 இலட்சம் ரூபாய்தான் வறட்சி
நிவாரண நிதி என்று கொள்ளாமல், வர இருக்கின்ற திட்டங்
களிலும் கோவை மாவட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்த மாவட்
டத்தில் நல்ல முறையில் குடிநீர்த் திட்டங்கள் போன்றவற்றை
நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு அதிகம் செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்த வறட்சி நிவாரணப் பணிகளை செய்கின்ற பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற அதிகாரிகளானாலும் சரி, மற்ற அதிகாரிகளானாலும் சரி அவர்கள் இந்த வறட்சியைப் போக்க சுறுசுறுப்பாகச் செயல்படவில்லை. சாதாரண வேலைகளை, அவர்களால் செய்ய முடிந்த வேலைகளைக் கூட எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எத்தனையோ முறை சொன்னாலும் கூட அந்த வேலைகளைக் கவனிக்காமல் இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையில் நிச்சயமாக ஊராட்சி ஒன்றியங்களினால் இந்த வறட்சி நிவாரணப் பணிகளைச்செம்மையாகச் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 5—40)

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 5, 6 மாதமாக கடுமையான வறட்சி இருக்கிறது. நீங்கள் மத்திய அரசுக்குக் காலாகாலத்தில் அறிக்கை அனுப்பினீர்களோ அல்லது கால தாமதமாக அறிக்கை அனுப்பினீர்களோ தெரியாது, நான் அதற்குள் போகவில்லை. இன்னும் இந்த மாநிலம் வறட்சிப் பகுதி என்று நீங்கள் அறிவிக்கவில்லையே, இது நியாயம்தானா? வறட்சிப் பகுதி என்று அறிவித்தால்தானே, வறட்சிகளுக்கான பணிகளைச் செய்யும்போது அந்த இடத்திலும் அரசாங்கம் அந்தப் பணிகளை மேற்கொள்ள முடியும். ஆனால், வறட்சிப்பகுதி என்று அறிவிக்காமல் இருப்பதோடு கிடைத்தவரை நிலவரிகளையும் வசூல் செய்ய உத்திரவிட்டால் எப்படி? அந்தப்பகுதி மக்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை, சாப்பிட உணவு இல்லை. ஆனால், கிராம மணியக்காரரோ அல்லது வருவாய்த் துறை வரிவசூல் இன்ஸ்பெக்டரோ அங்கே சென்று நிலவரியை கட்டாயமாக வசூலிக்கக் கூடிய நிலைமை மட்டும் அங்கே இருக்கிறது. இது நியாயமா? அது மட்டுமா, கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், கூட்டுறவுக் கடனை வசூல் செய்ய வந்துவிடுகிற நிலைமை இருக்கிறது. அவர்களிடம் கேட்டால் நாங்கள் பெரிய விவசாயிகளிடத்திலே தானே வசூலிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள்.

வட ஆற்காடு மாவட்டத்திலே பெரிய விவசாயிகளோ, மிட்டா மிராசுதாரர்களோ இல்லை. ஏழை எளிய சிறு விவசாயக் குடும்பங்கள்தான், நடுத்தரக் குடும்பங்கள்தான் இருக்கின்றன. அவர்களிடம் இப்படிப்பட்ட நேரத்தில் அந்த வரி பாக்கிகளையும் கடன் பாக்கிகளையும் வசூலிப்பது அரசுக்கு நல்லதல்ல. அதிலும், குறிப்பாகக் கூட்டுறவுக் கடனை வசூலிப்பதை நிறுத்துவதோடு, அதனுடைய வட்டியைக்கூட தள்ளுபடி செய்கின்ற ஒரு முயற்சியினை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இன்றைய தினம் குடிதண்ணீருக்காக
குழாய்கள் போடுவது, பைப்புகள் இணைப்பது, மற்றும் பல
வேலைகளுக்குத் தேவையான மிஷின்கள் பஞ்சாயத்துக்களிலோ,
ஊராட்சிகளிலோ போதாத நிலைமை இருக்கிறது. அவைகள்
எல்லாம் போதுமான அளவு நம்முடைய மாநிலத்திலே இல்லா
விட்டாலும் கூட, அண்டை மாநிலங்களில், வறட்சி இல்லாத
மாநிலங்களில் கேட்டு வாங்கி இந்த கைப் பம்புகள், ஆழ்துளைக்
கிணறுகள் போன்றவைகளை அமைக்க உடனடியாக நடவடிக்கை
இடுக்க வேண்டும். நீங்கள் இதிலே இன்னமும் மெத்தனமாக,
எருப்பீர்களேயானால், தமிழக மக்களை நிச்சயமாக நீங்கள்
காப்பாற்ற முடியாத சூழ்நிலைக்கு ஆளாவீர்கள் என்பதைச்
சொல்லி (மணியடிக்கப் பெற்றது) ஒரே ஒரு கருத்தினைச் சொல்
லிக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வறட்சிப் பணிகளாக, ஏரியைத் தூர்
வாருகிற பணிகள், கால்வாயைத் தோண்டுகிற பணிகளை எல்
லாம் செய்ய முற்படுகிறபோது, அவற்றிற்கு மத்திய அரசாங்
கத்தின் உதவி நிதி வருகிற வரையில் காத்திருக்காமல், உடனடி
யாக மாநில அரசே தற்போதுள்ளதைவிடச் சற்றுக் கூடுதலாக
நிதி ஒதுக்கி இந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்
டுக் கொள்கிறேன். குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில்,
போளூர் தொகுதியிலேயும், கலசப்பாக்கம் தொகுதியிலேயும்
வறட்சி அதிகமாக இருக்கிற காரணத்தால் அந்தப்பகுதிக்கு முன்
னுரிமை கொடுத்து அதிக தொகை ஒதுக்கி அந்தப் பணிகளை
விரைவில் முடித்திட வேண்டுகிறேன். மற்றும் ஜம்னாமடுத்தூர்
பகுதியிலேயிருந்து ஏலகிரி மலைப்பகுதியில் உள்ள மக்களுக்கு
ஒரு வழியும் இல்லை. அவர்களுக்கு உணவும் கிடைக்கவில்லை,
தண்ணீரும் கிடைக்கவில்லை, வேலையும் கிடையாது. கடுமை
யான வறட்சி வேறு. மிகச் சிரமப்படுகிறார்கள். ஆகவே,
இந்த நிவாரணப் பணிகளையெல்லாம் மிகத் துரிதமாகச் செய்து
அந்த மலைவாழ் மக்களுடைய வாழ்க்கையைக் காப்பாற்ற
வேண்டும். வட ஆற்காடு மாவட்டத்திலே அரிசியே கிடைக்காத
நிலைமை இருக்கிறது. ஒரு தகவலை அரசின் கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன். செய்யாறு தொகுதியிலே ஒரு கிரா
மத்திலே—சட்டுவாந்தாங்கல் என்ற கிராமத்திலே, துளுவை என்
பவருடைய குமாரன் பொன்னுரங்கம் என்பவர் அரிசி வாங்க
கடைக்குச் சென்றிருக்கிறார். அங்கே கேட்டு அரிசியில்லை என்று
சொல்லியிருக்கிறார்கள். பக்கத்திலே உள்ள கடையில் சென்று
அரிசியின் விலையினை விசாரித்தால் ஒரு கிலோ 7 ரூபாய்
என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு கிலோ 7 ரூபாய் என்ற
உடனே அந்த நபர் அதிர்ச்சியடைந்து அங்கேயே இறந்துவிட்ட
தாக அந்த கிராமத்து மக்கள் ஒரு தகவலினை நம்முடைய சட்ட
மன்ற உறுப்பினர் திரு. பாபு ஜனார்த்தனன் அவர்களுக்கு அனுப்பி
யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இனியும் ஏற்படா
தவாறு நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். (மணியடிக்கப்
பெற்றது).

குறைவாக இருக்கிறது, போதவில்லை என்ற காரணத்தால், ஒப்பந்தப் புள்ளிகள் போடுவதற்கு யாரும் முன் வராததால், ஒதுக்கப்பட்ட பணமும் செலவிடப்படவில்லை. ஆனால் இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்திலே மொத்தமுள்ள 2,971 ஏரிகளில் 2,884 ஏரிகள் முற்றிலும் 'வறண்டு விட்டன என்று அறிக்கையிலே விவரம் தந்து இருக்கிறார்கள்.

அதே நேரத்தில் கடந்த 4, 5 மாதங்களுக்கு முன்னாலே நாங்கள் விவசாயக் கடனை ஒத்தி வையுங்கள் ஜப்தி செய்யாதீர்கள், நிலவரியை ரத்து செய்யுங்கள் என்று சொன்னோம். ஆனால் இன்றைய தினம் நிலவரி, உள்ளூர் வரி, உள்ளூர் மேல்வரி, தண்ணீர் வரி போன்றவற்றை தள்ளி வைப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன என்று சொல்வது நிச்சயமாக இந்த அரசு மனிதாபிமானமாக நடந்து கொள்வதற்கு அடையாளமாகாது.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். மனிதாபிமானமாக நடந்து கொள்வோம் என்று சொன்னார்கள். எடுக்கின்ற நடவடிக்கைகளைப் பார்த்தால் நிச்சயமாக இந்த அரசுக்கு மனிதாபிமானம் இல்லை என்றுதான் கூற வேண்டியிருக்கிறது. நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றி பத்திரிகைகளிலே செய்தி வந்தது. பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் தினந்தோறும் பிழைப்பு தேடி அண்டை மாநிலங்களுக்குச் செல்கிறார்கள். அவர்களை வண்டி ஏற்ற வரும் அவர்களுடைய உற்றார் உறவினர்கள் கதறி அழ, அதைப்பார்த்து வண்டி ஏறுகிறவர்கள் கதறி அழ—இப்படிப்பட்ட ஒரு பரிதாபகரமான நிலைமை வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. ஆனால் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நிலவரியைத் தள்ளி வைக்க, கடனை ஒத்தி வைக்க, வேண்டிய சலுகைகளைச் செய்ய அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அதை எப்படி ஒத்துக் கொள்ள முடியும்?

வருவாய்த் துறை அமைச்சருக்கு இளகிய மனம் என்று சொல்வார்கள். ஆனால் இந்தப் பிரச்சினையில் ஏன் கல் மனமாக இருக்கிறார் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இன்றைய தினம் எங்கள் மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. குடிநீர்ப் பஞ்சம் கடுமையாக இருக்கிறது. ஏற்கெனவே அமைக்கப்பட்ட குழாய்களைப் பழுதுபார்க்கும் பணியை இன்னும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆனாலும் சரி, குடிநீர் வடிகால் வாரியம் ஆனாலும் சரி, பழுது பார்த்து முடியவில்லை. பணிகள் செம்மையாக நடை பெறவில்லை. அந்தப் பணிகள் எல்லாம் உடனடியாக, செம்மையாக நடக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதைப் போன்று, கிணறுகளை ஆழப்படுத்த தொகையை அதிகப்படுத்த வேண்டும். குடிநீர் வடிகால் வாரியம் தேவையான அளவுக்குக் குழாய்க் கிணறுகளை அமைக்க வேண்டும். தண்ணீர் இல்லை, ஏற்பாடு செய்யுங்கள் என்றால் அது மூன்றாவது 'காட்டகிரி' யில் வரவில்லை, ஆறாவது 'காட்டகிரி' யில் வருகிறது என்று சொல்கிறார்கள். இன்றைய தினம் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை தொகுதியானாலும், கலசப்பாக்கம் தொகுதியானாலும், போளூர் தொகுதியானாலும், செய்யார் தொகுதியானாலும், ஆரணி தொகுதியானாலும், அல்லது மற்றுமுள்ள பகுதிகளானாலும் இன்றைய தினம் எல்லா பகுதிகளுமே குடிநீர் பற்றாக் குறையினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த நேரத்தில் ' காட்டகிரி ' யைப் பார்க்காமல் எல்லா கிராமங்களிலும் குழாய்களை அமைத்து குடிநீர் வழங்க இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் விவசாயக் கூலிகள் எல்லாம் இன்றைக்கு வேலை இல்லாமல் வெளி மாநிலங்களுக்குச் செல்லும் பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. ஆகவே, உடனடியாக நிவாரணப் பணிகளைத் தொடங்க வேண்டும். அவர்களுக்கு எல்லாம் மாற்று வேலை கொடுக்க வேண்டும். வரத்துக் கால்வாய்களைத் தூர் எடுக்கலாம். ஏற்கெனவே வேலை தொடங்கி முடியாத ஏரிகளையும் மற்ற ஏரிகளையும் தூர் எடுக்கலாம். அதைப் போன்று ஏரிக்குக் கீழே நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சும் கால்வாய்களைக்கூட தூர் எடுக்கலாம். அப்படிச் செய்தால்தான் அங்கே இருக்கிற விவசாயக் கூலிகளுக்கும் ஏனைய மக்களுக்கும் நிச்சயமாக வேலை கொடுக்க வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

அதைப் போன்று கிராமங்களில் இருக்கிற ரேஷன் கடைகளில் இன்றைய தினம் அரிசி இல்லை. ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு 5 கிலோ அரிசியைக்கூட சரியாகக் கொடுக்க முடியுமா என்ற நிலைமை இருப்பதாக நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

அது மட்டுமல்ல. இன்றைய தினம் அரிசி விலை கடுமையாக உயர்ந்திருக்கிறது. சாதாரண நிலச்சுவான்தார்கள்கூட அரிசி வாங்கிச் சாப்பிட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, விலை உயர்வைத் தவிர்க்க அரசாங்கம் கிராமங்களில் இருக்கிற கடைகளில் குறைந்த விலையில் அரிசி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அரிசி இல்லை என்றால் கோதுமை, கேழ்வரகு, சோளம் போன்ற உணவுப் பொருட்களை அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கி சப்ளை செய்கின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிலவியிருக்கிற இந்த வறட்சிப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்குஅனுமதி தந்தமைக்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலும், தென்னாற்காடு, செங்கல்பட்டு, தர்மபுரி போன்ற மாவட்டங்களிலும் இந்த வறட்சியின் நிலைமைகள் எந்தஅளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கையாகக் கொடுத்திருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அனைத்துத் தாலூக்காக்களிலும், இந்த வறட்சி கடுமையாகப் பாதித்துள்ளதை இந்த அறிக்கையிலே விவரமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

எப்போதுமே வட ஆற்காடு மாவட்டம், தஞ்சையை அடுத்து நெல் உற்பத்தியிலே முன் அணியில் நிற்கும் மாவட்டம். அந்த மாவட்டத்திலே அணைக்கட்டுகள் எதுவும் கிடையாது. மழையை நம்பித்தான் நெல் விளையக்கூடிய ஒரு சூழ்நிலை வட ஆற்காடு மாவட்டத்திலே இதுநாள் வரை இருந்துகொண்டிருக்கிறது. அப்படி இருந்தும் கூட, தஞ்சை மாவட்டத்தை அடுத்து, நெல் உற்பத்தியிலே முன்னணியிலே இருக்கிறது என்கிற பெருமையினை இந்த வட ஆற்காடு மாவட்டம் பெற்றுக்கொண்டிருந்தது. அதிலும் குறிப்பாக பேரணாம்பட்டு தொகுதியிலே இருக்கிற நிலங்களிலேயிருந்து தான் அதிகக் குவிண்டால் நெல் உற்பத்தியாகிறது என்கிற கணக்கினைக் கூட அதிகாரிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வட ஆற்காடு மாவட்டத்தில், அதிக உற்பத்திசெய்கிற மாவட்டமாக இருந்து கொண்டிருக்கிற அந்த நிலங்கள்ல் இன்றைக்கு வறட்சியினால் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த வறட்சியின் காரணமாக விலைவாசி எந்த அளவுக்குஉயர்ந்திருக்கிறது என்கிற உண்மை இங்கே வைக்கப்பட்டிருக்கிற வெள்ளைஅறிக்கையிலேயே தெளிவாகப் புலப்படுகிறது.

என்னுடைய தொகுதியிலேயும், என்னுடைய தொகுதியினை அடுத்து இருக்கின்ற வட்டாரங்களிலேயும் இன்றைக்கு விவசாயம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பேரணாம்பட்டு, மாதனூர், உதயேந்திரம் போன்ற பல பகுதிகளில் மழையின்மை காரணமாக மணிலாப் பயிரும், நெல் பயிரும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்று இன்றைக்கு அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை நிச்சயமாகப் போக்கியாக வேண்டும். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்குவதில் நிச்சயமாக ஒரு முறையினை ஏற்படுத்தி மின்சாரம் வழங்கவேண்டும். மின்சாரம் சரிவரக் கிடைக்கின்ற வகையிலே உத்திரவாதத்தை அந்த மக்களுக்கு அளிக்க வேண்டும். இன்றைக்கு மின்சாரம்

வருவதைப் பொறுத்தவரையிலே பெரிய சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தால் எநதெந்தப் பகுதிகளுக்கு எப்போதெல்லாம் மின சாரம் வரும் என்பதைப் பறறிச் சரியாக அறிவித்து 5 மணி நேரத்திற்கு விடப்படும் என்றால் அது சரியாக வருகின்ற வகையிலே உத்திரவாதத்தை அளித்தாக வேண்டும். இப்போது ஏற்கெனவே இந்த வட்டாரத்திலே மின்சாரக் கட்டுபபாடு இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் வறட்சி அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையில் மாதனூர் என்ற மிகப் பெரிய ஊரில் பக்கத்திலே ஆறு இருக்கின்ற அந்த ஆற்றுப் பகுதியில் இன்றைக்குக்கூட நிலத்தடி நீர் இருக்கின்றது. ஆனால், அங்கே இருக்கின்ற அதிகாரிகள் பாலாறு பேசின் விதியின்படி சர்ட்டிபிகேட் வாங்க வேண்டும் என்றும் அப்போதுதான் மின் இணைப்பு தர முடியும் என்றும் கட்டாயப்படுத்துகிறார்கள். மலைப்பகுதிகளிலும் இப்படி சர்ட்டிபிகேட் கேட்கிறார்கள். ஆற்றோரப் பகுதியிலேயும் இப்படி சர்ட்டிபிகேட் கேட்கிறார்கள். ஆற்றிலே இருந்து தண்ணீரை எடுக்கின்ற நிலமையிலும் எங்களுடைய பகுதியிலே இந்த சர்ட்டிபிகேட் வழங்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். ஆகவே, நிலத்தடி நீர் அதிகமாக இருக்கின்ற இடத்திலே இப்படிப்பட்ட தடைகள் இருப்பதை நீக்க வேண்டும் என்றும் அதன்மூலம் விவசாயிகளின் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு செய்து தருகின்ற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இது குறித்து உன்னிப்பாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடிதண்ணீர் பிரச்சினையைப் பெறுத்த வரையில் இன்றைக்கு வட ஆற்க்காடு மாவட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கு இயற்கையால் பாதிப்பு ஏற்படாமலும், இரண்டு மூன்று தாலுகாக்களில் செயற்கையாகவேபாதிப்புக்கள் ஏற்படுகின்றன. திருப்பத்தூர், ஆம்பூர் வாணியம்பாடி, குடியாத்தம் போன்ற பகுதிகளிலே, டேனரி இருப்பதால் அங்கே உற்பத்தியாகின்ற கழிவு குடிதண்ணீர் அத்தனையையும் பாதித்துவிடுகின்றது. தண்ணீரைக் குடிக்க. முடியாத அளவுக்கு அதன் தன்மையை அது மாற்றிவிடுகின்றது இது செயற்கையாக ஏற்படுகின்ற பாதிப்பு. இன்றைக்கு இயற்கையாக அந்தப் பகுதியிலே குடிநீர் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர் இது குறித்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று அந்த வட்டாரத்திலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே, டேனரியால் குடிதண்ணீர் கெடுவது குறித்து கவனித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு 150 அடி, 200 அடி, 300 அடி தோண்டினாலும் தண்ணீர் வராத நிலைமை பல இடங்களில் இருக்கின்றது. கரும்பூர், உதயேந்திரம், மாதனூர், பேரணாம்பட்டு போன்ற பகுதிகளில் இப்படி எவ்வளவுதான் தோண்டினாலும் தண்ணீர் வராத நிலைமை ஏற்பட்டு அங்குள்ள மக்கள் வறட்சி

யினை அனுபவித்துக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கின்றது. எனவே, உடனடியாக, அந்த மக்களுக்குத் தண்ணீர்வர குழாய்க் கிணறுகளை அதிகமான அளவிலே போடுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவினைப் பொறுத்த வரையில் இன்றைக்கு வினியோகம் செய்வதில் பல இடங்களில் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அரிசி கிடைக்கவில்லை என்று அறிக்கை வைத்த உடனேயே வியாபாரிகள் அரிசி விலையினை ஏற்றுகிறார்கள். அரிசியின் விலை இன்றைக்கு 350 ரூபாய் 400 ரூபாய் என்று ஏறி இருக்கின்றது. அதைக் கட்டுப்படுத்த வேண்டும். மேலும், அரிசி கிடைக்கவில்லை என்று நாம் அறிக்கை விட்டவுடன் வியாபாரிகள் தங்களிடத்திலே உள்ள அரிசியினைப் பதுக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். அதுபற்றி கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து ஆங்காங்குள்ள அரிசியினைக் கைப்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

வடாற்காடு மாவட்டத்தில் டேனரி தொழிலாளர்கள், கூலி விவசாயிகள், பீடித் தொழிலாளர்கள் ஆகியோர் அதிகம் பேர் இருக்கிறார்கள். இந்த வறட்சியின் காரணமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையிலே வறட்சி நிவாரணப் பணியிலே ஏற்கெனவே இருக்கின்ற கம்மாய்களையும், ஏரிகளையும் செம்மைப் படுத்தி வருகின்ற காலங்களில் மழை பெய்கின்றபோது அந்தத் தண்ணீரைச் சேமித்து வைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட திட்டங்களைக் குறிப்பாக என்னுடைய பகுதியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(மாலை 5—50)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் நிலவுகின்ற வறட்சிகுறித்து அரசு வைத்துஇருக்கிற வெள்ளை அறிக்கை மீதுபேச எனக்கு வாய்ப்புஅளித்தமைக்குமுதற்கண் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கடுமையான வறட்சி நிலையில் இந்த மாநில அரசு தன்னுடைய நிதி வசதிக்கு உட்பட்டு சில நடவடிக்கைகளை ரூ. 33 கோடி ஒதுக்கி மேற்கொண்டு இருப்பதை மனிதாபிமான அடிப்படையில் அனைவரும் பாராட்டுகின்ற ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. இந்த மாநிலம் முழுவதும் கொடுமையான வறட்சி இருக்கிறது. அதிலும் குறிப்பாக

மதுரை மாவட்டம் எப்போதும் இல்லாத முறையில் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அரசு அளித்து இருக்கிற இந்த வெள்ளை அறிக்கையில் கூட மற்ற எல்லா மாவட்டங்களை விட மதுரைமாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப் பட்டிருக்கிறது என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காரணம் ஏறத்தாழ 5 லட்ச விவசாயத் தொழிலாளர்கள் இன்று வேலை இல்லாமல் மதுரை மாவட்டத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பது அரசின் கடமையாக இருக்கிறது என்று வெள்ளை அறிக்கையிலே சுட்டிக்காட்டியதிலிருந்து மதுரை மாவட்டம் எத்தனை கடுமையான வறட்சியில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது. பல்வேறு வகையிலே மதுரை மாவட்டத்திலே குறிப்பாக வடக்குப் பகுதியிலே நத்தம் ஊராட்சி ஒன்றியம் ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியம், வேடசந்தூர், குஜிலியம்பாறை, வடமதுரை, ஒட்டன்சத்திரம் இப்படிப்பட்ட பகுதியில் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக இந்த வறட்சி மாநிலம் முழுவதும் இருக்கிறது. இந்த மதுரை மாவட்டம் முழுவதும் இருக்கிறது என்றாலும் கூட அதை விடக் கடுமையான அளவில் வறட்சி வேடசந்தூர் தாலுகாவில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன் அதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன. வேடசந்தூர் தாலுகா அந்த அளவக்குக் கடுமையான வறட்சிக்கு உள்ளாகியுள்ளது.

1977 ஆம் ஆண்டு இறுதியில் வரலாறு காணாத அளவில் புயலால் பாதிக்கப்பட்டு வேடசந்தூர் தாலுகா விவசாயிகளின் விளைநிலங்கள் எல்லாம் மண்மேடாக ஆகிவிட்டன. அவைகளை அரசு அளித்த உதவியைப் பெற்று ஓரளவுக்குச்சீர்திருத்தி செம்மையாக்கி வருகின்ற இந்தச் சூழ்நிலையில் 1981 ஆம் ஆண்டு வேடசந்தூர் தாலூகா கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். தொடர்ந்து இப்போது 1982 ஆம் ஆண்டு மறுபடியும் வறட்சியால் விவசாயிகளும், கூலிவேலை செய்வோரும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வது எல்லாம் புயலாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்ட வேடசந்தூரைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்களும் விவசாயிகளும் பாதிப்பிலிருந்து மீளுகின்ற சூழ்நிலையில் 1982 ஆம் ஆண்டு மீண்டும் கடுமையான வறட்சி வேடசந்தூர் தாலூக்காவைக்கவ்வியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில்குறிப்பாக மாவட்டங்களிலேயே மதுரை மாவட்டம் குறிப்பாக வேடசந்தூர் தாலூக்கா கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. அதிலும் மாவட்டத்தின் வடக்கு கோடியில் இருக்கின்ற வேடசந்தூர் தாலூக்கா மிகவும் கடுமையான வறட்சியால் சிக்கி இருக்கிறது என்பதை உணர்ந்து அந்தத் தொகுதிக்கு அந்தவட்டத்திற்கு மிகவும் கூடுதலான தொகையை முன்னுரிமை அளித்து ஒதுக்க வேண்டும்என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று உடனடி தேவையாக விவசாயிகள் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். 1981 ஆம் ஆண்டு வறட்சியால் விவசாய நிலமை பாதித்தது. அப்போது வேடசந்தூர் தாலூகாவைப் பார்த்த அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரியும். தமிழகத்திலேயே மிக ஆழமான விவசாயக் கிணறுகள் என்றால் அது வேடசந்தூர் தாலூகாவில்தான் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஏதோ 100 பேருக்கு, 200 பேருக்கு கிணறு வெட்ட தக்காவி கடன் கொடுக்கிறோம் என்ற சூழ்நிலையை அரசு மாற்றி எத்தனை பேர்விவசாயக் கிணறுகளை வெட்ட தயாராக இருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் கிணறு வெட்டுவதற்கு கடனை கூட்டுறவுச் சங்கம் மூலமும், நிலவள வங்கிகள் மூலமும் கொடுப்பதற்கு அரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக இப்படிப்பட்ட வறட்சியான சூழ்நிலையிலே பழைய விதிமுறைகளைக் கடைபிடிக்கவேண்டும் என்று நிலவள வங்கிகள் சொல்லுகின்றன. அதில் உடனே அரசு தலையிட்டு தடுக்கவேண்டும். 300 மீட்டருக்குள் கிணறுகள் இல்லை என்று சார்ட்டிபிகேட் வாங்கவேண்டும், கிரவுண்டு வாட்டர்க்கான சார்ட்டிபிகேட் வாங்கவேண்டும் என்கிற நிபந்தனைகளை உடனே அரசு நீக்கவேண்டும். கடந்த வாரத்தில் கூட வேடசந்தூர் நிலவள வங்கி மற்றும் ரெட்டியார் சத்திரம் நிலவள வங்கி எல்லாம்அந்த நிபந்தனைகளை விதித்திக்கின்ற சூழ்நிலை இருந்த காரணத்தினால் அதில் உடனே அரசு தலையிட வேண்டும். விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் வசூலை உடனே அதிகாரிகள் நிறுத்த வேண்டும். நிலவரி ரத்தை அரசு அறிவிக்க வேண்டும்.

குறிப்பாக மாவட்டத்தின் வட பகுதியிலே கடுமையான வறட்சி இருக்கிறது. வேடசந்தூர் தாலூகா முழுதும் கால்நடைகளுக்குத் தீவனம் இல்லாத கடும் சூழ்நிலை உருவாகி இருக்கிறது. இதை மாற்றுவதற்குக் கால்நடைத் துறை மூலம் உடனடியாக வேறுமாவட்டத்திலிருந்தோ வேறு மாநிலத்திலிருந்தோ கால்நடைகளுக்கான தீவனத்தை வரவழைத்து அந்த கால்நடைகளுக்கு கொடுத்து காப்பாற்ற வேண்டும். இதல் முதல் நடவடிக்கையாக கால்நடைத் துறை மூலம் கால்நடைகளுக்கான தீவனத்தை கொடுக்க உரிய நடவடிக்கையை விரைவாக ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம் குடிநீர் பிரச்சனையால் கடந்த ஒரு வார காலத்திலே மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. மாவட்டத்தின் வடகோடியில் இருக்கும் குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம் வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், மேற்குப் பகுதி, வட, மதுரை ஊராட்சி ஒன்றிய தெற்குப் பகுதி வட மதுரை ஒன்றியத்தின் வடக்குப் பகுதி அதேபோன்று மேற்குப் பகுதி ஆகியவை மிக கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன.

ஆழ் குழாய்க் கிணறுகளை குடிநீர் வடிகால் வாரியம்
அமைத்துக்கொண்டு இருக்கிறது என்றாலும்கூட இந்த நேரத்
தில் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு சிறப்பான
நடவடிக்கையை காலதாமதம் எதுவும் இல்லாமல் உடனே எடுக்க
வேண்டும் என்று வேண்டி விரும்பி இதை கருணையுடன் பரி
சீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு
ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்த பட்சம் 200க்கு மேற்பட்ட
அடிகுழாய்கள் இருக்கின்றன என்ற சூழ்நிலை இருந்தாலும்
கூடதிடீர் என்று குடிதண்ணீர்க் குழாய்கள் பழுதடைந்து
விடுகிற போது அவற்றைச் சரி பார்ப்பதற்கு ஒரே ஒரு
பிட்டர் யூனியன் முழுமைக்கும் இருக்கிறார். இதிலே
காலதாமதம் பார்க்காமல் எந்த துறை ஆணையிட
வேண்டும் என்ற நடைமுறைகளைப் பார்க்காமல் உடனடியாக
மாநிலத்தில் இருக்கின்ற எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும்
அந்தக்குழாய்களைப் பழுதுபார்க்கின்ற பிட்டர்களைக் கூடுதலாக
உடனடியாக நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
இருக்கின்ற குழாய்களைப் பொறுத்த அளவில்கூட 100 அடி,
150 அடி என்ற மட்டத்திற்குத்தான் ஆழப்படுத்தியிருக்கிறார்
கள். இன்றைக்கு வறட்சியின் காரணத்தினால் நீர் மட்டம் கீழே
போய் இருக்கிறது. இருக்கின்ற குழாய்களையே குடிநீர் வடிகால்
வாரியத்தின் மூலமாக உள்ள ரிக்குகளை வைத்து 250 அடிவரை
ஆழப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை உடனே ஆராய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் ஆறிலே
இருக்கிறது என்ற நிலையிலே அதை மாற்றுவதற்கு வட்டார
வளர்ச்சி அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதித்
தான் அதை மாற்ற வேண்டுமென்ற நடைமுறையை மாற்றி
வறட்சி பகுதிகளைக் கருத்திலே கொண்டு எந்த எந்தப்
பகுதிகளிலே பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதோ அத்தனைப்
பகுதிகளிலும் நிலை ஆறிலே இருக்கிறது மூன்றிலே தான்
போடுவோம் என்று சொல்கிற நிலையை மாற்றி பிரச்சினையைத்
தீர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களிலே உள்ள மக்களில் 80 சதவீதம் பேர்கள் வறுமை
யில் உள்ளவர்கள் அவர்கள் அரிசியை மட்டும் நம்பியிருக்கவில்லை
அவர்கள் சோளம், கேழ்வரகு, கம்பு, சாப்பிடுபவர்கள் தயாராக
உள்ளனர். உடனடியாக தேவையான சிறு தானியங்களைபோர்க்
கால நடவடிக்கையாக மற்ற மாநிலங்களிலிருந்து மற்ற இடங்
களிலிருந்து கேழ்வரகு, கம்பு சோளம் போன்றவற்றை
வரவழைத்து தாராளமாக கூட்டுறவுச் சங்கங்கள், நியாயவிலைக்
கடைகள் மூலமாக வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டும். கூலித்தொழிலாளர்கள் எல்லாம் அதையும் விரும்பு
கிறார்கள். ஆகவே அரிசி தான் என்றில்லாமல் மற்ற சிறு
தானியங்களையும் கூட்றவுச் சங்கங்கள் நியாயவிலைக் கடைகள்
மூலமாகத் தடையின்றி தாராளமாகக் கிடைக்கச் செய்ய
வேண்டும். அரசு ஒதுக்கியிருக்கிற பணமும், ஒதுக்க
இருக்கிற பணமும் நிரந்தர வறட்சிப் பணிகள்
என்ற முறையில் பாதுகாப்பாக இருக்கின்ற வகையில் முழுக்க

முழுக்க கிராமங்களுக்கு இருக்கின்ற கண்மாய்களை ஆழப்படுத்துவதற்கும் குளங்களின் வரத்துக்கால்வாய்களைச் சீர் செய்வதற்கும், குளங்களை ஆழப்படுத்துவதற்கும் செலவிடுகின்ற சூழ்நிலைகளை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மாநிலத்திலே இருக்கின்ற வறட்சியைச் சுட்டிக் காட்டி உடனடியாக மத்திய அரசு நிதிகொடுத்து உதவவேண்டுமென்று வற்புறுத்துகிற கட்டாயத்திலே நாம் இருக்கிறோம். ஆனால் மைய அரசு இன்றைக்குக் கடுமையான மௌனத்தைச் சாதித்துக் கொண்டிருக்கிறது. இந்த மாநிலம் மட்டுமல்ல, எந்த மாநிலமாக இருந்தாலும், செப்டம்பர் மாதம் வறட்சி குறித்த அறிக்கையை அனுப்பிய மேற்கு வங்க அரசுக்கு இந்த வாரம் தான் மத்திய அரசு குழுவை அனுப்புகிறது என்ற செய்தி வருகிறது என்றால் மைய அரசு மௌனம் கண்டு இந்திய துணைக் கண்டத்திலே உள்ள ஒவ்வொருவரும் தேவைப்படுகிற நிலையில் இருக்கிறோம். எப்போது அனுப்பினோம், என்று அனுப்பினோம் என்ற வாதத்தைவிட என்று அனுப்பினாலும் மத்திய அரசு மௌனம் சாதிக்கிறது மக்கள் பிரச்சினையை கண்விழித்துப் பார்க்க மறுக்கிறது ஏன், மைய அரசு மயக்கத்தில் இருக்கிறது. அந்த நிலை மாறி மைய அரசு உடனடியாக மாநில அரசுக்கு குழுவை அனுப்பியாக வேண்டும். மத்திய அரசு அனுப்புகிற அந்தக் குழுவிலே மாநில அரசின் சார்பிலே இரண்டு பிரதிநிதிகள் இருக்கவேண்டும், அவர்கள் இருந்து பார்வையிட்டு அரசுக்கு அறிக்கையை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட அதிகாரிகளைக் கேட்டு அவர்களுடைய அறிக்கைகளைப் பெற்று ரூ. 190 கோடிக்கு மேல் கூடுதலாக தொகையை மத்திய அரசு வழங்கவேண்டும். மாநில அரசின் இரண்டு பிரதிநிதிகள் மத்திய அரசின் குழுவிலே இடம் பெறவேண்டுமென்ற முறையிலே ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வெள்ளை அறிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியை காணிக்கையாக்கிக் கொள்கிறேன். அருமை நண்பர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு பெ. சு. திருவேங்கடம் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தைச்சேர்ந்த உறுப்பினர் வட ஆற்காடு மாவட்டத்திலே வறட்சி அதிகமாக இருக்கிறது அதை ஒப்புக்கொண்டு அரசு அதிகமான நிதியை 140 லட்ச ரூபாயை ஒதுக்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்திருக்கிறார்கள். இன்னொன்றையும் எடுத்துச் சொன்னார்கள். மாவட்டம் முழுவதும் கடுமையான வறட்சி இருக்கிறது. இதை ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியினரும் ஒப்புக்கொள்கிறார்கள், அதிலே கருத்துவேறுபாடு கிடையாது. அவர்கள் பேசும்போது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இளகிய மனது உள்ளவர்கள் ஏன் கல்மனதாகிவிட்டார் என்று கேட்டார்கள்.

இளகிய மனதுடைய வருவாய்த் துறை அமைச்சரைவிட இளகிய மனம் உடையவரை உறுப்பினர் பார்த்திருக்கிறாரா? மத்திய அரசு பணம் கொடுக்கிறதோ இல்லையோ அதைப்பார்க்காமல் 32 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கி இருக்கிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் புரட்சித் தலைவர் அவர்களும், கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருந்து ஒதுக்கியிருக்கிறார்கள். நேற்றைய தினம் பேசியபோது முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்ததுபற்றி ஒரு கருத்தைச் சுட்டிக்காட்டினார்கள். நேற்று புரட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது நெஞ்சுயர நாங்கள் எல்லாம் பெருமைப்பட்டோம்.

(மாலை 6—00 மணி)

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஏ. சி. சண்முகம் அவர்கள் பேசுகிறபோது என் பெயரை குறிப்பிட்டு ஒரு கருத்தைச் சொன்னார்கள், வட ஆற்காடு மாவட்டத்தில் என்னென்ன பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைச் அவர்கள் சொன்னால் வரவேற்க தயாராகத் இருக்கிறோம். நிலவரி வசூலிக்கவில்லை என்று சொல்கிறாரா? கூட்டுறவுக் கடன் வசூலிக்கவில்லை என்று சொல்கிறாரா? என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நிலவரி, கூட்டுறவுக் கடன் முதலியவற்றை வைத்து வறட்சிப் பணிகள் நடக்கவில்லை என்று சொல்வது சரியாக இருக்காது. பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏரிகள், கண்மாய்கள் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆழ்துளை கிணறுகள் ஆங்காங்கே போடப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் மறந்துவிட்டு அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசவேண்டும் என்ற காரணத்தினாலே தங்களுடைய கருத்துக்களை அவ்வாறு சொல்கிறாரே தவிர மனசாட்சியோடு அவரே ஒத்துக்கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருமையோடு ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். சத்துணவுத் திட்டத்திற்காக அரிசியும், ரேஷன் கடைகளுக்கு அரிசியும் வாங்குவதில் என்னுடைய உயிரையே கொடுத்தாலும் கொடுப்பேனே தவிர அந்த பணியிலிருந்து பின் வாங்க மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சரை தான் இந்த தமிழக மக்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில், பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற முறை வறட்சி வந்தபோது போர்கால நடவடிக்கைகள் போல பல்வேறு பணிகளை செய்திருக்கிறது. கிட்டத்தட்ட 80 அல்லது 100 ஆழ்துளை கிணறுகளை போட்டு ஒரு சரித்திரத்தையே படைத்தது அதைப்போல அரிசி விலை உயராமல் இருப்பதற்காக கிட்

ஆரணி தொகுதி மிகவும் வறட்சியான பகுதி. பல கிராமங்களிலே குடிநீர் இல்லாமல் இருக்கிறது. பல கிராமங்களுக்கு ஆழ்துளை கிணறுகளை போட வேண்டிய அவசியம் இருக்கிறது. ஒரு சில கிராமங்களிலே, ஆழ்துளை குழாய் கிணறுகளுக்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் கணக்கு வழக்குகளிலே இன்னும் ஒரு சில கிராமங்களை சேர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு இந்த ஆண்டிலும் அடுத்த ஆண்டும் திட்டங்களை தீட்டி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சிநிலையிலே, இந்த வெள்ளை அறிக்கையின்மீது பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் தந்தமைக்கு என்னுடைய நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தின் பருவமழை பொய்த்துவிட்டது. கடந்த ஆண்டு பெய்ததில் பாதிகூட பெய்யாத காரணத்தால், அங்கு பயிர்களுக்கு மிகவும் சேதம் ஏற்பட்டுள்ளது. குடிநீர் நிலைமை மிகமிக மோசமாக இருக்கிறது. இங்கே உள்ள அறிக்கையிலே விளைச்சல் முழுவதும் மழையை நம்பி இருக்கிறதென்றும், குடிதண்ணீர் பற்றாக்குறை உள்ளதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. குடிதண்ணீரைப் பெற இங்குள்ள பொதுமக்கள் பெரிதும் அவதிப்படுகிறார்கள் என்று நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள வெள்ளை அறிக்கையிலேயே கூறப்பட்டுள்ளது. ஆகையால், நீலகிரி மாவட்டதிற்கு குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்த அரசு ஒதுக்கிய தொகை சுமார் 4 இலட்சம் ரூபாய் என்பது உள்ளபடியே மிகவும் வேதனை அளிப்பதாக உள்ளது. நீலகிரி மாவட்டம் ஒரு பெரிய மலைப் பகுதியான ஒரு மாவட்டம். அதில் 4 ஒன்றியங்கள், 2 நகராட்சிகள் அடங்கி உள்ளன. இந்த மாவட்டத்திற்காக நான்கே நான்கு லட்சம் ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது பெரிதும் வேதனைக்குரியதாக இருக்கிறது. இதற்காக அங்குள்ள மக்கள் . சார்பாக என்னுடைய வருத்தத்தை இந்த சபைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். குடிதண்ணீர் இல்லாத காரணத்தால் அங்கு மக்கள் படுகின்ற கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

கூனூர் தொகுதியாக இருந்தாலும், உதகை தொகுதியாக இருந்தாலும், கூடலூர் தொகுதியாக இருந்தாலும் சரி, நீலகிரியை பொறுத்தவரையில் மழையை நம்பியே வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு கால கட்டத்தில் மக்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆறுகளோ, பெரிய ஏரிகளோ இல்லாத நிலையில் தண்ணீர் தாகத்தை தீர்ப்பதற்காக அங்கு உள்ள மக்கள் மழையையே நம்பிக்கொண்டிருக்கிற நேரத்தில் அங்கு கிணறுகளை ஆழப்படுத்த ரூ. 4 இலட்சம்தான் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் வேதனைக்குரியதாக உள்ளது. புதிய

கிணறுகளை வெட்டுவதற்கு, பல பகுதிகளுக்கு தண்ணீர் தருவதற்கு சர்க்கார் இன்னும் எந்தவிதமான நிவாரணமும் அளிக்காதது மிகவும் வேதனையாக உள்ளது. அதற்காக என்னுடைய கண்டனக் குரலை இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம் ஒரு பிற்பட்ட மாவட்டம். பல வெளி மாநிலங்களை நம்பியேதான் நீலகிரி மாவட்டம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறது. அங்குள்ள தேயிலை செடிகள், உருளைக் கிழங்கு செடிகள், மற்றும் காய்கறிச் செடிகள் இந்த மழையை நம்பியே வாழ்ந்துகொண்டிருக்கிறது. ஆனால், கடந்த காலத்தில் அங்கு மழை பெய்யாததன் காரணமாக அங்கு பயிர்கள் வெய்யிலிலே கருகியும், பனியிலே கருகியும் விளைச்சல் இல்லாமல் இருக்கிறது. விளைச்சல் இல்லாத காரணத்தால் அங்குள்ள விவசாயிகள் வாங்கிய கடனை கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதை சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஆகையால், அங்குள்ள விவசாயக் கூட்டுறவுக் கடன்களை குறுகியக்காலக் கடன்களாக உள்ளதை, மத்தியகாலக்கடன்களாக மாற்றித் தந்தால்தான் அங்குள்ள விவசாயிகள் வாழ, வளர தங்களுடைய விவசாயத்தைச் செய்ய வழியேற்படும். அதை நீங்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6.10)

அதோடு, மழை இல்லாத காரணத்தால், பயிர்கள் பாதிக்கப்பட்டதால், அங்குள்ள ஆடுமாடுகள் புல் வகைகள் இல்லாமல், ஜீவனம் நடத்த முடியாமல் இருக்கின்றன. கேத்தி பஞ்சாயத்து, அதிபரப்பு பஞ்சாயத்து, துனேரி பஞ்சாயத்து போன்றவை மிகவும் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. அங்கு வறட்சி உச்ச கட்டத்தில் உள்ளன. மக்கள் வறுமையில் வாடுகிறார்கள். அவர்களுக்கு முதற்கண் நாம் தண்ணீர் தர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஆகவே, அரசு நீலகிரி மாவட்டம்முழுவதற்கும் போர்க்கால நடவடிக்கையாக தண்ணீருக்காக அதிகப் பணம் ஒதுக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று நீலகிரி மாவட்டம் பொறுத்தவரை, நெல்பயிர் விளையாத ஒரு இடம் அது. தன்னுடைய சுய தேவைக்காக நீலகிரி மாவட்டம் வேறு மாவட்டங்களை நம்பியுள்ளது. திருச்சி மணச்சநல்லூர் போன்ற பகுதிகளிலிருந்துதான் நீலகிரி மாவட்டத்திற்கு அரிசியும் மற்ற உணவுப் பொருட்களும் வரும். ஆனால், இப்பொழுது திருச்சி போன்ற மாவட்டங்களே வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்திலே எங்களுக்கு அரிசி கிடைப்பதே மிக அரிதாகிவிட்டது. வெளிக் கடையிலே அரிசியே இல்லாத நிலைமை இருக்கிறது. இருந்தாலும், கிலோ, ரூ. 7, ரூ. [illegible] என்ற நிலையில்தான் அரிசி விற்கப்படுகிறது.

அதே நேரத்திலே, நியாயவிலைக் கடைகளில் கார்டு உள்ள வர்களாக எல்லோரும் இல்லை. ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு நியாய விலை கடைகளிலே அரிசி இல்லை என்று சொல்கிறார்கள். அங்குள்ள தோட்டத் தொழிலாளர்கள், தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கிறார்கள். ஒரு குடும்பத்தில் 8 பேர்கள் இருந்தால் 3 பேர்கள் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு தினக்கூலி ரூ. 12 வருகிறது. 3 பேர் இருந்தால் ரூ. 1,000க்கு வருமானம் ஆகிறது. அதனால், நியாய விலைக் கடைகளிலே அரிசி வாங்கக் கூடிய தகுதியை இழந்துவிடுகிறார்கள். ஆனால், ஒரு மாதத்தில் 26 நாட்கள்தான் அவர்கள் வேலை செய்ய முடியும். 26 நாட்களிலேயே, ஒரு சில நாட்கள் வேலைக்குப் போக முடியாத நிலைமை இருக்கும். இருந்தாலும், மாதம் ரூ. 1,000 வருமானம் என்று கணக்குக் காட்டுவதால், நியாயவிலைக் கடைகளிலே அரிசி வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று, சர்க்கரைக்காக, ஒரு சிலர் தங்களுடைய மாதச் சம்பளம் ஆயிரம் என்று சொல்லியுள்ளதால், அவர்களும்-ஏழைகளாக இருந்தும் நியாயவிலைக் கடைகளின் பக்கமே போக முடியாத நிலைமையிலேயே இருக்கிறார்கள். நியாய விலைக் கடைகளிலும் அவர்களுக்கு அரிசி இல்லை. வெளி மார்க்கெட்டிலும் அவர்களுக்கு அரிசி இல்லை. இதனை எண்ணிப் பார்க்க வேண்டிய கட்டாயத்திலே நாம் இருக்கிறோம்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் வெளி மார்க்கெட்டிலும் அரிசி இருக்க வேண்டும். நியாய விலைக் கடைகளிலும் அரிசி இருக்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குன்னூர் தொகுதியைப் பொறுத்தவரையிலும் வெலிங்டன் கன்டோன்மென்ட் என்ற பகுதி இருக்கிறது. அந்த கன்டோன்மென்ட் பகுதி, மத்திய சர்க்கார் பகுதியாக இருந்தாலும், அங்குள்ள மக்கள் நம்மைச் சேர்ந்தவர்கள்தான். அங்கு 10,000 மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்று வரையில் குடிதண்ணீர் கிடைக்காத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் குடிதண்ணீருக்காக பல பகுதிகளுக்குச் சென்று அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாநில சர்க்கார் இதுவரைக்கும் குடி தண்ணீர் தரமுடியவில்லை.

அதே போன்றுதான் அரிசனங்கள் வாழ்கின்ற பகுதி. வசபள்ளம், காந்திபுரம் போன்ற பகுதிகளில் காலையிலிருந்து மாலை வரை வெளியிடங்களுக்குச் சென்றும் அங்குள்ள பெண்கள் தண்ணீர் பெறமுடியாத நிலையிருக்கிறது. ஆகவே, அந்த ஏழை, எளிய, பாட்டாளி மக்கள், அரிசன மக்கள் வாழ்கின்ற பகுதி

[illegible] உடனடியாகத் தண்ணீர் தந்து, அவர்களுடைய [illegible] பஞ்சத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் [illegible]ப்பத்தை அளித்த தங்களுக்கு நன்றி கூறி விடை பெறு[illegible]. நன்றி, வணக்கம்.

*திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைக்கு முன்தினம், [illegible] துக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும், வறட்சியைப்பற்றிச் சட்டமன்றத்திலே விவாதிக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்த போது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் நான் அதற்கும் தயாராக இருக்கிறேன் என்று சொல்லுகின்ற வகையில் அறிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சொல்லியதன் அடிப்படையில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் வறட்சியைப் பற்றிப் பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவரவர்களின் அரசு எந்த நேரத்திலும் எதற்கும் தயங்காமல், கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லி, செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்வதற்குக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான் இன்றைய தினம் இந்த அறிக்கையின்மீது நாம் விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

திருச்சி மாவட்டம் காவேரி பாய்கின்ற பகுதியாக இருந்தாலும் [illegible] மாவட்டத்தில் சில பகுதிகளைத் தவிர மற்ற பல தாலுக்காக்கள் இன்றைய தினம் வறட்சியால் பாதிக்கப்பட்டு, அங்குள்ள மக்கள் வேலை வாய்ப்பு இல்லாத முறையில் மிகவும் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகத் திருச்சி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியான துறையூர் வட்டத்தில் நன்செய் நிலங்கள் 15,000 ஏக்கர்களும், புன்செய் நிலங்கள் [illegible] ஏக்கர்களும் இருக்கின்றன. எங்கள் பகுதி [illegible] [illegible]த்தை நம்பி, ஏரிகள் இல்லாமல், மிகவும் பின் தங்கிய [illegible] யில் உள்ள பகுதியாக இருக்கிறது. எனவே, அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் எந்த அளவிற்கு அல்லல் உறுவார்கள் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை.

அங்கு பொதுப் பணித் துறையைச் சேர்ந்த 36 ஏரிகளும், 115 சிறிய குட்டைகள் என்ற வகையிலும் இருக்கின்றன. இவற்றில் 5 ஏரிகளில் மட்டுமே பெயரளவிற்குத் தண்ணீர் வந்துள்ளது. சிறு குட்டைகள் என்று எடுத்துக் கொண்டால் சுமார் [illegible] சிறு குட்டைகளில் மட்டுமே தண்ணீர் [illegible] [illegible] இன்ற வட்டாட்சித் தலைவரவர்கள் [illegible] [illegible] அளவிற்கு எங்கள் பகுதி மிகவும் [illegible]

தட்ட 17 ஆயிரம் கூட்டுறவு கடைகளை திறந்திருப்பது பார் உள்ள அளவும், இந்த தமிழகம் உள்ள அளவும் மறக்க முடியாத ஒன்றாகும். இந்த 17 ஆயிரம் கூட்டுறவுக்கடைகளை புரட்சித் தலைவர் அரசு திறக்கவில்லை என்று சொன்னால் மக்கள் எவ்வளவு அல்லல்பட்டிருப்பார்கள் என்பதை மனசாட்சி உள்ளவர்கள் அறிவார்கள்.

அடுத்து வட ஆற்காடு மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கையில் ஒதுக்கியுள்ள பணம் போதுமா என்று சொன்னால் போதாது என்று ஆளும் கட்சி சார்பிலே நாங்கள் குரல் கொடுக்கிறோம். வட ஆற்காடு மாவட்டத்திற்காக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதிகமான நிதி ஒதுக்கீட்டை செய்யவேண்டும். வடஆற்காடு மாவட்டத்தில் நிரந்தரமான திட்டமாக இருப்பது செண்பகதோப்புத் திட்டம். சென்ற முறை பட்ஜெட்டிலே இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதே போல உள்ளூர் அணைக்கட்டு, பி. அரசம்பட்டு அணைக்கட்டு ஆகியவைகள் எல்லாம் இருக்கின்றன. இந்த மூன்று அணைக்கட்டுகள் கிடப்பிலே இருக்கின்றன. இவைகளை கட்டினால் வட ஆற்காடு மாவட்டத்தில் 15 தொகுதிகள் நிலத்தடி நீரை பெறுவதற்கு வாய்ப்பும், வசதியும் இருக்கும். இவைகளை நிறைவேற்றுவதற்கு 20 கோடி ரூபாய் இருந்தால் போதும். இந்த 20 கோடி ரூபாயில் வட ஆற்காடு மாவட்டத்தை செழிப்பான மாவட்டமாக மாற்றலாம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு இராமலிங்கம் அவர்கள் ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். நல்லவர் ஆட்சி என்று; வறட்சி சென்ற முறை அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஆட்சியிலும் வந்தது; ஒரு வேலையாவது பில் இல்லாமல் செய்தார்கள் என்று இது வரையில் யாருமே ஆதாரத்தோடு சொல்லவில்லை. பணிகள் எல்லாம் சிறப்பாக நடந்தன. ஆனால் அதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் கூட வறட்சி வந்தது. அப்போது மத்திய அரசு பணம் ஒதுக்கியதை கூட வறட்சிப் பணிகளுக்கு சரியாக செலவிடவில்லை என்று அன்றைய தினம் நிதியமைச்சராக இருந்தவர் கூட ஒரு பிரச்சினையில் எடுத்துச் சொன்னார்கள். அதிலே குறைபாடுகள் இருந்ததாக மத்திய அரசால் குற்றம் சாட்டி, இந்த அவையில் கூட மாண்புமிகு முதலமைச்சராக இருந்த எதிர் கட்சித் தலைவர் அவர்கள் அப்படி குற்றம் சாட்டுவதாக இருந்தால், குறை கண்டுபிடிப்பதாக இருந்தால் அந்த பணமே தேவையில்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 190 கோடி வறட்சிப் பணிகளுக்காக கொடுத்திருக்கிறார்கள். இன்னும் மூன்று, நான்கு மாதங்கள், இந்த வறட்சி நிலை தொடர்ந்து நீடிக்குமேயானால் கிட்டத்தட்ட 250, 300 கோடி ரூபாய் தேவைபடும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே சற்று குறியாக இருந்து அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கடுமையான முறையில், இந்திய நாடே அதிசயிக்கும் வகையில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு அரிசி வாங்குவதற்கு விரைவில் டெல்லிக்கு செல்லவிருக்கிறார். இந்த நிலைமை இப்படி இருக்கிறது. இங்கே மாநில அரசு நடவடிக்கை எடுக்கவில்லை; மத்திய அரசை நாடவில்லை.

அரிசி கொடுக்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கூட சொன்னார்கள். நீங்கள் குரல் கொடுங்கள் உரிமைக்கு நாங்கள் உடன் இருக்கிறோம் என்று. இங்கே மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் சொன்னார்கள். நல்லவற்றிற்கும், நாட்டிற்குமாக ஒட்டுமொத்தமாக பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் தயங்காது என்று சொன்னார்கள். இங்கே இருக்கிற உறுப்பினர்களும், மேலவையிலே இருக்கிற சங்கரலிங்கம் அவர்களும் சொன்னார்கள். இவ்வளவு பிரச்சினைகளிலே எவ்வளவு தூரம் மத்திய அரசை நாடி இருக்கிறீர்களென்று. நாங்கள் ஒத்துழைப்பு தருவோமென்று அங்கே எதிர்கட்சித் தலைவர்கூட சொன்னார்கள். அந்த செய்தி பத்திரிகைகளிலேகூட போடப்பட்டு இருக்கிறது. அவர்களுடைய ஆட்சியை கலைப்பதற்கு மத்திய அரசு முடிவெடுத்திருக்கிறது. எனவே தான் உண்ணாவிரதம் மேற்கொண்டு இருக்கிறார் என்று காட்டிக் கொடுக்கிறார்கள்.

காவிரி நீர் பிரச்சினையில் அடையாள நிறுத்தம் செய்தபோது தமிழக மக்களுடைய உணர்வை காட்டுவதற்காக ஒட்டுமொத்தமாக ஒரு நாள் குறித்து கூடி இங்கே பேசினார்கள். ஆனால், திரு மாயத்தேவர் அவர்கள், இந்த மாநில அரசை தடை செய்ய வேண்டுமென்று மாநில முதலமைச்சரை தடை செய்ய வேண்டுமென்று அங்கே பாராளுமன்றத்தில் சொன்னார்கள். (மணி அடிக்கப்பட்டது) அங்கே மாண்புமிகு மாயத்தேவர் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக குரல் கொடுத்தார்கள். தண்ணீர் கிடைப்பதற்காக—தமிழக அரசு இதனைச் செய்யவில்லை. மத்திய அரசை எதிர்த்துதான் இங்கே தமிழக முதல்வர் போராடுகின்றார். அதை தடை செய்ய வேண்டுமென்று அங்கே காட்டிக்கொடுக்கிறார்கள். உண்ணாவிரதம் போன்ற பிரச்சினைகளிலும் காட்டிக் கொடுக்கிறார்கள். காங்கிரஸ் நண்பர்களுடன் ஒத்துழைத்து திராவிட முன்னேற்றக் கழகம் அங்கேயும் காட்டிக் கொடுக்கிறது.

கடுமையான வறட்சியைப் பற்றி இங்கே பேசுகின்றோம். வறட்சியினை கூட மத்திய அரசு கவனிக்கவில்லை. நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னாலும், அங்கே இருக்கக்கூடிய நமது நண்பர்கள்கூட வறட்சியைப் பற்றி கவலைப்படவில்லை என்று இந்த நேரத்தில் உரிமையோடு சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

ஒரு சிறிய தொழிற்சாலைகூட எங்கள் தாலுக்காக்களில் இல்லை என்பது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர் களுக்கு மிகவும் நன்றாகத் தெரியும். அங்கே உள்ள மக்கள் விவசாயத்தையே பெரிதும் நம்பியுள்ளவர்கள். எனவே, இந்த வறட்சியின் காரணமாக அவர்களுக்கு வேலை கிடைக்காமல் மிகவும் சிரமப்படும் சூழ்நிலை இருக்கிறது. எனவே, எங்களது திருச்சி மாவட்டத்திற்கு 102 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதற்காக இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டாலும் கூட, இன்னும் மிகப்பெரிய அளவிற்கு திருச்சி மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்தால்தான் அங்கே உள்ள மிகவும் பின் தங்கிய பகுதிகள் பயனடைகிற வகையில் தேவையான வசதிகளைச் செய்து தர வசதி வாய்ப்பாக இருக் கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி வழி மின்னிணைப்புக்காக ஒன்றரை கோடி ரூபாய் ஒதுக் கப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எங்கள் பகுதியிலுள்ள கிராமங்களிலும், நகரப் பஞ்சாயத்துக்களிலும் இந்தத் தனி வழி மின்னிணைப்புகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். தனி வழி மின்னிணைப்பு கொடுப்பதற்கு முடியாமல் காலதாமதம் ஆகின்ற நிலைமை இருந்தால் ஜெனரேட்டர் மூல மாகவோ அல்லது ஆயில் எஞ்ஜின்கள் மூலமாகவோ குடிதண்ணீ ருக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் துறையூர் வட் டத்தை ரேடியோ மூலமாகவும், பத்திரிகை வாயிலாகவும்வறட்சிப் பகுதியாக அறிவித்திருக்கிறார்கள். எனவே, வறட்சிப் பகுதியாக அறிவித்ததாகவே எங்கள் பகுதி மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சில பகுதிகளில் இன்னும் வரி வசூல் செய்து கொண்டிருப்பதால் ஏன் இந்த நிலைமை என்று கேட்கின்ற நிலைமை இருக்கிறது. எனவே, அரசு வறட்சிப் பகுதிகளை விரைவில் அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சென்ற ஆண்டு வறட்சி காரணமாக துறையூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய பத்து கிணறுகளை வெட்டுவதற் காக ஒவ்வொரு கிணற்றுக்கும் 30,000 ரூபாய் அளவில் 3,00,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் நல்ல மழை பெய்து விட்டது என்று சொல்லி அந்த மூன்று இலட்சம் ரூபாயும் பாக்கியாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை கொடுக்கப் படாமல் இருக்கிறது. அந்த வேலைகளைச் செய்தவர்களுக்கு பஞ்சாயத்து யூனியன் மூலமாகப் பணி செய்தவர்களுக்கு பணத்தை முதலில் கொடுப்பதற்கு நிதி ஒதுக்கி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் முருங்கைப் பட்டியிலும், கோம்பை, செங்காட்டுப்பட்டி, கொத்தம்பட்டி, கலிங்கமுடையான்பட்டி ஆகிய இடங்களில் ஏரித் திட்டங்கள் தீட்டி அரசுக்கு அறிக்கை கள் வந்துள்ளன. அவைகளுக்காக 75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அந்த ஏரித் திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியிலிருக்கின்ற ஆலத்துடையான்பட்டி, வடக்கிப்பட்டி ஆகிய ஏரிகளுக்கு வரத்து வாய்க்கால் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

பணியைத் துவக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதற்கு விளக்கமாக திரு. ஏ.சி. சண்முகம் அவர்கள் பதில் சொன்னார் கள். ஒப்பந்தம் மூலமாகப் பணி செய்தால் பெயர் கெட்டு விடும் என்பதற்காகப் புரட்சித் தலைவரவர்கள் டெண்டர் மூல மாகப் பணிகளைச் செய்ய வேண்டுமென்ற கருத்தைச் சொல் லியதை ஒட்டி, எங்கள் பகுதியில் டெண்டர் விட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அவைகளுக்கு அதிக அளவிற்கு நிதி ஒதுக் கீடு செய்து பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கேயிருக்கின்ற கிராமப்புறங்களில் உள்ள சிவில் சப்ளைஸ் கூட்டுறவுக் கடைகளில் அரிசி இல்லாத காரணத்தால் மிக விரை வில் அவர்களுக்கு அரிசி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

(மாலை 6-20)

திரு. செ. குப்புசாமி: மாண்புமிக்க மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது வறட்சி நிலவரம் குறித்துப் பேச அனு மதித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். பொதுவாக, தமிழ் நாட்டில் வறட்சி எந்த அளவிற்குநிலவுகிறது என்பதை இங்கு அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும்,விரிவாகப் பேசியிருக்கி றார்கள். அதிலும், குறிப்பாக வடஆற்காடு மாவட்டத்தில் எந்த அளவிற்கு வறட்சி தாண்டவமாடுகிறது என்பதை ஒவ் வொரு மாண்புமிகு உறுப்பினர்களும் கூறியிருப்பதைப்போல நானும் இங்கேகூற விழைகிறேன்.

குறிப்பாக வட ஆற்காடுமாவட்டத்திலேவந்தவாசி கடுமை யாக தாக்கப்பட்டுள்ளது என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அந்த மாவட்டத்தின் கணக் குப்படி பார்த்தால் அதிகாரிகள் கொடுத்த கணக்கிலே வந்தவாசி வட்டம் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தக் கணக்கிலிருந்து தெரியவருகிறது. இந்த மாவட்டத்திற்கு 171?

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வடலூர் வள்ளல் பெருமான் அவர்கள், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று பாடினார்கள். அந்த வகையில் அந்த பொன் மொழிக்கு இணங்க நம்முடைய வள்ளல் பெருமானுடைய ஆட்சி, தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் ஆட்சி இன்றைக்கு ஒரு வெள்ளை அறிக்கையை இங்கே சமர்ப்பித்து இதன் மீது பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தமைக்கு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும், வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நதி மூலமாக சில இடங்களில் பாசனத்திற்கு ஏற்பாடு செய்து இதுவரை நல்ல முறையில் நடந்து வந்தது. இந்த இடங்களில் கூட இந்த ஆண்டு வெலிங்டன் திட்டத்தின் மூலம், கோமதி நதி திட்டத்தின் மூலம், மணிமுத்தாறு திட்டத்தின் மூலம், வீராணம் ஏரி மூலம் இப்படி இந்தப் பகுதியிலே எல்லாம் கூட இந்த ஆண்டு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதே நிலையில் என்னுடைய குறிஞ்சிப்பாடி யூனியன் பகுதி பூராவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த வெள்ளை அறிக்கையிலே எங்களுடைய மாவட்டத்தின் சார்பாக ஏரிகள் 1,778 என்றும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் குறிப்பிட்டிருக்கிற ஏரிகள் எந்த ஆயக்கட்டில் உள்ள ஏரிகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிவிக்கப்படவில்லை. ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் இருக்கிற ஏரிகள், அதில் இருக்கிறதா, அல்லது பொதுப்பணித்துறையினால் பராமரிக்கப்படுகிற ஏரிகள் இருக்கிறதா, என்ற அந்த ஏரிகளை, 1,778 என்று எப்படி எடுத்திருக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எப்படி எடுத்திருந்தாலும், சில ஏரிகளை விட்டுவிட்டிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படி விடப்பட்ட ஏரிகளையும் இதிலே சேர்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி ஏரிகளை பழுதுபார்க்கிறபோது நாம் ஆயக்கட்டில் இருக்கின்ற, கிராமங்களில் இருக்கின்ற ஏரிகளை எல்லாம் ஒவ்வொரு தடவையும் ரிப்பேர் செய்கிறோம். அது வறட்சி வந்தாலும், தன்னிறைவுத் திட்டம் வந்தாலும், எந்த நிலைமை வந்தாலும் நாம் ஒவ்வொரு தடவையும் அந்த ஏரிகளை செப்பனிடுகிறோம்.

(மாலை 6-30)

நான் குறிப்பாக வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். கிராமப் பகுதிகளில் இருக்கும் அத்தனை ஏரிகளையும் ஆழப்படுத்த படுத்த வேண்டும். மாவட்டத்தில் உள்ள 10—12 ஏரிகளையாவது புல்டோசர் வைத்து ஆழப்படுத்தினால் அங்கே இருக்கும் விவசாயிகளுக்கு நல்ல முறையில் பயன் படும். இது ஒரு முன் மாதிரி திட்டமாக எடுத்துச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்

அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பும் இடைக்கும். ஏரியும் ஆழமாகி தண்ணீர் நல்ல முறையில் தேங்கும். அதைப் போலவே அந்த வரப்பும் நல்ல முறையில் அமைக்கலாம். ஆகவே, அந்த வகையில் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

எங்கள் மாவட்டத்தில் 1954 கிராமங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன, என்று புள்ளி விவரங்கள் கொடுத்து இருக்கிறார்கள். இதிலே சில கிராமங்கள் விடுபட்டு இருக்கும் என்று கருதுகிறேன். காரணம், என்னுடைய தொகுதியிலேயே குறிஞ்சிப்பாடி தொகுதியிலேயே கிழக்குப் பகுதியில் இருக்கும் கிராமங்கள் விடுபட்டுப் போய் இருக்கின்றன. அதைப் போலவே குப்பம் ஆத்துப் பகுதியில் உள்ள 30 கிராமங்கள், மானம் பார்த்து பூமி, விடுபட்டு இருக்கின்றன. அதையெல்லாம் இந்த நிவாரணப் பணியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குழாய்க் கிணறுகள் 791 ஏற்படுத்தியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் ஒவ்வொரு திட்டத்தின் கீழும் 791 குழாய் கிணறுகள் அரசாங்கம் அமைத்து இருந்தாலும் அதிலே போடப்படுகின்ற பைப்புகள் நாளுக்கு நாள் வீணாகிப் போய் இருக்கின்றன. அந்த போர்ஸ்ஸும் வீணாக்கப்பட்டு இருக்கிறது. இப்படி ஒவ்வொரு முறையும் போடப்படும் குழாய்கள் வீணாகி, மறுபடியும், மறுபடியும் அரசாங்கம் பணம் செலவழித்து பைப்புகள் போடுவதைவிட அந்த போர் வெல்கள் நல்ல முறையில் செயல் படுகின்ற விதத்தில் நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு இந்த வறட்சி நிவாரணப்பணியின் கீழ் அந்த வேலைகளை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடிநீர் திட்டம் பற்றிச் சொல்கிறபோது எங்கள் மாவட்டத்தில் உள்ள உண்மையான நிலைமைகளை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய குறிஞ்சிப்பாடி ஒன்றியப் பகுதியிலும், கம்மாபுரம் ஒன்றியப் பகுதியிலும், பண்ருட்டி ஒன்றியப் பகுதியிலும் இருக்கின்ற நிலைமை என்னவென்று சொன்னால் நெய்வேலி நிறுவனம் நிலத்தடி நீரை இறைத்து வெளியே அனுப்புகின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் குடிநீர் பற்றாக் குறை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற பகுதிகளில் குடிநீர் வசதி செய்வதை விட இந்த மூன்று பகுதிகளில் நிரந்தரமான முறையில் குடிநீர் வசதி ஏற்பாடு செய்ய வேண்டும். எங்கே போர் வெல் போட்டாலும், இந்த நெய்வேலி நிறுவனம் நிலத்தடி நீரை இறைக்கின்ற காரணத்தால், தண்ணீர் வற்றிப் போய் விடுகிறது. ஆகவே, இந்தப் பகுதிகளில் நிரந்தரமான வகையில் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இலட்சம் ஒதுக்கியிருப்பதற்கு அரசிற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வந்தவாசி வட்டத்தைச் சேர்ந்த மருதாடு என்ற பெரிய கிராமத்தில் தற்போது அங்கு வந்த வறட்சி பற்றிய தலைமை அதிகாரி பார்த்தபோது அங்குள்ள சமுதாயக் கிணற்றில் ஆயில் என்ஜின் மூலம் குடிநீர் மற்ற பகுதிகளுக்குக் கிடைக்க 40 நாட்களில் ஏற்பாடு செய்வதாக சொல்லிச் சென்றார், இது வரையில் அது துரிதப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்வதோடு அங்குள்ள ஏரி, குளம் அனைத்தும் கடந்த மூன்று வருடங்களாக சுத்தமாக வறண்டு கிடக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரம். அங்கே 6 மணி நேரம் மின்சாரம் ஒரு நாளைக்குக் கிடைக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலே உள்ள கிணறுகள் வரண்டு கிடக்கின்றது. எனவே, 3 மணி நேரம் ஒரு நேரமாகவும், அடுத்த 3 மணி நேரம் ஒரு நேரமாகவும் ஒரே நாளில் என்று பிரித்துக் கொடுத்தால், அந்தக் கிணறுகளில் தண்ணீர் ஊற்றெடுத்து மீண்டும் இறைப்பதற்குத் தயாராக இருக்கும். ஆனால், 6 மணி நேரம் கொடுப்பதால் அங்கே தண்ணீர் போதுமான அளவு சுரக்காமல் இறைக்க முடியாமல் போய்விடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போன்று, எங்கள் மாவட்டத்தில் அணைகள் மிகவும் குறைவு. அதிலும், குறிப்பாக எந்த தொழிலும் இல்லாத வந்தவாசி வட்டத்தில் விவசாயம்தான் மிகவும் முக்கியமான தொழில். எனவே, இந்த வறட்சியின் காரணமாக வேறு எந்தத் தொழிலும் செய்ய முடியாத நிலையில், அவர்கள் மிகவும் இக்கட்டான நிலையில் அவர்கள் வேலைத்தேடி வெளிஊர்களுக்குச் செல்லும் நிலை இருக்கின்றது என்பதை இங்கே சொல்லியாக வேண்டும். அதேநேரத்தில் இப்போது ஏற்படுத்தப்பட்ட தன்னிறைவுத் திட்டம், சத்துணவுத் திட்டம் கிராம மக்களுக்கு தக்க பலனை அளித்தாலும், வறட்சியின் வேகம் அவர்களைத் துரத்தி அடிக்கின்றதுஎன்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று இப்போது உள்ள நிலவரப்படி, ஊரக வளர்ச்சி திட்டத்தின்படி பல தொழில்கள் இந்த மாவட்டத்தில் துவங்கப் பட்டு இருப்பதற்கு அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும் அந்த வேலை பற்றாக்குறை இருப்பதால் அந்தப் பகுதி மக்கள் வெளியேற வேண்டியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல. இப்போது திட்டங்கள் எவ்வளவு தீட்டினாலும், அந்தத் திட்டங்கள் மக்களை அணுகி செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், அந்தத் திட்டம் வருகின்றவகையிலே வறட்சி அதிகமாக பாதிப்பு இருப்பதால் அந்தத் திட்டம் போகவில்லை

அதற்கு ஒதுக்கப்பட்ட பணம் இன்னும் கூடுதலாக்கப்பட்டு வந்தவாசி பகுதிக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். வடார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் கணக்கெடுத்தபோது கூட மற்ற மாவட்டங்களை விட வந்தவாசி மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பதை அவர் குறிப்பிலே இருந்து காணமுடிகிறது.

அதுமட்டுமல்ல, இப்போது எவ்வளவுதான் அரசு செய்தாலும் வறட்சியின் கொடுமை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், இப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்ற சத்துணவுத் திட்டம் மட்டும் இல்லை என்று சொன்னால், அங்கே உள்ள குழந்தைகள் ஒருவேளை கஞ்சி கூட குடிக்கும் நிலைமை அற்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதை இங்கே கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இங்கே மாற்றாந்தாய் மனப்பான்மை என்றால் கோபித்துக்கொள்வார்கள் என்பதால் நான் இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் நம் நாட்டில் ஏற்றுக்கொண்ட புராதனக் கதைகள் என்பதால், அந்தக் கைகேயி அவருடைய வாக்கின்படி இராமனை அப்புறப்படுத்த நினைத்ததைப்போல் இந்த வறட்சி நம்முடைய முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களை, சோதித்து கோபித்துக்கொண்டிருக்கிற நேரத்திலே இராமன் காட்டுக்குச் சென்றபோது அவனுடைய ஆட்சியின் நிலையை, ஆட்சியின் ஒரு எடுத்துக்காட்டும்படியான, நியாயமான போக்கை உணர்ந்த பரதன் அவனுக்குப் பாதுகாப்பு கொடுப்பதல்லாமல் பின்பற்றினார் என்பதை மறந்து, இங்கே பரதர்கள் கொடுமைப் படுத்துகிறார்கள், கோஷம் இடுக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. அந்த நிலையிலே சகோதரனாக, பங்காளியாக இருந்த அந்தப் பரதன் இராமனுடைய உண்மையான ஆட்சியை ஒத்துக்கொண்டதைப்போல் இங்கே உள்ள பரதர்கள், பங்காளிகள், அதை ஒத்துக்கொள்ளாமல், கடுமையாகப் பேசுவதையும், அவர்கள் பேச்சிலும், குழப்பமிடுவதிலும் ஈடுபட்டிருப்பதைப் பார்க்கும்போதுஇங்கே சகோதரர்கள் மனப் பான்மையை நாம் அகற்றிவிடுகிறோம் என்பதை நான் இந்தச் நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் பொதுவாக கேட்கிறபோது எல்லோரும் கூடி, ஒன்றாக, மத்திய அரசைக் கேட்கின்ற அந்த உரிமை நமக்கு எல்லோருக்கும் உண்டு என்பதை நான் உணர்கிறேன். அதைப் போன்று இங்கே உள்ள எந்தக் கட்சிகளானாலும், இந்த நாட்டிலுள்ள வறட்சியைப் போக்க நிதி கேட்பதை நாம் மறந்துவிட்டு, அதற்காக யாரையோ காட்டுகின்றார்களே தவிர, சகோதர மனப்பான்மையை மறந்துவிட்டு இந்த நாட்டு மக்களுக்குத் தேவையானதை மறந்துவிடுகிறோம் என்ற எண்ணம்தான் தோன்றுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 80 இலட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். வேலை வாய்ப்பு என்று சொல்கிற நேரத்தில் நான் என்னுடைய தொகுதியில் உள்ள நிலைமையை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இது குறித்து அதிகாரிகளைக் கேட்டுகின்ற போது அவர்கள் சில யோசனைகளைச் சொன்னார்கள். குறிப்பாக கிராமங்களை இணைப்பதற்காக, புதிதாக 'பார்மேஷன் ரோடுகள்' போட்டு, அந்தத் திட்டத்தின் கீழ் எல்லா கிராமங்களையும் நெடுஞ்சாலைகளோடு இணைத்து, அந்த வகையில் புதிதாக சாலை வசதிகள் செய்து கொடுத்தால், அந்தக் கிராமங்களும் பிற இடங்களோடு இணைப்பு ஏற்படுத்திக் கொள்ள முடியும், அந்த பின் தங்கிய பகுதிகளில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். ஆகவே, அந்த வகையில், இந்தத் திட்டத்தை மேற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் லாரி மூலமாக வழங்கப்படுகின்ற இடங்களில் எல்லாம், கூடுமான வரையில் பாதுகாக்கப்பட்ட குடி நீர் கொடுக்க மேல் நிலைத் தொட்டி கட்டி, அதன் மூலம் குழாய் அமைத்துத் தண்ணீர் கொடுக்க வேண்டும். அந்தத் திட்டத்தையும் இந்த வறட்சி நிவாரணப் பணியில் சேர்க்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

இத்தகைய நிரந்தரமான முறையில் குடி நீர் வசதி செய்து தர இந்தத் திட்டத்தில், அவற்றைச் சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்து, அது விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பையும், வாழ்க்கையில் முன்னேற்றத்தையும் அளிக்கும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன் வணக்கம்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சி நிலை பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு என்னை அனுமதித்ததற்காக முதலில் தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சி காரணமாக இன்றைக்கு நம்முடைய மாநில அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. பல நடவடிக்கைகளை எடுத்து ஒவ்வொரு ஜில்லாவிலும் இத்தனை கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன ; இத்தனை இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக மதுரை ஜில்லாவைப் பொறுத்த வரையில், 87 [illegible]இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு [illegible] அரிசனங்கள் நிறைந்திருக்கிற ஜில்லா ; [illegible] [illegible]இருக்கிற ஜில்லா ; கண்மாய்கள் [illegible]

இருக்கிற ஜில்லா. இப்படிப்பட்ட ஒரு பெரிய ஜில்லாவுக்கு இந்த 87 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே மிக மிகக் குறைவு, இது போதாது ; இன்னும் அதிகமாக ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வறட்சி நிலை பற்றிய கணக்கு எப்படி எடுக்கப்படுகிறது என்று பார்க்க வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமான கண்மாய், வருவாய்த் துறைக்குச் சொந்தமான கண்மாய், பி.டபிள்யூ. டி. கண்மாய் என்று இப்படி பல கண்மாய்கள் இருக்கின்றன. இந்த ஜில்லாவில் இவ்வளவு ஊரில் குடிநீர் இல்லை, வேறு என்ன என்ன தேவை என்பதை எல்லாம் அந்த யூனியன் கமிஷனர், தாசில்தார், ஆர்.டி.ஓ., சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் ஆகியோர் சேர்ந்து சுற்றிப் பார்த்து, எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்த்து, ஜில்லா கலெக்டர் மூலம் அறிக்கை பெற நடவடிக்கை எடுக்காமல் அதிகாரிகள் கொடுத்த அறிக்கையை வைத்து தான் மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். மதுரை ஜில்லாவில் மொத்தம் 731 கிராமங்கள் தான் இந்த வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அறிவித்திருக்கிறார்கள். அது சரியான விவரம் அல்ல. இன்னும் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே கூட பல கிராமங்கள் தண்ணீர் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கிணறுகளிலே தண்ணீர் இல்லை; கண்மாய்கள் எல்லாம் வரண்டு விட்டன. ஆகவே, இன்னும் எந்த எந்த கிராமங்கள் விடுபட்டிருக்கின்றனவோ அந்தக் கிராமங்களை எல்லாம் எடுத்து, அவைகளுக்கும் நிவாரணம் அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, வைகை, பெரியாறு பாய்கின்ற பகுதிகளில் இன்றைக்கு அந்த ஆறுகளிலே தண்ணீர் வரவில்லை. 10 நாட்களுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடுவதால் விளைச்சல் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. 15 சதவீதம் கூட விளைச்சல் இல்லை என்று அந்த மக்கள் கதறிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் இருக்கிற அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதி என்று அறிவித்து, கடன் நிவாரணம், வேறு என்ன சலுகைகள் உண்டோ அத்தனை சலுகைகளையும் அளிப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வறட்சி நிவாரணத்தின் கீழ் பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று பார்க்காமல் எல்லா விவசாயிகளுக்கும் வட்டியை தள்ளுபடி செய்து அசலை மட்டும் வசூல் செய்ய வேண்டும். அதையும் 3 ஆண்டு கால கடனாக இருந்தால் 5 ஆண்டு கால கடனாகவும், 5 ஆண்டு கால கடனாக இருந்தால் 7 ஆண்டு கால கடனாகவும், மாற்றி அந்த அடிப்படையிலே வசூல் செய்ய ஏற்பாடு செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

[திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்] [1983 பிப்ரவரி 10

அதோடு சிறு விவசாயிகளாக இருக்கிறவர்களுக்கு, 2 ஏக்கர், 3 ஏக்கர் நிலம் உள்ள சிறு விவசாயிகள் பயிர்க்கடன், உரக்கடன் பெற்றிருந்தால் அவர்கள் வாங்கிய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்து கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால், அங்கே பல கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் சில விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். என்னுடையதொகுதியில் ஒருவீடு ஒருநிலகோட்டை தட்டு பீக்கர் கோட்டூர், பச்சமலயான் கோட்டை பிர்க்காக்கள் மிகவும் பின் தங்கிய பகுதியாக மட்டுமல்லாமல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதியாக இருக்கிறது. அங்கே குடிக்க தண்ணீர் இல்லை. இப்படி பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. எனவே போர்க் கால நடவடிக்கை போல் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, எங்கெங்கே தண்ணீர் இல்லையோ, குடி நீர்த் தட்டுப்பாடு இருக்கிறதோ அங்கெல்லாம் ஆழ் குழாய்கள் போட்டு போர் வெல்ஸ் உடனடியாக தண்ணீர் கொடுக்க வசதிசெய்து கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு இருக்கக் கூடிய சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இருக்கிற விவசாயக் கூலிகள், மற்றுமுள்ள கூலிகளுக்கு எல்லாம் ஏதாவது வேலை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தண்ணீர் இருந்தால் தான் அந்த ஏழை விவசாயிகள் வேலை செய்ய முடியும், கூலி கிடைக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், கண்மாய்களில் பெரிய ராட்சச கிணறுகளை போட வேண்டும். அப்படிப் போட்டால் தான் அதன் மூலமாக ஆடுமாடுகள் குடிக்க தண்ணீர் கிடைக்கும். ஆடுமாடுகளுக்கு மட்டுமல்லாமல் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கும் தண்ணீர் கிடைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். போர்க் கால நடவடிக்கை போல் அதைச் செய்ய வேண்டும். நான் ஏற்கெனவே பல முறை இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். இந்த வறட்சிப் பணியின் கீழ் இதைச் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

அது மட்டுமல்லாமல் கண்மாய்களின் மேல் பகுதிகளில் புல் வளர்க்க வேண்டும். இப்போது இந்த வறட்சியால் ஆடு மாடுகளுக்கு புல் இல்லாமல் இருப்பது ஒரு பக்கம் இருந்தாலும் நோயாலும் பாதிக்கப்படும் சூழ்நிலை இருக்கிறது. இந்த நேரத்தில் கண்மாய்களின் மேல் பகுதிகளில் மாட்டுத் தீவனமான புல்லை வளர்க்க வேண்டும். அதையும் இந்த நிவாரணப் பணியில் சேர்த்து செய்தால் எதிர் காலத்தில் நல்ல வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1983 பிப்ரவரி 10] [திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்]

(மாலை 6—40.)

அதே சமயத்தில் இன்றைக்கு இந்த நிவாரணப் பணிகளின் வாயிலாக பல ரோடுகளில் மண் அடைக்கிற பணிகள், பல கண்மாய்களை தூர் எடுக்கிற பணிகள், பல குளம் குட்டைகளை வெட்டுகிற பணிகள் எல்லாம் நடைபெற வேண்டும். இந்தப் பணிகளையெல்லாம் என். ஆர். ஈ. பி. ஸ்கீம் மூலமாக ஏழை எளிய மக்கள் வேலை வாய்ப்பு பெறும் வகையில் எடுத்துச் செய்தால் அவர்களுக்கு சாப்பிடுவதற்கு வழி வகுத்தது போலவும் இருக்கும், வறட்சி நிவாரணப் பணிகளும் நடைபெறும் என்பதைச்சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தின் வறட்சிப் பணிகளை மேற்கொள்ள 190 கோடியைத்தான் மத்திய அரசிடம் கேட்டிருக்கிறீர்கள். எத்தனையோ கோடி ரூபாயை மத்திய அரசு செலவு செய்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் தமிழகத்தில் நிலவும் வறட்சி நிலையைக் கண்டு, தயவுகூர்ந்து சற்று கருணை காட்ட வேண்டும். தமிழகத்து மக்கள் இந்திரா காந்தி அம்மையார் மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்டவர்கள். ஆகவே அந்தச் சூழ்நிலையை பயன்படுத்திக்கொண்டு மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொல்வதை மாற்றிக் கொள்ளச் செய்யும் வகையில், தமிழகத்தின் முதல்வர் அவர்களையும், நிதிஅமைச்சர் அவர்களையும் அவர்கள் கூப்பிட்டு வைத்து, நீங்கள் 190 கோடியைத்தானே வறட்சி நிவாரணப் பணிகளுக்காக கேட்டிருக்கிறீர்கள். இந்தாருங்கள் 300 கோடி ரூபாயாகத் தருகிறேன், எடுத்துக் கொண்டு சென்று ஏழை எளிய மக்களை வாழ வையுங்கள், அவர்களுக்கு அரிசி கிடைக்கச் செய்யுங்கள், குடிதண்ணீர் மற்றும் எல்லாவிதமான அத்தியாவசியப் பொருட்களையும் அவர்களுக்கு இதனைச் செலவழித்துப் பெற்றுத் தாருங்கள் என்று சொல்லி அனுப்பினால், தமிழகத்து மக்கள் நம்முடைய அன்பிற்குரிய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு உண்மையிலேயே மிகவும் நன்றியைச் செலுத்துவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, எவ்வளவு துரிதமாக அந்த நிவாரண நடவடிக்கைகளை எடுக்கிறோமோ, அவ்வளவு துரிதமாக எடுத்தால், மிக நன்மையாக இருக்கும். ஓரளவிற்கு இப்போது வேலைகளை விரைவாக எடுத்திருந்தால்கூட, இன்னும் சற்று வேகமாக இந்தப் பணிகளை கவனிக்கும் அதிகாரிகளை முடுக்கிவிட்டு, இந்தப் பணியினை நிறைவேற்றுவதில் ஈடுபட்டிருக்கும் மற்ற அலுவலவர்களையும் முடுக்கிவிட்டு, விரைவாக இதனைச் செய்து முடிப்பீர்களேயானால், மக்களுக்கு சமயத்தில் செய்ய வேண்டிய கடமைகளை [illegible]

*திரு ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பருவமழை தவறியதின் காரணமாக, ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக இங்கே வைக்கப் பட்டுள்ள வெள்ளை அறிக்கையின்மீது நடக்கின்ற விவாதத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தக்க நேரத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையினை மன்றத்தில் வைத்திருப்பதை வரவேற்கிறேன். 'Prevention is better than cure, என்று சொல்வது போல, வருமுன் காப்பது நல்லது என்று கிராமப்புறத்திலே நிலவிவரும் பழமொழியைப் போல பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட சூழ்நிலையை கருத்தில் கொண்டு, எவ்வளவோ சங்கடங்களுக்கிடையில் தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை பாராட்டுகிறேன். என்னுடைய மாவட்டத்திற்காக கிட்டத்தட்ட 178 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

இருக்கின்ற சங்கடமான சூழ்நிலையில், எங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இந்தத் தொகை போதுமானதாக இல்லை. எனவே கூடுதலாக நிதிஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன். மூன்று பருவங்களில், (Three successive seasons) பருவமழை தவறியதின் காரணமாக பெரிய அளவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக உணவு உற்பத்தியும் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறது. இதை மேலும் அதிகமாக்குகிற அளவில் காவிரி ஆற்றில் தண்ணீர் வராமல் தடுத்து நிறுத்துகிற மத்திய அரசின் நடவடிக்கைகள் எரிகிற நெருப்பிலே எண்ணெய் ஊற்றுவது போல இருக்கிறது.

1978–79-ல் அரசு எடுத்த நல்ல நடவடிக்கைகளின் காரணமாக உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுகின்ற நிலையில் தமிழகம் இருந்தது. உணவு உற்பத்தி 65 லட்சம் டன்னிலிருந்து 30 லட்சம் டன்னாக தற்போது குறையக் கூடிய நிலை ஏற்பட்டது. இது இயற்கையின் கோளாறுகளால் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக இருந்தாலும், இந்தச் சங்கடங்களிலிருந்து தமிழக மக்களைக் காப்பாற்ற உதவுவதற்குப் பதிலாக, மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு, அரசியல் ரீதியாக தமிழக அரசைப் பழிவாங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் கர்நாடக அரசை காவிரியிலிருந்து தண்ணீர் விடாமல் தடுக்கிறது. மறுபக்கம் ஆந்திரா அரசு அரிசி தர விரும்பினாலும் தரவிடாமல் தடுக்கிறது. (மணியடிக்கப் பெற்றது.)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: என்னுடைய செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளும் வறண்டிருக்கின்றன. அந்த ஏரிகளிலே தண்ணீரே இல்லை. மிகவும் கடுமையான அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளன. எல்லா ஏரிகளும் வறண்ட பாலைவனமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் காட்சி அளிக்கின்றன. வறட்சிப் பணிகளை நடத்துகின்ற காலத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் என்ன தான் வேகமாக செயல்பட முனைந்தாலும், ஆங்காங்கேயிருக்கிற அதிகாரிகளும் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும். இன்னும் இந்தப் பணியில் அவர்களை விரைவுப் படுத்த வேண்டும். போர்க்கால வேகத்தில் நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

1979 ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தில் கிட்டத்தட்ட 1569 மில்லியன் நிவாரண வேலைகளுக்காக நாடு முழுவதும் செலவிடப் பட்டது. அது மட்டும் அல்லாமல் 1100 மில்லியன் பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்காக செலவிடப்பட்டது. 1980-லே ஏற்பட்ட வெள்ளத்திலே 3732 மில்லியன் நாட்டிலே நஷ்டம் ஏற்பட்டதாக அறிக்கையிலே இருந்து அறிகிறோம். இதைப்போன்று பஞ்சத்தாலும், வெள்ளத்தாலும் ஏற்படுகின்ற சங்கடங்களால் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு நிரந்தரமான திட்டங்களை ஏற்படுத்தி அவர்களுக்கு உதவி செய்வதற்கு, ஒரு வழி வகையினை நாம் உடனடியாக கண்டாக வேண்டும். அதிலும் குறிப்பாக வட மாநிலங்கள் எல்லாம் வெள்ளச் சேதங்களாலும், தென் மாநிலங்கள் எல்லாம் பஞ்சத்தாலும் பாதிக்கப்படுகின்றன. இதைத் தடுக்க ஒரேவழி கங்கையையும் காவிரியையும் இணைத்து, அந்தத் தண்ணீரைப் பஞ்சப் பகுதிகளிலே பயன்படுத்துவது ஒன்று தான் வழி என்பதை என்னுடைய கருத்தாக கூற விரும்புகிறேன்.

ஏரிகள் வறண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் கூட்டுறவு நீர்ப்பாசன சங்கங்களை அமைத்து பாசன ஏற்பாடு செய்துதர நம்முடைய அரசு அருள் கூர்ந்து ஏற்பாடு செய்ய வேண்டும். செங்கல்பட்டு மாவட்டத்திலே அனைத்து ஏரிகளையும் ஆழப்படுத்தி, அவற்றின் கரைகளைப் பலப் படுத்துவதோடு மட்டுமல்லாமல் புல்டோசர் வைத்து அந்த ஏரிகளை மிகவும் அதிக ஆழப்படுத்தி, அதிலே உள்ள ஆக்கிரமிப்புகளை எல்லாம் நீக்கினால் கூடுதலான நாட்களுக்கு அந்த ஏரிகளிலே தண்ணீர் வர் வாய்ப்புண்டு. எனவே இதுபோன்ற ஏற்பாடுகளை நம்முடைய அரசு செய்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஏரியும் அதிகமான அளவில் பாசனத்திற்கு உதவும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்) [1983 பிப்ரவரி 10

அடுத்து தற்போது மாநிலங்களில் உள்ள அனைத்து நதிகளையும் தேசிய மயமாக்கி தமிழகத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் பஞ்சத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தொகுதியைப் பற்றி மட்டும் பேசுங்கள். கங்கை-காவிரி இணைப்பு நம்முடைய தலைமுறையில் எங்கே வரப்போகிறது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ப. வெங்கடசுப்பிரனியம்: தலைவரவர்களே, என்னுடைய தொகுதியான காஞ்சிபுரத்தில் குடிதண்ணீர் பஞ்சம் அதிகமாக இருக்கின்றது. காஞ்சிபுரம் நகராட்சி சார்பிலே 256 இலட்சம் ரூபாயில் ஒரு மாஸ்டர் ப்ளான் (Master plan) தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த திட்டத்தின்படி விரிவுபடுத்துவதன் மூலம் காஞ்சிபுரம் நகரத்திலே உள்ள தட்டுப்பாட்டை நீக்குவதற்கும் நகராட்சி வளர்வதற்கும் ஆவன செய்ய வேண்டும். என்னுடைய தொகுதியிலே உள்ள பஞ்ச நிலைமையைப் போக்க கூட்டுறவு அங்காடிகளில் கூடுதலான அரிசி வழங்கி அந்த கிராம மக்களையும் நகர மக்களையும் பட்டினியிலிருந்து மீட்க வழிவகை செய்யவேண்டும். மேலும் தற்போது பஞ்சத்தால் வாடுகின்ற வேளாண்மை தொழிலாளர்கள் மற்றும் நெசவாளர்கள் வாழ்வு வளம்பெற அனைத்து உதவி நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்களின் அரசு சார்பிலே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற வறட்சி துயர் தணிப்பு பற்றிய அறிக்கையின் மீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பூராவும் கடுமையான வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இரண்டு பருவ மழைகளும் பொய்த்துவிட்ட பிறகு ஏற்பட்டுவிட்ட வறட்சி நிலைமையினைப் போக்க பல்வேறு சிறப்பான பணிகளை இந்த அரசு முயற்சி எடுத்து நடத்தி வருகின்றது. தஞ்சை மாவட்டத்திலே குறிப்பாகச் சொல்லப்போனால் காவிரி நதியினால் இந்த ஆண்டு மேட்டூர் அணையிலே நீர் நிரம்பவில்லை. வடகிழக்குப் பருவ மழை பொய்த்துவிட்டதற்குப் பிறகு அந்த இடத்திலே பெய்ய வேண்டிய மழையின் அளவு பாதிக்கும் குறைவாக ஆகிவிட்டது. இப்படிப்பட்ட நிலைமையில் மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீரின் அளவும் மிகவும் குறைவு. 15 நாட்களுக்கு ஒருமுறை, ஒரு வாரத்திற்கு ஒரு

தால் தண்ணீர் வயல்களுக்குப் பாயாமல் ஆங்காங்கே மசல்
வைத்து அதாவது ஏக்கருக்கு 150 லிட்டர், 200 லிட்டர்
மசல் வைத்து தண்ணீரை இறைத்து சாகுபடி செய்திருந்தும்
சாகுபடி பயன் அளிக்காமல் போய்விட்டது. இப்படிப்பட்ட
நிலைமையில் அங்கே உள்ள விவசாயிகள் கடன் வாங்கி வீட்டிலே
வைத்திருந்த நெல்லையும் சாகுபடி செய்துவிட்டு, சாகுபடி
செய்தும் காய்ந்துவிட்ட நிலைமையில் மிகவும் வேதனை
யோடு இருக்கிறார்கள். இந்த நிலைமையில் தஞ்சை
மாவட்டத்திற்கு 17 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்
யப்பட்டிருப்பது வேதனைப்படவேண்டிய நிலைமையாக
இருக்கின்றது. மேலும் கழிமுகப் பகுதிகளுக்கு நிதி ஒதுக்கப்
படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. வடக்கே
கொள்ளிடக்கரையிலிருந்து தெற்கே வேராவூரணி வரையில்
உள்ள கடற்கரைப் பகுதிகளுக்குத் தண்ணீர் எந்த காலத்தி
லும் வந்து சேரவில்லை. வேதாரண்யம் பகுதி வானம் பார்த்த
பகுதி ஆனால் அதிகாரிகள் அவற்றிற்கு எல்லாம் தண்ணீர் சரியாக
வருகின்றது என்றும், தண்ணீர் பாய்ந்து விட்டது என்றும் அங்கே
மழைபெய்து விட்டது என்றும் பொய்யான தகவலைத் தரு
வதன் மூலம் இந்த அரசினைத் திருப்திப் படுத்தப் பார்க்கி
றார்களோ என்று எண்ண வேண்டி இருக்கின்றது. ஆகவே
இன்றைக்கு கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர்
பாயாமல், மழையும் பொய்த்துவிட்ட காரணத்தால்
வானம் பார்த்த வேதாரண்யம் பகுதி அந்தப் பகுதிகளிலே
எல்லாம் இன்றைக்கு சாகுபடி செய்ய முடியாத
நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. சாகுபடி செய்த
நிலங்களிலும் பயிர்கள் கருகி இருக்கின்ற இந்த
நிலைமையில் அந்தப் பகுதிக்கு இன்னும் அதிகமாக வறட்சி
நிவாரணத்திற்காக பணம் ஒதுக்க வேண்டும், அப்படி ஒதுக்கப்
படுகின்ற பணம் முறையாக செலவழிக்கப்பட வேண்டும்.
காவிரி, பெண்ணாறு, கல்லணை போன்ற மூன்று திட்டங்களின்
மூலமாக அங்கே ஆற்றிலே தண்ணீர் பாய்கின்றது. காவிரிப்
பகுதியின் பாசனப் பகுதியிலே கிடைக்கின்ற நிலத்தடி நீர்
நல்ல நீராக இருப்பதால் அந்தப் பகுதியிலே ஆயிரம் குழாய்
கிணறுகளை உருவாக்க அரசு திட்டமிட்டு அதற்கான
முயற்சிகளை எடுத்து வருகின்றது என்பதை இந்த நேரத்
திலே பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 6.50)

வெள்ளாறு பகுதி நிலத்தடி நீர் உப்பு நீராக உவர் நீராக
இருக்கிறது. அந்த நீரை எடுத்து பாசனத்திற்கு பயன்படுத்த
முடியாது. எனவே அந்த பகுதியில் தண்ணீர் வராமல் நிலத்தடி
நீரையும் பயன்படுத்த முடியாமல் விவசாயிகள் இன்று வேதனைப்
பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்று அங்கே குளங்களிலும்
ஓடைகளிலும் தண்ணீரை இறைத்து விட்டார்கள். இன்றைய
நிலையில் இன்னும் ஒரு மாதம் சென்றால் அங்கே அடிப்படை

திரு. சி. சிவப்பிரகாசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கடுஞ்சோதனையாகவும், வேதனையாகவும் விளையாடிக்கொண்டிருக்கும் வறட்சி நிலையைப்பற்றிப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் மாவட்டம் வறட்சியால் எந்த அளவுக்குப் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். சிறிய பாசனத் திட்டங்கள் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும்கூட தமிழகத்திலே ஏரிகள் செப்பனிடப்படும் வேலைகள் செய்யப்படுகின்றன. ஆனால் அரசுப் புறம்போக்கு என்ற பெயரால் சிறிய ஏரிகளை சிலர் ஆக்கிரமித்துக் கொண்டிருக் கிறார்கள், அவற்றைத் தகர்த்தெறிந்து ஏரிகளைப் பெரிய அளவிலே ஆழப்படுத்தி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிறிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றி மழை காலத்தில் தண்ணீரை தேக்கிவைக்கக்கூடிய வாய்ப்பு இருந்தாலும்கூட இன்றைக்கு வருவாய்த் துறை அதிகாரி களின் கண்காணிப்பு இன்மையால் பல திட்டங்கள் செய விழந்து இருக்கின்றன. நல்ல பல திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றியிருந்தாலும்கூட அதிகாரிகள் அவற்றை நல்ல முறையிலே பார்க்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே சேந்தமங்கலம், காளப்பநாயக்கன் பட்டி ஆகிய டவுன் பஞ்சாயத்துக்களிலே ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். பேளுக்குறிச்சி, நாட்ராமங்கலம் போன்ற இடங் களிலும் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்துத்தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலையிலே ஆழ் குழாய்க் கிணறுகள் சிறப்பாக அமையாத காரணத்தினாலே தற்போதைக்கு அங்கே சிறுபாசன ஊரணிகளை—சிறு கிணறு களை அமைத்து——அந்த மலைவாழ் மக்களுக்கு குடிநீர் வசதியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தமிழ கத்திலே உணவு நிலைமை மிகவும் சீராக விநியோகிக்கப்பட கூட்டுறவு சங்கங்கள், நியாயவிலைக் கடைகள் மூலமாக ஏற்பாடுகளைச் செய்து உணவுப் பொருட்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளுக்கு மாட்டுத் தீவனத்தைப் பொறுத்த வரையில் மானிய விலையில் கொடுத்தால் நல்லது. அவர்கள் கேட்காவிட்டாலும் சென்ற ஆண்டு கொடுத்ததைப்போல் மானிய விலையில் தீவனங்களை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேண்டிய அரிசியின் அளவை மத்திய அரசு அதிகமாக ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகமும் இந்தி யாவின் ஒரு பகுதி என்று கருதி, தமிழக மக்களும் தேசிய நீரோட்டத்திலே வாழுகின்ற மக்கள் என்று கருதி அதிக நிதியை ஒதுக்கி வறட்சியைப் போக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேலம் மாவட்டத்திலே நாமக்கல், இராசி புரம், பனமரத்துப்பட்டி ஆகிய பகுதிகளிலும் குழாய்க் கிணறுகளை அமைத்து தண்ணீர் பஞ்சத்தைப் போக்க ஏற்பாடு களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கு முன்னால் ஒரு கருத்து, குழாய் கிணறு வாரியத் திற்கு கூடுதல் நிதியை அரசு ஒதுக்கி விவசாயிகளுக்கு பாசன வசதியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(இரவு 7.00)

திரு. பி. முகமதுஇஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை வெள்ளை அறிக்கை சுட்டிக்காட்டு கிறது ; எல்லா மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப் பட்டிருக்கிறபோது கன்னியாகுமரி மாவட்டம் அதற்கு விதிவிலக்கு இல்லை. எல்லா மாவட்டங்களுக்கும் வறட்சிப் பணிகளுக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. பல நூறு லட்ச ரூபாய்கள் பல மாவட்டங்களுக்கு ஒதுக்கியிருக்கும் வேலையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வெறும் 14 லட்சம் ரூபாய்கள் மட்டும் ஒதுக்கி இருக்கிறார்கள். குடிநீர் பஞ்சத் திற்கு 5 லட்சம் ரூபாய் ; வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரு வதற்காகவும் மற்றும் ஏனைய நிவாரணப் பணிகளுக்காக 9 லட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை வெள்ளை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. 5 லட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு வருகிற 6 மாதங்களுக்கு தண்ணீர் சப்ளை அரசாங்கம் எப்படி செய்வதற்கு திட்டமிட்டிருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. வருகிற ஜூன் மாதம் வரையில் பருவ மழையை நாம் எதிர்பார்க்க முடியாது என்பது அரசிற்கு நன்றாகத் தெரியும். இன்று கிணறு களில் நீர் மட்டம் குறைந்திருக்கிறது என்றுதான் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது ; ஆனால் இது சில மாதங்களுக்கு முன்பு இருந்த நிலையாக இருக்கலாம் ; இன்றைக்கு எல்லா கிணறு களிலும் தண்ணீர் அடியோடு வற்றிப்போய், சில கிணறுகளில் பாறை கற்களைத்தான் பார்க்க முடிகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவலாக எல்லா இடங்களிலும் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கே இருக்கிற மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தருவதற்காக லாரிகளில் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிற கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். ...வே அதற்கு வேண்டிய [illegible]

நிலைமை அங்கே ஏற்படும். தமிழ்நாடு முழுவதும் அரிசியை ரேஷனில் கொடுக்கிற நிலைமை இருக்கிறது. தஞ்சாவூர் கடற்கரை பகுதிகளை காப்பாற்றி குளிப்பதற்கும், குடிப்பதற்கும் தண்ணீர் கிடைக்க வகை செய்ய வேண்டும். இல்லை என்றால் அங்கே தண்ணிரை ரேஷனில் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும்.

அங்கே விவசாய தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையில் அங்கே ஊராட்சி மூலமாகவும், நெடுஞ்சாலை துறை மூலமாகவும், பொதுப்பணித் துறை மூலமாகவும் பல்வேறுபட்ட நிவாரண நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் பொதுப்பணித்துறை மூலமாக பல்வேறுபட்ட வேலைகளை சிபாரிசு செய்யவேண்டும் என்றும், அங்கே வறட்சி நிவாரண வேலைகளை செய்யவேண்டும் என்று சொல்கிற நேரத்தில் இங்கே இருக்கிற மேல் அதிகாரிகள் அதை எல்லாம் செய்ய வேண்டாம், தஞ்சாவூர் மாவட்டத்தில் பிறகு செய்து கொள்ளலாம் என்று தடுத்து நிறுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை மாற்றி தஞ்சாவூர் மாவட்டத்தில் இருக்கிற வறட்சி நிலையை உண்மை நிலையை இன்னும் ஒரு மாதம் சென்றால் அங்கே இருக்கக் கூடிய நிலைமை மற்ற மாவட்டங்களை விட ஒரு மோசமான நிலைமை கிட்டத்தட்ட குடிப்பதற்கும், குளிப்பதற்கும் கூட தண்ணீர் இல்லாத நிலைமை வரும் என்ற நிலையில் அந்த திட்டங்களை ஏழைய எளிய மக்களுக்கு விவசாய தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய நிலைமை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு இங்கே இதன் மீது பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இங்கே வெள்ளை அறிக்கையில் சுட்டிக்காட்டியது போல் எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் கடும் பஞ்சம் வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் இங்கே மட்டும் இல்லாமல் மாவட்ட வறட்சி மன்ற கூட்டத்தில் ஏறக்குறைய 3, 4 மாதங்களாக பல சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச்சொல்லி வருகிறோம். இது போன்று வட ஆற்காடு மாவட்டத்தில் குறிப்பாக திருப்பத்தூர் வட்டத்திலும், வாணியம்பாடி வட்டத்திலும், பேராணம்பட்டு வட்டத்திலும், செங்கம் வட்டத்திலும், நாட்டிராம்பள்ளி வட்டத்திலும் இதேபோன்று பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் குடிக்க தண்ணீர் இல்லை, விவசாயிகளுக்கு மின்சாரம் இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் இதுபோன்ற வறட்சி நிலைமைகளை போக்க வேண்டும் என்று நாங்கள் வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதுவும் எங்கள் பகுதியான திருப்பத்தூர் பகுதியும், வாணியம்பாடி பகுதியும் நிலத்தடி நீரை நம்பியிருக்கிற பகுதி. அந்தப் பகுதியில் மழை காலங்களில் வருகின்ற தண்ணீரை

எங்கள் பகுதியிலுள்ள ஏலகிரிமலை அடிவாரத்தில், இருந்து வருகின்ற தண்ணீரை அடியில் ஏரிகள் கட்டி மழை காலங்களில் வருகின்ற தண்ணீரை தேக்கி வைத்து இது போன்ற வறட்சி ஏற்படுகின்ற நேரங்களில் அவை உதவியாக இருக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதுபோன்று எப்போதும் நிலத்தடி நீரை நம்பியிருக்கிற காரணத்தால் ஆண்டியப்பனூர் அணை கட்ட வேண்டும் என்று 1974-லிருந்து பொறியாளர்கள் வந்து பார்த்தார்கள். அதே போல் புல்லூர் அணை கட்டவேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். அதேபோல் ஏலகிரி அடிவாரத்திலே ஒரு சிறிய ஏரியை ஐக்க மரம் என்ற இடத்தில் கட்டவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இதேபோல் எங்கள் பகுதியில் அணைகளை கட்டினால் நிலத்தடி நீரை நம்பியிருக்கிற காரணத்தால் இதுபோன்ற நிலைமை சமாளிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் எங்கள் பகுதியில் கடும் பஞ்சம் ஏற்பட்டு இருந்தாலும் நில வங்கி மூலமாக கொடுத்த கடன்களை வசூல் செய்ய ஜப்தி நடவடிக்கையில் 2 மாத காலமாக ஈடுபட்டு இருக்கிறார்கள். அதுவும் மாற்றாந்தாய் மனப்பான்மை என்று இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டதை போல் எங்களுடைய தொகுதியான திருப்பத்தூரில் மட்டும் நில வங்கியிடம் வாங்கிய கடனை கட்டவேண்டும் என்று ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி ஈடுபடுகிற நேரத்தில் கூட நான் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அறிக்கையாக கொடுத்தும் மீண்டும் அதேபோல் நடவடிக்கைகளை எடுக்கின்ற சூழ்நிலை அங்கே இருக்கின்றன. இந்த சூழ்நிலையை போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது போன்ற கடுமையான வறட்சி நிலைமையில் ஒத்திவைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வறட்சி ஏற்பட்டு இருக்கின்ற காரணத்தால், பருவத்தில் நெற்பயிர் விட்டவர்கள் தண்ணீர் இல்லாத காரணத்தால் ஆடு, மாடுகளை விட்டு மேய்க்கின்ற சூழ்நிலை எங்கள் பகுதியில் ஏற்பட்டு இருக்கின்றன.

எங்கள் பகுதிகளிலே இருக்கின்ற நிலைமைகளை எண்ணிப் பார்த்து 171 லட்சம் ஒதுக்கப்பட்டாலும் அது போதாது— 250 லட்ச ரூபாய் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலே திருப்பத்தூர், வாணியம்பாடி ஆகிய இடங்களிலே உள்ள வறட்சி நிலை தங்களுக்குத் தெரியும், குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்கும், ஏழை எளிய மக்களை காப்பாற்றுவதற்கும், வறட்சி நிலையைப் போக்குவதற்கும் போர்க்கால நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் பத்மநாபபுரம் நகரசபை என்பது தமிழகத்தி லிருக்கிற பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி செய்யப் படாத ஒருசில நகரசபைகளில் அதுவும் ஒன்றாக இருக்கிறது. பல ஆண்டு காலமாக குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டு மென்ற கோரிக்கைகள் தரப்பட்டும், நகரசபைக்கு போதிய நிதி வசதி இல்லாததால் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. நகரசபைக்கு வருவாய் இல்லாததால் அங்கே வாழ்கிற பொது மக்களுக்கு தண்ணீர் வசதி செய் யாமல் இருப்பது நியாயம் இல்லை என்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். எனவே மனிதாபிமானத்தோடு இந்த மக்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து தரவேண்டியது அரசி னுடைய பொறுப்பு என்ற வகையில் நிதிவசதி இல்லாத நகர சபைக்கு அரசு மானியமாக நிதிவழங்கி குடிநீர் திட்டத்தை வேகமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் நான்கு நீர் தேக்கங்களில் தண்ணீர் குறைந்துவிட்டது. முக்கியமாக இருக்கிற பேச்சிப்பாறை நீர் தேக்கத்தில் இருக்கிற தண்ணீரை மடை மட்டத்திற்கு கீழ் பம்ப்செட்டுகளை அமைத்து இறைத்து பாசனத்திற்கு வழி செய்தும், கன்னியாகுமரி பகுதியில் நெற் களஞ்சியமாக இருக்கிற நாஞ்சில் பகுதியில் கூட நெல் பயிர்கள் தண்ணீர் இல்லாமையினால் கருகி போயிருக்கின்றன. எனவே கடுமையான பஞ்சநிலைஏற்பட்டு விவசாயத் தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று வேலைகள் அளிப்பதற்காக வறட்சிப் பணிகளுக்கு வெறும் 9 லட்சம் ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்து அதிக நிதி ஒதுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறத்தாழ ஆயிரம் நீர்ப் பாசன குளங்கள் இருக்கின்றன. அவைகள் அனைத்திலும் இப்போது மணல் நிரம்பி இருக்கின்றன. பல ஆண்டுகாலமாக மக்கள் அவற்றை தூர் வாற வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறார்கள். தக்க நேரத்தில் இந்த பணியில் ஈடுபட்டால் மழைக்காலங்களில் கிடைக்கிற தண்ணீரை நல்ல முறையில் சேமித்து பாதுகாக்க உதவிகரமாக இருக்கும். நெருக்கடி வருகிற காலங்களில் அவற்றை பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும் மணம் நிரம்பி இருக்கிற குளங்கள் பலரால் ஆக்கிர மிக்கப்பட்டிருக்கின்றன. காலப் போக்கில் அரசு தன்னுடைய உரிமையை இழந்து தனியார்கள் நிலமாகி விடுமோ என்ற அச்சம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு வறட்சி நிலைமைகளுக்கு மேற்கொள்கிற திட்டங்களில் குளங்களை தூர் எடுக்கிற பணியை முக்கியமான பணியாக்க [illegible] உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலையை பார்க்கிறபோது குறுகிய காலத்தில் ஒரு கிளர்ச்சி நிலை ஏற்பட்டு விடுமோ என்று நான் அஞ்சுகிறேன். எனவே இதை யெல்லாம் மனதில் கொண்டு குமரி மாவட்டத்திற்கு ஒதுக்கி யிருக்கிற 14 லட்சம் ரூபாய் என்பதற்கு மேலே கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து ஆக்கப்பணிகளை உருவாக்கவேண்டுமென்று அரசாங்கத்திடம் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசு தயாரித்திருக்கிற ரிப்போர்ட்காலதாமதமாகியிருக்கிறது என்ற குறைபாடு சொல்லப்படுகிறது. இப்போதாவது அரசு விழித்துக் கொண்டதே என்று நாம் பாராட்டவேண்டும். அனுப்பியிருக்கிற அறிக்கையை வைத்துக்கொண்டு மத்திய அரசு ஆய்வுக்குழுவை எப்போது அனுப்பும் என்பது யாருக்கும் தெரியாது. ஏற்பட்டிருக்கிற நிலைமையின் கடுமையை உணர்ந்து மத்திய அரசு ஆய்வுக்குழுவை அனுப்பி, இந்த அரசு கேட்டிருக்கிற தொகையை தந்து உதவும் என்று நம்புகிறோம். நம்முடைய முதலமைச்சர் வறட்சிப் பணிகளுக்காக நிதி கேட்டு உண்ணாவிரதம் மேற்கொள்கிற நிலையைமத்திய அரசு மறுபடியும் ஏற்படுத்திவிடாது என்று நாம் எண்ணு கிறோம். அந்த நல்ல எண்ணத்தோடு மத்திய அரசு உதவிட வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகுவருவாய் துறை அமைச்சர்அவர்கள் அளித் திருக்கின்றஅறிக்கையில் தர்மபுரி மாவட்டத்தில் ஓரளவு வறட்சி இருக்கிறது என்று தெரியப்படுத்தி இருக்கிறது. ஆனால் தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம், சின்னாறு நீர்த்தேக் கம் என்ற இரண்டு நீர்த்தேக்கங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு நீர்த்தேக்கமும் கூட மழையின்மையினால் நிரம்பவில்லை. அப்படியே அதில் கொஞ்சம் தண்ணீர் வந்து ரெவின்யூ கிராமங்களுக்கு மாத்திரம் 10 நாளுக்கு தண்ணீர் வந்தது. தற்போது அந்த நீர்த்தேக்கங்களிலும் தண்ணீர் குறைந்து இருக் கிற காரணத்தினால் அங்கே அதை நம்பி நெற்பயிர் செய்த விவசாயிகள் எல்லாம் பயிர்களைஉலரவிட்டு இந்த தண்ணீருக்கு உண்ணாவிரதம் இருந்து போலீஸ்காரர்களால் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் என்று சமீபத்திலே தெரிய வந்திருக்கிறது. இதையெல்லாம் பார்க்கின்றபோது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தர்மபுரி மாவட்டத்தை பூரண வறட்சி மாவட்டமாக அறிவிக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

சென்னாறு நீர்த்தேக்கம் அத்திமுட்டு, சம்பளூர் என்ற இரண்டு கிராமங்களுக்கு மட்டும் தான் கொஞ்சம் தண்ணீர் கொடுத்தது. ஆனால் பெரிய ஏரி, செங்கன்[illegible] தலால் ஏரி, கொரட்டேரி, தாமரையேரி இந்த ஏரிகளுக்கு 10 நாள் வரை தண்ணீர் விடப்பட்டது

அங்கே இப்போது நீர்வரி வசூல் செய்யவேண்டுமென்று அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு தண்ணீர் தீர்வை செலுத்த வற்புறுத்தி வருகிறது. அங்கே உள்ள விவசாயிகளுக்கும் அரசு ஊழியர்களுக்கும் மனஸ்தாபம் வந்தது. எனவே இந்த வறட்சியை முன்னிட்டு தர்மபுரி மாவட்டம் பூரண வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அப்படி அறிவித்தால் உள்ளூர்வரி தண்ணீர் வரிகளை நீக்கினால் தான் பூரண பலனை இந்த மாவட்டம் அனுபவிக்க முடியும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது போலவே கூட்டுறவு சங்கங்களில் பயிர்வள பாதுகாப்பு கடன் பெற்றிருக்கிறார்கள். ஆனால் எந்த பயிரும் செய்யாமல் அந்த பணம் பூராவும் பாழாகிப்போய்விட்டது. அப்படிப்பட்ட பணத்தை திரும்ப கட்டுவதற்கு வழியில்லை. அதனால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அதை ஒத்தி வைக்க வேண்டும். அந்த வட்டியை வற்புறுத்தக்கூடாது என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே ஆழ்துளை குழாய்க் கிணறுகள் சென்ற ஆண்டில் 644 தோண்டப்பட்டு குடிதண்ணீர் கொஞ்சம் இருந்தது. இப்பொழுது அதிலே தண்ணீர் இல்லாமல் இன்னொரு 100, 150 அடி தோண்டினால் தான் புதிதாக தண்ணீர் கிடைக்கு. அதனால் குடிமக்கள் அங்கே குடிதண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டு வருகிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தை போக்குவதற்கு அரசு ஆயுத்தமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் இது சேர்க்கப்படவில்லை. இதனை சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டு, தர்மபுரி மாவட்டத்தை முழுவதும் வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு பேசவாய்ப்பு நல்கிய தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, வறட்சி நிலையை பற்றி இங்கே பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறுவதோடு தலைவர் அவர்கள் எண்ணியபடி நீலகிரியில் வறட்சியா என்று எண்ணாமல், மற்ற மாவட்டங்கள் எல்லாம் மழையின்மையால் வறட்சி நிலையை அடைந்துள்ளது போல் நீலகிரி மாவட்டத்தில் மழையின்மை மாத்திரம் அல்ல. நீங்கள் போய் பார்த்திருக்கலாம். கடுமையான பனியாலும் அங்கே வறட்சி ஏற்பட்டிருக்கிறது. பனி மாத்திரம் அல்ல. ஜீரோ டிகிரிக்கு குறைவாக பனி பெய்வதால் பயிர்கள் எல்லாம் கருகி உள்ளன என்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்கிறேன். அதுமாத்திரம், அல்ல. அங்கு அதிகமாக அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் தேயிலைத் தோட்டங்களும் பனியால் கருகி உள்ளன. உருளைக் கிழங்கும், தேயிலை, இன்னும் காய்கறிகளும் கூட கருகிய நிலையில் உள்ளன. காரணம் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் தொடர்ந்து வறட்சி இருப்பதால் அங்கே இத்தகைய சூழ்நிலை இருக்கிறது.

(இரவு 7.10)

ஆக, அப்படிப்பட்ட நீலகிரி மாவட்டத்தை எப்படியாவது காப்பாற்றும் பொறுப்பை இந்த அரசு ஏற்றாக வேண்டும். அந்தப் பகுதிக்கு நல்லதொரு திட்டம் தீட்டி, பெரிய அளவில் தொகை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் கிட்டதட்ட ரூ. 76 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள்; ஊராட்சிகளுக்கும் ரூ.65 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், இங்கே நீலகிரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை நாலே நாலு இலட்சம் ரூபாய்த்தான். நீலகிரி மாவட்டம் தமிழகத்திலேயே சிறிய மாவட்டம் என்ற காரணத்தினால், அவ்வளவு குறைவாக ஒதுக்கியிருக்கிறார்களோ என்னவோ, அதைக் கிட்டத்தட்ட ரூ. 4 கோடி அளவுக்காவது உயர்த்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, ஊட்டி, கூடலூர், கோத்தகிரி, குன்னூர் என்ற 4 ஒன்றியங்களையும், குன்னூர் ஊட்டி என்ற 2 நகராட்சிகளைக் கொண்ட பகுதிகளையும் எடுத்துக் கொண்டால் கடுமையான வறட்சி நிலவுகிறது. எல்லா பகுதிகளிலும் கடுமையான வறட்சி நிலவுகிறது. குடி தண்ணீருக்குக் கடுமையான பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. 20,000 பேர்களைக் கொண்ட வெலிங்டன் பாரக்சுக்கு தினசரி 5½ இலட்சம் காலன் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. பார்சன் வாயிலிருந்து கிடைக்கக்கூடிய மொத்த தண்ணீர் 9 இலட்சம் காலனாகும். அந்த 9 இலட்சம் காலனில் சுமார் 5½ இலட்சம் காலன் வெலிங்டனுக்குப் போனால், எஞ்சியுள்ள சுமார் 3½ இலட்சம்தான், சுமார் 1 இலட்சம் மக்கள் கொண்ட — ப்ளோட்டிங் பாப்புலேஷன் உட்பட — ஊட்டிக்கு அளிக்கப்படுகிறது. ஆகவே, பார்சன் வாலியின் இன்னொரு திட்டமான ரூ. 4.5 கோடி திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்றும் நான் அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அங்கே அளிக்கப்பட்டுள்ள குறுகிய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றித் தரவேண்டும், அந்தக் கடன்களையும் 3 ஆண்டுகளுக்குப் பிறகுதான் வசூலிக்க ஆரம்பிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மலைவாழ் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மைய அரசை வற்புறுத்தி, அதிக நிதி பெற்றுத் தர வேண்டும். அப்படி பெற்றால்தான் அங்குள்ள சாலைகளைச் சுத்தம் செய்யவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போதுமான வேலைகளைக் கொடுக்கவும் வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

* திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே வறட்சி நிலைமையைப் பற்றிய வெள்ளை அறிக்கையின்மீது ஒருசில வார்த்தைகள் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு இந்திய யூனியன் முஸ்லிம்லீக்கின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வளம் கொழித்த தமிழ்நாட்டில் வறட்சி ; நிலங்கீறி மண் உழுது வளம் ஈட்டி களம் குவித்த நாட்டிலே இன்றைக்குக் கண்டுமுதல் காண முடியாமல் வறட்சியைக் கண்டு கொண்டிருக்கிறோம். நஞ்சை வயல் தஞ்சைத் தரணியிலே பஞ்சம் வந்திடுமோ என்று அஞ்சுகிறோம். நெல்வேலி சூழ்ந்துள்ள திருநெல்வேலி மாவட்டம் — நெல்லை என்றாலே நெல் விளைவதற்கு ஓர் எல்லை இல்லை என்ற அளவு நெல்லைப் பெற்ற அந்த மாவட்டத்திலே இன்றைக்குப் பஞ்சம் வந்திருக்கிறது என்ற சொல்லைத்தான் கேட்கிறோம். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு 116 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, எங்களுடைய கடையநல்லூர் தொகுதியும் அடுத்திருக்கிற தென்காசி தொகுதியும் வறட்சியின் காரணமாக, ரொம்பக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, அந்த மக்கள் தண்ணீரின்றி ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள்.

அது மட்டுமின்றி, இன்றைக்கு குடி தண்ணீர் குடிப்பதற்கு கூட அங்கே வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். நெல்லை மாவட்டதிற்கு — 116 கிராமங்களுக்கு ரூ. 33 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ரூ. 33 இலட்சம் அந்த மாவட்டத்திற்குக் காணாது. அதிகமான அளவிலே, குறிப்பாக, 1 கிராமத்திற்கு 1 இலட்சமாவது ஒதுக்கித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிற்கு இந்த நிலை ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்று எண்ணிப் பார்த்தால் கடந்த காலத்திலே காவிரி தண்ணீர் வரும் என்று மக்கள் எல்லாம் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால், ஆட்சியிலே இருந்தவர்களுக்குத் தெரியும். மாண்புமிகு சபாநாயகர்கூட, இந்தத் தலைமுறையிலே வருமா தெரியாது என்று சொன்னார்கள். ஆட்சியாளர்களுக்குத் தெரியும், அதிகாரிகளுக்குத் தெரியும், காவிரி தண்ணீர் வரப் போவதில்லை என்று. அப்படி இருக்கிற நேரத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற ஆட்சியாளர்களும் திட்டம் தீட்டுகின்ற அதிகாரிகளும் இப்படித் தண்ணீர் இல்லையே, எப்படி வருங்காலத்திலே இந்த் நாடு வளம் கொழிக்கும் நாடாக மாறமுடியும் ? பயிர்கள் எல்லாம் தீய்ந்துவிடுமே என்று எதிர் பார்த்து, திட்டமிட்டு, முன்கூட்டியே, திட்டம் தீட்டியிருக்கவேண்டும். ஆனால், அவர்கள் செம்மையாகத் திட்டம் தீட்டவில்லை, திறமையைச் செயலில் காட்டவில்லை. ஆகவேதான் இன்றைக்கு இந்த நாட்டிலே இத்தகைய வறட்சி நிலைமையை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இன்றைக்கு எங்கள் தொகுதியைப் பொறுத்த வரையில் நெல் விளையாத காரணத்தால், குடிதண்ணீர் இல்லாத காரணத்தால் அங்குள்ள மக்கள் பஞ்சைப் பராரிகளாக பஞ்சப் பிரதேசத்தை விட்டு வேறு இடங்களுக்கு உழைப்பதற்காகச் செல்லுகின்ற சூழ்நிலை இருக்கிறது. பயிர்கள் தீய்ந்து காய்ந்து போன காரணத்தினால் விவசாயி கண்ணீர் விடுகிறான். அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற நிலவரி, தண்ணீர்த் தீர்வை, ஆயத் தீர்வை ஆகியவற்றைக் கட்ட முடியாமல், கட்ட வழியின்றி வேதனையில் தவித்துக் கொண்டிருக்கிறான். கூட்டுறவுக் கடன்கள், நிலவள வங்கிகளில் வாங்கிய கடன்கள் ஆகியவற்றைக் கட்ட முடியாமல் திண்டாடும் அவர்களுக்கு அந்தத் தவணையை நீட்டித்துக் கொடுத்து, வட்டி இல்லாமல் நீண்ட தவணைகளில் கட்ட உத்திரவு இட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசின் திறமையின்மையின் காரணத்தால் தான் இந்த வறட்சியான சூழ்நிலையைத் தமிழ்நாடு சந்தித்துக் கொண்டிருக்கிறது என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்

செந்நெல் வயல் வெளியில் செங்கரும்புத் தோட்டத்தில், பொன்னை விளைத்த பிறகும் விவசாயி இன்று பெருமூச்சு விட்டுக் கொண்டு தண்ணீர் தண்ணீர் என்று கேட்டுக் கண்ணீர் கண்ணீராக விடுகிறான் என்று கூறி என்னுடைய உரையை நான் நிறைவு செய்கிறேன், நன்றி.

திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சரவர்களால் வைக்கப்பட்டிருக்கின்ற வெள்ளை அறிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே உள்ள கோமுகி நதி, மணிமுத்தா நதி, சாத்தனூர் வலது புறக் கால்வாய், முசுகுந்தா நதி போன்ற பல நதிகளிலே தண்ணீர் வரத்து, இல்லாமல் காய்ந்துள்ளது கல்ராயன் மலைப் பகுதியிலேயும், கோமுகி, அணை, மணிமுக்தா அணை ஆகிய இடங்களிலேயும் வறண்டு கிடக்கின்ற இந்த நேரத்திலே எங்கள் பகுதியிலே வறட்சி மிகவும் தாண்டவமாடுகிறது. ஆகவே, எங்கள் பகுதியிலே உள்ள ஏரிகளையும் வாய்க்கால்களையும் ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதி முழுவதையும் வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, வடக்கநேந்தல், சின்ன சேலம் ஆகிய இடங்களில் தண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையைப் போக்குவதற்கு அந்தப் பகுதியில் உள்ள ஏரிகளையும், குளங்களையும் ஆழப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்து கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்க வேண்டும். மேலும் கிணறுகளை ஆழப் படுத்தியும், குழாய்க் கிணறுகளை ஏற்படுத்திக் கொடு

தும், சென்ற ஆண்டிலே வறட்சி நிவாரண வேலைகளைச்செய்த பொழுது சில கிராமப் பகுதிகளில் கிணறுகளை ஆழப்படுத்தியதற்கு அவர்கள் செய்த பணிகளுக்குச் சில அதிகாரிகள் தொகையை வழங்க முடியாமல் ஆங்காங்குள்ள மக்கள் அவதிப் பட்டார்கள். அதேபோன்ற நிலைமை இப்பொழுது ஏற்படாமல் அரசாங்கம் நல்லமுறையிலேஅவர்களுக்கு உதவி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் உள்ள வடக்கநேந்தல் அணைக்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களும், நமது பொதுப் பணித் துறை அமைச்சரவர்களும் மற்றும் நம்முடைய பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் அவர்களும் வருகைதந்து பார்த்தார்கள். அந்த அணை உடைந்து இரண்டுஆண்டுகள் ஆகின்றன. எனவே, அந்த அணையை நல்ல முறையில் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே உள்ள சோமுண்டார் குடி அணை, தியாகராஜபுரத்திற்குப் பக்கத்தில் உள்ள இடம், இங்கே வெள்ளக் காலங்களில் தண்ணீர் புகுந்து விடுகிறது. அந்த நிலையைப் போக்குகின்ற வகையிலே ஏற்கெனவே திட்டம் தீட்டப்பட்டுள்ளது. எனவே, அந்தத் தடுப்புச் சுவரையும் கட்ட வேண்டும்.

பாப்பக்கால் அணையையும், முசுகுந்தா நதி அணையையும் கட்டுவதற்கான திட்டம் உள்ளது. அவைகளையும் விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளில் குடிதண்ணீர் இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். அந்த நிலையைப் போக்குவதற்காக எப்பொழுதுமே நம்முடைய வறட்சி நிவாரணப் பணிகளில் நிதி ஒதுக்கப்படுவதில்லை. ஆனால் இந்த ஆண்டு அரசின் சார்பாக அவர்களுக்கும் நிதி ஒதுக்கி அவர்களுக்குள்ள குடிதண்ணீர்க் கஷ்டத்தைப் போக்கவும், மற்றும் வறட்சிப் பணிகளை மேற் கொள்ளவும் அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

கூட்டுறவுக்கடன்கள், கிராமத்தில் உள்ள விவசாயிகளின் நலன்களுக்கான தீர்வைகள் ஆகியவைகளைஇந்த ஆண்டு தள்ளிவைத்து அரசாங்கம் ஒத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலே சென்ற ஆண்டு நல்லமுறையிலே அனைத்துப் பணிகளையும் செய்த நம்முடைய அரசாங்கம் குளங்களையெல்லாம் யாரும் எதிர்ப்பாராத அளவிலே வெட்டிக் கொடுத்த நம்முடைய தமிழக அரசு இந்த ஆண்டு எங்கள் மாவட்டத்தில் 88 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் தமிழகத்திலே தென்னார்க்காடு மாவட்டம் பெரியதொரு மாவட்டமாக இருக்கிறது. எனவே, அதற்கு ஒதுக்கப்பட்ட இந்தத் தொகை போதாது என்று நான் கூறிக்கொள்கிறேன்,

(இரவு 7.20)

ஏனென்றால் அந்தப் பகுதி தென்னார்க்காடு மாவட்டத்தின் ஆரம்பப் பகுதியாக இருப்பதாலும், மலைப் பகுதியாக இருப்பதாலும், எங்களுடைய பகுதி மிகவும் வறண்டு போய்விட்டது. மற்ற பகுதிகளும் வறண்டுதான் போயிருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள இந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, எங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கிய பணம் போதாது, இன்னும் கூடுதலாகஒதுக்கிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மத்திய அரசாங்கத்திலே இருந்து விரைவிலே அந்த நிதியை ஒதுக்கவேண்டும் என்று நமது அரசாங்கம் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நமது மாநிலத்தில் இருக்கும் வறட்சியின் காரணமாக தமிழக மக்கள் அவதிப் பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இங்கே போர்க்கால நடவடிக்கை போன்று அந்தந்த அதிகாரிகளை அழைத்து அந்தந்த மாவட்டங்களில் என்னென்ன தட்டுப்பாடு இருக்கிறதோ அவற்றைப் போக்குவதற்காக இன்று வருவாய்த்துறை அமைச்சர்அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நமது மாநிலத்தில் அனைத்துப் பகுதியிலேயும் வறட்சி ஏற்பட்டாலும், மிக அதிகமான அளவில் வறட்சி ஏற்பட்டிருப்பது மதுரை மாவட்டத்தில்தான் என்பதை மெத்தப் பணிவோடுதெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் நமது மதுரை மாவட்டத்திற்கு சுமார் 87 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மதுரை மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும் அது ஒரு பெரிய மாவட்டமாக இருக்கிறது. அங்கு வைகை நதியை நம்பி விவசாயம் செய்கிறார்கள். ஆனால், 2, 3 முறை ஏற்பட்ட தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக விவசாயிகள் அனைவரும் அந்த நேரத்தில் தாங்கள் வைத்திருந்த முதலீட்டைப்போட்டு செலவழித்து அறுவடை செய்ய முடியாமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் அந்தக் கஷ்டங்களைப் போக்குகின்ற அளவுக்கு மதுரை மாவட்டத்திற்கு மேலும் பல லட்சங்களைக் கூடுதலாக ஒதுக்கித்தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு சுமார் 20 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த 20 லட்சம் ரூபாய் போதாது. என்பதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், அங்கே திண்டுக்கல், நிலக்கோட்டை மதுரை வடக்கு போன்ற தாலுக்காக்களில் மக்கள் குடிநீர் இன்றி மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகையினாலே இந்த 20 லட்சம் ரூபாய் போதாது என்பதைத் தெரிவித்துக் கொள் [illegible]

யானைப் பசிக்கு இது சோளப்பொரி என்று நான் சொல்ல விரும்பவில்லை. அதைவிட நல்ல உதாரணம் எனக்குக் கிடைக்காத காரணத்தால் பணம் போதவில்லை, மேலும் மேலும் நீங்கள் நிதி ஒதுக்குவீர்கள் என்ற நம்பிக்கையில், அதிகமாக நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்கு நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(இரவு 7.30)

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும், மொத்தமாக நான் அறிந்த வரையில் 1 கோடி விவசாயத் தொழிலாளர்களுக்கு இன்று வேலை இல்லை என்பதை அரசாங்கம் கணக்கில் எடுத்துக் கொண்டு, அதற்கு ஏற்ப திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒதுக்கப்பட்டு இருக்கும் தொகை குறித்து நான் இரண்டு கருத்துக்கள் கூற விரும்புகிறேன். ஒன்று, ஒதுக்கிய தொகை போதாது. மற்றொன்று, ஒதுக்கப்பட்ட தொகை நல்ல முறையில் மக்களுக்குச் சென்று சேர வேண்டுமென்ற கருத்தில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அண்ணா அவர்கள் சொன்ன பனிக்கட்டி கதை போல் நாம் எவ்வளவு தான் சிரமப்பட்டு நிதி ஒதுக்கினாலும், நிர்வாகக் கேடுகள், நயவஞ்சக மனம் படைத்தோர், நாட்டுப்பற்று அற்ற வஞ்சக எண்ணங்கள் கொண்டவர்கள் இடையில் புகுந்து விடுவதால் அவைகள் அடிமட்ட மக்களுக்கு, ஏழைகளுக்கு, தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு, கூலிகளுக்கு அந்தப் பணம் போய் சேர வில்லை என்பதை நாம் பல நேரங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஆகவே, தவறு யார் செய்தாலும், அதைக் கண்டிக்க வேண்டும், தண்டிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இந்த வறட்சி நிவாரணப் பணியின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய சில பணிகள் குறித்துச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் அதை கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எப்போதுமே வறட்சி நிவாரணப்பணி என்று வந்துவிட்டால், மண் வெட்டுதல், அதற்கு பில் போடுதல், போன்ற முறையில் தான் பணிகள் ஜாஸ்தியாக நடைபெறுகின்றன. அதிகாரிகளும் அத்தகைய பணிகளைத் தான் அதிகமாகக் காட்டுகிறார்கள். கான்ட்ராக்டர்களும் அந்த வேலைகளைத் தான் அரசாங்கத்திற்கு நினைவுக்குக் கொண்டு வருகிறார்கள். போன ஆண்டு செய்த வேலையை மூன்றாம் ஆண்டு செய்து இருப்பார்கள். அதற்கு அடுத்த ஆண்டில் செய்த வேலையை இந்த ஆண்டு செய்ததாகப் புதிதாகக் கணக்குக் காட்டுவார்கள். ஆனால் எந்த வேலையையும் செய்து இருக்கமாட்டார்கள். இப்படிப் பட்ட தவறுகள் நீடிக்கவிடாது, இந்த ஆண்டு எடுக்கும் எந்தப் பணியும் இதற்கு முன் செய்து இருக்கக் கூடாது என்ற வகையில்

புதிய பணிகளை செய்ய வேண்டும். எந்தப் பணியாக இருந்தாலும் அது புதிய பணியாக இருக்க வேண்டும் என்ற முறையில் அரசாங்கம் கண்டிப்பான உத்தரவைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சிப் பணி என்று சொன்னால், அதில் வேலை வாய்ப்பு முக்கியமான ஒன்றாகும். அரசாங்கத்திற்கு இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி, இந்த நேரத்தில் நிரந்தரமான முறையில் பலன் அளிக்கத்தக்க திட்டங்களை நிறைவேற்ற அது பயன்படுத்தபடவேண்டும். அந்த வகையில் சில திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிப் பார்த்தால் ஏற்கனவே அதற்கு பல முன் உதாரணங்கள் இருக்கின்றன. சிறு நீர்ப்பாசன திட்டங்கள் 5 இலட்சம் அல்லது 10 இலட்சம் அல்லது 15 இலட்சம் செலவில் செய்யப்பட வேண்டும். எனது தொகுதியில் அத்தகைய திட்டங்கள் சில இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, மேலப்புலியூர், புதுநடுவூர், பாண்டகப்பாடி போன்ற இடங்களில் சிறு பாசனத் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தின் அனுமதி வந்து இருக்கிறது. உடனடியாக அதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரணாறு ஏரிக்கு வரத்துக் கால்வாய் (வாய்க்கால்) கட்டித்தர வேண்டும். இளம்புரி ஏரிக்கு கோனையாற்றிலிருந்து தண்ணீர் வருவதற்கு வாய்க்கால் கட்ட வேண்டும். அதைப் போலவே காரியானூர் ஏரிக்குக் கீழே தாழ்த்தப்பட்ட மக்கள் 100 குடும்பம் வாழ்கிறார்கள். இந்த ஏரியின் நீர் கசிவு அந்தப் பகுதியில் இருப்பதால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்த ஈரக்கசிவைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் வைத்து இருக்கும் அறிக்கையில் கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆளியாறு, பரம்பிக்குளம் போன்ற நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். உண்மைதான். ஆளியாறு, பரம்பிக்குளம் நீர்த்தேக்கங்களில் நீர் குறைந்து இருப்பதால், பொங்கலூர், பல்லடம், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை போன்ற இடங்களில் கிட்டத்தட்ட 8 ,000 ஏக்கர் விவசாயம் பாதிக்கப்பட்டு அங்கே மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. அதிகாரிகளைக் கேட்கின்ற நேரத்தில் கேரள அரசாங்கம் தான் தண்ணீர் திறந்து விடவேண்டும் என்று சொல்லி, இருக்கக் கூடிய தண்ணீரையும் விடாமல் தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

[திரு. ஏ. பாலுச்சாமி] [1983 பிப்ரவரி 10

மேலும் வேலை வாய்ப்புக்காக 67 இலட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள். அங்கே பல பகுதிகளில் குளங்கள், கண்மாய்களை நம்பி இருக்கக் கூடிய பகுதிகளாக இருக்கின்றன. ஆகையினால் அந்தக் குளங்கள், கண்மாய்களை விரைவில் ஆழப்படுத்தி வறட்சி நிலையைப் போக்குகின்ற அளவுக்கும், குடிநீர் பஞ்சத்தைப் போக்குகின்ற அளவுக்கும் அதை விரிவு படுத்தி ஆழப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதியைப் பொறுத்த வரையில் வைகை நதியை நம்பி, இருக்கின்ற விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் குறைகளைப் போக்குகின்ற அளவுக்கு விவசாயிகளுக்கு நல்ல வேலை கொடுத்து அவர்களுக்குப் போதுமான உணவுப் பொருள் கிடைக்கும் அளவுக்குப் பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மதுரைப் பகுதியிலே மாடுகளுக்குப் போதிய தீவனம் இல்லாத காரணத்தால் அங்கு அரசு பொறுப்பேற்றுக் கொண்டு அந்த மாவட்டத்தில் மாடுகளுக்குத் தீவனங்கள் வழங்க உதவிட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அங்கே மழை இல்லாத காரணத்தால் அங்கே அதிகமான மின் வெட்டு இருக்கின்றது. ஆனால் இதற்கு முன்னாலே இருந்த சமயநல்லூர் மின் நிலையத்தை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே விற்று விட்டார்கள்................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாலுச்சாமி அவர்கள் வறட்சியைப் பற்றி மட்டும் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. பாலுச்சாமி : அங்கே ஒரு மின் நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்தால் மின்வெட்டு மதுரை நகரத்திற்கு மின்வெட்டு இல்லாமல் இருக்கும். மதுரை வடக்கு தாலுக்காவைப் பொறுத்த வரையில் குடிநீர் பிரச்சினையில் மிகவும் அவதிப் படுகின்ற காரணத்தினால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்பட்டிருக்கின்ற வறட்சியைப் பற்றி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற அறிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். எப்பொழுதாவது வெள்ளப் பெருக்கு ஏற்படுவதும், அதன் மூலம் மக்கள் தொல்லைப் படுவதும், விட்டு விட்டு வறட்சி ஏற்படுவதும் ஆகிய சூழ்நிலைகள் இந்தியாவுக்குப் புதிதல்ல, குறிப்பாக தமிழகத்துக்கு, தமிழ் நாட்டில் இருக்கிற மக்களுக்கு இது பழக்கமாகிப் போன ஒன்றாக

1983 பிப்ரவரி 10] [திரு. ஜே. எஸ். இராசு]

பட்ட இயற்கையின் சீற்றத்தால் இன்று வந்திருக்கிற வறட்சி பற்றி இங்கே வைத்திருக்கின்ற அறிக்கை முழுத் தகவலையும் தரவில்லை என்பதை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சான்றாக கடந்த ஒரு மாதத்தில் தமிழ்நாடு ஏடுகளில் வந்திருக்கின்ற நியாயமான குறிப்புகளையும், பாதிப்புகளையும் எண்ணிப் பார்க்கும் போது இந்த விவர அறிக்கையிலே வந்திருக்கிற வறட்சியினுடைய கடுமை சற்றுக் குறைவாக காட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 918 ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன. இவைகளில் 619 கிராமங்கள் முழு வறட்சிக்கு ஆட்பட்டு இருக்கின்றன. அறைகுறை வறட்சியாக இன்னும் எத்தனையோ கிராமங்கள் தவித்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, பெரம்பலூர் வட்டம் முழுவதும் துறையூர் பகுதி, உடையார்பாளையம் வட்டம் ஆகிய பகுதிகள் முழு அளவிற்கு இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்திலே இருக்கின்ற மொத்த ஏரிகளில் 1484 ஏரிகளில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாத ஒரு துர்பாக்கியமான சூழ்நிலை இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது. ஆண்டு தோறும் திருச்சி மாவட்டத்தில், 4,37,800 ஏக்கர்களில் நெல் பயிரிடப் படும். ஆனால் இந்த ஆண்டு மழை இன்மையால், 2,11,326 ஏக்கர்களில் மட்டுமே நெல் பயிரிடப்பட்டது. அதோடு மட்டு மல்லாமல் மழை இல்லாத காரணத்தால், தண்ணீர் இல்லை என்ற காரணத்தால் பயிர் விட்டவர்கள் கூட நடாமலே நிலத்தை விட்டுவிட்டார்கள். நட்ட பயிர்களுக்கும் மின்சாரத் தட்டுப் பாட்டின் காரணமாக தண்ணீர் இல்லாமல் போய் விட்டது. அதன் காரணமாக இந்த ஆண்டு திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நெல் விளைச்சல் 51 விழுக்காடு குறைவாக இன்றைக்கு விளைந்து இருக்கிறது. அதற்கு அடுத்த மிக முக்கிய மான விளை பொருளாக உள்ள நிலக்கடலை என்ற பணப் பண்டம் 47 விழுக்காடு இந்த ஆண்டு குறைவாக விளைந்திருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு இதை எல்லாம் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, மழை இல்லாத காரணத்தால் ஏற்பட்டுப்போன வறட்சியால் மின் தட்டுப்பாட்டால், மொத்தமாக திருச்சி மாவட்டத்தில் உள்ள 1½ இலட்சம் விவசாய தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை வாய்ப்புகளை இழந்து வெளி நாடுகளுக்கு, வெளி மாநிலங்களுக்கு தங்களைத் தாங்களே நாடு கடத்திக் கொண்டு இருக்கிற காட்சியை நாம் பார்க்கிறோம். மிச்சம் இருப்பவர்களுக்காவது நல்ல முறையில் அன்றன்றைக்கு கூலி கிடைத்து அதன் மூலம் தங்களுடைய வாழ்க்கையை ஓட்டுவதற்கான சந்தர்ப்பத்தினை அரசாங்கம் செய்து தர வேண்டுமென்றும், அதிலே இன்னும் தீவிரமாக முன்வர வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். 102 இலட்ச ரூபாய் திருச்சி மாவட்டத்திற்கு ஒதுக்கி இருக்கிறீர்கள். நிச்சயமாக இது போதாது.

கேரளா அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு, பேச்சு வார்த்தை நடத்தி, பாதிக்கப்பட்டு இருக்கும் 80,000 ஏக்கர் நிலங்களிலும் விவசாயம் செய்வதற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு இருக்கும் தொகை 31 இலட்சம். கோவை மாவட்டம் பெரிய மாவட்டமாக இருப்பதால், நிச்சயமாக இந்த 31 இலட்சம் போதாது. அதை அதிகப் படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான அவினாசி மிகவும் பின்தங்கிய பகுதி மட்டுமல்ல, வறட்சிப் பகுதியும் ஆகும். அங்கே எந்தவித மான பாசன வசதியும் இல்லாத குறைபாடு இருப்பதால் அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய கிணறுகளில் தண்ணீர் வற்றிப்போய் விட்டது. கால்நடைகளுக்கு தீவனம் இல்லை. அவைகள் அடி மாடுகளாக பாலக்காட்டிற்குக் கடத்திக்கொண்டு போகிற நிலைமை இருக்கிறது. விவசாயிகள் அந்த அளவிற்கு பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் உடனடி யாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் துளைக் கிணறுகளை அதிகமாகப் போடுவதற்கும் அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கால் நடைகளுக்குத் தீவனம் குறைந்த விலை யில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குளம் குட்டைகள் வறண்டு கிடக்கின்றன. வறண்ட குளம் குட்டைகளை தூர் எடுப்பதற்கும் அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனது தொகுதியில் குடிநீர் பிரச்சினை கடுமையாக ஏற்பட்டு இன்றைக்கு அது விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. குடிநீர் பிரச்சி னையைத் தீர்க்கக்கூடிய வகையில் எல்லாக் கிராமங்களுக்கும் ஆழ்குழாய் கிணறுகளை அமைத்துக் கொடுத்து, குடிநீர் பிரச் சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புலியம்பட்டியில் இருக்கக்கூடிய பம்பிங் ஸ்டேஷன் 4 மணி நேரம்தான் இப்போது வேலை செய்கிறது. அன்னூர், அவினாசி பகுதிகளுக்கு அது போதாது. அங்கே கிராமங்கள் நிறைய இருக் கின்றன. அந்த பம்பிங் ஸ்டேஷன் 11 மணி நேரம் வேலை செய்யும் திறன் கொண்டது என்று சொல்கிறார்கள். எனவே, அங்கே இருக்கக்கூடிய பம்பிங் ஸ்டேஷனை முழு அளவுக்கு செயல் படச் செய்து, குடிநீர் பற்றாக்குறை இருக்கின்ற இந்த நேரத்தில், அதிக அளவு தண்ணீரை அன்னூர், அவினாசி பகுதிகளுக்குக் கொண்டுவர அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

திரு. ஆர். தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவை முன்னால் வைத்திருக்கிற வறட்சி நிவாரண அறிக்கைமீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக முதலில் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் வறட்சி நிவாரண நடவடிக்கைகளை போர்க்கால நடவடிக்கைபோல் எடுத்துவரும் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் தமிழக அரசுக்கும் என்னுடைய பாராட்டுதலை யும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டம் 18 இலட்சம் விவசாயிகளைக் கொண்ட பெரிய மாவட்டம். 18 இலட்சம் விவசாயிகளைக் கொண்ட அந்த மாவட்டத்தில் எந்த விதமான நூற்பாலையோ, தொழிற்சாலையோ, வேறு பெரிய வியாபாரமோ இல்லை. 18 இலட்சம் விவசாயிகளில் ஏறத்தாழ 16 இலட்சம் விவசாயிகள் ஏழை விவசாயிகள். அவர்கள் இராமநாதபுரம் பாதிப்புக்குள்ளாகும் போதெல்லாம் தஞ்சை மாவட்டத்திற்கு சென்று கதிர் அறுத்து ஜீவனம் நடத்துவது அனைவரும் அறிந்த விஷயம். இன்றைக்கு தஞ்சை மாவட்டமும் வறட்சியால் பாதிக் கப்பட்டிருப்பதால் அந்த மக்கள் அங்கும் போக முடியவில்லை. வேறு எந்த மாவட்டத்திற்கும் போக முடியவில்லை. ஆடு, மாடு, கோழி, குஞ்சு, முட்டை போன்றவைகளை பாதி விலைக்கு சந்தையில் விற்று இப்போது ஜீவனம் நடத்திக் கொண்டு வரு கிறார்கள். அவைகளை விருதுநகர், மதுரை ஆகிய இடங்களி லிருந்து வியாபாரிகள் வந்து கொள்முதல் செய்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அந்த மாவட்டத்திற்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கி யிருப்பதாக அதிகாரிகள் சொல்கிறார்கள்.

சென்ற வறட்சியில் வேலை செய்த கண்மாய்களை இப்போது எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற ஒரு குழப்பத்தை அங்கே அதிகாரிகள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந் தால் அந்த மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியாது. ஆகவே, போதிய நிதி உதவி அளித்து, அந்த மக்களுக்கு நிறைய வேலை வாய்ப்பு அளித்து, வறட்சி நிவாரணப் பணிகளுக்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் போர்க்கால நடவடிக்கைபோல் எடுத்து, அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டு, இராம நாதபுரம் மாவட்டத்திற்கு அதிகமான தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, தமிழ் நாட்டுக்கு இந்த வறட்சி நிவாரணப் பணிகளுக்கு அதிகமான பணம் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை கேட்டு வாங்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்க விரும்புகிறேன்.

நாங்கள் மத்திய அரசிடம் வறட்சி வந்திருக்கிறது என்று சொல்லி, உண்மைக்கு மாறாக பணம் கேட்கவில்லை. வறட்சி வந்திருக்கிறது என்பது நாடு அறிந்த விஷயம் ; சகல அரசியல்

தலைவர்களும் நன்றாக அறிந்த விஷயம். சகல கட்சி சட்ட
மன்ற உறுப்பினர்களும் அறிந்த விஷயம். ஆகவே, எங்களுக்கு
அந்த மாதிரி உண்மைக்கு மாறாக அதிக வறட்சி நிவாரணப்
பணம் வாங்க வேண்டுமென்ற ஆசை இல்லை. இந்த நாட்டின்
வறட்சியைப் போக்க வேண்டும். இந்த நாடு உயர வேண்டும்
என்பதுதான் எங்கள் ஆசை. (மணியடிக்கப் பெற்றது) நாடு
உயர வேண்டும். நன்றாகப் பயிர்கள் எல்லாம் விளையவேண்டும்
மலை வளம் பெருக வேண்டும். மங்கையர் துயர் தீர வேண்டும்.
வெற்றிலை தழைய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கெல்லாம் நிறைய
தண்ணீர் வேண்டும். அடுத்து திரு. சத்தியமூர்த்தி அவர்கள்.

(இரவு 7.40)

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி எந்த நிலையில்
இருக்கிறது என்பதை நாங்கள் அதிகம் எடுத்துச் சொல்ல
வேண்டிய அவசியம் இல்லை. குறிப்பாக என்னுடைய கடலாடி
தொகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு மிக அதிகமாக உள்ளது.
அங்கே ஆழ்துளை கிணறுகளை போடுவதாலோ, அல்லது வேறு
புதிய கிணறுகளைத் தோண்டுவதாலோ எந்தவிதப்பயனும் கிடை
யாது.

குறிப்பாக கீழ சாக்கிலும், சோழபிரியான் கோட்டை, ஏனாதி,
தட்டாளன் குளம், டி. வேப்பங்குளம், கொக்காடி, குருவாடி
காவாகுளம், சேரந்தை போன்ற கிராமங்களுக்கு லாரிகள் மூலம்
குடிப்பதற்கு அவசியம் தண்ணீர் கொடுக்க வேண்டிய ஏற்பாடு
களை செய்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான்
கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, இந்த ஆண்டிலும் கூட
மாட்டுத் தீவனங்கள்—வைக்கோல் போன்றவை பெறு
வதிலே, 25 சதவீதம் கூட வரவில்லை. இந்தச் சூழ் நிலையில்
அங்கே கிடைக்கக்கூடிய இந்த 25 சதவீத வைக்கோலையும்
கேரளத்திலே இருக்கும் தொழிற்சாலைகளுக்கு, குறிப்பாக,
காகித தொழிற்சாலைகளுக்கு, அறுவடை செய்கிற நிலத்தி
லேயே மொத்தமாக கொள்முதல் செய்து எடுத்துச் சென்றுக்
கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் 50 லாரிகள் அளவில்
சென்று கொண்டிருக்கின்றன. அதை உடனடியாக தடுத்து நிறுத்
தாவிட்டால், கால் நடைகளை அந்த மாவட்டத்தில் இருப்பதற்கு
எந்த ஒரு வாய்ப்புமே இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்
பதை இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

கடலாடி தொகுதியில் திருப்புளானி ஒன்றியத்தில் உள்ள
களரி கண்மாய் பொதுப் பணித்துறையைச் சேர்ந்த மிகப் பெரிய
கண்மாயாகும். பல ஆண்டுகளாக மராமத்து பணிகளே அதில்

நடைபெறவில்லை. கடந்த 1980-ஆம் ஆண்டு வறட்சி திட்டத்
தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டும் கூட, வறட்சி திட்டங்கள்
நடைபெற்ற கால கட்டத்திற்குள் அந்தவேலை எடுத்துக்கொள்ளப்
படாத காரணத்தால், 1980-ஆம் ஆண்டில் இந்தப் பணி
செய்யப்பெறவில்லை. ஆகவே, இந்த ஆண்டு முன்னுரிமை
கொடுத்து சுமார் 12 கிராமங்களுக்கு, நீர்ப் பாசனத்திற்கு பயன்
படக்கூடிய அந்தக் கண்மாயை குறைந்த பட்சம் 5 லட்சம் ரூபாய்
மதிப்பிலாவது ஆழப்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று இந்த
நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டும் அல்லாது கண்மாய்கள் அதிகமாக உள்ள மாவட்டம்
இராமநாதபுரம் மாவட்டம். அந்தக் கால்வாய்களுக்கு வர
வேண்டிய வரத்துக் கால்வாய்களை குடி மராமத்து மூலமாகத்
தான் செய்ய வேண்டும் என்று சொல்லி, சில ஆண்டுக்காலமாக
ஒதுக்கி வைக்கப்பட்டு எந்த திட்டத்தின் கீழும் மராமத்து பணிகள்
செய்யப்படாமல் இருந்து வருகிறது. குடி மராமத்தில்தான்
இந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்றால் யாராலும் இய
லாது. குடி மராமத்திற்கு என்று எந்தப் பணமும் கிடையாது.
ஆகவே, இந்த வறட்சி திட்டத்திற்காக ஒதுக்கப்படும் பணத்தில்,
இந்த வரத்துக் கால்வாய்கள் அனைத்தையும் செப்பனிட வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதுகுளத்தூர், கடலாடி பகுதிகளில் ஓரளவு ஒன்றிரண்டு
நாள் மழை பெய்த காரணத்தால், விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு
சராசரி 800 ரூபாய்க்கு மேல் செலவு செய்து, கதிர் பரியும் தரு
வாயில் அது விளையாத நிலையில் கருகி சாவியாகி பெரும் நஷ்
டத்திற்கு அந்த விவசாயிகள் உள்ளாகியிருக்கிறார்கள். 5 ஏக்கர்
உள்ள ஒரு விவசாயி சராசரியாக 4,000 ரூபாய்க்கு மேல் கடன்
வாங்கி நட்டம் அடைந்திருக்கிறார். ஆகவே அந்தப் பகுதி விவ
சாயிகளுக்கு, குறிப்பாக ஏதாவது வேலை வாய்ப்புகளை வழங்கும்
அடிப்படையில் இந்த மராமத்து பணிகளை அரசு மேற் கொள்ள
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்லாது
அங்குள்ள விவசாயிகளுக்கு உள்ளூர் வரி உட்பட அனைத்து வரி
களையும் வஜா செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு
வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.
அது மட்டும் அல்லாது என்னுடைய தொகுதியில் சாயங்குடி
கிராமத்தில் 6, 7 அரிசி ஆலைகள் இருக்கின்றன. ஹல்லர்
என்று மொத்தமாக அரைக்கக்கூடிய அரிசி ஆலை. அவைகளில்
இந்த தாலுக்காவில் விளைந்த ஒட்டு மொத்தமான நெல்களை
கொண்டு வந்து அரைக்கப்பட்டு, சட்டத்திற்கு விரோதமான
முறையில் கேரளத்திற்கு கடத்துகிற முறைகளில் முயற்சி செய்
கிறார்கள். ஒரு சிலர் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.
தந்திர சாலிகள் எடுத்துச் சென்றுக் கொண்டே இருக்கிறார்கள்
என்பதை குறிப்பாக நான் கவனத்திற்கு கொண்டு வரவிரும்பு
கிறேன்.

களை ஆழப்படுத்த வேண்டும். ராணிப்பேட்டைத் தொகுதியிலே கைப்பம்புகளை புதிதாக அமைக்கவேண்டும். ஏற்கெனவே இருந்த பம்புகள் பழுதுபட்டு இருக்குமேயானால் அவற்றைப் பழுதுபார்க்க வேண்டும். அடுத்து நீர் ஊற்றுகள் அதிகமாக இருக்கக்கூடிய இடங்களில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடிக்க வேண்டும். இன்னும் ஒரு நிமிடம் தருகிறேன் அதற்குள்ளாக முடித்து விடுங்கள்.

திரு. துரைமுருகன் : அடுத்து பவர் பம்ப்களை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேல் விசாரம், ராணிப்பேட்டை, வாலாஜா போன்ற இடங்களில் தண்ணீர் கிடைப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. எனவே லாரிகள் மூலம் அந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் அந்தப் பகுதிகளைப் பொறுத்தவரையிலே கூட்டுறவுக் கடன்களை அறவே ஒத்தி வைக்கவேண்டும். வட்டியைத் தள்ளிவிடவேண்டும். சென்ற முறை வறட்சி வந்த நேரத்திலே பெரிய பயங்கரமான ராட்சச கிணறுகளை வெட்டினார்கள். அப்படித் தோண்டுவதால் என்ன பயன்? அவை குடிநீருக்கும் பயன்படவில்லை, விவசாயத்திற்கும் பயன்படவில்லை. அதாவது வைக்கோல் போருக்கு நாயைக் காவல் வைத்த மாதிரிதான் அது. கலசப் பாக்கத்திலேயும் மற்ற இடங்களிலேயும் அவ்வாறு ராட்சச கிணறுகள் தோண்டப்பட்டன. அப்படித் தோண்டப்பட்டதன் காரணத்தால் அவை நீர் ஊற்றுக்களை அழித்து பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காமல் செய்துவிட்டது. எனவே பணத்தை வேஸ்ட் ஆக செலவு செய்து இந்த அரசு ராட்சச கிணறுகளை வெட்டியது தவறு. இனியும் அந்தத் தவறைச் செய்யக் கூடாது என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் முதலிலேயே இந்த வறட்சிநிலையினை முளையிலேயே கிள்ளி எறிந்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இப்படிப்பட்ட வறட்சி நிலைமை வந்திருக்காது. எனவே இந்த அரசினுடைய மெத்தனப் போக்கு காரணமாக மத்திய அரசுக்குத் தெரிவித்து அங்கே இருந்து நிதி பெற்று எடுக்கவேண்டிய காரியங்களை எடுக்கத் தவறி விட்ட காரணத்தால்தான் இந்தமாதிரியான வறட்சி நிலைமை ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

(இரவு 7.50)

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைத்து இருக்கின்ற வெள்ளை அறிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை மாவட்டம்

மிகப் பெரிய மாவட்டம். இன்றைய தினம் அது வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளை அறிக்கையில் மதுரை மாவட்டத்தில் ஆண்டு மழையளவு 854·8 மி.மீ. என்று கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு பெய்த மழையின் அளவு 692·8 மி.மீ. என்று கொடுக்கப்பட்டுள்ளது. மழையின் அளவு குறைந்து இருக்கிறது. குறிப்பாக மேட்டுப் பகுதியான ரெட்டியார் சத்திரம் ஒன்றியம், வேடசந்தூர் ஒன்றியம், ஒட்டன் சத்திரம் ஒன்றியம், தொப்பம்பட்டி ஒன்றியம் ஆகிய பகுதிகள் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த பகுதிகளில் நிலத்தடி நீர் இல்லை. அதனால் பல ஆண்டு காலமாக கிணறு வெட்டுவதற்கு கூட கடன் கொடுக்கப்படவில்லை. இதில் இருந்தே அந்த பகுதி எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். மதுரை மாவட்டம் மிகப் பெரிய மாவட்டம். இதற்கு 87 லட்சம் ஒதுக்கியிருப்பது போதாது. சற்று கூடுதலாக ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான ஆத்தூர் தொகுதியிலே ரெட்டியார் சத்திரம் ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதி, வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதி. அந்த பகுதியிலே பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. சோத்தான் நாத்து நாயக்கன் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. புல்வெட்டு கண்மாய் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதனால் 10 பஞ்சாயத்துக்கள் பயன்பெறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. நாய்ஓடை திட்டத்தை விரைவு படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் கிச்சடி சம்பா பெயர் பெற்ற அரிசி ஆகும். என்னுடைய தொகுதியிலே அது தரிசாகக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆத்தூரிலிருந்து திண்டுக்கல் நகருக்கு தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அதுவும் முழுமையாக கொடுக்க முடியவில்லை. வறட்சி நிலைமையின் காரணமாக இன்றைக்கு பெரும்பாலும் விளையவில்லை. திண்டுக்கல் நகருக்கு புதிய குடிநீர் திட்டத்தை அறிவித்து இருக்கிறீர்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடிநீர் பிரச்சனையை பொறுத்தவரையில் பழைய கோட்டை, மாமரத்துப்பட்டி, புல்லெரிம்பூ, ஆசாய புதூர், புதுசத்திரம், தம்பிள் நாயக்கன்பட்டி, கொண்ட நாயக்கன் பட்டி, தட்டச்சூர் போன்ற ஊர்தளில் ஆழ் குழாய் கிணறுகளை அமைத்தாலும், கிணறுகளை வெட்டினாலும் தண்ணீர் இல்லை. ஆகவே வண்டி மூலம் தண்ணீரை கொண்டு வந்து கொடுப்பதற்கு முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கின்றேன் நன்றி. வணக்கம்.

[திரு. வ. சத்தியமூர்த்தி] [1938 பிப்ரவரி 10

சாயங்குடி கிராமத்தில் இருந்து கமுதி, முதுகுளத்தூர் கிராமங்
களில் விளைந்து வரும் அத்தனை நெல்லையும், அரைத்துக்
கொண்டு செல்ல முயற்சிகள் நடைபெறுகின்றன. அவைகளை
பிரத்யேக நடவடிக்கைகள் மூலமாக தடுத்து நிறுத்த வேண்டும்
என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்த பேரவைத் தலை
வருக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, இந்த வறட்சியின் மீது நடைபெறுகிற விவாதத்தில் நான்
கலந்துக் கொண்டு சில கருத்துக்களைக் கூற கடமைப் பட்டிருக்
கிறேன். வட ஆற்காடு மாவட்டம் முழுவதும் வறட்சியின் கடும்
புயல் பரவியிருக்கிறது என்றாலும், அது மையங்கொண்டு இருக்
கிற தொகுதி ராணிப்பேட்டை தொகுதி என்பதை நான் இந்த
மாமன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், (குறுக்கீடு) வட
ஆற்காடு மாவட்டத்தில் எல்லாப் பகுதிகளிலேயும் இருந்தாலும்,
மையங் கொண்ட தொகுதி என்னுடைய தொகுதி.

இந்த வடாற்காடு மாவட்டத்திலே ராணிப்பேட்டையிலே
இரண்டு விதமான பஞ்சம் வந்திருக்கின்றது. ஒன்று செயற்கை
பஞ்சம், இன்னொன்று இயற்கைப் பஞ்சம். செயற்கைப் பஞ்
சம் என்பது நீர் நிலைகள் இருந்தாலும் நஞ்சை நிலங்களாக
இருந்தாலும் அவை எல்லாம் விளையாமலே தரிசு நிலங்
களாகப் போய்விட்டன. கத்தியவாடி, கீழ் மின்னல் பூட்டுத்
தாக்கு, மாந்தாங்கல், மோட்டூர் குடிமல்லூர். சாத்தம்பாக்கம்,
பூண்டி, சென்னசத்திரம், நரசிங்கபுரம் போன்ற இடங்கள் அதிக
மான தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு கீழே இருக்கின்ற
ஊர்கள். எனவே இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளி
லிருந்து வெளியேறும் கழிவுநீர் அந்தப் பகுதியிலே போகின்ற
காரணத்தால் அந்த நிலங்களில் எந்தவிதமான பயிரும் செய்ய
முடியாமல் சாவியாகப் போகக்கூடிய நிலைமை இருக்கின்றது.
புளியக்கரை, ஆலாத்தூர், நாலாப்பூர் போன்ற பகுதிகளில்
சிப்காட் என்ற தமிழ்நாட்டு நிறுவனத்தின் கழிவு நீர் வருகின்ற
காரணத்தால் அந்த நிலங்கள் பாழடைந்துவிட்டன. எனவே
இவையெல்லாம் செயற்கையாக வந்திருக்கின்ற பஞ்சங்களா
கும். இயற்கையாக வந்திருக்கின்ற பஞ்சம் என்பது இப்போது
எல்லா மாவட்டத்திற்கும் வந்திருப்பது போல் என்னுடைய
மாவட்டத்திற்கும் வந்திருக்கின்றது.

என்னுடைய இராணிப்பேட்டையைப் பொறுத்தவரையிலே
பேர்தான் ராணிப்பேட்டையே தவிர அதிலே எந்தவிதமான
ராணிக்குரிய அம்சமும் கிடையாது. பேரு பெத்த பேரு, தா
கேந்துக்கு நீலு லேது என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு
வறட்சியால் பாதிக்கப்பட்ட அந்த மாவட்டத்தில்ராணிப்பேட்டை
என்பது ஒரு தொகுதி. அதுபோன்றுதான் வாலாஜா தாலுக்கா
வும். எனக்கு வந்த தகவலின்படி வடாற்காடு மாவட்ட
ஆட்சித் தலைவரோ அல்லது அங்கே இருக்கின்ற கமிஷனரோ

1983 பிப்ரவரி 10] [திரு. துரைமுருகன்]

வாலாஜா பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்கவில்லை
என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி இருக்குமானால்
வறட்சி மையம் கொண்டிருக்கின்ற அந்தப் பகுதியினைக் கவனித்து
நடவடிக்கைகள் எடுக்காமல் கவனக்குறைவாக விட்டுவிட்டார்கள்
என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே எங்கே
பார்த்தாலும் ஏற்கெனவே வறண்டுபோன பகுதி என்பதால்
தான் சற்று அக்கறை அதிகம் காட்டி. தொழிற்சாலை
களைக்கூட ஆரம்பித்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கு என்ன
நிலைமை? அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் மூடிக்கிடக்
கின்றன. காரணம் கரன்ட் இல்லை, கரன்ட் இல்லாத காரணத்
தால் தொழிற்சாலைகள் மூடி இருக்கின்றன. தொழிலாளர்கள்
வேலை இழந்து இருக்கிறார்கள். ஆகவே காசு இல்லை, காசு
இல்லாத காரணத்தால் வாங்குகின்ற சக்தி இல்லை, சக்தி
இல்லாதது மட்டுமல்ல, ரேஷன் கடையிலே அரிசி இல்லை,
குடிக்க நீர் இல்லை, மாட்டுக்குத் தீவனம் இல்லை, மனிதனுக்கு
உணவு இல்லை, உணவுத் தொழில் பட்டுப்போய்விட்டது. மின்
சாரம் இல்லாத காரணத்தால் ஆலைகள் மூடப்பட்டு
விட்டன. இன்றைக்கு அந்தப் பகுதி எல்லாம் இருண்டு போய்
கிடக்கின்றன. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை
யில் 3, 4 பகுதிகளாகப் பிரிக்கலாம். மேலப்பாடி பகுதியினைப்
பொறுத்தவரையில் அங்கே வறட்சி புராண காலத்
திலே இருந்து. அங்கேதான் வள்ளிமலைக் கோயில் இருக்
கின்றது. முருகன் வள்ளியை மணம் புரிந்த இடம் அது. வள்ளியை
எப்போது மணம் புரிந்தான்? தினைப்புலத்திலே மணம் புரிந்
தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கதா காலட்சேபம் நடத்த
வேண்டாம். பிரச்சினையைச் சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன் : ஆகவே ஆத்தா வீடு வள்ளிமலை,
போய் திரும்பிப் பார்த்தால் ஒன்றும் இல்லை என்று எங்கள்
பக்கத்திலே சொல்வார்கள். அப்படி மிகவும் வறண்ட பகுதி
யாகும் அது. அடுத்தது லாலாபேட்டைப் பகுதி. அந்தப்
பகுதியை அடுத்து மேல்விசாரம், கத்தியவாடி ஆகிய பகுதிகளில்
இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்ற காரணத்தால் ராணிப்
பேட்டை தொகுதிக்குக் கொஞ்சம் அதிகமான பணம் ஒதுக்க
வேண்டும். இப்போது இந்த அறிக்கையிலே எங்களுடைய
மாவட்டத்திற்கு 171 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதாகச்
சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஆனால் பத்திரிகையிலே பார்த்
தேன், 23 கோடி ரூபாய் வேண்டும் என்று கேட்கப்பட்டதாக.
ஆனால் ஒதுக்கி இருப்பது 171 இலட்சம் ரூபாய். ஆகவே இது
யானைப் பசிக்குச் சோளப் பொறி என்ற அளவுக்கு இப்படி
போட்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
[illegible]ண்டியாக ராணிப்பேட்டைத் தொகுதியிலே [illegible]

திரு. தா. வீராசாமி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டுள்ள வெள்ளை அறிக்கை மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தமிழக அரசு தக்க நேரத்தில் அறிந்து ஆராய்ந்து அறிக்கை தயாரித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். கடந்த ஆண்டு கூட இதே மாமன்றத்தில் இப்படிப்பட்ட வறட்சி நிலையின் போது இதே குற்றத்தைக் கூறினார்கள். ஆனால் தமிழக வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அறிந்து, ஆராய்ந்து நல்ல நடவடிக்கைகளை எடுத்து தமிழக மக்களையும், தமிழகத்தையும் காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு 190 கோடி ரூபாய் கொடுக்கவேண்டும் என்று அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். தமிழக மக்களை வறட்சியினுடைய கோரப்பிடியிலிருந்து காப்பதற்கு முயற்சி எடுத்து இருக்கிறார்கள. தஞ்சாவூர் மாவட்டத்திற்க்கு குறைந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டை ஆளுகின்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், நிதியைத் தருகின்ற நிதி அமைச்சர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். வறட்சியைப் போக்கும் பணியைச் செய்யக் கூடிய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் தங்களைக் குறை கூறுவார்கள் என்ற அடக்கத்தோடு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்திற்குக் குறைவாக நிதியை ஒதுக்கியிருக்கிறார்களோ என்று நினைக்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயக் கூலிகள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்பது அமைச்சர் பெருமக்களுக்கு நன்கு தெரியும். தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் வேலை பெறும் வகையில் அதிக நிதி ஒதுக்கி வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும்படி இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

1.5 கோடி ரூபாய்க்கு தஞ்சை மாவட்டத்தில் ஒரு சில பகுதிகள் வடிமுனைக் குழாய்க் கிணறுகளைத் தோண்டி, வறட்சியால் வாடி வதங்கும் சம்பா பயிர்களையும், இந்த அரசு காப்பாற்றியதற்கு எனதுமனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த அரசைப் பாராட்டுகிறேன். ஆனால் அதோடு நின்று விடாமல், மற்ற பகுதிகளுக்கும், இதனை விரிவு படுத்த வேண்டுகிறேன். மற்ற பகுதிகளிலும் வடிமுனைக் குழாய்களையும், அடிக்குழாய் கிணறுகளையும் தோண்டி, வரும் கோடைகாலத்தில் தஞ்சை மாவட்டம் நெல்லை உற்பத்தி செய்து தரும் சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். தஞ்சை மாவட்டம் வேளாண்மையை மட்டும் நம்பி வாழ்கின்ற மாவட்டம், ஏழைகள் நிறைந்த மாவட்டம்.

பிற தொழில்கள் இல்லாத மாவட்டம். எனவே இம்மாவட்டத்தில் உள்ள நஞ்சை நிலங்களுக்கும் தண்ணீர் வசதி ஏற்படுத்தித் தந்து கோடையில் விவசாயம் செய்யும் நிலைமையை இவ்வரசு ஏற்படுத்தித் தருமானால் வறுமையால் வாடும் மக்களைக் காக்க மாண்புமிகு முதல்வர் உண்ணாவிரதம் இருக்கும் நிலை ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள வெள்ளை அறிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பெரியார் மாவட்டத்தில் ஆண்டுக்கு 217 மில்லி மீட்டர் மழை தேவை இருப்பினும் 1982 ஆம் ஆண்டிலே 545 மில்லி மீட்டர் பெய்திருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இந்த மழை ஆடி, ஆனி மாதங்களில் பெய்திருக்குமானால் ஓரளவுக்கு பஞ்சத்தை போக்குவதற்கு பயனுள்ளதாக இருந்திருக்கும். உப்பாறு அணை, அமராவதி அணை, கீழ்பவானி அணை ஆகிய பகுதிகளில் 295 கிராமங்கள் பாதிக்கப்பட்டு இருப்பதாக இதிலே கூறப்பட்டிருக்கிறது. இது கணிசமான அளவுக்கு குறைவாக இருக்கிறது என்பது தான் என்னுடைய கணக்கு. குழாய்க் கிணறுகள் மொத்தமாக 325 தான் மாவட்டம் முழுவதும் போடப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்திலே 11 தொகுதிகள் இருக்கின்றன. ஒரு தொகுதிக்கு 30 குழாய் கிணறுகள் வீதம்தான் வருகிறது. இதை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே குறிப்பிடப்பட்டிருப்பதுபோன்று 1 முதல் இத்தனை பகுதிகள் என்று இல்லாமல் எங்குஎங்கு தண்ணீர் இல்லையோ அங்கெல்லாம் குழாய்களை போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடிநீருக்காக 20 லட்சமும் வறட்சிக்காக 11 லட்சமும் அந்த மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது குறைவாக இருக்கிறது. அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊத்துக்குளியிலே எந்த வசதியும் இல்லை. அங்கே ஆழ்குழாய் கிணறுகளைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கிணறுவெட்டுவதற்குத்தான் வேலை என்று இல்லாமல் நீர்த்தேக்கப் பிடிப்பை ஏற்படுத்துகின்ற முறையிலே குளம்குட்டைகளை அமைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, வறட்சி பற்றிய இந்த அறிக்கையிலே கேட்கப்பட்டிருக்கிற தொகை 190 கோடியாகும். என்றாலும்கூட இன்றைக்கு சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே ஐந்தாறு

ஆண்டுகளாக வறட்சி தாண்டவமாடிக்கொண்டிருக்கின்ற கார
ணத்தினால் பல்வேறு கிராமங்கள் அல்லல்படுகின்ற சூழ்நிலை
இருக்கிறது. வறட்சிக்காக அந்த மாவட்டத்திற்கு 61
லட்சம் என்று போட்டிருக்கிறார்கள். குறைந்தது 300 லட்ச
ரூபாயாவது செலவு செய்தால்தான் ஓரளவுக்கு நிவர்த்தி
செய்யமுடியும். குறிப்பாக இராசிபுரம் தொகுதியை எடுத்துக்
கொண்டால் அங்கே 3 ஒன்றியங்கள் உள்ளிட்ட பகுதிகளிலே
குறிப்பாக இராசிபுரம் ஒன்றியப் பகுதியும், வெண்ணந்தூர்
ஒன்றியப்பகுதியும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன். அவைகளுக்கு
குறைந்தது 700 ஆழ் குழாய் கிணறுகள் அமைத்துக்கொடுத்
தால்தான் ஓரளவுக்குஒரு சில ஹேபிட்டேஷன் என்று சொல்லப்
படுகிற குடியிருப்புகளுக்குத் தண்ணீர் கொடுக்கமுடியும். கடந்த
ஆண்டு எத்தனையோ போடப்பட்டும் 20 குழாய்கிணறுதான்
தண்ணீர் தரக்கூடிய நிலைமையிலே இன்றைக்கு இருக்கின்றன
என்று சொல்லப்படுகிறது.

(இரவு 8.00)

ஏற்கனவே போடப்பட்ட திட்டத்தில் என்னுடைய நாம
கிரிப்பேட்டை ஒன்றியத்தில் இருக்கிற தோஜாரப்பாளையம்
குடிநீர் திட்டத்தை பொறுத்தவரையில் அங்கே ஆறு லட்சம்
ரூபாய்க்கு குடிநீர் வடிகால் வாரியம் திட்டம் போட்டு அது
நிறைவேற்றப்பட்டு பிறகு அங்கே வெட்டப்பட்ட ஆழ்துளை
கிணறு பொய்த்துவிட்டது. இன்றைக்கு அங்கே ஏழு ஆயிரத்
திற்கும் அதிகமான மக்கள் குடிநீர் இல்லாமல் அல்லல்படுகி
கிறார்கள். மாற்று ஆழ்துளை கிணறு உடனடியாக போட்டு
அங்கே திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பதிலாக பல்வேறு
டெக்னிக்கல் பாயின்டைச் சொல்லி இன்னல்களை உருவாக்கி
அந்த மக்களுக்கு கடந்த 8 மாத காலமாக தண்ணீர் கிடைக்
காத சூழ்நிலை இருக்கிறது.

பூலாம்பட்டியிலிருந்து காவிரி தண்ணீரை கொண்டுவந்து என்
னுடைய தொகுதிக்கும், சங்ககிரி தொகுதிக்கும், வீரபாண்டி,
எடப்பாடி தொகுதிகள், உள்ளிட்ட பகுதிகளாக இருக்கிற
பல்வேறு பேரூராட்சிகளுக்கு தண்ணீர் கிடைக்கிற
திட்டத்தை உடனடியாக இந்த வறட்சி காலத்திலாவது அமல்
படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் பொறுத்தவரையில் ஏரிகளில் மிகப்பெரிய ராட்சத
கிணறுகளை வெட்டி அது பயனற்று போய்விட்டது என்று
குறிப்பிட்டார்கள். அது தவறு. என்னுடைய தொகுதியில் வெட்டப்
பட்ட மூன்று பெரிய ராட்சத கிணறுகள் நல்லமுறையில் குடிநீர்
வசதிக்காக, பெரிய நகரங்களுக்கு தண்ணீர் வசதி செய்கிற
அளவிற்கு தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அதை பயன்

தண்ணீர் கொடுக்கவேண்டும்.
இருக்கிற கிராமங்களுக்கு குடி
வறட்சி ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்திலேயே அந்த பணிகளை
செய்து தரவேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி
கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற வெள்ளை
அறிக்கையின் மீது எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு
கிறேன். மதுராந்தகம் ஏரி ஒரு மிகப் பெரிய ஏரியாகும்.
இங்கே வாழ்கின்ற அந்த பகுதி மக்கள் அந்த ஏரியை நம்பித்
தான் வாழ்கிறார்கள். பல ஆண்டுகாலமாக அந்த ஏரி தூர்
வாரப்படாமல் இருக்கிறது. இதனால் விவசாயிகள் மிகவும்
பாதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த
ஏரியைக் காட்டித் தான் 1966 ஆம் ஆண்டு வறட்சியின் போது
பிரதமர் இந்திரா காந்தி அவர்களை வரவழைத்து நிவாரணம்
பெற்றிருக்கிறோம். நிவாரணப்பணிகள் சரியாக செய்யப்படா
மல் விடப்பட்டிருக்கின்றன. விவசாயத்திற்கு ஆதாரமாக
இருக்கிற அந்த பெரிய ஏரியை தூர் எடுப்பதற்கு வேண்டிய
நிதி ஒதுக்கீட்டினை செய்து பணிகளை உடனடியாக மேற்
கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதிப்பீடுகள்
தயாராக இருக்கின்றன. அந்த மதிப்பீட்டின் அடிப்படையில்
வறட்சி நிவாரணப் பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்று
இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மதுராந்தகம் ஏரியிலிருந்து வெளி வருகிற நீரானது கடலில்
வீணாகக் கலக்கிறது என்று புகார் இருக்கிறது. அந்த
நிலைமையை மாற்றி மேலும் புதியதாக 32 ஏரிகளுக்குப் பாசன
வசதிகள் செய்யலாம் என்று ஆய்வுகள் சொல்கின்றன. அந்த
அடிப்படையிலே வறட்சி நிவாரணப்பணிகளின் கீழ் புதிய
ஏரிகளை உருவாக்குவதற்கு நிதி ஒதுக்கீடு தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயும் இந்த
வறட்சியில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு
போதுமான நிதியை ஒதுக்கித் தரவேண்டும். இன்றைக்கு
விவசாயிகள் விவசாயத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.
அவர்களுக்கு வேண்டிய பாசன வசதிகள் இல்லாமல்
அல்லல் படுகிறார்கள். அவர்களுடைய கிணறுகளை
ஆழப்படுத்துவதற்கு வேண்டிய வசதி இல்லாமல் கஷ்டப்படுகி
றார்கள். ஆகவே கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு கடன்
வசதி செய்து கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)
தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.
அந்த விவசாயிகளுக்கு வேண்டிய ஆயில் என்ஜின்களை
வழங்கவேண்டும். வைத்திருக்கிற பயிர்கள் வாடுகின்றன.
அவற்றை காப்பாற்றுவதற்காக ஆயில் என்ஜின்களை வழங்க
வேண்டும், குளங்களை ஆழப்படுத்துவதற்கும், தேவை

கடைகளில் அரிசி வழங்குவதற்கும், நிலத்தடி தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கும் வழிவகை செய்யப்படவேண்டும். என்னுடைய தொகுதி மக்கள் விவசாயத்தை நம்பி இருக்கிறார் கள். வறட்சி ஏற்பட்டிருக்கிற இந்த நிலைமையில் வேலை வாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு எல்லாகிராமங்களிலும் பணிகளை செய்ய வேண்டும். குறிப்பிட்ட சில கிராமங்கள் என்பதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்துள்ள வறட்சி நிவாரண அறிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டம் முழுவதும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் அந்த மாவட்டத்திற்காக வறட்சி நிவாரண நிதியாக 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது போதுமானதாக இல்லை. இன்னும் அதிகமான தொகையை ஒதுக்கித் தரவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டம் முழுவதும் கடுமையான பஞ்சம் இப்போதே ஆரம்பமாகி இருக்கிறது. குடிநீர் பஞ்சத்தைப் போக்கக்கூடிய வகையில் இருக்கக்கூடிய அனைத்து குழாய்க் கிணறுகளையும் உடனடியாக பழுது பார்க்க வேண்டும். இருக்கக்கூடிய மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகளை உடன் பழுதுபார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாய கூலி வேலை செய்யக் கூடியவர்கள் வேலையில்லாமல் இன்றையதினம் தவித்துக் கொண் டிருக்கிறார்கள். இன்னும் 4 மாத காலத்திற்காவது அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற 13 இலட்சம் ரூபாய், அங்கே இருக்கக் கூடிய 34 ஒன்றியங்களுக்கும் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமான தொகையை ஒதுக்கி, வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது வேளாண்மை வசதிக்காக 1000 குழாய்க் கிணறுகளை தஞ்சை மாவட்டத்தில் அமைப்பதற்காக ஒன்றரை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். இந்த ஒன்றரை கோடி ரூபாய் என்பது தற்போது நிலவள வங்கிகள் மூலமாக இரண்டரை ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு கடனாகக் கொடுக்கப்படு கிறது. இந்த ஒன்றரை கோடி ரூபாய் மூலம் அமைக்கப்படும் 1000 குழாய் கிணறுகள் மூலம் கிட்டத்தட்ட 2500 ஏக்கர்களுக்கு தான் பயன்தரக்கூடிய அளவில் அமைந்திருக்கிறது. எனவே, சமுதாயக் கிணறுகளை எல்லா இடங்களிலும், கிராமம் ஒன்றுக்கு 5, 6 சமுதாயக் கிணறுகள் என்ற அடிப்படையிலே, அரசாங்கச்

செலவிலேயே அமைத்து, அங்குள்ள ஏழை விவசாயிகளுக்கு, குத்தகை செய்யும் விவசாயிகளுக்கு பயன்தரக்கூடிய் வகையிலே நீங்கள் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில் குத்தகைக்கு சாகுபடி செய்யக்கூடியவர்கள் எந்த விதமான வசதியும் இல்லாமல் இருப்பதால், அவர்களுக்கு, கடன் வழங்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் முழுவதையும் வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாக் கிராமங் களுக்கும் தேவையான இடங்களில் சமுதாயக் கிணறுகளை அமைக்க வேண்டும். குத்தகை சாகுபடியாளர்களுக்கு கடன் வழங்க வேண்டும். நிலவரி முழுவதையும் ரத்து செய்ய வேண்டும். கூட்டுறவு கடன் வசூலிப்பதை ஒத்தி வைக்க வேண்டும். நெல் கொள்முதல் செய்யும்போது, அவர்களுக்கு வறட்சி நிவாரண உதவியாக குவிண்டாலுக்கு ரூ.25 உயர்த்தித் தர வேண்டும். நியாயமான முறையில் கொள்முதல், செய்ய வேண்டும் என்று கேட்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள் கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளமிக்க தஞ்சை மாவட்டம் இன்றைய தினம் வறண்ட பாலைவனமாக காட்சியளிக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக் கிறது. தொடர்ச்சியான வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்கள் எப்படி இருக்கும் என்பதைப் பற்றி யாரும் பேசித் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இன்றைய தினம் அமைச்சரோ, அரசாங்கமோ இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, அந்த அடிப்படையில் தொடர்ச்சியான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக் கின்ற மணப்பாறை, குளித்தலை ஒன்றியங்கள், அதேபோல் தோகைமலை, கடவூர், கிருஷ்ணராயபுரம் ஒன்றியங்கள், அதே போல் முசிறி தாலுகா, துறையூர் தாலுகா, உடையார்பாளையம், அரியலூர் ஆகிய தாலுக்காக்கள் வறட்சியால் முழுமையாக பாதிக் கப்பட்டிருக்கின்றன. திருச்சி மாவட்டம் முழுவதையும் வறட்சி யால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு 11·30 கோடி ரூபாய் வறட்சி நிவாரண நிதிக்காக ஒதுக்கியிருக்கிறது. சென்ற இண்டு வறட்சியின்போது 59 கோடி ரூபாய் அரசு செலவிட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு ஒதுக்கியிருக்கின்ற தொகை போதாது. அது மிகவும் குறைவு. ஆகவே, உடனடியாக அதிகமான தொகை ஒதுக்குவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய அரசிடமிருந்து போதுமான வறட்சி நிவாரண நிதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாவட்ட அளவில், ஊராட்சி ஒன்றியங்களில் எந்தெந்த வறட்சிப் பணிகளை செய்ய வேண்டும் என்பது சம்பந்தமாக ஆலோசனை செய்து, முடிவு செய்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்களை அமைக்க வேண்டும். இந்த வறட்சி சம்பந்தமான பணிகளைக் கண்காணிப்பதற்கும், அந்த வேலைகள் முறையாக நடைபெறுகிறதா என்பதை பார்வையிடுவதற்கும் அந்தக் குழுக்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும். இந்த முறையிலே முழுமையாக இந்த நிவாரணப் பணிகளைச் செய்து, அதனுடைய பலன் முழுவதும் மக்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குளங்களை திட்டமிட்டு ஆழப்படுத்தி, பிறகு அதிலே தண்ணீர் வந்து சேர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது, ஆடுமாடுகளுக்குத் தீவனம் சேகரித்துக் கொடுப்பது போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடிநீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, இப்பணியைத் தீவிரமாகச் செய்து, உடனடியாக நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், யுத்த கால அடிப்படையிலே குடிநீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் வறட்சிப் பணியைத் திட்டமிட்டு, உடனடியாகத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

(இரவு 8.10)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நீண்ட நேரம் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஏறக்குறைய 251 நிமிஷங்கள், 43 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு பேர்கள் சொல்லியிருப்பதை எண்ணிப் பார்க்கிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய தொகுதியைப் பற்றியும் தமிழகத்தைப் பொறுத்த அளவிலும் எவ்வளவு அக்கறை காட்டுகிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு என்பதைத் தான் நான் முதலிலே தெரிவித்துக்கொள்வேன். 43 பேர்கள் பேசியிருக்கிறார்களே, அவ்வளவு பேர்களுக்கும் நான் பதில் சொல்ல வேண்டுமென்றால், எல்லோருமே திருப்பித் திருப்பி, 4, 5 விஷயங்களை மட்டும்தான் சொல்லியிருக்கிறார்கள் என்பதாலே, நான் மொத்தமாகவே என்னுடைய பதிலைச் சொன்னால் யாரும் தவறாகக் கருதமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இங்கே இருக்கிற ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களும், அந்தக் கட்சியில் 4 பேர்கள், 5 பேர்கள், 6 பேர்கள் என்று எல்லாக் கட்சிகளிலும் பேசியிருக்கிறார்கள். சி.பி.எம்.மைச் சேர்ந்த ஒரே ஒருவர் திரு. வரதராஜன் மட்டும் அவர்கள் கட்சியின் சார்பிலே தம்முடைய கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர் ஒருவர் மட்டும் பேசினாலும், 8, 9,

10 விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். 10 விஷயங்களைச் சொன்னாலும் அவ்வளவையும் இந்த அரசு ஏற்றுக் கொள்கிறதா, இல்லையா என்பது வேறு பிரச்னையென்றாலும், நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, 43 பேர்கள் பேசியிருப்பதற்குப் பதிலாக, ஒரு கட்சியின் இரண்டு மூன்று பேர்கள் பேசி இருந்தால், விஷயங்களை இன்னும் தெளிவாகவும் நல்ல முறையிலும் சொல்லி இருக்க முடியும். ஆனாலும், உறுப்பினர்கள் தொகுதிகளுக்குச் சென்றால், நீங்கள் எல்லாம் பேசவில்லையென்று தொகுதி மக்கள் சொல்வார்கள் என்று எண்ணியோ என்னவோ, மாநிலம் பூராவும் சுற்றிவந்து பிறகு தொகுதிக்குச் சென்று சிலபேர் தொகுதியோடு நிற்காமல் ஒன்றியத்திற்கும் சென்றார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

தன் தொகுதிக்குப் பணம் ஒதுக்கவில்லையென்று சொன்னார்கள். பணம் கொடுத்தது குறைவு,குறைவு என்று சொன்னார்கள். எந்தக் கணக்கை வைத்துச் சொன்னார்கள் என்றால என்னுடைய அறிக்கையின் 3-வது பக்கத்திலே இருப்பதைமட்டும் படித்துவிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் 4-வது பக்கத்திற்கு ஏன் போகவில்லையென்று எனக்குத் தெரியவில்லை. 3-வது பக்கத்திலே சொல்லியிருப்பது ரூ. 11.31 கோடி, ஆனால், 4-வது பக்கத்திலே சொல்லியிருப்பது ரூ. 33.84 கோடி, அப்படியென்றால், ரூ. 11.31 கோடிக்கு உங்களுடைய மாவட்டத்திற்கு ஒதுக்கிய கணக்குகளை மட்டும் நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். மற்ற கணக்குகளை நீங்கள் சேர்த்தால் உங்களுடைய மாவட்டத்திற்கு மிக அதிகம் என்பதை—அதிகம் என்று சொல்லவில்லை ஓரளவுக்கு நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1980—81லே கூட மொத்தமாக இந்த அரசு 6 மாதங்களுக்குச் செலவு செய்தது ரூ. 62 கோடிதான் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், இப்பொழுது எடுத்த எடுப்பிலே ரூ. 33.84 கோடி ஒதுக்கி இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசுகிறபொழுது, எல்லோரும் இல்லை, சிலபேர் காலம்கடந்து, நம்முடைய வேலைகளை ஆரம்பித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். 1981-ஐப் பார்த்தால, அதைவிட சீக்கிரமாக முன்னே வந்து, இன்றுவரையிலும் ரூ. 33 கோடி ஒதுக்கியிருக்கிறோம், எவ்வளவு சீக்கிரமாக இந்தத் தொகையை செலவழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எங்கே வறட்சி, இங்கே மழை பெய்திருக்கிறதா, இல்லையா என்று சொல்லாவிட்டாலும் நீங்கள் மத்தியப் பேரரசுக்கு அறிக்கைகளைக் காலதாம[illegible] அனுப்பினீர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். மத்தி[illegible] ருக்காக காலதாமதமாக அறிக்கை அனுப்பி இருந்[illegible] அங்கேயிருந்து பணம் வந்தாலும், சரி குழுக்கள் [illegible] சரி, வராவிட்டாலும் சரி, செய்யவேண்டிய [illegible] செய்து கொண்டிருக்கிறோம் என்பதை [illegible]

ஒன்றை நான் சொல்லவேண்டுமானால், நான் இந்த அவைக்கு முன்னால் நிற்பதற்கு முன்னாலேகூட மாநிலத்தில் ரூ. 17.50 கோடி செலவில் 7,529 துளைக் கிணறுகள் போடப்பட்டு முடிந்திருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட வேலைகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மொத்தமாக இன்றைக்கு எப்படிப் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்றால், 33.4 என்றால் ஒதுக்கப்பட்டிருக்கும் பணம்,

Depening of publ.c drinking water wells	3.16 கோடி,
Const uct.on of ring wells and mini-wells	.10 கோடி,
Transporting water through lorr.es	.05 கோடி

தனியான கம்பி இணைப்புகளுக்காக, அதாவது ஃபீடர் லைன்களுக்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஒன்றரை கோடி.

Irrigat on work: ex.cuted by the P.W.D.	4 கோடி,
Irr gation wo k executed by the Highways Depa tment.	2 கோடி
Road wo ks executed by the Highways Department	2 கோடி,
for sink.ng Filt.r po nt tube wells	Rs. 1.50 crore:

தஞ்சைக்குப் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதற்கே ஒன்றரை கோடி.

To ward: si king bore wells through Tam l Nadu Water Supply and Drainage Board	17½ கோடி
To th: Ci y of Madras through Madras Metropolitan Wate Supply a d Sewera e Board	2 கோடி

இப்படிப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

முன்னேற்பாடாக எவ்வளவு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோ என்று சொல்ல வேண்டுமென்றால் குடிநீர் வாரியத்தின் சார்பில், குடிநீர்ப் பஞ்சம் வந்தால் என்ன செய்வது என்று யோசித்து, சென்ற ஆண்டு வருகிற பொழுது பம்புகள் எல்லாம் கைவசம் இல்லை, அதனால் சங்கடப்பட்டோம். அதைப் போக்கடிக்க வேண்டுமென்ப தற்காக, நமக்கு 21,000 அல்லது 21,000-ஐத் தாண்டித் தேவைப்படும் என்று கருதி இதுவரையிலே 9,000 ஹேண்ட்

இன்னும் கைவசம் 800 ஹேண்ட் பம்புகள் வைத்திருக்கிறோம். இன்னும், 13,700 வேண்டுமென்பதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள் குடிநீர் வாரியத்தின் சார்பில் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல பைப்பு லைன் தமிழகத்தில் இல்லாமல் போய்விடுமோ என்பதற்காக வேண்டிய அளவிற்கு, 50,000, 60,000 என்ற அளவிற்கு வாங்குவதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிமெண்ட் தேவைப்பட்டாலும் தேவைப்படும் என்பதற்காக ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

இங்கே பேசுகின்றபொழுது பல்வேறு நிலைகளைப்பற்றி சொல்லும்பொழுது, திறமையாகச் செய்ய வேண்டும், நன்றாகச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். எந்த அளவிற்குத் திறமையாக செய்ய முடியுமோ அந்த அளவிற்கு நாங்கள் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவு நெருக்கடியைப் பற்றிச் சொன்னார்கள். உங்களுக்கு நான் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், எல்லாயிடங்களிலேயும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும் 17,000-க்கும் அதிகமான கடைகள் இருக்கின்றன. அவைகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அரிசி, கோதுமை, ரவா, மைதா, மண்ணெண்ணெய் போன்றவைகளைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மண்ணெண்ணெய் கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். சிலயிடங்களில் அதையும் இந்த அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமைச் சகோதரர் வரதராஜன் அவர்கள் சொல்லும் பொழுது இராணுவத்திலிருக்கிற சில லாரிகளைக் கூட எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது நல்ல யோசனை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஃபில்டர் பாயின்ட் என்று சொன்னார்கள், அதையும் செய்து கொண்டிருக்கிறோம்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்று தெரிவித்தார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, மற்றத் தொழிலாளர்களுக்கும் அதற்காகத்

இன்றைக்கு பி.டபிள்யு.டி. மூலமாக ஏரிகள், குளங்களை வெட்டுவது என்பதில் கவனம் செலுத்த பணத்தை ஒதுக்கியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 8.20)

அதுமட்டுமல்ல, இங்கே பணம் போதவில்லை என்று சொன்னார்கள். 11 கோடியைச் சொன்னார்கள். நான் 33 கோடியைப் பற்றிச் சொன்னேன். இன்றைக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்ற பணம் முதல் தவணை, இல்லாவிட்டால் இரண்டாவது தவணை. ஆனால் இது கடைசி தவணை இல்லை, இது தொடரும் என்பதையும், தேவைக்கேற்ற அளவுக்குக் கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே சொல்லுகிறபோது பட்டினிச் சாவு வரும் என்று சொன்னார்கள். நான் உறுதியாகச் சொல்லுவேன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, புரட்சித் தலைவர் அரசு, தமிழக மக்களை ஒருபோதும் பட்டினியால் சாக விடாது என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். எப்படியாவது அரிசியைக் கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுக்கும். வேலையில்லாமல் இருந்தால் சரி, ஆனால் பட்டினியால் சாக நிச்சயமாக விட மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுவேன், எந்த நோய் வந்தாலும் தாங்கிக் கொள்ள முடியும், ஆனால் பசி வருகிற போது அதைத் தாங்க முடியாமல் கஷ்டப்படுகின்றவர்களுக்குத்தான் அது பற்றித் தெரியும். எனவே பசியால் யாரும் சாக விடாது இந்த அரசு என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சென்னைக்கு எவ்வளவு செலவு செய்திருக்கிறோம் என்பதைப்பற்றி உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். பலபேர்கள் அதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற மேல்நிலைத் தொட்டிகள் கை பம்புகள் சரியாக இல்லை. தமிழ்நாட்டில் 12,800-க்கும் அதிகமான மேல்நிலைத் தொட்டிகள் இருக்கின்றன. அதிலே ஏறக்குறைய 400 அல்லது 450 பழுது பட்டிருக்கும். அவை நிச்சயமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ அல்லது மற்ற அதிகாரிகள் மூலமாகவோ சரிசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல ஹேண்ட் பம்ப் 53 ஆயிரம் இருக்கின்றது. அவைகளிலே கிட்டத்தட்ட 50 ஆயிரம் சரியாக இருக்கிறது. மற்றவை ரிப்பேராக இருந்தால் அவைகள் சரிசெய்யப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி

எந்த வேலைகளாக இருந்தாலும் அவைகளை ஒன்றன்பின் ஒன்றாக பார்த்து சரி செய்வோம் என்ற உறுதிப்பாட்டினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குழுக்களை அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இங்கே அருமை நண்பர்கள் பலர் சொல்லுகிறபோது, வறட்சி வந்தால் வேலைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை என்று சொன்னார்கள். அருமைச் சகோதரர் வரதராஜன் கூட சொன்னார். இப்படி காசைக் கட்டிக் கொண்டுபோய்விடு கிறார்கள் என்று சொன்னார்கள். நல்ல எண்ணத்தோடு சொன்னார்கள் என்று நான் எடுத்துக் கொள்கிறேன், ஆனால் யாரும் காசைக் கட்டிக் கொண்டு போகக்கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அருமைச் சகோதரர் துரைமுருகன் அவர்கள் சொல்லுகிறபோது, வேலை ஒழுங் காக நடப்பதில்லை என்று இங்கே சொன்னார்கள். சென்ற வறட்சியின்போது வேலைகள் நடந்ததைப்பற்றி அவர் மாவட்டக் கமிட்டியிலே சொல்லுகிறபோது—அது என்னுடைய பார்வைக்கு வந்தது. கடைசி கூட்டத்திற்கு முதல் கூட்டத்தில் சொல்லுகிறபோது, வேலைகள் நல்லமுறையிலே நடக்கிறது, அந்த வேலைகளைக்கூட கண்ணிலே ஒற்றிக் கொள்ளலாம், அவ்வளவு நன்றாக நடக்கிறது என்று அவர்கள் பேசி இருக் கிறார்கள். (குறுக்கிட்டு) நண்பர் துரைமுருகன் அவர்கள் பேசவில்லை என்றால் நான் அதைச் சொல்லவில்லை.

திரு. துரைமுருகன் : வேலைகள் சரியாக நடக்கவில்லை என்று நான் இப்போது சொல்லவே இல்லை. அப்போதும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேலை சரியாக செய்ய வில்லை என்று இப்போது கூட சொல்லவில்லை, எந்த விதமான குற்றச்சாட்டும் சொல்லவில்லை என்று சொல்லு கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, அப்படியானால் சரி. இந்தக் குழுக்கள் போடுவது பற்றி உங்களிடத்திலே சொல்ல வேண்டும் என்று சொன்னால், குழுக் கள் மாவட்ட ரீதியாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் போடப்படும். சென்ற ஆண்டு போட்டபடியே போடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் குழுவில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இருப்பார்கள். அது மட்டுமல்ல, சென்ற ஆண்டு இந்தக் குழுக் கூட்டம் நடக்கிற போது, மாநிலம் பூராவும் 100 கூட்டங்கள் நடந்தன. சில மாவட்டங்களிலே 10 குழுக் கூட்டங்கள்கூட நடந்திருக்கின்றன. சில மாவட்டங் களிலே 8 நடந்திருக்கின்றன.

உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால் போன முறை பார்க்கிறபோது, வட ஆற்காடு மாவட்டத்திலே 7 தடவைகள் நடந்திருக்கின்றன. தென் ஆற்காடு மாவட்டத்தில் [illegible]

செங்கற்பட்டு மாவட்டத்திலே 5 தரம், திருச்சியிலே 6 தரம் தஞ்சையிலே 10, புதுக்கோட்டையில் 10, ராமநாதபுரத்தில் 7 என்று இப்படி எல்லா மாவட்டங்களில் மொத்தமாக 100 தடவைகள் நடந்திருக்கின்றன. இந்தக் குழுக் கூட்டங்களைப் பற்றி நான் உங்களுக்கு சொல்வதற்குக் காரணம், இதிலே சட்டமன்ற உறுப்பினர்கள், இங்கே இருக்கிற 234 சட்டமன்ற உறுப்பினர்களும், உறுப்பினர்களாக இருப்பார்கள். எந்தெந்த இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தெந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இல்லையோ, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களைப் போடுவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, இங்கே பேசுகிறபோதுகூட இந்த வறட்சிபற்றி பேசுகிறபோதுகூட யாருக்காவது எங்கேயாவது குழுவிலே போடவில்லை, விடப்பட்டிருக்கிறது என்று இங்கே இருக்கிற கட்சித் தலைவர்கள் எழுதிக் கொடுத்தால் நான் போடுவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று கூட நான் தெரிவித்து இருந்தேன். எல்லோரும் அதற்கு பதில் சொல்லவில்லை. சரி என்று இன்றைக்குச் சொல்ல வேண்டாம் 4 நாள் கழித்துச் சொல்லுங்கள் என்று சொன்னேன். அதனால் குழுவிலே போட்டதிலே நீங்கள் எல்லாம் திருப்தியாகத்தான் இருந்து இருக்கிறீர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் கோட்ட வருவாய்த் துறை அளவில், ஆர்.டி.ஓ. அவர்கள் தலைமையிலே அந்த குழு இருக்கும். அதேபோல் அதிலும் உறுப்பினர்கள் இருப்பார்கள். நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வது எல்லாம், அந்த வேலைகள் நல்லபடி நடக்க வேண்டுமென்பதிலே அக்கறை நம் எல்லோருக்கும் இருக்கிறது, எங்கே என்னென்ன வேலைகள் நடக்கிறது, எந்த ஊரிலே வேலைகள் நடக்கிறது, அந்த வேலைகளினுடைய பணம் எவ்வளவு, தொகை எவ்வளவு என்ற கணக்குகளை நான் உங்களிடத்திலே கொடுக்கச் சொல்கிறேன். குழுவின் இடத்திலே ஒப்படைக்கச் சொல்கிறேன். ஆனால் நான் இங்கே பார்க்கிறபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் முதல் 2 கூட்டங்களுக்கு நன்றாக வந்திருக்கிறார்கள், பிறகு வராமல் விட்டு விட்டார்கள். நான் இங்கே வருகிறபோது என்ன நினைத்துக் கொண்டேன் என்றால், சரி அந்தக் குழு நன்றாக நடக்கவில்லை, ஆகையினாலே நீங்கள் போகவில்லை என்று நான் சொல்லமாட்டேன், நன்றாக நடக்க வேண்டும் என்பதிலும், நன்றாக நடக்க வைக்கிற திறமையும் பொறுப்பும் உங்களுக்கு இருக்கிறது. நாம் செல்லாவிட்டாலும் நன்றாக நடக்கும் என்பதால்தான் நீங்கள் செல்லாமல் இருந்து இருக்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன். நான் இப்போது உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், அந்தக் குழுவிற்கு நீங்கள் தவறாமல் போக வேண்டும். அது மட்டும் போதாது. உங்களிடத்திலே எங்கெங்கே வேலைகள் நடக்கிறது என்ற கணக்குகள், பட்டியல், உங்களிடத்திலே கொடுக்கப்படும். வேலை நடக்[illegible]

நடக்கிறதா, இல்லையா என்று. இங்கே சொல்கிறபோது நம்முடைய எம்.எல்.ஏ. அவர்கள் சொன்னார்கள். மண்ணையே வெட்டிப் போட்டு விடுகிறார்கள் என்று சொன்னார்கள். அது மட்டுமல்லாமல் வெட்டிய இடத்திலே மீண்டும் வெட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். அதை இங்கே வந்து சொன்னால் நான் என்ன செய்ய முடியும். நானே எல்லா ஊர்களுக்கும் போக வேண்டுமென்றால், முடியாது. உங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றால், முதல் அமைச்சர் அவர்கள் பல மாவட்டங்களுக்குச் சென்றார்கள். போய் வேலைகளைப் பார்த்தார்கள். முதல் அமைச்சர் அவர்கள் பல அதிகாரிகளைக் கூப்பிட்டுப் பேசினார்கள். நானும் பல மாவட்டங்களுக்குச் சென்றேன். பல மாவட்ட கமிட்டிகளுக்குச் சென்று இருக்கிறேன். ஆனால் தமிழ்நாடு பூராவும் இருக்கிற ஒவ்வொரு கிராமத்திற்கும், தாலூகாவிற்கும், நிச்சயமாக என்னாலே போக முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் வேலை நடக்கின்ற இடத்திற்கு நீங்கள் சென்று வேலை தவறாக நடக்கிறது என்று சொன்னால், அந்த அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய தொகுதியில் நீங்கள் எந்தக் குழுவிலே அங்கம் வகிக்கிறீர்களோ அந்தக் குழுவில் அல்லது அந்தத் தொகுதியில் வேலைகள் தவறாக நடக்கிறது என்றால், அதற்கு நீங்களும் பூரண பொறுப்பு இல்லாவிட்டாலும், தவறாக நடந்ததற்கு நீங்களும் பொறுப்பாளி என்று நான் சொல்வதை நீங்கள் தவறாகக் கருதக் கூடாது. உங்களுக்கு உதாரணத்திற்குச் சொல்கிறேன். இங்கே அரசில் தவறு நடந்து விட்டால் நானும் பொறுப்பாளிதான் அதற்கு. எனவே நீங்கள் குழுவில் உறுப்பினராக இருக்கிறபோது அதிலே தவறுகள் நடந்தால் அதற்கு நீங்களும் பொறுப்பாளியாக இருக்கிறீர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதைச் சொல்வதற்குக் காரணம் நீங்கள் இதை திறம்பட நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் அதை நான் சொல்கிறேன்.

இங்கே பேசுகிறபோது வரி வாய்தா பற்றிச் சொன்னார்கள். நான் இதற்கு முன்பே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தெரிவித்து இருக்கிறேன். மொத்தமாக தமிழகம் பூராவும் வரி, தண்ணீர் தீர்வை, மற்ற வரிகள் தள்ளுபடி என்று சொல்லியிருக்கிறேன். எந்தெந்த இடத்திலே தள்ளுபடி செய்ய வேண்டுமோ, அவைகளையெல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். நீங்கள் இதிலே மிகத் தாராளமாக இருக்க வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு நெல் விளைகிற பூமி, இந்த ஆண்டு ஒரு மாதத்திற்கு 20 கலம் நெல் விளையும் என்று இருக்கிறபோது, அதிலே 10 கலத்திற்குக் குறைந்து விட்டால் தண்ணீர் வரி, உள்ளூர் வரி, வாய்தா போன்ற எல்லாவற்றையும் தள்ளி விடுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். அதிலே பெரிய விவசாயியா சிறிய விவசாயியா என்று பார்க்க வேண்டாம்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 பிப்ரவரி 10

(இரவு 8.30).

அதே மாதிரி கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில், அவர்கள் கொடுத்தால் வாங்கிக் கொள்ளுங்கள், கடுமையான நடவடிக்கை எடுத்து கூட்டுறவுக் கடனை வசூலிக்க வேண்டாம் என்று நாங்கள் தெரிவித்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே கால்நடைகளைப் பற்றிச் சொன்னார்கள். கால்நடைகளுக்கு தீவனம் வாங்க வேண்டும், வாங்கி வைக்க வேண்டும் என்று அரசு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறது. கால்நடைகளுக்கு தீவனம் வாங்குவது மட்டுமல்ல, பல்வேறு இடங்களில் கால்நடைகளுக்கு தண்ணீர் தொட்டி கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். கால்நடைகளுக்கு வறட்சி காரணமாக நோய் வரும் என்பதால் அதற்கு மருந்துகள் வாங்கி வைக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். இப்படி எல்லாக் காரியங்களையும் நாங்கள் செய்து வருகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், குத்தகைதாரர்கள் பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். இன்றைக்கு அதைப் பற்றி அதிகாரிகளிடத்திலே நான் கலந்து ஆலோசித்தேன். எங்கெங்கே குத்தகைதாரர்கள் உண்மையாகவே அவர்களாலே குத்தகையைக் கட்ட முடியவில்லையோ, அங்கேயெல்லாம் அதைப் பற்றி யோசித்து தக்க நடவடிக்கைகளை அரசு சார்பாக சட்டம் கொண்டு வந்தோ அல்லது வேறு காரியம் மூலமாகவோ அதை நிறைவேற்றுவதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் இந்த அரசு செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி நீங்கள் சொல்கிற எல்லாக் காரியங்களும் ஒன்றன்பின் ஒன்றாகச் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் இந்தக் காரியங்கள் எல்லாம் நடைபெறுகிறபோது தாமதமாகாமல் இருப்பதற்கு பல்வேறுபட்ட அதிகாரிகளுக்குப் பொறுப்புகள் அதிகம் கொடுத்து இருக்கிறோம். சில நேரங்களில் அதைச் செய்வதற்கு எல்லா இடத்திற்கும் அரசின் அனுமதி வாங்குவது என்று இல்லாமல், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே அதிக அதிகாரம் கொடுத்து வேலையைத் தீவிரப்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1983 பிப்ரவரி 10] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. அதை நிச்சயமாக நல்ல முறையில் செய்வோம் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. 11—2—1983 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8—32 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

141. தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்தின் 1981—82 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

இணைப்பு.

(308-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாட்டில் வறட்சி நிலை.

அறிக்கை.

1982 ஆம் ஆண்டு தொடக்கமே நல்ல முறையில் அமைய வில்லை என்று சொல்ல வேண்டும். தென்மேற்குப் பருவ மழை ஏறத்தாழ மாநிலம் முழுவதிலுமே பொய்த்துவிட்டது. போதிய அளவு மழை பெய்யாததோடு உரிய பருவ காலத்திலும் மழை பெய்யவில்லை. வடகிழக்குப் பருவ மழை 1982 அக்டோபர் 18 ஆம் நாள் அளவில் தமிழ்நாட்டில் தொடங்கியது ; ஆனால், இம்மழை நீண்ட நாட்கள் நிலைத்திருக்கவில்லை. 1982 நவம்பர் முதல் வாரத்தில் இம்மாநிலத்தில் ஓரளவு மழை பெய்தது. அதன் பின்னர் குறிப்பிடத்தக்க அளவு மழை இல்லை. இம்மாநிலத்தில் ஆண்டுதோறும் சராசரி மழையின் அளவு 942.8 மில்லி மீட்டர் ஆகும். ஆனால், 1982 ஆம் ஆண்டில் 670.1 மில்லி மீட்டர் அளவே மழை பெய்தது. அதாவது, 29 சதவீதம் பற்றாக்குறை இருந்தது. உண்மையான நிலை என்னவென்றால் எல்லா மாவட்டங்களும் முழுமையாகவோ ஓரளவோ வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன.

அடுத்தடுத்து, தென் மேற்குப் பருவ மழையும் வடகிழக்குப் பருவ மழையும் சரிவரப் பெய்யாததினால் நிலத்தடி நீர் அளவு பாதிக்கப்பட்டது. பாசனக் கிணறுகளில் நீரின் அளவு மிகவும் குறைந்து விட்டது. பாசன ஏரிகளில் நீர் சேரவில்லை. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இம்மாநிலத்தில் உள்ள பெரிய நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு மிகவும் குறைந்து விட்டது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் 1982 ஆம் ஆண்டில் எந்த மாதத்திலும் நீர் நிரம்பவில்லை. அதில் இப்பொழுது 4–6 டி.எம்.சி. அளவே நீர் உள்ளது.

இதன் விளைவாகப் பல்வேறு பயிர்கள் விளையும் பரப்பளவு மிகவும் குறைந்துள்ளது. இதனால், உற்பத்தி கணிசமான அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது. வேளாண்மையும் அது தொடர்பான ஏனைய பணிகளும் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. இதனால், கிராம மக்களிடையே பரவலான வேலை வாய்ப்பு இன்மையும் அதன் காரணமாக விவசாயிகளுக்கு வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளன. சென்னை மாநகர் உட்பட கிராம, நகரப் பகுதிகள் அனைத்தும் வறட்சி நிலையினால் பாதிக்கப்பட்டு, அதன் விளைவாக குடிநீர்ப் பற்றாக்குறை கடுமையாக

வறட்சி நிலைமை இம்மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் நிலவி வருகிறது. அதன் கடுமை இடத்திற்கு இடம் மாறுபடுகிறதே ஒழிய எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிலைமை இருந்து வருகிறது. சாதாரணமாக வறட்சியின் பிடியிலிருந்து தஞ்சை மாவட்டம் தப்பித்துக்கொள்ளும். ஆனால், தென்னிந்தியாவின் தானியக் களஞ்சியம் என்றழைக்கப்படும் தஞ்சை மாவட்டமே இந்த ஆண்டு வறட்சியின் பிடியில் அகப்பட்டு தவிப்பது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும்.

மக்களின் துயர் தீர்க்க அரசு முன்னுரிமை அடிப்படையில் பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. பொது குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக அரசு ரூபாய் 3.16 கோடி செலவிட அனுமதி வழங்கியுள்ளது. கடற்கரையோரப் பகுதிகளில் உறைக் கிணறுகள், சிறு கிணறுகள் ஆகியவற்றைக் கட்டுவதற்காக ரூபாய் 10 இலட்சங்கள் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. லாரிகளின் மூலமாக நீர் எடுத்துச் செல்வதற்காக ரூபாய் 5 இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் பெரிய, சிறிய பாசன ஏரிகளை வெட்டவும் புதிய மண் சாலைகளை அமைக்கவும் பணிகள் தொடங்குவதற்காக ரூபாய் 8 கோடி செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை பின்வரும் வகையில் மாவட்டங்களிடையே பிரித்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் பெயர்.	ஒதுக்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.)
(1)	(2)
1 செங்கல்பட்டு	178.00
2 வட ஆற்காடு	171.00
3 தென் ஆற்காடு	98.00
4 தருமபுரி	40.00
5 சேலம்	61.00
6 பெரியார்	31.00
7 கோயம்புத்தூர்	31.00
8 நீலகிரி	4.00
9 மதுரை	87.00
10 திருச்சிராப்பள்ளி — — — —	102.00

குடிநீர் நிலைமையைச் சீராக்குவதற்கும், அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

(அ) ரூபாய் 30 இலட்சம் செலவில் பொது குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தல் ;

(ஆ) ரூபாய் 140 இலட்சம் செலவில் அவ்வப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்.

(இ) ரூபாய் 1 இலட்சம் செலவில் லாரிகள் மூலம் குடிநீர் கொண்டு செல்லுதல்.

(ஈ) 1982 ஆம் ஆண்டில் 307 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

தென் ஆற்காடு :

இம் மாவட்டத்தில் ஆண்டுதோறும் பெய்யும் மழையின் அளவு 1,188.9 மில்லி மீட்டர். 1982-ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 656.9 மில்லி மீட்டர். இம் மாவட்டம் பாசன வசதிக்கு வெலிங்டன், கோமுகி நதித் திட்டம், மணிமுத்தா நதித் திட்டம் போன்ற நீர்த் தேக்கங்களையும், வீராணம், வீடுர் முதலிய ஏரிகளையும் நம்பியுள்ளது. மாவட்டத்தின் எஞ்சிய பகுதி மழையையே நம்பி உள்ளது. மேற்சொன்ன பாசன வாயில்களில் உள்ள நீர் நிலைமை திருப்திகரமாக இல்லை. மழையினால் நீர் பெறும் 1,778 ஏரிகளில் நீர் இல்லை. வறட்சி நிலைமையினால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை 1,954 ஆகும். எனவே, பயிற்சி பெறாத பெருமளவு உழவுத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டியுள்ளது. குடிநீர்ப் பற்றாக்குறை மிகவும் கடுமையாக உள்ளது. 4 நகராட்சிகள் 60 பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளிலும் குடிநீர் வாயில்கள் குடியிருப்புப் பகுதியிலிருந்து வெகு தொலைவில் இருப்பதால், வாடகை லாரிகள் மூலம் குடிநீர் வழங்க வேண்டியுள்ளது.

குடிநீர் நிலைமையைச் சீராக்குவதற்கும் அவ்வப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

(அ) ரூ. 18 இலட்சம் செலவில் பொது குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்தல்.

(ஆ) 1982 ஆம் ஆண்டில் 791 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

தர்மபுரி :

இம் மாவட்டத்தில் ஆண்டு தோறும் பெய்யும் மழையின் அளவு 8,436 மி.மீ. ஆகும். 1982 ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 537.8 மி.மீ. ஆகும். இம் மாவட்டம் முழுவதும் வறட்சிப் பாங்கான பகுதியாகும். கிருஷ்ணகிரி நீர்த் தேக்கம், சின்னாறு நீர்த் தேக்கம் ஆகியவை தவிர கிணறுகள், ஏரிகள், குளங்கள் மூலம் சாகுபடி செய்யப்படுகிறது. இந்நீர்த் தேக்கங்கள், ஏரிகள் முதலியவற்றில் உள்ள நீரின் அளவு திருப்திகரமாக இல்லை. வறட்சி நிலையால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை 192 ஆகும். சுமார் 2.30 இலட்சம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை அளிக்க வேண்டியுள்ளது. பல குடிநீர்க் கிணறுகள் வறண்டு விட்டன. அவற்றை ஆழப்படுத்த வேண்டியுள்ளது.

குடிநீர் நிலைமையைச் சீராக்குவதற்கும், அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

(அ) ரூ. 20 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தல்.

(ஆ) 1982 ஆம் ஆண்டில் 644 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) ரூ. 20 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பளிக்கும் பணிகள் மேற்கொள்ளுதல்.

சேலம் :

இம் மாவட்டத்தில் ஆண்டு மழை அளவு 842.4 மி.மீ. 1982-ம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 676.1 மி.மீ. இம் மாவட்டத்திற்கு இங்குள்ள பெரிய மற்றும் சிறிய பாசன ஏரிகளிலிருந்தும், மேட்டூர் கால்வாயிலிருந்தும் நீர் வழங்கப்படுகிறது. இம் மாவட்டத்திலுள்ள 47 பெரிய பாசன ஏரிகளுக்கு நீர் வரப் பெறவில்லை. இந்த ஆண்டில் பாசனத்திற்குகாக மேட்டூர் கால்வாயிலிருந்து நீர் விடப்படவில்லை. இதனால் 759 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. கணிசமான அளவு வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேறு வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டியிருக்கும். மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் குடிநீர் பற்றாக் குறை நிலவி வருகிறது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் நீரின் அளவு குறைவாக இருப்பதால் சேலம் நகரத்திலும் குடிநீர்

1983 பிப்ரவரி 10]

மாவட்டத்தின் பெயர். (1)		ஒதுக்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்) (2)
11	தஞ்சாவூர் (கழிமுகப்பகுதிகள் அல்லாதவை) ..	17.00
12	புதுக்கோட்டை	92.85
13	இராமநாதபுரம்	125.00
14	திருநெல்வேலி	33.50
15	கன்னியாகுமரி	14.00
		1,085.35
மாவட்டங்களுக்கு இன்னும் ஒதுக்கப்பட வேண்டிய தொகை		45.65
	மொத்தம் ..	1,131.00

தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகளின் குடிநீர் வழங்கு தலைப் பணிகளுக்குத் தனியான சும்பி இணைப்புகள் (Fe der lines) அமைப்பதற்காக, ரூபாய் 1.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வழங்கு-வடிகால் வாரியம், இதுவரை ரூபாய் 17.50 கோடி செலவில் 7,529 துளைக் கிணறுகள் அமைத்துள்ளது. சென்னை மாநகரில் குடிநீர்ப்பற்றாக்குறையைப் போக்க சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு-கழிவு நீர் அகற்று வாரியம் ரூபாய் 2.03 கோடி செலவிட்டுள்ளது. தவிரவும், சம்பாப் பயிர்களைப் பாதுகாக்க வேண்டி தஞ்சாவூர் மாவட்டத்தின் கடைமடைப் பகுதிகளில் 1,000 வடிமுனைக் குழாய்க்கிணறுகள் தோண்டுவதற்காக அரசு உழவர்களுக்கு ரூபாய் 1.50 கோடி கடன் வழங்கியுள்ளது.

இதுவரை, அரசு, வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்காக, ரூபாய் 33.84 கோடி வரை செலவிட ஆணைகள்/அனுமதி வழங்கியுள்ளது.

நிலவரி, உள்ளூர்த் தீர்வை, உள்ளூர் தீர்வை மேல்வரி, தண்ணீர் தீர்வை முதலியவற்றைத் தள்ளுபடி செய்வதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. விரைவில் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும். தேவையெனக் காணுமிடத்து, உள்ளூர்த் தீர்வை மற்றும் உள்ளூர்த் தீர்வை மேல்வரி முதலிய [illegible] தள்ளுபடி செய்ய, உள்ளாட்சி மன்றங்களுக்கு அறி

[1983 பிப்ரவரி 10

மாவட்டம் வாரியான நிலவரம் வருமாறு :—

செங்கல்பட்டு :

இம்மாவட்டத்தில் ஆண்டுதோறும் பெய்யும் மழை அளவு 1,211 மில்லி மீட்டர் ஆகும். 1982 ஆம் ஆண்டில், 812 மில்லி மீட்டர் மழையே பெய்தது. இம் மாவட்டம் பெரிதும் மழை நீர் பெறும் ஏரிப்பாசனத்தையே நம்பியிருக்கிறது. ஏரிகளில், நீர் மட்டம் 25 முதல் 35 சதவீதம் வரையே இருந்தது. வறட்சி காரணமாக 1,974 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 4 இலட்சம் உழவுத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது. வரும் மாதங்களில் 1,291 கிராமங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடிநீர் பற்றாக்குறையைப் போககவும் அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளவும் அரசு, பின்வரும் நிவாரணப் பணிகளுக்கு உத்திரவிட்டுள்ளது :—

(அ) ரூபாய் 38 இலட்சம் செலவில், பொது குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துதலும், லாரிகள் மூலமாக தண்ணீர் வழங்குதலும்.

(ஆ) 1982 ஆம் ஆண்டில், 642 குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) ரூபாய் 140 இலட்சம் செலவில், உள்ளூர் மக்களுக்கான வேலை வாய்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

வட ஆற்காடு :

இம்மாவட்டத்தில் ஆண்டுதோறும் பெய்யும் மழையளவு 971.1 மில்லி மீட்டர். 1982 ஆம் ஆண்டில், 679.0 மில்லி மீட்டர் மழையே பெய்துள்ளது. பாலாறும் மற்றும் ஏரிகளும் இம் மாவட்டத்தின் பாசன வாயில்களாகும். மொத்தமுள்ள 2,971 ஏரிகளில், 2,884 ஏரிகள் முற்றிலும் வறண்டு போய்விட்டன. பாசன கிணறுகளிலும் தண்ணீர் வற்றிவிட்டது. வறட்சி நிலைமையினால் 1,898 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பருவ மழை தவறியதாலும், நெல் விளைச்சல் குறைந்ததாலும் சுமார் 4 இலட்சம் குடும்பங்கள் அதாவது 50 சதவீத உழவு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பல கிராமங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

குடிநீர் பற்றாக்குறையைச் சமாளிக்கவும் உழவுத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது :—

(அ) பொது குடிநீர்க் கிணறுகளை ரூ. 32 இலட்சம் செலவில் ஆழப்படுத்துதல்.

(ஆ) 1982 ஆம் ஆண்டில் 1,124 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) ரூ. 29 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு நல்கும் பணிகள்.

பெரியார் மாவட்டம்.

இம் மாவட்டத்தின் ஆண்டு மழையளவு 717.0 மி.மீ. 1982 ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 545.9 மி.மீ. இம் மாவட்டத்திற்கு அமராவதி அணை, உப்பாறு அணை, கீழ் பவானித் திட்டம் ஆகியவற்றிலிருந்து நீர் வழங்கப்படுகிறது. நீர்க்கோள் பகுதிகளில் மழை குறைவாக இருந்ததால், நீர்த் தேக்கங்களுக்கு வரும் நீர் குறைந்துவிட்டது. மேட்டூர் கால்வாய் திட்டத்திலிருந்து நீர் விடப்படவில்லை. இந்த வறட்சி நிலையால் 295 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. அதிகமான வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேறு வேலை அளிக்கப்படவேண்டியிருக்கும். இம்மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறை கடுமையாக உள்ளது. குடிநீர் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், உழவுத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது :—

(அ) குடிநீர் கிணறுகளை ரூ. 20 இலட்சம் செலவில் ஆழப்படுத்துதல்.

(ஆ) 1982 ஆம் ஆண்டில் 325 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன.

(இ) ரூ. 11 இலட்சம் செலவில் வேலைவாய்ப்பு நல்கும் பணிகள்.

கோயம்புத்தூர் மாவட்டம்.

இம் மாவட்டத்தின் ஆண்டு மழையளவு 711.3 மி.மீ. 1982 ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 556.2 மி.மீ. இம்மாவட்டத்தில் ஆழியாறு அணை, பரம்பிக்குளம் அணை போன்ற பல நீர்த்தேக்கங்கள் உள்ளன. இந்த நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு மிகவும் குறைவாக இருந்தது. பாசனக் கிணறுகளிலும் நீர் குறைவாக இருந்தது. போதுமான அளவு மழை இல்லாததன் காரணமாக பயிர்களுக்கு நீர்ப் பாய்ச்சலும், ஏனைய இது தொடர்பான நடவடிக்கைகளும் மிகவும் குறைவாகவே இருந்தன.

தோட்ட நிலங்களிலும் பயிர்கள் சாவியாகிவிட்டன. வறட்சியால் 310 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. சுமார் 1.40 இலட்சம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேறு வேலை கொடுக்கப்படவேண்டும். இம் மாவட்டத்தின் கிராமப் பகுதிகளிலும் நகர்ப்புற பகுதிகளிலும் கடும் குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுகிறது.

குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், வேலைவாய்ப்பளிக்கும் பணிகளுக்கும் பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது :—

(அ) ரூ. 20 இலட்சம் செலவில் குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்தல்.

(ஆ) 1982 ஆம் ஆண்டில் 322 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) ரூ. 11 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகள்.

நீலகிரி மாவட்டம்

இம் மாவட்டத்தில் இயல்பாகப் பெய்யும் மழை அளவு 1920.8 மி.மீ. ஆகும். 1982-ல் பெய்த மழையின் அளவு 1235.8 மி.மீ. ஆகும். இங்கு பயிர் விளைவிக்கும் முறை முழுவதும் மழையை நம்பியே உள்ளது. சில நகராட்சிகளுக்குச் சொந்தமான நீர்த் தேக்கங்களிலிருந்து இம் மாவட்டத்திற்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. நீர்த் தேக்கங்களில் குறைவான அளவு நீர் இருப்பதால் குடிநீர் பற்றாக்குறை உள்ளது. அன்றியும், ஈர்ப்பு சக்தியின் மூலம் இயற்கை நீரூற்றுக்களிலிருந்து குழாய்கள் மூலமாக கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, பொது மக்கள் குடிநீர் பெற, பெரிதும் அவதிப்படுகின்றனர். குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த அரசு ரூ. 4 இலட்சம் அனுமதித்துள்ளது.

மதுரை மாவட்டம்.

இம் மாவட்டத்தின் ஆண்டு மழையளவு 854.8 மி.மீ. 1982-ல் பெய்த மழையின் அளவு 692.8 மி.மீ. ஆகும். பாசன ஏரிகளுடன் இம் மாவட்டத்தில் பெரியாறு, வைகை பாசன ஏற்பாடுகளும், மஞ்சளாறு திட்டமும், பாசன வாயில்களாக உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 1982-ல் பெரியாறு, வைகை நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு மிகவும் குறைவாக இருந்தது. வறட்சியால் 731 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 4.93 இலட்சம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்படவேண்டியிருக்கும். பெரும்பாலான குடிநீர் கிணறுகளில் நீரின் மட்டம் குறைந்துவிட்டது. வரும் மாதங்களில் குடிநீர் பிரச்சினை மிகவும் கடுமையாகலாம்.

குடிநீர் நிலைமையையும், வேலை வாய்ப்பளிக்கும் பணிகளையும் சமாளிக்க பின்வரும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது :—

(அ) ரூ. 20 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தல்.

(ஆ) 1982-ல் 1815 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) ரூ. 67 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பளிக்கும் பணிகள்.

திருச்சிராப்பள்ளி :—

இம் மாவட்டத்திற்குரிய ஆண்டு மழையளவு 842.6 மி.மீ. ஆகும். 1982 ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 592.0 மி.மீ. ஆகும். காவிரி, அமராவதி ஆகிய இவ்விரு பெரும் ஆறுகள் இம நாவட்டத்திற்கு நீர் வழங்குகின்றன. 16—12—1982 ஆம் மாளன்று இருந்த நிலவரப்படி, மேட்டூர் அணையில் மிகக் குறைந்த அளவே நீர் இருந்தது. எனவே பாசனத்திற்காக அதிலிருந்து நீர் வெளியிடப்படவில்லை. இந் நீர்த் தேக்கத்தில் தொடர்ந்து குறைந்தளவே நீர் இருந்ததால் முறை வைத்து நீர் வழங்கும் ஏற்பாடு கொண்டு வரப்பட்டது. பாசன ஏரிகளைப் பொறுத்த மட்டில், சாதாரணமாக, எந்த அளவிற்கு அந்த ஏரிகளுக்கு நீர் வழங்கப்படுமோ, அதற்குக் குறைந்த அளவிலேயே 896 ஏரிகளுக்கு நீர் கிடைக்கப் பெற்றது. 1484 ஏரிகளுக்கு நீர் கிடைக்கப் பெறவேயில்லை. வறட்சியால் 619 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. இதனால், சுமார் 1,5 இலட்சம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பிற்கு வகை செய்ய வேண்டியுள்ளது. இம் மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் குடிநீர் பற்றாக் குறை நிலவுகிறது.

குடிநீர் கிடைக்கச் செய்வதற்கும், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு நல்குவதற்கும் கீழ்க்காணும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது :—

(அ) ரூ. 22 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல்.

(ஆ) 1982 ஆம் ஆண்டில் 560 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் :—

இம் மாவட்டத்திற்குரிய ஆண்டு மழை அளவு 1,168.4 மி.மீ. ஆகும். 1982 ஆம் ஆண்டில் பெய்த மழை அளவு 775.2 மி.மீ. ஆகும். இம் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு மேட்டூர் அணையிலிருந்து தொடர்ந்து நீர் கிடைக்கப் பெற்றது. தமிழ் நாட்டிற்கு பாசனத்திற்கு நீர் நல்கும் பெரும் வாயிலான மேற்கூறிய இந் நீர்த்தேக்கம் 93.5 டி.எம்.சி. கொள்ளவு உடையதாகும். ஆனால், 1982 ஆம் ஆண்டில் இந் நீர்த்தேக்கம் முழு அளவும் நிரம்பவில்லை என்பதோடு, இந் நீர்த்தேக்க வரலாற்றிலே என்றும் நிலவாத அளவிற்கு மிகக் குறைந்த அளவே நீர் இருந்தது. எனவே, முறை வைத்து நீர் வழங்கும் ஏற்பாடு 8—7—1982 ஆம் நாளிலிருந்து கொண்டு வரப்பட்டது. இந் நீர்த் தேக்கத்தில் இன்றுள்ள நீரின் அளவு 4.6 டி.எம்.சி. ஆகும். இம் மாவட்டத்தில் 1,160 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. வரும் மாதங்களில் வேலை வாய்ப்பின்மை ஏற்படக்கூடும். கடற்கரையோரக் கிராமங்களிலும், இம் மாவட்டத்தின் உட்பகுதிகளில் உள்ள கிராமங்களிலும் குடிநீர் கிடைக்கப் பெறுவது கடினமாக உள்ளது.

குடிநீர் கிடைக்கச் செய்வதற்கும், வேலை வாய்ப்பு நல்குவதற்கும் கீழ்க்காணும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது :—

(அ) ரூ. 4 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல்.

(ஆ) 1982 ஆம் ஆண்டில், 105 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) 13 இலட்சம் ரூபாய் செலவில் வேலை வாய்ப்பு நல்கும் பணிகள்.

(ஈ) சம்பா நெற் பயிரைப் பாதுகாப்பதற்காக, இம் மாவட்டத்தில் கடை மடைப் பகுதிகளில் உள்ள உழவர்கள், தங்களுடைய பாசன வாயிலுக்குத் துணையாக அமையும் வண்ணம் 1,000 வடி முனைக் குழாய்க் கிணறுகளைத் தோண்ட அவர்களுக்கு 1.50 கோடி ரூபாய் கடன் உதவி வழங்குதல்.

புதுக்கோட்டை :—

இம் மாவட்டத்திற்குரிய ஆண்டு மழை அளவு 917.9 மி.மீ. ஆகும். 1982 ஆம் ஆண்டில் பெய்த மழையின் அளவு 565.7 மி.மீ. ஆகும். இவ்வாறு, இம் மாவட்டத்தில் பெய்ய வேண்டிய மழையின் அளவு குறைந்ததால், பாசனம் பெறும் நெற்பயிர் சாகுபடிக்காக இம் மாவட்டத்திலுள்ள வானாவாரி ஏரிகளுக்குப் போதிய அளவு நீர் கிடைக்கப் பெறவில்லை. இம் மாவட்டத்தி

5,843 சிறிய, பொதுப் பணித் துறையைச் சேர்ந்த பாசன ஏரிகள் உள்ளன. வறட்சியால் இம் மாவட்டத்தில் 677 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. 67,238 வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு நல்க வேண்டியுள்ளது. தொடர்ந்து இம் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததால் அடி நில நீர் மட்டம் மிகவும் குறைந்தது; எனவே குடிநீர்ப் பற்றாக்குறை மிகக் கடுமையாக உள்ளது.

குடிநீர் கிடைக்கச் செய்வதற்கும், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு நல்குவதற்கும் கீழ்க்காணும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது :—

(அ) ரூ. 12.85 இலட்சம் செலவில் குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துதல், லாரிகள் மூலம் நீரை எடுத்துச் சென்று வழங்குதல், உறைக் கிணறுகளை அமைத்தல்.

(ஆ) 1982 ஆம் ஆண்டில் 170 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

(இ) 80 இலட்சம் ரூபாய் செலவில் வேலை வாய்ப்பு நல்கும் பணிகள்.

இராமநாதபுரம்.—இம் மாவட்டத்தின் ஆண்டு மழையளவு 839.5 மி.மீ. 1982-ஆம் ஆண்டில் 684.1 மி.மீ. மழை பெய்துள்ளது. இம்மாவட்டம், வறட்சிப் பாங்கான பகுதித் திட்டத்தின் கீழ் வருகிறது. இம்மாவட்டத்தில், நிலையான பாசன வாயில்கள் ஏதும் இல்லை. வைகை, பெரியார் ஆற்றிலிருந்து நீர் பெற்று தேக்கி வைக்கப்படும் ஒரு சில ஏரிகள் தவிர ஏனைய ஏரிகள் மழை நீரை மட்டுமே நம்பியுள்ளவை. இம்மாவட்டத்தில் உள்ள எல்லா ஏரிகளும் வறண்டேயுள்ளன. வறட்சியின் காரணமாக 1,417 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன ; இதனால் சுமார் 1.7 இலட்சம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டியுள்ளது. குடிநீருக்கு மிகுந்த பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது ; 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குப் பிறகு குடிநீர் பற்றாக்குறை மேலும் மோசமான நிலைக்குச் சென்று விடக்கூடும்.

குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காகவும், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையிலும் பின்வரும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அரசு ஆணை பிறப்பித்துள்ளது :—

(அ) ரூ. 25 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், லாரியில் குடிநீரை எடுத்துச் சென்று வழங்குதல், உறை கிணறுகளை தோண்டுதல் போன்ற பணிகள் :

(ஆ) 1982 ஆம் ஆண்டில் 203 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன ;

(இ) ரூ. 100 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய பணிகள்.

திருநெல்வேலி.—இம்மாவட்டத்தின் ஆண்டு மழையளவு 814.0 மி.மீ. ஆகும். 1982 ஆம் ஆண்டில் 653.0 மி.மீ. மழை பெய்தது. இம் மாவட்டத்தில் பாபநாசம், மணிமுத்தாறு ஆகிய இரு பெரும் நீர்த்தேக்கங்கள் உள்ளன. தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததின் விளைவாக இந் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்தது, ஆனால், வடகிழக்குப் பருவ மழையின் போது இந்நிலையில் மேம்பாடு ஏற்பட்டது. இருப்பினும் 116 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன ; 25,168 வேளாண்மைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழக்க நேரிடும். இம்மாவட்டத்தின் சில பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படும் என்று தோன்றுகிறது. குடிநீர்ப் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்காகவும், வேலை வாய்ப்பளிக்கும் வகையிலும் பின்வரும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(அ) ரூ. 13.50 இலட்சம் செலவில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், லாரிகள் மூலம் குடிநீரை எடுத்துச் சென்று வழங்குதல் ;

(ஆ) 1982-ஆம் ஆண்டில் 521 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன.

(இ) ரூ. 20 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய பணிகள் மேற்கொள்ளுதல்.

கன்னியாகுமரி மாவட்டம்.—இம்மாவட்டத்தின் ஆண்டு மழையளவு 1,469.7 மி.மீ. ஆகும். 1982-ஆம் ஆண்டில், 1099.7 மி.மீ. மழை பெய்தது. இம்மாவட்டத்தில் நான்கு நீர்த் தேக்கங்கள் உள்ளன. 1982-ஆம் ஆண்டில் அவையனைத்தினுடைய மொத்தக் கொள்ளளவு 3,392 M.cft. ஆக இருந்தது. கடந்த 10 ஆண்டுகளில் இக்கொள்ளளவு, மிக குறைந்த கொள்ளளவாகும், எனவே 1982-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல், பாசனத்திற்காக நீர் வழங்குவதை முறைப்படுத்த மாற்று முறையில் நீர் வழங்கும் முறை செயல்படுத்தப்பட்டது. வறட்சியால் 57 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. பெருவாரியான வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டியுள்ளது. இம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலுள்ள குடிநீர்க் கிணறுகளில் நீர் மட்டம் பெருமளவு குறைந்துள்ளது. குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கவும், வேலை வாய்ப்பு அளிக்கும் வகையிலும் பின்வரும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பரிந்துரைத்தக்கு இணங்க பயிரிடப்படாத நிலங்களின் பரப்பளவு, உற்பத்தி, பாதிக்கப்பட்ட மக்கட் தொகை, பாதிப்புக்குள்ளான கிராமங்மள் முதலியன குறித்த மாவட்ட வாரியான விவரங்கள் அடங்கிய இணைப்புக்களுடன் இந்திய அரசு வகுத்துள்ள வழிமுறைகளுக்கு இணங்க விரிவான அறிக்கை ஒன்றை மாநில அரசு அனுப்ப வேண்டும். இந்த விவரங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு விரிவான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கை 24—1—1983 அன்று இந்திய அரசுக்கு கொடுக்கப்பட்டது. நேரில் கண்டு நிலைமையைக் கணிக்க, மத்தியக் குழுவின் வருகை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள பாதகமான பருவ நிலையின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்ககா துயர் தணிப்புப் பணிகளை விரைவாக நிறைவேற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களையும் உதவியையும் நல்கலாம். அரசு அவர்களின் கருத்துரைகளைப் பரிசீலித்து பாதிக்கப்பட்ட மக்களின் துயரைத் துடைக்க தம்மால் இயன்றதனைத்தையும் மக்களுக்கு உரிய நேரத்தில் உதவிட முன் வரும்.

135982
சென்னை
N211,31 N83
N83-41-3

(அ) ரூ. 5 இலட்சம் செலவில், குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல்.

(ஆ) ரூ. 9 இலட்சம் செலவில் வேலை வாய்ப்பு அளிக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்.

சென்னை மாநகர் குடிநீர் வழங்கல் திட்டம்.—இரு பருவ மழைகள் பொய்த்ததால், சென்னை மாநகரில் குடிநீர் வழங்குவதில் கடுமையான பிரச்சினை ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் பூண்டி, சோழவரம், புழல் நீர்த் தேக்கங்களில் 1—1—1983-ஆம் நாளன்று சுமார் 1512 M.Cft நீர் மட்டுமே இருந்தது. இது இந்நீர்த் தேக்கங்களின் மொத்தக் கொள்ளளவில் 19 சதவீதம் மட்டுமேயாகும். இவற்றில் இருந்த நீரின் அளவு 1—1—1982-ல் 3,621 M.Cft-ம், 1—1—1981-ல், 3,731M.Cft-ம் ஆகும். இந்த மோசமான வறட்சி நிலையைச் சமாளிக்கும் பொருட்டு, நிலத்தடி நீர் வாயில்களிலிருந்து எடுக்க முடியுமளவிற்கு நீரை எடுக்கக் கருதப்பட்டுள்ளது; கிணறுகளிலிருந்து நீர் எடுப்பதற்காகக் கூடுதல் டீசல் ஜெனரேட்டர் செட்டுக்கள் இயக்கப்பட்டு நீர் எடுக்கவும், சென்னை மாநகரில், இயன்ற அளவிற்குக் குழாய்க் கிணறுகள் தோண்டப் படவும், நிலத்தடி நீர் எடுக்க இயலாத இடங்களில் அமைக்கப் பட்டுள்ள சுமார் 1200 குடிநீர்த் தொட்டிகளில் நீர் நிரப்புவதற்காக சுமார் 120 லாரிகள் ஏற்பாடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மாநகரின் குடிநீர் வழங்கல் திட்டத்தை மேம்படுத்துவதற்காக 2.03 கோடி ரூபாய் செலவிட அரசு அனுமதித்துள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துயர் தணிப்பு அளிக்க அரசு இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்துள்ளது. இம்மாநிலத்தில் நிலவும் நிலைமைகளை அவ்வப்போது கண்காணித்தும் வந்துள்ளது. பருவ மழை பொய்த்ததினால் ஏற்பட்ட பாதகமான விளைவுகள் குறித்து 18—8—1982 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது. அமைச்சர்கள் அளவிலும் அதிகாரிகள் அளவிலும் அவ்வப்போது நிலைமை பரிசீலிக்கப்பட்டு வந்தது. தலைமைச் செயலாளர் 26—8—1982 அன்று இந் நிலைமை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பேசினார். இம்மாநிலத்தில் நிலவும் நிலைமை குறித்து இந்திய அரசுக்கு 27—9—1982 அன்று தெரிவிக்கப்பட்டது. 12-10-1982 அன்று தலைமைச் செயலாளர் ஒரு கூட்டம் கூட்டினார். 15—10—1982 அன்று மாநில அரசு மத்திய அரசுக்கு பின்வரும் கோரிக்கைகளைவிடுத்தது.

(அ) சம்பாப் பயிர் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காக 20 டி.எம்.சி. கன அடி தண்ணீராவது உடனடியாக இம்மாநிலத்திற்குக் கொடுக்க கர்நாடக மாநில அரசை வலியுறுத்தலாம்;

(ஆ) இம்மாநிலத்தில் நிலைமைகள் குறித்து மதிப்பிட்டு வடகிழக்கு பருவ மழை பெய்வதில் தாமதம் ஏற்பட்டால், பொய்த்தால் தேவையான பரிந்துரைகள் செய்யவும். மத்திய அரசின் குழு ஒன்றை இம்மாநிலத்திற்கு வருகை புரியத் தயார் நிலையில் இருக்கச் செய்யலாம்;

(இ) மாவு ஆலைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 85,000 டன் அரிசியும் 60,000 டன் கோதுமையும் பொது விநியோக முறைக்கு திங்கள் ஒன்றுக்கு 10,000 டன் கோதுமையும் வழங்கலாம்;

(ஈ) 20 துளையிடு இயந்திரங்களை உடனடியாகப் பெற உதவி அளிக்கலாம்.

இது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமரைச் சந்தித்து மேற்சொன்ன கோரிக்கைகளை வலியுறுத்தி 17—10—1982 நாளிட்ட கடிதத்தைக் கொடுத்தார்.

இரண்டு பருவமழைகளும் உரிய நேரத்தில் பெய்தால் இம்மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தி பெருகும். உழவர்கள் தங்களது நிலங்களிலிருந்து நல்ல வருவாயைப் பெற்று நலமடைவார்கள். சில பகுதிகளின் மழையின் அளவு ஓரளவிற்குக் குறைவதினால் இம் மாநிலம் முழுவதையும் எடுத்துக் கொண்டால், பொருளாதார நிலையை அது பாதிக்காது. ஆனால், அடுத்தடுத்து இரண்டு பருவ மழைகள் பொய்க்குமேயானால் பொருளாதார நிலை முழுவதையும் அது பெரிதும் பாதிக்கும். எனவே, வடகிழக்குப் பருவமழை முழுவதையும் (அதாவது 1982 டிசம்பர் இறுதி வரை) காண்காணித்து) பருவ மழை பொய்த்ததின் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் குறித்து மதிப்பிட்டு அந்த [illegible]யில் இந்திய அரசுக்கு அறிக்கை ஒன்றை அனுப்ப வேண்டும் [illegible] 12—11—1982 அன்று நடைபெற்ற கூட்டத்தில் [illegible] செய்யப்பட்டது. 6—12—1098

அன்று இந்திய அரசுக்குத் தெ;விக்கப்பட்டது
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்

பாதகமான பருவ நிலைமை குறித்த
முன்னதாக அனுப்பும்படி கேட்டுக்கொள்

கிறேன்.

மாண்புமிகு வருவாய்அமைச்சர் தலைமையில் 12—1—1983 அன்று நடைபெற்ற கூட்டத்தில், வறட்சி நிலைமை குறித்து எடுக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக ரூபாய் 100 கோடி தேவைப்படும் என முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு மதிப்பிடப்பட்ட தொகை குறித்து இந்திய அரசுக்கு 1[illegible]—1—1983 அன்று டெலக்ஸ் மூலம் செய்தி அனுப்பப்[illegible]